சுவடிப் பதிப்புத் திறன்

தொகுதி-2

பதிப்பாசிரியர்கள்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் தி. மகாலட்சுமி
முனைவர் சூ. நிர்மலாதேவி
திரு. த. பூமிநாகநாதன்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

சுவடிப் பதிப்புத் திறன்

(தொகுதி – 2)

பதிப்பாசிரியர்கள்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் தி. மகாலட்சுமி
முனைவர் சூ. நிர்மலா தேவி
திரு. பூமிநாகநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை 600 113.

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை

கருத்தரங்கு - 1

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Suvadi patipput thiran Part - 2
Editors	:	Dr. S. Krishnamoorthy Dr. T. Mahalakshmi Dr. S. Nirmala Devi Mr. D. Boominaganathan
Publisher & ©	:	International Institute of Tamil Studies C.P.T. Campus, Chennai 600 113.
First Edition	:	2002
Publication No	:	426
Language	:	Tamil
Paper Used	:	18.6 kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	vi+202
No. of Copies	:	1200
Price	:	Rs. 45/-
Printed by	:	United Bind Graphics 101-D, Royapettah High Road, Mylapore, Chennai - 4 Ph: 4984693, 4661807
Subject	:	Manuscriptology

கட்டுரையாளர்கள் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பல்ல

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113

பதிப்புரை

அச்சுக்கலை தமிழகத்தில் பரவத் தொடங்கிய காலக்கட்டத்தில், தமிழ்ச் சான்றோர்கள் காட்டிய ஆர்வம் காரணமாய்ச் சுவடியில் உறங்கிக் கிடந்த காப்பியம், சிற்றிலக்கியம், இலக்கணம் போன்ற எண்ணற்ற நூல்கள் வெளிவரத் தொடங்கின. இதன் விளைவாகச் சிறப்புறு சுவடிப் பதிப்பு நூல்கள் பல வெளிவந்திருப்பினும் பதிப்பாளர், சுவடி வரலாறு போன்றவற்றை உள்ளடக்கிய நூல் பதிப்பித்தல் என்ற கோட்பாட்டிற்கு அன்று அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

ஆயின் இன்று பதிப்புத் தொடர்பான ஒரு விரிந்த நோக்கு தமிழகத்தில் நிலவி வருகிறது. அவ்வகையில் பதிப்பு நூல்கள் பற்றிய ஒரு வரலாற்றுச் சிந்தனையில் கருத்தைச் செலுத்திச் சுவடித் துறையில் எந்த அளவிற்கு இவ்வீச்சு படர்ந்து படிந்துள்ளது என்பதனை ஆய்ந்து அறிதல் இன்றியமையாத் தேவையாகிறது. அத்தேவையை நிறைவு செய்யும் முயற்சியின் சிறு வெளிப்பாடாக இவ்வறக்கட்டளைப் பொழிவின் பொருண்மை அமைகிறது.

பதிப்பு வரலாறு, பதிப்புவகை, பதிப்புப்பணி, பண்டைய பதிப்பாசிரியர்கள், பதிப்பு முயற்சி, பதிப்புரை, பதிப்புச் சிக்கல், பாடவேறுபாடு, நிறுவன பல்கலைக்கழக நூலகப் பதிப்புகள், தலபுராண சித்த மருத்துவ நாட்டுப்புற (கதைப்பாடல்) இலக்கிய இலக்கண (யாப்பு)ப் பதிப்புகள், முன்னோடிகளின் சுவடித்திரட்டு, பழஞ்சுவடிகளின் இன்றைய நிலை, முதன்மை ஆதாரங்களின் இன்றியமையாமை, அச்சு நூல்களிலுள்ள பிழைகளையும் குறைகளையும் களைவதற்கான வழிமுறைகள், பதிப்பிக்க எடுத்துக் கொண்ட சுவடி பற்றிய துறை அறிவின் இன்றியமையாமை போன்ற பொருண்மைகள் தொகுக்கப் பெற்றுச் செப்பம் செய்யப் பெற்றுச் **சுவடிப் பதிப்புத் திறன்** என்ற பெயரில் இரு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றன. பல்துறை சார்ந்த சுவடிகள் எவ்வகையில் எங்ஙனமெல்லாம் நூல்களாகி உள்ளன என அறியவும், இனிவரும் பதிப்புகள் செம்மைபெற அமையவும் இந்நூல் உறுதுணை புரியும். இப்பொருண்மையின் தேவை கருதியும், நூலைப் பயன்கொள்வாரின் எளிமை கருதியும் இரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறும் நிலையில் முதல்

தொகுதியில் மூன்று கட்டுரைகளும், இரண்டாம் தொகுதியில் ஐந்து கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இந்நூல் சுவடியியல் ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், நூற் பதிப்பாளர்களுக்கும் பெரும் பயன் நல்குவதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தமிழில் ஆவணங்கள் என்ற கருத்தரங்கினை நிறுவனம் நடத்திய போது, கருத்தரங்கு சிறப்பாக அமைய **டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் நற்பணி மன்றம்** நிதியுதவி அளித்தது. அதனைத் தொடர்ந்து நிறுவப்பட்டதே இந்த டாக்டர் சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை. இதன் முதல் நிகழ்வு அறக்கட்டளைக் கருத்தரங்காக அமைகிறது. இவ்வறக்கட்டளை நிறுவ நிதியுதவி நல்கி உதவிய **டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்** நற்பணி மன்றத்திற்கும், இந்நிதியினைப் பெற்றுத் தந்து உதவிய **திரு. நெல்லை நெடுமாறன்** அவர்களுக்கும் அன்பு கலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சியுறுகிறேன்.

இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள அழைத்த அழைப்பினை ஏற்றும், கட்டுரைகளைக் குறித்த காலத்தில் அனுப்பிக் கொடுத்தும், கருத்தரங்கப் பொழிவு சிறப்புற அமைய ஒத்துழைப்பு நல்கிய ஆன்றோர் பெருமக்களுக்கு என் இதயங்கலந்த பாராட்டுகள்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் நிறுவனத் தலைவரும், தமிழக அரசின் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சருமான **முனைவர் மு. தம்பிதுரை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் **திரு. பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் கூடுதல் செயலர் **திரு. தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

இந்நூல் உருவாவதற்கு உறுதுணையாயிருந்ததோடு மட்டுமன்றி நூலுக்கு மெய்ப்புத்திருத்தமும் செய்து உதவிய முனைவர் தி. மகாலட்சுமி, முனைவர் சூ. நிர்மலாதேவி, திரு. த. பூமிநாகநாதன் ஆகியோர்க்கும் நன்றி. இந்நூலினைச் சிறப்புற ஒளியச்சுக் கோப்புச் செய்து கொடுத்த திரு. சு. கண்ணன், திருமதி. இரா. வெண்ணிலா, ஆகியோர்க்கும் கவினுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் நன்றியும் வாழ்த்துகளும் உரியன.

இயக்குநர்

பொருளடக்கம்

பக்கம்

1. தலபுராணச் சுவடிப் பதிப்புகள் 1
   - முனைவர் வே. இரா. மாதவன்

2. சித்த மருத்துவச் சுவடிப் பதிப்புகள் 27
   - மருத்துவர் சே. பிரேமா

3. கதைப்பாடற் சுவடிப் பதிப்புகள் 75
   - முனைவர் ஆ. தசரதன்

4. சுவடிப் பதிப்பில் யாப்பு 119
   - திரு. தி. வே. கோபாலய்யர்

5. சுவடிப் பயிற்சியும் பதிப்பு நுட்பங்களும் 191
   - திரு. மு.கோ. இராமன்

1. தலபுராணச் சுவடிப் பதிப்புகள்

முனைவர் வே.இரா. மாதவன்

மக்கள் போற்றும் கலைகளை வளர்க்கும் இடங்களாகவே நம் கோயில்கள் திகழ்கின்றன. இக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு அறிவியல், தொழில்நுட்பம், கலைநோக்கு இவற்றோடு சமய வாழ்க்கைக்கும் நிறைவு பயப்பனவாய் முகிழ்த்ததொரு இலக்கிய வகையே தலபுராணங்கள். மறுமையில் வீடுபேறு அடையலாம் என்பது மட்டுமல்லாமல் இம்மையில் வளமையான, இனிமையான வாழ்வு பெறலாம் என்பதையும் விளக்குவதே தமிழ்த் தலபுராணங்களின் அடிப்படை நோக்கமாகும்.

தலங்களாக உள்ளவை மண்வகை, தட்பவெப்பச் சார்பினால் அங்குச் சென்றவர்களின் உடலிலுள்ள பஞ்சபூதக் கூறுகளையும் வாத, பித்த, சிலேட்டுமக் கூறுக்ளையும் சமப்படுத்தும். தலமரங்களின் காற்றும் நிழலும், இலை, தழை, காய் கனிகளும், தீர்த்தங்களின் நீரும் பருவுடம்பின் நோய்களைக் குணப்படுத்தும். மூர்த்தி வழிபாடு நுண்ணுடம்பின் உணர்வுகளை மாறுபடுத்தும். இவ்வாறு காரணம், நுண்மை, பருமை என்னும் மூவுடம்பும் செம்மையுறுவதை உணர்ந்தே ஆன்றோர்கள் தலப்பெருமைகளையும் தலவழிபாட்டினையும் சமயச் சார்புடன் பொருத்திப் புராணமாக்கிப் பாடியுள்ளனர்.

இலக்கிய நயங்களை உணரவும், சொல்லணிகளின் சிறப்புகளை அறியவும், காப்பியச் சுவைகளைப் பருகவும் எனப் பல்வகை நலன்களை நல்கும் தலபுராணங்கள் ஊர்ப்பெயர் ஆய்வுக்கும், வரலாற்று மாந்தர்களைப் பற்றிய ஆய்வுக்கும், தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் ஆய்வுக்கும் பெருந்துணை புரிவனவாம்.

கோயிலுக்குச் செல்லுதல், விரதங்கள் கடைப்பிடித்தல், சமயச்சடங்குகள் செய்தல் என்ற இவற்றை மட்டுமே தலபுராணங்கள் வலியுறுத்தி அமைதி கொள்ளாமல் அதற்கும் மேலாக, மக்கள் உயரிய குறிக்கோளைக் கொண்டு ஒழுகி நல்வாழ்க்கை நடத்தி மேம்படுதற்குத் தேவையான விளக்கங்களையும் எடுத்துரைப்பதை நாம் உணர்தல் வேண்டும். இவ்வகையில் மக்களுக்குத் தேவையான பல நீதிகள், அரசாங்கப் பொறுப்புகள், நல்லோர் ஒழுகலாறுகள், நல்வினை, தீவினைகளின் நுட்பமான பாகுபாடுகள்,

அறச்செயல்கள், பண்புடைமை, சமய வாழ்க்கைப் பண்புகளில் முதன்மையாக விளங்கும் சமயக் காழ்ப்பின்மை, சமய ஒற்றுமை ஆகியவற்றை விளக்கும் தலபுராணங்கள் பல உள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள பெரும்பான்மையான ஊர்களில் கோயில்கள் உள்ளன. அவை தொடர்பான வரலாறுகளை விளக்கும் வடமொழி, தென்மொழி நூல்களும் உள்ளன. அவ்வவ்வூரினர் அவற்றைப் பாதுகாத்தும் புலவர்களைக் கொண்டு பாடுவித்தும் இன்புற்றனர். அதனால் தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான தலபுராணங்கள் செய்யுளுருவத்தில் எழுந்தன.

இவ்வாறு பன்னிரண்டாம் நூற்றாண்டில் தொடங்கிப் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் எண்ணற்ற தலபுராணங்கள் தமிழில் இயற்றப்பெற்றுள்ளன. இவை அக்கால வரலாறுகளையும் காட்டுவனவாக அமைந்துள்ளன.

வரலாறு சார்ந்த நூல்கள்

குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் தமது சமூக நிலைப்பாடு பற்றியும் அதன் புவியியற்களம் பற்றியும் சிந்திக்கத் தொடங்கும் பொழுது, 'வரலாற்றுணர்வு' ஏற்படுகின்றது. அதாவது தம்மை நிலையான குழுவினராகக் கொள்ளும் உணர்வு ஏற்படும் பொழுதுதான் வரலாறு தோன்றும். இது ஆட்சியாளரின் வர்க்க நிலைப்பட்ட உணர்வாக முகிழ்க்கும் என்பர். இத்தகைய சூழ்நிலையில் தோன்றும் நூல்கள் மத நம்பிக்கைப் போர்வைக்குள் வரலாற்றைத் திணித்துக் கூறுவது ஒரு மரபாகும். இந்தியப் புராண இலக்கியங்களின் வரலாற்று உட்கிடக்கையை ஆராய்ந்தெடுத்துக் கூறியுள்ள ராய்சௌத்திரி போன்ற வரலாற்று ஆசிரியர்கள் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளனர். இத்தகைய மதவழி நின்ற வரலாற்றுணர்வின் வெளிப்பாட்டில் தலபுராணங்கள் முக்கிய இடம்பெறும் என்பதை விசய நகர நாயக்க மன்னர் காலத்தியத் தமிழிலக்கிய வரலாறு நன்கு தெளியப்படுத்தும் என்பார் டாக்டர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் (ஈழத்தில் தமிழ் இலக்கியம், பக். *10-11*).

கடந்த ஒரு நூற்றாண்டில் தமிழில் அச்சிடப்பெற்ற தலபுராண நூல்கள் பல இன்று கிடைப்பதில்லை. இன்னும் அச்சிடப்பெறாத தலபுராணங்கள் பலவும் சுவடி வடிவிலேயே உள்ளன. தமிழில் ஆயிரக்கணக்கான பாடல்கள் கொண்ட பெரும்பகுதியாகிய தலபுராண நூல்கள் பல்வேறு காரணங்களால் இன்னும் பலருடைய பார்வையில் கூடப் படவில்லை என்பதே உண்மையாகும். இத்தகைய தலபுராணச் சுவடிகள் பற்றியும் பதிப்புகள் பற்றியும் ஈண்டு நோக்குவோம்.

தலபுராணச் சுவடிகள்

"தமிழ் நாட்டில் எவ்வளவோ புண்ணியத் தலங்கள் இருக்கின்றன. சிவத்தலங்களும் விஷ்ணுத் தலங்களும் சுப்பிரமணியத் தலங்களும் உள்ளன. அவற்றைப் போலத் தமிழ்த் தெய்வம் கோயில் கொண்டுள்ள தலங்களுள் ஒன்றாகவே மிதிலைப்பட்டியை நான் கருதி இருக்கிறேன்" என்பார் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் *(என் சரித்திரம், ப.694)*. ஏனெனில், ஐயரவர்களுக்கு இங்குக் கிடைத்த சுவடிகள் தான் சிலப்பதிகாரப் பதிப்புக்குப் பெரும் துணை செய்தன. மிதிலைப்பட்டி அழகிய சிற்றம்பலக் கவிராயர் வீட்டிலுள்ள ஏட்டுச் சுவடிகளைப் பார்த்த இவர், அவ்வீடு, "தமிழ்மகள் ஆலயமாகவே தோன்றியது" என்பர். இவ்வாறு ஓலைச்சுவடிகளில் எழுதுவதும் அவற்றைக் கோயில் போலப் போற்றிப் பாதுகாப்பதும் பழந்தமிழர் பண்பாக அமைந்திருந்தன. சென்ற நூற்றாண்டு வரையில் நூல்களை ஓலைச்சுவடிகளில் எழுதும் பழக்கமே மிகுந்திருந்ததால், இன்றும் பல ஓலைச்சுவடிகள் கிடைத்து வருவதைக் காணலாம்.

தமிழ்த் தலபுராணங்கள் யாவும் அக்காலப் புலவர்களால் ஓலைச்சுவடிகளில் எழுதப்பெற்றும் பாதுகாக்கப் பெற்றும் வந்துள்ளன. தலபுராணச் சுவடிகளைத் தம் இல்லங்களில் வைத்திருப்பதைப் பெரும் பேறாகவும் முன்னோர் கருதியிருந்தனர். கோயில்களிலும் மடங்களிலும் தலபுராணங்கள் நாள்தோறும் படிக்கப்பட்டதால் அவ்விடங்களிலும் தலபுராணச் சுவடிகள் மிகுதியாக வைத்துக் காப்பாற்றப்பட்டன.

தமிழ்நாட்டுச் சுவடி நூலகங்களில் தலபுராணங்கள்

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகம், தஞ்சைப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறை நூலகம் போன்ற சுவடி நூலகங்களில் பல தலபுராணங்கள் ஓலைச்சுவடியில் இன்றும் காணக்கிடைக்கின்றன.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகத்தில் மட்டும் சுமார் *140* தலபுராணச் சுவடிகள் உள்ளன. இவற்றுள் பல ஐயரவர்களே தேடித் தொகுத்தவையாகும். அவர்தம் ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சில தலபுராணங்களும், ஐயரவர்கள் பதிப்பித்த சில தலபுராணங்களும் இங்குச் சுவடி வடிவில் உள்ளன. திருக்கோளக்குடித் தலபுராணம், திருத்தவத்துறைப் புராணம், திருவாப்பனூர் மான்மியம், நாகப்பட்டினத் தலபுராணம், மருதூர்ப் புராணம் போன்ற சுவடிகள் இன்னும் அச்சாகவில்லை எனத் தெரிகின்றது.

தஞ்சை சரசுவதி மகால் சுவடி நூலகத்தில் சுமார் 50 தலபுராணச் சுவடிகள் உள்ளன. பல அச்சில் வந்துள்ளன. சில தல்புராணங்களை அந்நூலகமே வெளியிட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையிலுள்ள சுவடி நூலகத்தில் 6,000க்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள் உள்ளன. இவற்றுள் சுமார் 160 தலபுராணச் சுவடிகள் உள்ளன. பல அச்சானவை. மலைசைப்புராணம் போன்ற ஒரு சில சுவடிகளே இன்னும் அச்சில் வராதனவாக உள்ளன.

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள சுமார் 13,000 தமிழ்ச் சுவடிகளில் நூற்றுக்கணக்கான தலபுராணச் சுவடிகள் உள்ளன. மெக்கன்சி சுவடிகள் பலவற்றில் பல தலங்களின் வரலாறுகள் உரைநடையாகக் குறித்து வைத்துள்ளதை இங்கு மிகுதியாகக் காண்கிறோம். இவ்வகையில் காகிதச் சுவடிகள் பல இங்குள்ளன.

கேரளப் பல்கலைக்கழகச் சுவடி நூலகத்தில் சுமார் 3340 தமிழ்ச் சுவடிகள் உள்ளன. இவற்றுள் சுமார் 140 தலபுராணச் சுவடிகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. அருணாசலபுராணம் மட்டுமே இங்கு 60 சுவடிகள் இருப்பது சுட்டத்தக்கது.

இவ்வாறு வேறு பல நிறுவனங்களிலும் மடங்களிலும், தனியாரிடமும் பல தலபுராணச் சுவடிகள் உள்ளன.

அயல்நாட்டுச் சுவடி நூலகங்களில்

பழந்தமிழ்ச் சுவடிகள் பல உலகெங்கும் பரவிக் கிடக்கின்றன. தமிழகத்திலிருந்து அயல்நாடுகளுக்குச் சென்று அங்கேயே தங்கிவிட்ட தமிழ்ச் சுவடிகள் பலவற்றுள் தலபுராணங்கள் பலவும் இருக்கக் காணலாம்.

பல நூற்றாண்டுகளாகத் தமிழ்நாட்டில் வந்து இருந்து, திரும்பிய பல கிறித்துவப் பாதிரிமார்கள் பற்பல தமிழ்ச் சுவடிகளைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றிருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேய அரசில் பணிபுரிந்த ஆங்கிலேய அதிகாரிகள் பலர் நல்ல தமிழ்ப்புலமையுடையவர்களாக இருந்துள்ளனர். அவர்கள் தம் தாயகம் திரும்பும்போது பல தமிழ்ச் சுவடிகளைத் தம்மோடு எடுத்துச்சென்றுள்ளனர். கீழ்த்திசை நாடுகளிலுள்ள ஓலை மற்றும் காகிதக் கையெழுத்துச் சுவடிகளைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பல ஆங்கிலேய அறிஞர்களால் பல தமிழ்ச்சுவடிகள் விலைக்கு வாங்கப்பெற்றும் சென்றுள்ளன. தமிழ்நாட்டிலிருந்து சென்ற சிலர் தங்கள் நினைவுச் சின்னமாகவும் பல தமிழ்ச் சுவடிகளைக் கொண்டு சென்று பாதுகாத்துள்ளனர்.

அவற்றுள், இலக்கியம், இலக்கணம், வரலாறு, மருத்துவம், வானநூல் போன்ற பல துறை நூல்கள் பலவும் அடங்கும். இவ்வாறு அயல்நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள சுவடி நூலகங்களில் இன்றும் பாதுகாக்கப் பெற்றுவரும் சுவடிகளுள் தலபுராணச் சுவடிகளும் பல உள்ளன.

1. **பாரிசு தேசிய நூலகம்** (Biblotheque Nationale, Paris, France)

காஞ்சிப்புராணம், திருவிளையாடற்புராணம், அருணாசலப்புராணம், அருணகிரிப்புராணம், திருக்காளத்திப் புராணம், சிதம்பரம் கோயிற் புராணம், கடம்பவனப் புராணம், திருக்கழுக்குன்றப் புராணம், விருத்தாசலப்புராணம், வில்லைப் புராணம் போன்ற சுவடிகள் இங்குள்ளன.

2. **இலண்டன் நூலகம்** (India Office Library, London)

சீரங்க மகாத்மியம், சீரங்கக் கோயிலொழுகு போன்ற சுவடிகள் இந் நூலகத்தில் உள்ளன.

3. **ஆக்ஸ்போர்டு பாட்லியன் நூலகம்** (Bodleian Library, Oxford)

திருவிளையாடற்புராணம், அருணாசலப்புராணம், கயிலாயப் புராணம் போன்ற சுவடிகள் இங்குள்ளன.

4. **ரோம் நூலகம்** (Bibliotheca Postolica Vaticana, Vatican City, Rome)

அருணாசலப்புராணம் போன்றவை இங்குள்ளன.

5. **ஸ்வீடன் நூலகம்** (Uppsala University Library. Uppsala, Sweden)

அருணாசலப்புராணம் போன்ற சுவடிகள் உள்ளன.

6. **ஸ்வீடன் ஸ்டாக்ஹோம் அருங்காட்சியகம்** (Ethnographical Museum, Stockholm, Sweden)

அருணாசலப்புராணம் போன்ற சுவடிகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பல நூலகங்களில் இனங்காணாச் சுவடிகளில் பல தலபுராணச் சுவடிகளும் இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

ஓலைச்சுவடிகளில் கிடைக்கும் பல தலபுராணங்களுள் அருணாசலப்புராணம், திருவிளையாடற்புராணம், கோயிற்புராணம், விருத்தாசலபுராணம் போன்ற சில குறிப்பிட்ட சுவடிகளே மிகுதியாக இருக்கக் காணலாம். மிகவும் புகழ்பெற்ற தலங்களுக்குரிய புராணங்களை மக்கள்

மிகுதியாகப் படிக்க வேண்டுமென்பதற்காகத் தாமே எழுதி வைத்துக் கொண்டனர் என்பதை இதன் மூலம் அறிகிறோம்.

இன்று கிடைக்கும் பழைய தலபுராண அச்சு நூல்கள் யாவும் ஓலைச்சுவடிகளிலிருந்தே அச்சிடப்பெற்றுள்ளன. சில தலபுராணங்கள் தவிர மற்றவை மறுஅச்சில் வரவே இல்லை. மறைந்துபோன தலபுராணங்கள் பல. பலவற்றுக்கு ஓலைச் சுவடியோ பல பிரதிகளோ காண்பதரிதாக உள்ளது. அச்சான நூல்களும் பல கிடைப்பதில்லை. அச்சிட்ட தலபுராண நூல்களுள் ஒரு சிலவற்றைத் தவிர மற்றவை யாவும் திருந்திய பதிப்பினையும் பெறவில்லை. எனவே, அச்சான பல பழைய தலபுராண நூல்களும் சுவடியாகவே கருதத்தக்க நிலையில் உள்ளன.

எனவே, சுவடிகளிலுள்ள அச்சாகாத தலபுராணங்களையும், அச்சான நூல்கள் பலவற்றையும் திருந்திய வடிவில், உரையுடன் பதிப்பிப்பின் மிகவும் பயனுடையதாகும்.

தலபுராணப் பதிப்புகள்

தமிழில் தலபுராணங்கள் தோன்றிய காலம் முதல் அவை சுவடிகளில் எழுதிக் காப்பாற்றப்பெற்றன. அத்துடன் புராணச் சொற்பொழிவாளர்களால் அவ்வப்போது விரித்துரைக்கப்பெற்று மக்கள் அனைவரிடமும் பரவி இருந்தன. சென்ற நூற்றாண்டில் அச்சு நூல்கள் மிகுதியாக வெளிவரத் தொடங்கியவுடன் தமிழிலும் பல நூல்கள் சுவடிகளிலிருந்து அச்சில் பதித்து வெளியிடப்பெற்றன. இவ்வகையில் தலபுராணங்களைப் பலரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்னும் நோக்கில் சிலர் அச்சில் பதிப்பிக்கத் தொடங்கினர். இந்நூல்கள் அச்சில் வெளிவந்தால், தலவரலாறுகளை மக்கள் எளிதில் உணர்ந்து, தல வழிபாடுகளைப் பொருள் உணர்ந்து போற்றுவர் என இவர்கள் முனைந்து செயல்பட்டனர்.

தலபுராணங்களை மக்கள் வழிவழியே கேட்டறிந்த காரணத்தால் அத்தலங்களுக்குரிய விழாக்கள் முதலியனவும் முறைப்படி செய்யப்பட்டு வருகின்றன. இதை மேலும் வளர்க்கவே தலவரலாறுகளை அச்சிற் பதிப்பித்து அனைவரிடமும் பரப்பினர் எனலாம். காட்டாக, தஞ்சை அரண்மனை, சரபோஜிமகாராஜா அவர்கள் உத்தரவின்படி சிவக்கொழுந்து தேசிகர் அவர்கள் இயற்றிய மருதவனப் புராணத்தை அச்சில் பதிப்பித்த திரு. கி. சாமிராவ் காடே சாகிப் அவர்கள் தம் பதிப்பில் குறிப்பிட்டுள்ளவை இவண் சுட்டத்தகும்.

"சோழ நாட்டிற் திருவலஞ்சுழி, குருகிரி முதலிய திவ்விய ஸ்தலங்களை விநாயகர் சுப்பிரமணியர் முதலிய பரிவார தேவதா ஸ்தலமாக்க்

கொண்ட மத்தியார்ச்சுன க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் சர்வலோக நாயகராகிய ஸ்ரீமகாலிங்கப் பெருமானை அவரது சத்திரூபமாகிய சுப்பிரமணியப் பெருமான் கங்கையையழைத்து அதனால் அபிடேகித்து அருச்சித்த சரித்திரத்தை, இம்மருதவனப் புராணத்தால் உணர்ந்தகாலந் தொடங்கி, அம்முறையை உற்சவமாக நடத்த வேண்டி, ஆசையோடு அச்சுப்பிரமணியப் பெருமானைப் பிரார்த்தித்து, அப்பெருமானது கருணையால், நாம் எமது அன்பர் அம்மாபேட்டைக் கந்தசாமிச் செட்டியார் திருமாந்துறைச் சபாபதிப்பிள்ளை, திருப்பணிப்பேட்டை கோவிந்தசாமிப்பிள்ளை ஆகிய இவர்களுடன் சர்வசித்து வருட முதல் உற்சவமாக நடத்திவருகிறோம். அவ்வாறு நடத்தி வருவதற்குக் காரணம் இப்புராணத்தை முன் உணர்ந்திருந்தமையேயாகலாம். குமார பூசையின் மகிமை, மூர்த்தி, தல, தீர்த்தவிசேடம், சிவனருளால் நற்கதி அடைந்தோர் சரித்திரம் முதலிய இவைகளனைத்தும் யாவர்க்கும் நன்குத் தெரிந்தாலன்றி, அம்மகாலிங்கப் பெருமானிடத்துப் பக்திசெய்ய முடியாதாகலான், அவற்றை யாவரும் வெளிப்படவுணர்ந்து பக்தி செய்துய்யும் பொருட்டு, இம்மருதவனப் புராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினோம்" என்னும் அச்செய்தியை இப்பதிப்பின் பின்புற அட்டையில் 'பிரகடனம்' என்ற தலைப்பிட்டு அச்சிட்டிருக்கக் காணலாம்.

இந்நூலைச் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு *(1893)* அச்சிட்ட திரு. கி. சாமிராவ் காடே சாகிப் அவர்கள், திருவிடைமருதூர் குமாரபூசை மகோற்சவம் நடத்தி வந்த திரு. கிருஷ்ணசாமி காடேராவ் சாகிப் அவர்களுடைய குமாரர் என்பது இவண் குறிப்பிடத்தக்கது. தாம் நடத்தும் தலச்சிறப்பு விழாக்களில் மக்கள் பெருந்திரளாகக் கூடும் பொழுது, அத்தல வரலாறு கூறும் புராண நூல்களை மக்கள் பெறும்படிச் செய்வதே இப்புராணப் பதிப்பாசிரியர்களின் பணியாக இருந்ததைக் காண்கிறோம். இவ்வாறே பலரும் கோயில் குடமுழுக்கு போன்ற விழாக்காலங்களில் இத்தகைய தலபுராணங்களை அச்சிட்டுள்ளனர்.

பதிப்பில் திருத்தம்

தலபுராணங்களை ஓலைச்சுவடிகளில் எழுதியோர் அதில் சில தவறுகளையும் செய்திருப்பர். இவ்வாறு சுவடிகளில் எழுத்து, சொல், தொடர் போன்ற பல நிலைகளில் மாறுபாடுகள் தோன்றுவதும், இடைச்செருகல்கள் பல எழுவதும் இச்சுவடிகளை ஆராய்ந்து பதிப்பிப்போர் அறிவர். இத்தகைய தவறுகளையெல்லாம் நுணுகி ஆராய்ந்து கண்டு 'சுத்த பாடம்' கொண்டு, அச்சில் பதிப்பித்ததாகப் பதிப்பாசிரியர் சிலர் நூலின் முகப்பிலேயே குறிக்கக் காணலாம். காட்டாக, சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய தீர்த்தகிரி புராணம் என்னும் தலபுராணத்தை *1870* ஆம் ஆண்டில் புதுவை க. சுப்பராய முதலியார் அவர்கள் அச்சிட்டுள்ளார்கள். இந்நூலின் முகப்பிலுள்ள செய்திவருமாறு:

"தருமபுரி ஜவுளிக்கடை - வீரபத்திர நாயகர், அரியூர் - சென்னி செட்டியார், சென்னை த.அ. கன்னைய செட்டியார் கேட்டுக் கொண்டபடி, புதுவை க. சுப்பராய முதலியரால், சேலம் - ஊற்றங்கரை - அரியூர் - தருமபுரி முதலிய கொங்கு தேயத்தில் இதுகாறும் பயின்று வந்த ஏட்டுப் பிரதிகள் தோறும் எழுத்துஞ் சொல்லும் அடியுஞ் செய்யுளும் - பலவாறு ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் வேறுபட்டும் - சிதைந்தும் - வழூஉக்களால் பொதிவுற்றிருந்ததால் அவற்றைக் களைவதில் உழைப்புற்ற அம் - மிகைகளை ஒருவாற்றாற் களைந்து சுத்த பாடமாக வழங்குவிக்கும் பொருட்டு, புரசை - அட்டாவதானம் சபாபதி முதலியார் முதலிய வித்வான்கள் முன்னிலையில் பரிசோதித்துத் தாம் நூதனமாக இயற்றிய பொழிப்புரையுடன் மேற்படி த.அ. கன்னைய செட்டியாரால், பு.ம. சபாபதி முதலியாரது கல்வி விளக்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" என்னும் இச்செய்தி முழுவதும் இந்நூலில் **மேலட்டையில் அச்சிடப்பட்டுள்ளது** குறிப்பிடத்தக்கது.

இதம்பெறத் திருத்திய சிதம்பர முனிவர்

பதினெட்டாம் நூற்றாண்டில் மதுரை மாநகரில் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில் எழுந்தருளியிருந்தவர் சிதம்பர அடிகள். இவர் அந்நாளில் பிழை மலிந்து தவறாக வழங்கி வந்த சிதம்பர புராணம் என்னும் தலபுராணத்தைச் செப்பஞ் செய்து திருந்திய முறையில் வெளியிட்டுள்ளார். திருவருட்பிரகாச வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க அடிகள் இந்நூலுக்கு அகவற்பாவாற் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். அதில் அவர், "சிதம்பர புராணம் இதம்பெறத் திருத்திய சிதம்பர முனிவர் பதம் பரவியது" என்று தலைப்பிட்டு வழங்கியிருப்பது சுட்டத்தக்கதாகும். இப்பதிப்பாசிரியரின் அறிவுநுட்பம், ஆற்றலுடைமை ஆகிய பண்புநலன்களை விரிவாகப் பாடி, அவர் இத்தலபுராணத்தை நுண்ணிய அறிவால் தெளிவுடன் திருத்தி அச்சிட்டதையும் வள்ளலார் சுட்டக் காணலாம்.

" ....
தன்போன் றவரிலாச் சாந்த வேந்தன்
சைவம் பழுத்த தனித்தரு நங்குல
தெய்வமா மதுரைச் சிதம்பர தேவன்
புண்ணிய சிதம்பர புராணந் தன்னை
நுண்ணிய அறிவால் நோக்குபு திருத்தம்
ஏர்பெற இயற்றி யாவரும் பயின்றுயப்
பாருறும் அச்சிற் பதிப்பித் தருளிய
உதவியை நினைந்துளம் உவந்துமுப் பொழுதும்
பதமருள் அவனருட் பதமிறைஞ் சுதுமே"

என்பது அச்சிறப்புப் பாயிரப் பாடல்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வேலைய தேசிகரிடம் கல்வி பயின்ற திரு. தா. சிவலிங்கம் பிள்ளை என்பவர் தம் ஆசிரியர் இயற்றிய திருவைகாவூர்ப் புராணத்தைத் திருத்தி அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாறு பிற்காலத்தில் பலரும் தலபுராணங்களை அச்சில் திருத்திப் பதிப்பித்துள்ளனர்.

பதிப்பில் திருத்தி அச்சிட்டோர் தாம் செய்தனவற்றைப் பதிப்பு முகவுரையில் கூறிச் செல்வதும் குறிப்பிடத்தக்கதாகும். பாலசுப்பிரமணியக் கவிராயர் இயற்றிய பழனித் தலபுராணத்தைக் கீரநத்தம் ஈஸ்வரய்யர் என்பவர் அச்சில் பதிப்பித்துள்ளார். இந்நூலின் இறுதியில், **'இப்புராணம் திருத்தி அச்சிட்டவர் இசைத்த திருப்புகழ்ச் சந்தக் கவிகள்'** என்ற தலைப்பில் ஏழு திருப்புகழ்ப் பாடல்கள் உள்ளன. இவ்வாறு, பதிப்பில் திருத்தம் செய்தவர்களே இச்செய்திகளைப் பாடலாக வடித்து அச்சு நூல்களில் சேர்த்திருக்கக் காணலாம்.

பதிப்பு அறம்

முற்காலப் பதிப்பாசிரியர்கள் தாம் சுவடிகளைப் பதிப்பிக்குமிடத்து, கிடைக்கும் எல்லாப் பிரதிகளையும் தேடிச் சேர்த்தல், பொருள் நோக்கிப் பாடல்களைப் பாடித் தெளிதல், ஏடு எழுதியோர் செய்த பிழைகளைக் களைதல் போன்ற படி நிலைகளை அமைத்துக் கொண்டு பதிப்பித்தனர்.

"பொருத்திவரை பலபிரதிக் கிணங்கநல்லோர்
அருள்புனைந்து பொருளுஞ் சொல்லும்
திருத்திவரை யறைதெரிந்தச் சியற்றினன்தென்
சேறைநகர்ச் சிறந்த நூலுள்
கருத்திவரை வகையியலும் இலக்கியமும்
கற்றறிந்தோன் கருணை ஞான
விருத்திவரை வேலவரைப் பணிந்தேத்தும்
கணபதிப்பா வேந்தர் வேந்தே"

என்பது அப்பரமேசர் தலபுராணத்திற்குத் திரு. சி. முத்துச்சாமிப்புலவர் என்பவர் அளித்துள்ள சிறப்புப்பாயிரமாகும். இதில் அக்காலப் பதிப்பாசிரியர் எவ்வளவு விழிப்புடன் செயல்பட்டனர் என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.

பதிப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளும் பொழுது, மூலநூலாசிரியரின் கருத்துக்கு மாறுபாடு தோன்றாதவாறும், மூலநூல் வடமொழியாயின் அதன் மரபுக்கு மாறுபாடு தோன்றாதவாறும் பதிப்பிப்பதென்பதை ஓர் அறமாகவே இப்பதிப்பாசிரியர்கள் மேற்கொண்டிருந்தனர் எனத் தெரிகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாகப் பல பழைய பதிப்புகளைச் சுட்டலாம்.

சோழநாட்டிலுள்ள திருநாகேச்சுரம் என்னும் தலத்திற்குரிய வடமொழிப் புராணத்தைத் தமிழில் மூவல் ப. சிங்காரவேற் பிள்ளையவர்கள் மொழிபெயர்த்து இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ளார். இவர், வடமொழிப் புராணத்தை முதலில் குற்றாலம் வீரராகவாச்சாரியார் அவர்களைக் கொண்டு தமிழில் மொழிபெயர்த்து, அதனைத் தேப்பெருமாள் நல்லூர் சுப்பிரமணிய சாஸ்திரியாரவர்களைக் கொண்டு திருத்தமுற ஒத்து நோக்கித் தமிழ்மொழியில் பாட்டிடை விரவிய உரைச் செய்யுளாகச் செய்து அச்சிட்டளித்துள்ளார். இந்நூலின் இரண்டாம் பாகத்தின் இறுதியில் நூலாசிரியர் தரும் குறிப்பு வருமாறு:

"இப்புராணம் வடமொழியில் அறுபத்து மூன்று படலங்களாகவே காணப்படினும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இந்த நாற்பத்து மூன்று படலங்கள் மட்டுமே, இறைவனால் இறைவிக்குச் சொல்லப்பட்டு, ஓர் புராணமாக, முடிக்கப்பட்டமையாலும், இதன்பின் காணப்படும் ஏனைய இருபது படலங்களும் பிறர்களால் பிறர்க்கு வேறுபிரித்து இந்த நாற்பத்து மூன்றின் விரிவுரையாகவே சொல்லப்பட்டமையாலும் இப்போது இறைவனால் இறைவிக்கும் சொல்லப்பட்ட நாற்பத்து மூன்று படலங்களையுடைய இப்புராணம் மட்டுமே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுப் பாட்டிடை விரவியவுரைச் செய்யுளாக இவற்றினைப் பதிப்பிக்கப்பட்டது. இதன் விரிவுரையாகக் காணப்படும், ஏனைய இருபது படலங்களையும் பின்னர் இறைவன் இன்னருள் கூட்டுமேல் இம்முறையே தமிழில் மொழிபெயர்த்து இதன் பிற்பாகமாகப் பதிப்பிக்கவும் விருப்பமுள்ளேன்" என்பார் இந்நூலாசிரியர்.

இவ்வாறு, மூலநூலில் உள்ள செய்திகள் பயன்பாடு, மக்களின் தேவை, பதிப்பின் நம்பகத்தன்மை ஆகிய எல்லாவற்றையும் கருத்தில் கொண்டே இவர்கள் இந்நூல்களைப் பதிப்பித்துள்ளனர் எனத் தெரிகிறது.

இடைச்செருகல்

இக்காலத்தில் குன்றக்குடி என வழங்கும் மயூரகிரியின் மான்மியத்தை *1785*இல் மதுரை வேதாந்த சுப்பிரமணிய பிள்ளை என்பவர் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து *13* சருக்கங்களும் *589* பாடல்களும் கொண்ட தலபுராணமாக இயற்றியளித்துள்ளார். இத்தலபுராணத்தை முதன் முதலாகத் திரு. ந.ச. பொன்னம்பலம்பிள்ளை அவர்கள் *1885*ஆம் ஆண்டு அச்சிற் பதிப்பித்துள்ளார். அதில், இந்நூலில் இடைச்செருகலாக அமைந்த பகுதிகளைத் தாம் களைந்து பதிப்பித்திருப்பதை இவர்தம் 'நூன்முகத்தில்' பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"சிலர் இப்புராணத்திலே தெய்வநாயகி திருமணச்சருக்கம் என ஒன்று ஈற்றிலுளதன்றோ அதனை யொழித்துவிட்டதென்னை என்பராயின், அது வடமொழி மயூரகிரி மான்மியத்தில் இல்லாமையினாலும், யாழ்ப்பாணத்தைச் சார்ந்த அராலியில் வசித்த ஒரு பிராமணராற் புதிதாய்ப் பாடிசேர்க்கப்பட்டமை சந்தேகமின்றித் தெரிந்தமையினாலும், வடதேயத்திலுள்ள ஏட்டுப்பிரதிகளிற் தவிர்க்கப்பட்டமையினாலும், ஸ்ரீலஸ்ரீ சற்குருநாத சுவாமிகளாகிய நாவலரவர்கள் வில்லிப்புத்தூராழ்வார் பாரதத்தைத் திருத்தி அச்சிட்ட பொழுது அவ்வாழ்வாராற் பாடப்படாது வேறொருவராற் புதிதாய்ப் பாடி ஈற்றிற் சேர்த்த முடிசூட்டுச் சருக்கத்தையொழித்து விட்டமையினாலும், ஏனைப் புலவர்களும் பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கம்பராமாயணம் முதலியவற்றைத் திருத்தி அச்சிடுவித்த பொழுது அவற்றிற் புதிதாய்ப் பாடிப் பிறர் சேர்த்த செய்யுட்களையொழித்து விட்டமையினாலும், யானும் அச்சருக்கத்தை இதனிற் சேர்த்தல் தவறென்றொழித்து விட்டேன் என அறிக. இதனை விவேகிகளுணர்ந்து தெய்வநாயகி திருமணச் சருக்கத்தை யொழித்துவிட்டது தவறென்று என்மீது குற்றமேற்றாதிருப்பார்களென்று நம்புகின்றேன்".

இதேபோன்று, தட்சிணகைலாச புராணம் என்னும் திரிகோணமலைப் புராணத்தை அச்சிட்ட யாழ்ப்பாணம் திரு. கா. சிவசிதம்பர ஐயர் அவர்கள் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளவையும் ஈண்டு நோக்கத்தக்கது.

"இப்புராணத்திலே திருநகரச் சருக்கம் ஈற்றிலுள்ள தன்றோ? அதிலுள்ள சரித்திரங்களெல்லாம் முதனூலாகிய மச்சேந்திய புராணத்திலே கூறப்படாதிருப்ப, அதனையுஞ் சேர்த்துஅச்சிட்ட தென்னை யென்பாராயின், ஆசிரியர் வடநூலிலே கூறிய சரிதமன்றி, பின்னர் நடந்த சரிதத்தைத் தாஞ்சேர்த்த தென்றமையானும், அறுநூற்று முப்பத்திரண்டென விருத்தத் தொகை கூறப்பட்டமையானும், மேற்கூறிய சருக்கத்தை விலக்கின் ஆசிரியர் கூற்று மாறுபடுமென்பது கருதியென்க. ஆதல்பற்றி, நம்மேற்குறை கூறாதிருப்பான் புலவர்களை வேண்டுகின்றேன்.

இப்புராணத்தைப் பலர்க்கும் உபயோகமாம் பொருட்டு அடியேன் பிதாவாகிய, ஸ்ரீலஸ்ரீ மு. கார்த்திகேயரவர்களைக் கொண்டு பெரும்பான்மையும் கண்ட பிரதிகளின் வண்ணமே பரிசோதிப்பித்து அச்சிடுவித்தேன். ஆனால், அர்த்தம் புலப்படாதவிடங்களிற் பிரதிகளிற் கண்டவண்ணமே பிரசுரிக்கப்பட்டது. என்னை? ஆசிரியர் கருத்தை யறியாது ஒன்றை விலக்கலும், நூதனமாக வொன்றைச் சேர்த்தலும், ஒன்றையொன்றாக மாற்றுதலும் அறிவுடையோர்க்கழகன்று ஆகலின்" என இவ்வாறு இப்பதிப்பாசிரியர் குறிப்பர்.

இவ்வகையில் தலபுராணப் பதிப்பில் அக்காலப் பதிப்பாசிரியர் கொண்டிருந்த விழிப்புணர்வும், நேர்மையும், உழைப்பும், நுணுகி ஆராயும் பண்பும் பாராட்டத்தக்கன.

சிறப்புமிகு பதிப்பாசிரியர் சிலர்

தொல்காப்பியம், வீரசோழியம் போன்ற நூல்களை முதன்முதலாகப் பதிப்பித்தது போலவே தணிகைப் புராணத்தையும் பதிப்பித்தவர் திரு. சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள். இதே போன்று திரு. கா.ரா. நமச்சிவாய முதலியார் அவர்களும் தணிகைப்புராணத்தைப் பதிப்பித்தார். இவ்வாறு குறிப்பிடத்தக்க சில பதிப்பாசிரியர்கள் தலபுராணங்களைச் செம்மையாகப் பதிப்பித்து இந்நூல்களுக்கு அணி சேர்த்தனர்.

தமிழில் மிகுதியான தலபுராணங்களை இயற்றிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கிச் செவ்வந்திப் புராணம், காஞ்சிப்புராணத்தின் முதற் பாகம், திருவானைக்காப்புராணம் போன்றவற்றைப் பதிப்பித்து அளித்துள்ளார்.

மகாவித்துவான் அவர்களிடம் ஈடுபாடு மிக்க வித்துவான் தியாகராச செட்டியார் அவர்கள் உறையூர்ப்புராணம், திருக்குடந்தைப் புராணம், பூவாளூர்ப் புராணம் ஆகியவற்றைச் சிறப்பாகப் பதிப்பித்துள்ளார்.

இவர்கள் வரிசையில் மிகவும் குறிப்பிடத்தக்கதொரு பதிப்பாசிரியராக விளங்குபவர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள். தமிழில் மிகுதியான நூல்களையும் மிகப் பழமையான நூல்களையும் ஒருசேரப் பதிப்பித்தளித்த ஐயரவர்களே 'தமிழில் மிகுதியான தலபுராணங்களைப் பதிப்பித்தவர்' என்ற சிறப்புக்கும் உரியவராகிறார். *1883* முதல் *1940* வரையில் *13* தலபுராணங்களை இவர் பதிப்பித்தளித்துள்ளார்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் பதிப்பித்த தலபுராணங்கள்

1. திருக்குடந்தைப் புராணம் *(1883)*
2. திருப்பெருந்துறைப் புராணம் *(1892)*
3. வீரவனப் புராணம் *(1903)*
4. சூரைமாநகர்ப் புராணம் *(1904)*
5. தியாகராச லீலை *(1905)*
6. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் *(1906)*

7. தனியூர்ப் புராணம் *(1907)*

8. மண்ணிப்படிக்கரைப் புராணம் *(1907)*

9. திருக்காளத்திப் புராணம் *(1912)*

10. விளத்தொட்டிப் புராணம் *(1934)*

11. ஆற்றூர்ப் புராணம் *(1935)*

12. தணிகாசலப் புராணம் *(1939)*

13. வில்லைப் புராணம் *(1940)*

இத்தலபுராணங்களின் பதிப்பில் இவர் எழுதிச் சேர்த்திருக்கும் குறிப்புரை, அரும்பதவுரை, முகவுரை போன்றன மிகவும் குறிப்பிடத்தக்கன. ஒவ்வொரு பதிப்பிலும் இவர்தம் முகவுரையில் எல்லாச் செய்திகளையும் சுருக்கி உரைப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். தலம் இருக்குமிடம், தலத்தின் வேறு பெயர்கள், தல இறைவன், இறைவியின் பெயர்கள், தீர்த்தம், விருட்சம், வழிபட்டுப் பேறு பெற்றோர்கள் வரலாறு, இந்நூலிலுள்ள முக்கியமான பகுதிகள் என இவ்வாறு நூலைப் பற்றிப் பிறர் அறிய விழையும் அத்துணைச் செய்திகளையும் முன்னே சுருக்கியளிப்பது இவருடைய தனிச்சிறப்பாகும். ஐயரவர்களுடைய முகவுரையால் அந்நூலை முழுமையாகப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அனைவருக்கும் ஏற்படும். தலபுராணங்களில் கூறப்பெறும் செய்திகளைத் தாம் தெளிவாக அறிந்துணர்ந்த பின்னரே பதிப்பிப்பது இவர்தம் இயல்பு. இதனால் ஒரு நூலைப் பதிப்பிக்கப் பல ஆண்டுகளாக இவர் அரிதின் முயன்று பாடுபட்டதை இவர் வரலாற்றால் அறிகிறோம். தலபுராணப் பதிப்பாசிரியர்களுக்கு மிகச் சிறந்ததொரு வழிகாட்டி என்றே இவரைக் குறிப்பிடலாம். தல வரலாறுகளை அறிவதில் அவருடைய ஆசிரியர் போலவே ஐயரவர்களும் கொண்டிருந்த ஈடுபாட்டைக் கூறுவார் திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள்.

“தல தரிசனம் என்பது அவருக்கு மிகவும் விருப்பமான செயல். தலங்களைப் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதில் பேரார்வம் உடையவராக இருந்தார். ஏதேனும் தலத்திற்குச் சென்றால் அந்தத் தலத்தைப் பற்றிய வரலாறு, வடமொழி, தென்மொழியில், வழங்குகின்ற அந்தத் தலத்திலுள்ள பெருமான் பெயர், அம்பிகை பெயர், அந்தத் தல சம்பந்தமான நூல்கள் முதலியவற்றைப் பல பேரிடம் விசாரித்துத் தெரிந்து கொள்வார். அவற்றை எல்லாம் குறிப்புக்களாக எழுதி வைப்பார். இவ்வாறு சேகரித்த குறிப்புக்கள் மிக அதிகமாக இருக்கின்றன. தேவாரத்தைச் சமயம் கிடைக்கும்போது அச்சிட

வேண்டுமென்ற ஆசை ஆசிரியப் பெருமானுக்கு இருந்தது. தேவாரத்தில் வரும் சொற்பொருள்களைத் தொகுத்து இரண்டு அகராதிகளை எழுதி வைத்துக் கொண்டார். தலங்களில் சம்பந்தமான செய்திகளை அப்போது பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணினார். அது மட்டுமன்றித் **தலபுராணங்களை ஆராயும்போது அந்தச் செய்திகள் எல்லாம் பயன்பட்டன.** பல தலபுராணங்களை அவர் அச்சிட்டிருக்கிறார். அந்தப் புராணங்களின் குறிப்புரையில் தாம் கேட்டறிந்தும் நூல் வாயிலாக அறிந்து கொண்டும் தொகுத்த செய்திகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்" என்பார் திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள்.

மேலும், *1909* ஆம் ஆண்டில் ஐயரவர்கள் திருவாவடுதுறை சென்றிருந்த போது அங்கிருந்த **தேதியர் மகாதேவசிவன்** என்ற பெரியவரிடம் பல தலங்களைப் பற்றியும், தீர்த்தம், விருட்சம், மூர்த்தி போன்றவற்றைக் கேட்டறிந்து குறித்துக் கொண்டது பற்றியும், பிற்காலத்தில் முத்து என்றும் வண்ணாரப் பரதேசி என்றும் வழங்கிய ஒருவரிடம் இத்தகைய குறிப்புக்களை அவர் கேட்டு எழுதிக்கொண்டது பற்றியும் கி.வா.ஜ. குறிப்பிடுவார் (என் ஆசிரியப்பிரான், பக். *22, 23, 81, 82, 218).*

வாய்மொழி இலக்கியத்தில் தலவரலாறுகள்

தலங்களின் வரலாறுகளை எடுத்துக்கூறும் வகையில் சிறப்பிடம் பெறுவன வழிவழி வழங்கப்பெற்றுவரும் வாய்மொழி இலக்கியங்களாகும். இவற்றின் வழியில்தான் பழந்தமிழ்ப் புலவர்கள் தலவரலாறுகளை அறிந்து விளக்கினர் என்பதற்கு ஐயரவர்கள் வாழ்க்கையும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

அந்தக் காலத்தில் சிவாலயங்களில் ருத்திரக்கணிகையர் இருந்து சில தொண்டுகளைச் செய்து வந்தார்கள். அதனால் அவர்களுக்குத் 'தேவரடியார்' என்ற பெயர் அமைந்தது. அது பிற்காலத்தில் வேறு விதமாக மாறிவிட்டது. ருத்திரக் கணிகையர் தொண்டுகளில் தட்டெடுப்பது என்பது ஒன்று. "ஆலவாய்ச் சொக்கருக்குத் தட்ட தெடுக்கும் தனியிலார்" என்று விறலிவிடுதூதில் வருகிறது. அவர்கள் பாடும் பாடல்களில் தலசம்பந்தமான பல செய்திகள் இருக்கும். இறைவன் இறைவிக்குரிய பெயர்கள் வடமொழியில் வழங்கி வந்தாலும் அவற்றிற்குச் சரியான தமிழ்ப் பெயர்கள் அந்தப் பாடல்களில் இருக்கும். இதை நன்கு அறிந்திருந்த ஐயரவர்கள், ஒரு முறை, புதுக்கோட்டைக்குச் சென்றிருந்தபோது, குடுமியாமலை சென்று தரிசனம் செய்து விட்டு, இந்தத் தலத்து ருத்திர கணிகையரில் வயதானவரை அழைத்து வரச் செய்தார். அந்த ருத்திர கணிகையிடம், தட்டெடுக்கும்போது பாடும்

பாட்டைப் பாடச் சொல்லிக் கேட்டுக் குறித்துக் கொண்டார். பிறகு, உடன் இருந்தவர்களைப் பார்த்து, "இப்போது வரவரப் பழைய பழக்கங்களெல்லாம் மறைந்து வருகின்றன. தலசம்பந்தமான பல பழைய வரலாறுகள் சொல்வார் இல்லாமல் மறைந்து போய் விடுகின்றனர். இந்த மாதிரி உள்ள தாசிகள் பாடல்களில் தல சம்பந்தமான குறிப்புக்கள் இருக்கும். அவை பல காலமாகப் பரம்பரை பரம்பரையாக வந்திருப்பவை. இப்போதெல்லாம் அவற்றைப் பாடுகிறவர்கள் குறைவாகப் போய்விட்டார்கள்" என்று சொல்லி வருந்தினார் என்பார் திரு. கி.வா.ஜ. அவர்கள் (என் ஆசிரியப்பிரான், பக். *28-29*). இந்நிகழ்ச்சிகள் மூலம் ஐயரவர்கள் தலவரலாறுகளில் கொண்டிருந்த ஆர்வம் புலனாகும்.

தியாகராச லீலை புராணப் பதிப்பு

டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் மிகவும் அருமையான சங்க நூல்களைப் பதிப்பித்தார். திருவாரூர்த் தியாகராச லீலை என்னும் தலபுராணம் பிற்காலம் எழுந்ததாயினும் அரைகுறையானது. மூலநூல் முற்றும் கிடைக்காததால் தம் ஆசிரியப் பிரானாகிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் அந்நூலில் *360* லீலைகளில் *14* லீலைகளை மட்டுமே செய்யுளாக இயற்றியிருந்தார். முற்றுப் பெறாத நூல் என்றாலும் அது சுவைமிக்கது என்பதாலும், தம் ஆசிரியரின் முதல் தலபுராணப் படைப்பு என்பதாலும் ஐயரவர்கள் அப்புராண நூலினை மிகவும் பயபக்தியோடு பதிப்பிக்க விரும்பினார். *1905*ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற அப்புராணப் பதிப்பில் எழுதிய ஒரு பாடலில்,

> "எண்ணிய பலவும் மாணவர்க் கன்பின் ஈந்திடு நிதிதமிழ் விளங்க
> நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தரநன் னாவலன் நன்கினி தாய்ந்து
> பண்ணிய வீதி விடங்கர்தம் ஆடற் பனுவலைப் பதிப்பிக்க இயைந்த
> புண்ணிய மதனை நினைதொறும் எனது புந்திமிக் கின்புறு மாலோ"

என்று குறிப்பிடுவர்.

சங்க நூல்களைப் பதிப்பித்ததைவிடத் தம்மாசிரியர் இயற்றிய முதல் தலபுராண நூலைப் பதிப்பித்ததைப் பெறும் புண்ணியமாகவே அவர் கருதினார் என்பது புலப்படும்.

நாராயண செட்டியார் (வன்தொண்டர்)

சென்ற நூற்றாண்டில் மிகுதியான பாடல்களை இயற்றியும் தலபுராணங்களைப் பாடியும் புகழ் பெற்ற மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்

பிள்ளையவர்கள் இந்நூல்களை இயற்றுவதற்கும் அவை பதிப்பாகி வெளிவருவதற்கும் பெரும்பாடுபட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர் நாராயண செட்டியார் அவர்கள்.

பழைய தலபுராணங்களைப் பாடங்கேட்டல், புதிய தலபுராணங்களை இயற்றப் பிறரைத் தூண்டி உதவுதல், சிறந்த, திருத்தமான தலபுராணப் பதிப்புகளை வெளிக்கொணர்தல் போன்ற சீரிய பணிகளை ஆற்றியவர் இவர்.

தேவகோட்டையிலே நாட்டுக்கோட்டைச் செட்டியார் வகுப்பிலே அண்ணாமலைச் செட்டியாருக்கு மகனாகப் பிறந்த இவர் இளமையிலேயே இரண்டு கண்களையும் இழந்தவர். ஆயினும், பிறரைப் படிக்கச் சொல்லிக் கேட்டே தமிழ்நூல்கள் முழுமையும் கற்றவர். கீழ்வேளூர் சுப்பிரமணிய தேசிகர், திருநெய்த்தானம் வேங்கடராம ஐயங்கார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்ற பெரியோர்களிடம் பாடங்கேட்டுத் தெளிந்தவர் இவர். பிள்ளையவர்களிடத்திலே காஞ்சிப்புராணம், கந்தபுராணம், திருவானைக்காப் புராணம், திருத்தணிகைப் புராணம், பேரூர்ப் புராணம், போன்ற தலபுராணங்களையும் இவர் பாடங் கேட்டார். இவருடைய சிவபக்தியையும் புலமையையும் மெச்சிய பிள்ளையவர்கள்,

> ‘சத்திவாழ் வாமத்துச் சங்கரன்பொற் றாட்கமலப்
> பத்தியால் தேவார பாராய - ணத்தினால்
> வான்றோய் புகழ்மிகுத்த வன்தொண்டன் என்னும்பேர்
> சான்றோய் நினக்குத் தகும்”

எனப் பாராட்டினர். அதுமுதல் நாராயண செட்டியாருக்கு ‘வன்தொண்டர்’ என்னும் பெயர் நிலைத்து நாளடைவில் நாராயணன் என்னும் பெயரே மறைந்து விட்டது.

வன்தொண்டரிடம் கல்வி கற்றவர்கள் பலர். வீர. லெ. சின்னைய செட்டியார், இராமசாமிச் செட்டியார், காரைக்குடி ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார் ஆகியோர் மிகச் சிறந்த மாணக்கர்களாவர். இவர்களுள் சொக்கலிங்கச் செட்டியார் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைப் போல் செய்யுள் இயற்றும் ஆற்றல் அமையப் பெற்றவராய்ச் சுமார் நூறு நூல்கள் வரையில் இயற்றியளித்துள்ளார் என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

தலபுராணம் தோன்ற உதவுதல்

வன்தொண்டராகிய நாராயண செட்டியார் மகாவித்துவான் பிள்ளையவர்களிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டிருந்தவர். பல சமயங்களில்

பிள்ளையவர்கள் கடன் தொல்லையாலும் வறுமையாலும் வாடுதலை உணர்ந்த இவர் பிள்ளையவர்கட்கு உதவ எண்ணினார். நாட்டுக்கோட்டை நகர வட்டத்திலுள்ள சில சிவப்பதிகட்குப் புராணம் பாடவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். பிள்ளையவர்களும் இதனை ஏற்றுக் கொண்டு, சூரைமா (சூரைக்குடி) நகர்ப்புராணம், கோயிலூர்ப் புராணம், கண்டதேவிப் புராணம், சாக்கோட்டை என்னும் வீரவனப் புராணம் ஆகியவற்றை இயற்றியளித்தார்.

பிள்ளையவர்கள் பிறவிடங்களில் புராணம் பாடி அரங்கேற்றினால் அவ்விடங்களில் கிடைக்கும் பொருள்கள் செலவுக்குச் சரியாகப் போய்விடும். பிள்ளையவர்கள் சென்றது போலவே திரும்பி வெறுங்கையாகப் போய்ச் சேர்வது வழக்கம். அவ்வாறு ஆகவிடாமல் பொருளைப் பாதுகாத்துக் கொண்டு போய்ச் சேர்த்துத் தக்கவாறு பயன்படுத்தும் ஒரு புது வழியைக் கண்டுபிடித்து உதவியவர் வன்தொண்டர் ஆவார்.

அதன்படி, திருவாவடுதுறையில் இருந்து நூல் அரங்கேற்றமாகும் ஊருக்குப் போகுஞ் செலவைத் திருவாவடுதுறை ஆதீனம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அரங்கேற்றம் நடைபெறுங்காலங்களிலும் திரும்பி வரும் பொழுதும் ஏற்படுஞ் செலவை நகரத்தார்கள் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். இதனையல்லாமல் ஒவ்வொரு புராணத்திற்கும் பாட்டு ஒன்றுக்கு ரூபா ஒன்று என்று கணக்குச் செய்து கூடுதலாகுந் தொகைக்கு வேறிடத்தில் தொகை பெற்றுக் கொள்ளும்படி உண்டியல் கொடுத்துவிடுவது என்றும் இவர் முடிவு செய்தார். இவ்வாறு ஏற்பாடாகவே போகுஞ்செலவு, வருஞ்செலவு அரங்கேற்றஞ் செய்யுங் காலச் செலவு முதலியன பிள்ளையவர்களுக்குக் குறைந்தன. பெருந்தொகையைப் பிள்ளையவர்கள் பெற்றதுடன் பல இன்றியமையாத செலவுக்கும் அவர் பயன்படுத்த முடிந்தது. இவ்வாறு தலபுராணங்கள் தோன்றவும் அவை வெளிவரவும் துணைசெய்தவர் வன்தொண்டர். இதனால் நாராயணச் செட்டியார் மீது நன்றியும் அன்பும் கொண்ட பிள்ளையவர்கள்.

> "பாடுவதெங் கேஇந்தப் பாண்டிநாட் டெல்லைவந்து
> கூடுவதெங் கேயொருபாற் கோதையான் - நீடுபுகழ்ப்
> பாரா யணனென்றிப் பார்முழுதுங் கொண்டாடும்
> நாரா யணனிலையேல் நாம்"

என்று பாடிப் போற்றியுள்ளார்கள்.

சிறந்த, திருத்தமான தலபுராணப் பதிப்புகளை வெளிக்கொணர ஆர்வம்

திருத்தமற்ற நூல்களைச் செவ்வையாக ஆராய்ச்சி செய்து திருத்தமான பதிப்புகளாக வெளியிட வேண்டுமென ஆர்வங் கொண்டு உழைத்தவர் வன்தொண்டர். இவ்வகையில் இவர் திருவாப்பனூர்ப் புராணத்தை ஆராய்ந்து பதிப்பித்து வெளியிட்டார். பின்னர், தேவாரம் பெற்ற பாண்டிநாட்டுச் சிவப்பதிகள் பதினான்கின் புராணங்களையும் பதிப்பித்து வெளியிட எண்ணி, அவற்றைப் பன்முறை படிப்பித்து ஆராய்ந்து வந்தார் என்பர். மதுரை இராமசாமிப்பிள்ளை என்பவர் திருத்தணிகைப் புராணத்தை ஆராய்ந்து, குறிப்புரையுடன் பதிப்பித்து வெளியிட விரும்பி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த பொழுது, அவருடன் இருந்து கடினமான பகுதிகளையெல்லாம் நன்கு விளக்கியவர் வன்தொண்டர். ஆயினும், அக்குறிப்புரை வேறு கை மாறி வெளிவராமலே போய்விட்டது வேதனைக்குரிய செய்தியாகும்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களே தாம் மறந்து போகும் பாடங்களையெல்லாம் திரும்ப நினைவு கொள்ள வன்தொண்டராகிய நாராயண செட்டியாரையே நம்பியிருப்பர் என்பர். அத்தகைய நினைவாற்றலுடன் விளங்கித் தலபுராண ஆய்விலும், சொற்பொழிவிலும், பதிப்பிலும் ஆர்வங்கொண்ட வன்தொண்டர் போன்றோரின் ஆதரவினாலேயே இன்று சில தலபுராணங்களாயிலும் நிலைபெற்றுள்ளன எனக் கூறலாம்.

இவ்வாறு தமிழில் மிகுபுலமையும் ஆர்வமும் கொண்டவர்கள் பலர் அக்காலத்தில் தலபுராணங்களைப் பதிப்பித்து அளித்துள்ளனர். இவ்வாறு பல சிவத்தலபுராணங்கள் வெளிவந்துள்ளன. கோவை பீளைமேடு வேணுகோபாலசாமி நாயுடு என்பவர் இவ்வாறே வைணவ நூல்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பதிப்பித்தவர். கூடலழகர் புராணம், சீரங்கத் தலபுராணம் முதலிய நூல்களையெல்லாம் இவர் ஆராய்ந்து அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

பதிப்பு வேண்டிப் பாடல் எழுதி அனுப்புதல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் *(1860)* இராமநாதபுரத்தில் இருந்த பொன்னுசாமித் தேவர் என்பவர் சேதுபுராண நூலை அச்சிட்டுப் பலருக்கும் நன்கொடையாக வழங்கினார். அப்பொழுது பலரும் அவரிடம் அப்பதிப்பின் சிறப்பைக் கூறிப் பாடல் எழுதி அனுப்பி நூலைப் பெற்றுள்ளனர்.

அட்டாவதானம் வீராச்சாமிச் செட்டியாருடைய மருகராகிய அப்பன் செட்டியார், தலைமையாசிரியர் அருணாசலம்பிள்ளை, பெங்களூர் இராமசாமி உபாத்தியாயர், புதுச்சேரி குமாரவேலு முதலியார், சென்னை வே. இராமாநுச ஐயர், திருநெல்வேலி சி. பெத்தநாயகம் பிள்ளை, சத்தியஞான சுப்பிரமணிய

தேசிகர் போன்ற பலர் இவ்வாறு தலபுராணப் பதிப்பு வேண்டிப் பாடல் எழுதி அனுப்பிப் பெற்றுள்ளனர். ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலிப்பா, வெண்பா எனப் பல பாக்களால் இவர்களால் கடிதம் அனுப்பி நூலினைப் பெற்ற செய்திகள் பலவும் தமிழ்ப்புலவர் வரலாற்றிலும், பலர் செய்கவிகள் போன்ற தனிப்பாடல் திரட்டு நூல்களிலும் காணலாம்.

"சீர்பூத்த புதுவைநக ராதிபதி பூலோக
சிங்காசு நாதி பதியாம்
சிவஞான மன்னனருள் பொன்னுச்சா மிக்குரிசில்
செகத்தலத் தோர்கள் மெச்ச
ஏர்பூத்த சேதுவின் தலமகிமை தன்னையே
எக்காலும் வாழ்த்தி யன்பர்
இகலோக பரலோக வாழ்வுபெற வச்சிட்
டியற்றினான் இசைபெ ருகவே"

என்பது, திருநெல்வேலி புதுத்தெருவில் கூபத்து மடாதிபதியாக விளங்கிய சத்தியஞான சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் பாடலின் ஒரு பகுதியாகும்.

"மங்குல்தவழ் புதுவையின்வாழ் சிவஞான மாரன்
மகிழ்ந்தீன்ற மணமுல்லை மலர்மாலை மார்பன்
சங்கமுறும் பாவலர்க்குப் பொருளுதவுந் தகையன்
சங்கநிதிக் கரகமல முடையபொன்னுச் சாமி
கங்கையணி பகவரண்ட ருய்யவன்று வந்த
காரிதனை யுண்டமுத மவர்க்கருள்கை போலப்
பங்கமுறா வகைசேதுப் புராணமதை அச்சிற்
பதித்துதவிப் புகழ்படைத்துப் பாருலகாண் டனனே"

என்பது, திருநெல்வேலி ஆசிரியர் சி. பெத்தநாயகம் பிள்ளை அவர்கள் பொன்னுச்சாமித் தேவருக்கு எழுதி அனுப்பிய பாடல்களுள் ஒன்றாகும்.

சென்ற நூற்றாண்டில் தலபுராணப் பதிப்புகளைப் பல பெரியோர்கள் மேற்கொண்ட சிறப்பும் அதற்குத் தமிழ்ப் பெரியோரிடையே இருந்த பெருமதிப்பும் வரவேற்பும் இவற்றால் நன்கு புலனாகும்.

தனியார் பலர் இப்பதிப்புகளுக்குப் பொருளுதவி தந்து உதவியதைப் பழைய பதிப்புகளில் காணும் அவர்கள் பெயர்களைக் கொண்டு அறிகிறோம். சிலர் தம் சொந்தச் செலவில் மிகுந்த இடர்ப்பாடுகளுடன் இந்நூல்களை அச்சிற் பதிப்பித்துள்ளனர். பிற்காலத்தில் இவ்வாறு பொருளுதவி செய்வோர் இன்மையால் பல நூல்கள் பதிப்பிக்கப் பெறவில்லை.

பதிப்புரிமை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தலபுராணப் பதிப்புகள் மிகக் குறைந்த அளவிலேயே வெளிவந்துள்ளன. குறிப்பிட்ட சில இடங்களிலேயே இவை விற்பனைக்குக் கிடைத்து வந்தன. மேலும், பதிப்பித்தோர் மற்றும் அச்சகத்தார் இவ்வச்சு நூல்களில் பதிப்புரிமைச் சட்ட விதிகளைச் சுட்டியிருப்பதும் இவண் குறிக்கத் தக்கது.

புதுவையில் பிரெஞ்சு ஆட்சியில் *(12.8.1861)* *சீகாளத்திப்புராணம்* அச்சிடப்பட்டுள்ளது. அதில், 'தெரிவித்தல்' என்ற தலைப்பில் பின்வரும் செய்தி அச்சிடப்பட்டுள்ளது.

"இக்காளத்தி புராணத்தைத் தாங்களே பிரயாசைப்பட்டு திருத்தினதாய் மாறுபாடாக வேறே அச்சிடுபவர்கள் எந்த தேசத்தராயிருந்தாலும் எந்த அரசாட்சிக்கு உட்பட்டவராயிருந்தாலும் அப்படிக்கொத்த மாறுபாடான செய்கையால் நேரிடுந் தண்டனைக்கும் புஸ்தக நஷ்டத்துக்கும் உத்தரவாதம் செய்ய வேண்டியவர்களாவார்கள்".

இந்நூலை அச்சிட்ட குமரகுரு, அரங்கநாதன் ஆகியோரும், பதிப்பாசிரியர்களாகிய சுப்பு, அருணாசல குருக்கள் ஆகியோரும் இச்செய்தியை அறிவித்து அச்சிட்டுள்ளனர்.

இதேபோன்று, *6.2.1870* அன்று முதல் முதலில் தீர்த்தகிரி புராணத்தை அச்சிட்ட தஞ்சை அ. கன்னைய செட்டியாரும் 'அறிவிப்பு' என்ற தலைப்புடன் பின்வரும் செய்தியை இம்முதற்பதிப்பில் அச்சிட்டிருக்கக் காணலாம்.

"இதனால் சகலருக்குந் தெரிவிப்பதியாதெனில், *1869*ம் வருடம் *25*வது ஆக்டின் - *20*வது பிரிவினில் - *6*வது விதியின் பிரகாரம் காப்பிரைட் பெற்றிருக்கிற படியால், இதை ஒருவரும் அச்சிடவுங் கூடாது, மற்றொரு பாஷையிலு மொழி பெயர்க்கவுங் கூடாது, அப்படிக்குப் போடுவாராகில் மேற்கண்ட ஆக்டில் செப்பியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய்த் தண்டனை விதிக்கப்படும்".

"சேலத்துக்கடுத்த கொடிமாடச் செங்குன்றூ ரென்னும் திருச்செங்கோட்டுத் தலபுராணம் - அச்சிட எத்தனித்திருக்கிறோம்" என்பன இப்பதிப்பின் முன்னுள்ள செய்திகளாகும்.

அக்காலப் பதிப்பாசிரியர்கள் தாம் அரிதின் முயன்று பதிப்பித்த நூல்கள் பிறரால் தவறுதலாக அச்சிடப்படக் கூடாது என்ற நோக்கில் சட்ட விதிகளைக் காட்டி அச்சுறுத்தினர். ஆயின், இதுவே பின்னால் பல பதிப்புகள் தோன்றாமைக்குரிய காரணங்களில் ஒன்றாக இருக்குமோ என எண்ணவும் இடமேற்படுகிறது.

அண்மைக் காலத்திய தலபுராணப் பதிப்பாசிரியர்

தஞ்சை மாவட்டம் ஆலங்குடியிலே சைவ வேளாளர் குலத்திலே தோன்றியவர் த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் *(1900 - 1972).* இவருடைய தந்தையார் சபாபதிப்பிள்ளையவர்கள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் மாணவர் பெரியண்ண பிள்ளை என்பவரிடத்தில் கல்வி கற்றவர். அவரிடமே இவரும் தமிழ் நூல்களைக் கற்றறிந்தார். பல நூல்களையும் இயற்றியுள்ள இவர் சுமார் நூற்று முப்பத்தைந்து நூல்களுக்கு மேலாக ஆராய்ச்சி முகவுரையுடன் பதிப்பித்துள்ளார்.

தணிகைப்புராணம் குறிப்புரையுடன், கோயிற்புராணம் பழைய பொழிப்புரை, பேரூர்ப்புராணம் பொழிப்புரையுடன், திருநாகைக் காரோணப் புராணம் குறிப்புரையுடன், மருதவனப்புராணம் குறிப்புரையுடன் ஆகிய இவருடைய பதிப்புகள் குறிப்பிடத்தக்கன.

இவ்வாறு தலபுராணங்களைப் பதிப்பிக்கும் ஆசிரியர்கள் இன்று மிகமிகக் குறைவு. இப்பதிப்புகளை ஊக்குவிப்போரும் மிகக்குறைவே. தலபுராணங்களைப் பதிப்பிப்பதில் சில சைவ ஆதீனங்களும், தனியாரும், உரையாசிரியரும் தொடர்ந்து ஆர்வங் காட்டி வருகின்றனரே அன்றி, அரசு நிறுவனங்களோ, பல்கலைக்கழகங்களோ இப்பதிப்புகளில் ஆர்வங் காட்டவில்லை என்பதே உண்மையாகும்.

தஞ்சை சரசுவதிமகால் சுவடி நூலகம், சென்னை டாக்டர் உ.வே. சாமிநாதையர் சுவடி நூலகம், கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் போன்றவற்றிலுள்ள சுவடிகளோடு தொடர்புடையவர்கள் மட்டுமே ஒருசில தலபுராணப் பதிப்புகளைச் செய்து வெளியிட்டுள்ளனர்.

மறைந்த நூல் வெளிவந்தது

சோழநாட்டுத் தலங்களுள் திருவானைக்காவைப் பற்றி எழுந்த முதல் தலபுராணம் தந்திவனப் புராணம். இது கமலை ஞானப்பிரகாசரால் கி.பி. *16*ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இதற்குப் பின்னால் இருநூறு ஆண்டுகள் கழித்து *18*ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கச்சியப்ப முனிவர் இத்தலத்திற்கு எழுதியதே திருவானைக்காப் புராணம் ஆகும். காலத்தால் முற்பட்ட தந்திவனப் புராணம் எங்கும் கிடைக்காததால் அது அழிந்தது என்றே எண்ணினர். பதினாறாம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு *(1977)* இயற்றிய திரு. மு. அருணாசலம் அவர்களும் கமலை ஞானப்பிரகாசர் செய்த இப்புராணம் மறைந்தது என்றே தம் நூலில் *(பக். 142)* குறிப்பிட்டனர். பின்பு அவரே, திருவான்மியூர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையத்தில்

இந்நூல் சுவடி வடிவில் இருப்பதையறிந்து தம்முடைய இதே நூலில் *(பக். 201-204)* முதன் முதலில் எடுத்துக் காட்டியுள்ளனர். இதன்பின், *1981*இல் சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் இச்சுவடியைப் பெற்று அச்சில் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. டாக்டர் தா.வே. வீராசாமி அவர்கள் சீரிய முறையில் அந்தத் தந்திவனப் புராணச் சுவடியைப் பதிப்பித்து அளித்துள்ளார். இப்பதிப்பில் திருவானைக்காவைப் பற்றிய பல வரலாற்றுத் தகவல்களையும், இரண்டு தலபுராணங்களின் சிறப்புகளையும் ஒப்பீடு செய்துள்ளமையும் *(பக். 98-111)* இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

கமலை ஞானப்பிரகாசர் இயற்றிய தந்திவனப்புராணம் *14* சருக்கங்களையும் *571* பாடல்களையும் கொண்ட ஒரு சிறந்த படைப்பாகும். இவ்வரிய சுவடி அச்சில் வெளிவரத் துணைபுரிந்த உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தினர் மிகவும் பாராட்டுக்குரியவராவர்.

நானூறு ஆண்டுகட்கு முற்பட்ட இத்தகைய தலபுராணங்களை, இக்காலப் பதிப்பு நோக்கில் எவ்வெவ்வாறு அச்சிட்டு வழங்கலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே இதன் பதிப்பாசிரியர் டாக்டர் தா.வே. வீராசாமி அவர்கள் இப்பதிப்பினைச் செய்து அளித்துள்ளார்.

தவறான பதிப்பு

சுவடிப்பதிப்பிலே தலைப்பிலேயே தவறுகள் நிகழ்வதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வது தஞ்சை சரசுவதி மகாலின் *132* ஆம் வெளியீடாகிய 'கும்பகோணப் புராணம்' ஆகும். சொக்கப்பப்புலவர் இயற்றியதாகக் கூறப்பெறும் இந்நூலை வித்துவான் திரு. மு. சடகோபராமானுஜம் பிள்ளை என்னும் பதிப்பாசிரியர் பதிப்பித்து *1971*ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

சிவரகசியம் என்னும் நூல் 'கும்பகோணப் புராணம்' எனத் தவறுதலாகப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. தலபுராணப் பதிப்பில் நிகழும் சிக்கல்களுக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும்.

ஓலைச்சுவடியிலே முதலில் இருக்கவேண்டிய ஏடுகள் தவறாகக் கடைசியில் கோக்கப்பட்டுவிட்டன. எனவே சுவடியின் முதலில் பெயர் முதலியன இல்லை. முதலாவது நைமிசாரணியச் சிறப்புரைத்த அத்தியாயம் எனச் சுவடி தொடங்கி இருபத்தேழாவதாகப் பூசைக்கு உபகரணங் கூறிய அத்தியாயம் வரைக் குழப்பமில்லாமல் தொடர்கிறது. இவ்வத்தியாயத்தின் இறுதி ஏடு இல்லாததால் நூல் முடிவைப் பற்றிய குறிப்பு சுவடியில் காணப்பெறவில்லை. முதலில் இருக்க வேண்டிய பாயிரப் பகுதியடங்கிய ஏடுகள் தவறுதலாகப் பின்னால் சேர்க்கப்பட்டுள்ளன. அதிலும் முதல் ஏடு இல்லாததால் ஐந்து பாடல்கள் கிடைக்காமல் ஆறாம் பாட்டிலிருந்து உள்ளன. இச்சுவடியைப்

படியெடுத்தவர், அதனைத் திருத்தியவர், பதிப்பாசிரியர், அவருக்கு ஒப்புநோக்குதல் முதலியவற்றிற்கு உதவியவர் ஆகிய எவரும் அது பாயிரம்தான் எனத் துணிவாக அறியாதது வியப்பாக உள்ளது. மேலும், பதிப்பாசிரியர் தம் முகவுரையில், “எல்லா நூலாசிரியரும் விநாயக வணக்கம், நால்வர் துதி முதலியன நூன்முகத்துரைத்துப் போயினர்; இவர், நூலின் இறுதியிற் கூறுகின்றார். அங்ஙனம் அமைந்தது யாது காரணத்தாலோ தெரியவில்லை” என்று கூறி இது ஒரு புதுமை என்று குறிப்பிட்டிருப்பதும் வேடிக்கையானது.

“இந்நூலாசிரியர் பாடியது தலபுராணமாக இருந்தாலும் அதன் வாயிலாகச் சித்தாந்தக் கருத்துக்கள் பலவற்றை விரிவாகக் கூறியிருக்கிறார். ஒவ்வோரிடத்தில், நிர்க்குணப் பிரமத்தைப் பற்றியும் பேசியிருக்கின்றார்” எனப் பதிப்பாசிரியர் தம் முகவுரையில் குறிப்பிடுவதிலிருந்து இது ஒரு தலபுராண நூல் என்பதாக எண்ணத் தோன்றுகிறது. ஆயின், இந்நூல் கும்பகோணப் புராணமே அல்ல என்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும். இந்நூலில்,

“இழைமங்கை பாக ரிருந்தவ
 னருளாற் பச்சைக்
கழைவளர் பொதியில் வைகுங் கடமுனி
 வேத சாரம்
மொழிசிவ ரகசியத்தை மொழிபெயர்த்து
 வளர்ந்தயன் றவறு
கொழிதமிழ்ச் செய்யுளாலே
 காதலாற் கூறி னானே” *(15)*

என்னும் பாடற்பகுதிகளால் இந்நூல் சிவரகசியமாகும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. (நூலின் பாயிரப்பகுதியான இப்பதினைந்தாவது செய்யுள். இப்பதிப்பில், நூலின் இறுதியில் *1069* ஆம் பாடலாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது). மேலும், “சிவன் இரகசியம் தறுகணர்க்கு இயம்பொணாதரோ” என்றும், “அகத்திய சிவரகசியமென்று அன்பொடும் சகத்தினில் யோகிக்குச் சாற்றினான்” என்றும் இந்நூலின் முதற் சருக்கத்தில் வரும் *27, 30* ஆவது பாடற்பகுதிகளும் இந்நூல் சிவரகசியமே என்பதை உறுதி செய்யும்.

இந்நூலில் கும்பகோணச் சிறப்புரைத்த அத்தியாயம் என்னும் பெயரில் *(3,20)* இரண்டு அத்தியாயங்கள் உள்ளன. இதைக் கண்ணுற்றே இப்பதிப்பாசிரியர் இந்நூலைக் ‘கும்பகோணப் புராணம்’ என எண்ணினாரோ என ஐயுற வேண்டியுள்ளது. ஏனெனில், இவ்வாறு ஒரே நூலில் ஒரே பெயரில் இரண்டு வெவ்வேறு அத்தியாயங்கள் அமைக்கும் மரபு இல்லை. (இது வேறு சுவடிகள் கலப்பினாலும் நிகழ்ந்திருக்கலாம்).

மேலும், இதே நூலில் திருக்கயிலாச் சிறப்புரைத்த அத்தியாயம், காசியின் சிறப்புரைத்த அத்தியாயம் எனவும் சில உள்ளன. இவற்றைக்

கொண்டு இந்நூலைக் கயிலாசப் புராணம் என்றோ காசிப்புராணம் என்றோ கூற இயலாதது போலவே கும்பகோணப்புராணம் எனக் கூறுவதும் பொருத்தமற்றதே என்பது நுணுகி ஆராயுமிடத்து விளங்கும்.

தமிழில் தலபுராண அமைப்பை நன்கு உணராததாலேயே இப்பிழை நேரிட்டது என்பது ஆய்வாளர் கருத்து. (புலவர் ப.வெ. நாகராசன், டாக்டர் ஐயரவர்களுக்குப் பிந்தைய சுவடி நூலகப் பதிப்புகள் - சுவடிப்பதிப்பு வரலாறு - கருத்தரங்கக் கட்டுரை, ஓலைச்சுடிவத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், *1990).* சுவடி அட்டவணைகளிலுள்ள செய்திகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பதிப்பிக்கத் தொடங்குவதும், சுவடிகளை நேரடியாகப் பார்வையிடாததுமே இத்தவறுகளுக்குப் பெருங்காரணங்களாகும். இத்தகைய தவறான பதிப்புகளால் தலபுராணம் பற்றிய உயர்வான எண்ணங்கள் தாழ்ந்து போவதற்கும் இடமேற்படலாம் என்பதைச் சுட்டுவதற்காகவே இப்பதிப்புப் பற்றி இங்கு எடுத்துக்காட்டப் பெற்றது.

தலபுராணப் பதிப்புகளின் தேவை

பொது நிலையில், தலபுராணங்கள் பல, முதல் பதிப்பைத் தவிர மறுபதிப்பாகவில்லை. மிகக்குறைவான எண்ணிக்கையிலேயே பதிப்பிக்கப் பெற்றதால் பல நூல்கள் இன்று கிடைக்கவில்லை. தமிழாய்வுக்கு இவை இதுவரை எவ்வகையில் துணையாகக் கொள்ளப்பெற்றன என்பதும் தெரியவில்லை. குறிப்பிட்ட சில தலபுராணங்கள் தவிர மற்றவை அகராதிகளில் கூட இடம்பெறவில்லை என்பது கருதத்தக்கது.

தமிழ் அகராதியில் தலபுராணங்கள்

சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ் லெக்சிகன் முதல் தொகுதி *8-10-1924*இல் வெளியிடப்பெற்றது. பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் *25.11.1926* முதல் தமிழ் லெக்சிகன் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்று மிகச் சிறந்த பணிகளைப் புரிந்துள்ளார். *20.3.1936* முடிய ஆறு தொகுதிகளும் வெளியிடப்பெற்றன. இவற்றிலுள்ள சொற்களின் மொத்த எண்ணிக்கை *1,04,405* ஆகும். பிறகு, விடுபட்ட சொற்கள் தொகுக்கப்பெற்று இணைப்புத் தொகுதியாக *1938-1939*இல் வெளியிடப்பெற்றது. இவ்விணைப்புத் தொகுதியில் உள்ள சொற்களின் எண்ணிக்கை *13,357* ஆகும். ஆக மொத்தம் தமிழ் லெக்சிகனில் உள்ள சொற்களின் எண்ணிக்கை *1,17,762* ஆகும். இதுவே தமிழில் தொகுக்கப்பெற்ற மிகப்பெரிய அகராதி ஆகும். இத்தொகுப்பிற்காகச் சுமார் முந்நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் நூல்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன. அவற்றுள், தலபுராணங்கள் என்ற வகையில் *31* நூல்கள் மட்டுமே எடுத்தாளப்பெற்றுள்ளன.

அருணகிரிபுராணம் முதலாக வேதாரணியப் புராணம் ஈறாகப் பலராலும் பரவலாக அறியப்பெற்ற தமிழ்த் தலபுராண நூல்களே அகராதிப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளமை இவண் குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய நிலையில் சுமார் *800* தலபுராணங்களை அறிகிறோம். இதுவே சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இதனினும் மிகுந்த எண்ணிக்கையில் கிடைத்திருக்கலாம். இருப்பினும், தமிழ் அகராதிப் பணியில் இவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளாததன் காரணம் தெளிவாக விளங்கவில்லை. சிறப்புடைய பதிப்புகள் பல கிடைக்காமை ஒரு காரணமாகலாம். இன்றும் இந்நிலை மாறவில்லை. அப்படியே தொடர்கிறது.

பழைய தலபுராணங்களைத் தொகுத்துப் பார்க்கும் அளவில் சுமார் முந்நூறு நூல்களில் *3,00,000*க்கு மேற்பட்ட பாடல்கள் இருப்பதாக அறிகிறோம். இவற்றுள், தமிழ் அகராதியில் இல்லாத சொற்கள் எவ்வளவு என்பதும், அவற்றின் பயன்பாடு எத்தகையது என்பதும் இன்னும் ஆராயப்பெறவில்லை.

ஒரு மொழியிலுள்ள இத்துணைப் பாடல்களையும் கவனிப்பாரின்றி ஒதுக்கி வைத்திருப்பது அம்மொழி வளர்ச்சிக்குத் தடையேயன்றி வேறில்லை. அதிலும் பல நூல்கள் அச்சில் வெளிவந்தும் அவற்றைப் பார்வையிடுவாரில்லை என்பது வேதனைக்குரியது. இந்நிலை இனியாவது மாறுமென நம்புவோம்.

நல்ல பதிப்புகளின் தேவை

தமிழில் அகராதிப் பணிக்கும் ஆராய்ச்சிப் பணிக்கும் பல நல்ல பதிப்புகள் தேவைப்படுகின்றன. மொழியில் அகராதிப் பணி என்பது ஒரு முடிவில்லாப்பணி, தொடர்பணி. எனவே, தமிழிலுள்ள தலபுராணங்களைச் செம்மையாகப் பதிப்பிப்பதன் வழி இதுபோன்ற பணிகள் மேலும் சிறப்புறும். மொழி வளர்ச்சிக்கும் பெரும் பயனுடையதாகும்.

கோயில்களின் குடமுழுக்கு விழாக்களில் சில புராணங்களும், தனியார் முயற்சியால் சில புராணங்களும் பதிப்பிக்கப் பெறுகின்றன. அதிலும், உரைநடையிலான புராண நூல்களே மிகுதியாக உள்ளன. மூல நூல்கள், செய்யுள் வடிவிலான நூல்களைப் பதிப்பிப்பார் மிகுதியுமில்லை. எனவே, இவை பெரும்பாலும் அழியும் நிலையிலுள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு பெரிய நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் இத்தலபுராணப் பதிப்பில் கவனம் செலுத்தினால் மொழிக்கும் சமுதாயத்திற்கும் செய்த பெருந்தொண்டாக அமையும்.

பழமையும் பெருமையும் வாய்ந்த தமிழகத் தலங்களைப் போன்று மிகுதியான எண்ணிக்கையை வேறு எங்குமே காண்பது அரிது. தமிழ் மக்களின் சமயத்துறையிலும், சமுதாயத் துறையிலும், கலையியல் மற்றும் பொருளியல் துறைகளிலும் இத்தலங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன.

இந்திய நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கு வரும் பிற நாட்டார் பலரும் நமது கோயிற்கலையைக் கண்டே வியக்கின்றனர். இத்தகைய கோயில்களிலே மக்கள் மனங்குவிந்து, நினைவொடுங்கி, வழிபட்ட காலங்களிலெல்லாம் நம் நாடு நிகரற்ற நாடாக விளங்கியது; செல்வம், கல்வி, பண்பாடு, நாகரிகம் எல்லாம் தழைத்துச் செழித்தன. திருக்கோயில் மணிகள் நமது சமயப் பண்பாட்டின் வெற்றியை ஒலித்துக் காட்டின. கோயில் வழிபாடு குன்றக் குன்ற நம் வாழ்வும் வளமும் குன்றிப் போயின.

மேலும், கடந்த ஐம்பது ஆண்டுகளாக மக்களை நல்வழிப்படுத்தக் கூடிய நூல்கள் மிகுதியாக வெளிவருவதுமில்லை. அறிவியல் வளத்தால் பொழுதைக் கழிக்க உதவும் நூல்களும் சாதனங்களும் பொழுதுபோக்கு வசதிகளும் பெருகிவிட்டன. மக்களில் பலர் நல்வழி காட்டுவாரின்றி, இன்பம் துய்ப்பதிலும் பொருள் சேர்ப்பதிலுமே ஆவல் கொள்கின்றனர். தங்கள் ஆவல்களை நிறைவேற்றிக் கொள்ள எத்தகைய வழிகளை மேற்கொள்ளவும் அவர்கள் துணிந்துள்ளனர்.

அண்மைக்காலத்தில் நம் மொழிக்கல்வியும் நம் மொழி வழிக்கல்வியும் குறைந்ததால் நம்முடைய பண்பாட்டுக் கூறுகளை இளைய சமுதாயம் அறிய இயலவில்லை. நம் மொழியிலுள்ள சமயம் மற்றும் அற இலக்கியங்களைக் கற்பதும் குறைந்துவிட்டதால் உண்மை, நேர்மை, கடமை போன்ற அற வழிகள் அனைத்தும் இளைஞர் மனத்தில் உரிய இடம்பெற வழியில்லை. அயல்நாட்டாரின் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டாலும் அந்நிய மோகத்திற்கும் கவர்ச்சிக்கும் ஆட்படுவதிலிருந்து நம்மில் பலர் விடுபட இயலவில்லை. நம் பண்பாட்டு மரபுகளை முற்றிலும் இழந்து விடுவோமோ என்ற அச்சமான சூழ்நிலைகளே தொடர்ந்து உருவாகி வருகின்றன.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவற்றுடன் ஒழுக்கமுடனும் ஒற்றுமையுடனும் வாழும் சமுதாயப் பற்றும் கொண்டு வாழ வேண்டுமாயின் கோயில் வழிபாடு மிக முக்கியம் என்பதைப் பலரும் இன்று உணர்ந்து வருகின்றனர். இந்நிலையில், கோயில் வழிபாட்டை வலியுறுத்தும் தலபுராணங்கள் அனைத்தையும் பன்முக நோக்கில் அணுகி, அவற்றை நன்கு பதிப்பித்து வெளியிடத் துணைபுரிவது நம் அனைவரின் கடனாம்.

2. சித்த மருத்துவச் சுவடிப் பதிப்புகள்

மருத்துவர் சே. பிரேமா, எம்.டி.(சி)

சித்த மருத்துவச் சுவடிகள் என்றால் சித்தர்களால் அருளிச் செய்யப் பெற்ற மருத்துவ முறைகள் எழுதப் பெற்ற ஓலைகளால் ஆகிய நூல்கள் என்பது பொருள். மருத்துவம் என்றால் மக்களுக்கும் சிறுபான்மை பிற உயிரினங்களுக்கும் பல்வேறு காரணங்களால் ஏற்படும் பல்வேறு நோய்களை ஆய்ந்து அறிந்து அவற்றை நீக்கத்தக்க மருந்துகளை உருவாக்கி அவற்றை நோயாளர்கள் முறையோடு பயன்படுத்திக் கொள்ளச் செய்யும் தொழில் என்பது பொருள்.

உலகில் நில அமைப்பு, விளைபொருள், வாழும் மக்கள் அவர்தம் உடற்கூறு, சுற்றுச் சூழல் போன்றவற்றிற்கேற்ப மருத்துவ முறைகள் சிறுசிறு வேறுபாடுகளைக் கொண்டிருத்தலால் அவ்வவ்முறையை உணர்த்தும் அடைமொழிகளைப் பெறுகின்றன. அவற்றுள் சிறப்பாக வழங்கப் பெற்று வருவன கிரேக்க மருத்துவம், சீன மருத்துவம், அலோபதி மருத்துவம், யூனானி மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், ஓமியோபதி மருத்துவம், சித்த மருத்துவம் முதலியனவாகும். இந்திய நாட்டின் தென்பகுதியான தமிழகத்தில் பண்டைக் காலந் தொட்டுப் பேணப்பட்டுவரும் மருத்துவம் சித்த மருத்துவமாகும்.

சித்த மருத்துவச் சுவடிகள் பற்றியும், அவற்றின் வரலாறு பற்றியும் தெரிந்து கொள்வதற்கு முன் சித்தர்கள் என்போர் யாவர்? அவர்கள் மருத்துவக் கலையை எவ்வாறு அறிந்து எந்த முறையில் அருளிச் செய்தனர்? என்பன பற்றியும், நோய், பிணி என்பவை யாவை? அவை எவ்வாறு தோன்றி மக்களையும் பிற உயிரினங்களையும் பற்றுகின்றன? நோய் வகைகள் எவ்வளவு? என்பன பற்றியும் தெரிந்து கொள்ளுதல் சுவடிகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரியும் ஆதலின், அவற்றைப் பற்றிச் சுருக்கமாகச் சில செய்திகளை இம்முன்னுரையில் காண்போம்.

சித்-சித்தர்கள்-சித்தம்-சித்தி

'சித்' என்னும் இத்தாதுச்சொல்லுக்கு ஞானம் அல்லது அறிவு என்பது பொருள். பொறிகளால் அறிந்து கொள்ளும் அறிவு உணர்வாகும். அது உயிரினங்கள் யாவற்றிற்கும் பொது. மனத்தான் அறிந்து தெளிவதற்கு நல்லறிவு என்பது பெயர். நல்லறிவு மக்களினத்திற்கே சிறப்பாக உரியது. அந்த

அறிவினால் சிந்தித்து நலந்தீங்குணர்தல், முக்கால உணர்வு பெறுதல் மெய்யறிவு எனப்படும். மெய்யறிவிற்கு மறுபெயர் ஞானம். இந்த ஞானம் இருவகைப்படும். ஒன்று விஞ்ஞானம், மற்றொன்று மெய்ஞ்ஞானம்.

விஞ்ஞானம் இவ்வுலக வாழ்வைப் பற்றிச் சிந்தித்து நல்வாழ்விற்கு ஆக்கமானவற்றைப் படைத்தல், விளைத்தல், கேடானவற்றை நீக்குதல், கேடு விளையாமல் காத்தல் முதலியவற்றிற்குக் காரணமாக அமையும்.

மெய்ஞ்ஞானம் இம்மை வாழ்வோடு மறுமை வாழ்வையும் சிந்தித்துச் செயல்படுவது. மறுமை வாழ்வு என்பது பூத உடல் அழிந்தபின் புகழுடம்பால் உலகில் நின்று நிலவுவது, உலகிற்கு நலம் புரிவது. மெய்ஞ்ஞானத்தால் விளைவது அருள், அழியாத படைப்புக்கள். இத்தகு மெய்ஞ்ஞானத்தை அடைந்தவர்களே சித்தர்கள். அவர்களால் அருளிச் செய்யப்பெற்றவையே ஆயகலைகள்.

சித்தம் என்றால் மெய்ஞ்ஞானத்தால் செயல்படும் நிலை என்பது பொருள். சிந்தனை என்னும் பொருளுடைய சித்தம் என்னும் சொல் வேறு. மெய்ஞ்ஞானத்தின் அருட்செயலாகிய சித்தம் என்னும் சொல் வேறு. உலக வழக்கில் ஒருவரிடமிருந்து ஒருவர் அரியதொரு உதவியைப் பெறக் கூறும் பணிவான வாசகம் 'தங்கள் சித்தம் என் பாக்கியம்' என்பதாகும். அங்ஙனம் பெரும் பாக்கியத்தை அருளிச் செய்யும் ஞானமே சித்தம். அத்தகு சித்தத்தையுடையவர்களே சித்தர்களாவர்.

சித்தம் முழுமை பெற்றால் அச்சித்தமுடையோர் எய்தும் ஆற்றல் சித்தி எனப்படும். சித்தியைச் சான்றோர்கள் எட்டு வகைப்படுத்திக் கூறுவர். அவையாவன: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம்.

இயமம்: இயங்குதல், நடை, ஒழுக்கம், நேர்மை.

நியமம்: நோன்பு, ஈகை, ஒப்புரவு, அறநெறி, போற்றல்.

ஆசனம்: உடம்பைப் பல இருக்கை நிலைகளால் கட்டுப்படுத்தல்.

பிராணாயாமம் (பிராண + ஆயமம்): பிராணனாகி, மூச்சுக்காற்றை இட கலை பிங்கலையாகச் சுவாசித்து, சுழுமுனையில் நிலைக்கச் செய்தல். அஃதாவது மூச்சுப் பயிற்சியால் நாடிகளைக் கட்டுப்படுத்துதல், நோயினின்று பாதுகாப்புப் பெறுதல்.

பிரத்தியாகாரம்: ஐம்புலன்களைத் தீநெறிச் செல்லாமல் அடக்குதல், அஃதாவது அவா அறுத்தல், சினம், காமம் முதலியவற்றை அடக்கல்.

தாரணை: சிந்தையை ஒருவழிப்படுத்தல்.

தியானம்: தன்னை இறையாற்றலோடு இணைக்க இடையறாது சிந்தித்தல்.

சமாதி: பற்றறுதல், விருப்பு வெறுப்பற்ற நிலை, இன்ப துன்பங்களுக்கு அப்பாற்படல்.

இவ் வெண்வகைச் சித்திகள் கைவரப்பெற்றவர்கள் அடைவது மகாசித்தி. இதனை அட்டமாசித்தி என்பர். இச்சித்திகள் தெய்வநிலை அடைந்தவர்க்கே வாய்க்கப்பெறும். அவையாவன: அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராத்தியம், பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாகும்.

அணிமா: அணுவினும் சிறிய வடிவமாக எங்கும் நிறைதல்.

மகிமா: யாவினும் பெரிதாய்ப் பேருருவமாதல்.

லகிமா: மேருமலையளவாக இருப்பினும் கையால் ஏந்தற்குரியனவாக இலேசாக இருத்தல்.

கரிமா: கடுகளவாகயிருப்பினும் மேருமலைபோலக் கனமாக இருத்தல்.

பிராத்தியம்: மூவுலகிலும் நினைத்த இடத்திற்குச் செல்லும் ஆற்றல்.

பிரகாமியம்: கூடு விட்டுக் கூடு பாய்தல். விரும்பிய எல்லாம் தன்னை வந்தடையுமாறு செய்தல்.

ஈசத்துவம்: இறைவனைப் போலப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் புரியும் ஆற்றல். கோள்களைத் தன் விருப்பப்படி நிகழ்த்தும் ஆற்றல் கைவரப் பெறுதல்.

வசித்துவம்: தேவகணம், பூதகணம், மனிதகணம், பிறஉயிர்க் கணங்களெல்லாம் தன்வயமாக்கிப் பணி கொள்ளும் ஆற்றல்.

இவற்றைத் திருவிளையாடற்புராணம் அட்டமாசித்தி உபதேசித்த படலத்துள் பரஞ்சோதி முனிவர் விளக்கிக் கூறியுள்ளமையைக் காணலாம்.

சித்தர்கள் உடம்பாலும் உள்ளத்தாலும் அளவற்ற ஆற்றலை மேற்கொள்வதற்குக் கண்டறிந்த வழிகளில் அட்டாங்க யோகம் மிகச் சிறப்புடையது. அட்டாங்க யோகம் பற்றித் திருமூலர் தனது திருமந்திர நூலுள் விளக்குகிறார். அவை பற்றிச் சில குறிப்புகள்:

அட்டாங்க யோகம்

> **இயமம் நியமமே எண்ணிலா ஆதனம்**
> **நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரம்**
> **சயமிகு தாரணை தியானம் சமாதி**
> **அயமுறும் அட்டாங்க மாவதுமாமே**

இவற்றுள் இயமம் என்பது தூய்மை, அடக்கம், பாதகங்களைத் தவிர்த்தல், ஈகை முதலிய செயல்களும் பண்பாடுமாகும் என்பதை,

> **கொல்லான் பொய்கூறான் களவிலன் எண்குணன்**
> **நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய**
> **வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்**
> **இல்லான் இயமத்திடையில் நின்றானே**

என விளக்குகின்றார். நியமத்தைப் பற்றிக் கூறுமிடத்துத் தூய்மை, அருள், உண்டி சுருங்குதல், பொறை, வாய்மை, தவஞ்செய்தல், விரதம் முதலிய ஒழுக்கங்கள் என்பதை,

> **தூய்மை அருளூண் சுருக்கம் பொறை செவ்வை**
> **வாய்மை நிலைமை வளர்த்தலே**

என்றும்,

> **தவம்செபம் சந்தோடம் ஆத்திகம் தானம்**
> **சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி**
> **மகஞ்சிவ பூசை ஒண்மதி சொல் ஈரைந்து**
> **நிலம்பல செய்யின் நியமத்த னாமே**

என்றும் கூறுகின்றார். ஆதனம் பற்றிக் கூறுமிடத்து உடலுறுப்புகளை எவ்வெவ்வாறு அமைத்து அமரவேண்டும் என்று விளக்கி அவை பதுமாசனம், பத்திராசனம், குக்குடாசனம், சிங்காதனம், சுகாதனம் எனப் பலவகைப்படும் என்கிறார். அவற்றை விளக்குகிறார். அவற்றுள் சிங்காதனம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

> **பாதம் முழந்தாளின் பாணிகளை நீட்டி**
> **ஆதரவோடும் வாய் அங்காந் தழகுறக்**
> **கோதில் சயனங் கொடி மூக்கிலேயுறச்**
> **சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே**

இவ்வாதனங்கள் எலும்பு, தசை, நரம்புகள் செம்மையாக இயங்கத் துணைபுரிவதோடு புலன்களை அடக்கிச் சித்தத்தை ஒருவழிப்படுத்தவும் ஞானாக்கினி தோன்றவும் துணைபுரிகின்றன.

அடுத்துப் பிராணாயாமம் பற்றி விளக்குமிடத்து மூச்சுக் காற்றினைச் செம்மையாக இயக்குவதனால் புறஉடம்பும் அகஉடம்பும் பெறும் ஆற்றலையும் அட்டமாசித்தி வயமாக அது துணைபுரிவதையும் புலப்படுத்துகிறார்.

பிராணன் மனத்தொடும் போதஅடக்கிப்
பிராணன் இருக்கிற் பிறப்பிறப்பில்லை

என்றும்,

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத்திரண்டதி ரேசகம்

என்றும்,

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்

என்றும்,

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்குங் குறியது வாமே

என்றும்,

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நின்மல மாக்கின்
உறுப்புச் சிவக்கும் உரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே

என்றும் கூறுகின்றார்.

பிரத்தியாகாரம் பற்றிப் பேசுமிடத்துப் பிராணாயாமத்தால் நின்மலமாக்கி, வாயுவை மூலாதாரத்தில் நிறுத்தி நாபிக்கு ஏற்றி, மந்திரங்களை அசபையாக, இசைத்து இறை உணர்வு பெறுதல் என்கிறார்.

நாபிக்குக் கீழே பன்னிரண் டங்குலம்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிகிலர்
தாபிக்கும் மந்திரம் தன்னை யறிந்தபின்
கூவிக் கொண்டீசன் குடியிருந் தானே

என்பது ஒருபகுதி.

தாரணையைப் பற்றிக் கூறுமிடத்து மூலாதாரத்திலிருந்து எழும் குண்டலி சக்தியை முதுகுத்தண்டின் வழிக் கபாலத்திற்கு ஏற்றின் அமுதம் சுரந்து உடல் முழுவதும் பரவி உடம்பைப் பொன்னாக்கி அழியாத நிலையை எய்துவிக்கும் என்கிறார். அதுபற்றிச் சில குறிப்புக்கள் வருமாறு:

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கூட்டி
வீணாத் தண்டூடே வெளியுறத் தானோக்கிக்
காணாக்கண் கேளாச் செவிஎன்றிருப் பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியது வாமே.

அரித்த உடலை ஐம்பூதத்தில் வைத்துப்
பொருத்த ஐம்பூதம் சத்தாதியிற் போந்து
தெரித்த மனாதிசத்தாதியயிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே

என்பனவாகும்.

இறுதியாகத் தியானத்தைக் கூறும்போது ஊறக்கந் தவிர்ந்து சிந்தையை விசுத்தியில் நிறுத்தி நெற்றிக்கண் ஒளியைக் காணலும் சிவமயமாதலும் மெய்ஞ்ஞானம் கைவரப் பெறுதலும் பயனாகும் என்கிறார். அதுபற்றிச் சில குறிப்புகள் வருமாறு:

ஒண்ணா நயனத்தின் உற்றஒளி தன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்
பண்ணாமல் நின்றது பார்க்கலு மாமே

உதிக்கின்ற ஆறினும் உள்ளங்கி ஐந்தும்
துதிக்கின்ற தேசுடைத் தூங்கிருள் நீங்கி
அதிக்கின்ற ஐவருள் நாதம் ஒடுங்கக்
கதிக்கொன்றை ஈசன்கழல் சேரலாமே

என மேலும் விரித்துக் கூறுகின்றார். பின்னர் அட்டாங்க யோகத்தின் பயனை விளக்குகின்றார். இவ்வட்டாங்க யோகங் கைவரப்பெற்றவர்க்கு அட்டமாசித்தி

எளிதில் வாய்க்கும் என்று அட்டமாசித்திகளைப் பின்னர் விளக்குகின்றார். திருமூலர் கூறும் அட்டமாசித்திகள் பிற ஞானநூலார் கூறும் விளக்கங்களோடு பெரிதும் ஒத்து மேலும் சிலவற்றை உணர்த்துகின்றன.

அட்டாங்கயோகம் பயின்று அட்டமாசித்திகள் கைவரப் பெற்ற நவநாத சித்தர்களுக்குச் செயற்கரியது ஒன்றுமில்லை. அத்தகு சித்தர்களின் வழிவந்த சித்தர்களால் அருளப் பெற்றதே சித்த மருத்துவமாகும்.

இத்தகைய மாகசித்திகளைப் பெற்றுப் பேராற்றலுடன் விளங்கும் சித்தர்கள் அவற்றால் தாம் மட்டுமே பேரின்ப வாழ்வைக் கொள்ள நினையாமல் தமது பேரருள் காரணமாக உலகில் வாழும் மக்கள் முதலாய உயிரினங்கள் யாவும் இவ்வுலக இன்பங்களோடு மறுமை இன்பத்தையும் பெறவேண்டும் என்று கருதிப் பல்வேறு கலைகளைப் படைத்து அவற்றை வளர்த்து நல்லறிவுடைய மக்கள் தம்தம் உழைப்பு, ஆர்வம், ஈகைச் சிந்தனைகளுக்கேற்பப் படிப்படியாக மேலோங்க நெறிமுறைகளையும் காட்டியுள்ளனர்.

உலகில் மக்கள் உடம்பில் தோன்றி மக்களையும் மண்ணுயிர்களையும் ஈடேற்ற அவதாரம் செய்த மகாபுருஷர்களாகிய மகாவீரர், புத்தர், வேதரிஷிகள், மோஸஸ், இயேசுகிறித்து, நபிகள் நாயகம் போன்றவர் யாவரும் சித்தர்களே. அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கை அடிப்படையில் மக்களும் பிற உயிர்களும் உய்ந்து பேரின்ப நிலையடைய வழிகாட்டிச் சென்றனர். மக்கள் மக்கள் தன்மையோடு வாழ வழிகாட்டித் தாமும் அவ்வழியே ஒழுகிக் காட்டி இறைநிலை பெற்றுத் திகழ்கின்றனர்.

அம்முறையில் அந்நெறியில் தோன்றியவர்களே சித்தர்கள். சித்தர்கள் உலகம் முழுதும் உள்ள நாடுகளில் தோன்றி, மக்கள் பல்வேறு வகையான துன்பங்களினின்று விடுதலை பெற்று இன்ப வாழ்வு பெறப் பல்வேறு அருளிச் செயல்களைச் செய்தளித்துள்ளனர். சித்தர்கள் எண்ணற்றவர். நவகோடிச் சித்தர்கள் எண்ணாயிரவர் என நூல்கள் கூறுகின்றன. தாயுமானவர் சித்தர்கணம் என்னும் தலைப்பில் அருளியுள்ள பாக்களில் அவர்களின் பேராற்றலை விளக்கியுள்ளார். அவற்றுள் ஒருபாடல்:

பாட்டளி துதைந்துவளர் கற்பக நிழலைப்
பாரினிடை வரவழைப்பீர்
பதுமநிதி சங்கநிதி இருபாரிசத்தினும்
பணிசெயத் தொழிலாளர் போல்

கேட்டது கொடுத்துவர நிற்க வைப்பீர் பிச்சை
கேட்டுப் பிழைப்போரையும்
கிரீடபதியாக் குவீர்கற்பாந்த வெள்ளமொரு
கேணியிடைக் குறுக வைப்பீர்

ஓட்டினை எடுத்தாயிரத் தெட்டுமாற்றாக
ஒளிவிடும் பொன்னாக்குவீர்
உரகனும் இளைப்பாற யோகதண்டத்திலே
உலகுசுமையாக அருளான்

மீட்டிடவும் வல்லநீர் என்மனக்கல்லையனல்
மெழுகாக்கி வைப்பதரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர்கணமே

என்பதாகும்.

இவற்றால் சித்தர்கள் பரம்பொருளின் ஆற்றலோடு மக்களுடம்பில் வாழும் பேரருளாளர்கள் என்பது விளங்குகிறது. மக்களுடம்பினராகத் திகழுமிடத்துச் சாதி, இன, சமய வேறுபாடற்றவராய் எல்லா மொழிகளையும் கலைகளையும் அறியவும் ஆக்கவும் வல்லவர்களாய் விளங்கினர்.

சித்தர்கள் இவ்வுலகிற் பிறந்த மக்கள் யாவரும் பிறந்ததன் பயனாக இவ்வுலகின்பமெல்லாம் பெறவேண்டும். ஊழ்வினைகளால் அவர்கள் எய்தும் துன்பங்களைத் தக்க உபாயங்களால் தணித்து நலமெலாம் பெற்று வாழவேண்டும் எனத் தம் பெருங்கருணைத் திறத்தால் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை மார்க்கங்களையும் தமது குறிக்கோளை ஒட்டிப் பல விளக்கங்களையும் அருளிச் செய்தனர் சித்தர்கள். மக்கள் உடம்பாலும் உள்ளத்தாலும் சிந்தையாலும் உரம் பெற்று வாழப் பல கலைகளைப் படைத்தனர். அவற்றுள் சிறப்பானவை மந்திரக்கலை, சோதிடக்கலை, மருத்துவக்கலை, வர்மக்கலை போன்றவை. இவற்றுள்ளும் சிறப்பாக மிகுதியாக அவர்கள் அருளியவை மருத்துவக் கலையாகும்.

நூற்றுக்கணக்கான சித்தர்கள் உள்ளனர். அவர்களைப் பற்றி ஆராய்ந்துணர்ந்த சான்றோர்கள் அவர்களை அகத்தியர் முதலாக எண்ணிக் கூறுவர். அகத்தியர், உரோமரிஷி, போகர், கொங்கணர், சட்டைமுனி, கருவூரார், தேரையர், பிரம்மமுனிவர், யூகி, திருமூலர், யாகோபு, கோரக்கர், மச்சமுனி முதலானோர். யோகம், பூசாவிதி, ஞானம் என்ற வகைகளிலும் மணி, மந்திரம்,

ஔடதம் என்னும் வகைகளிலும் ஆயிரக்கணக்கான நெறிமுறைகளைப் படைத்தருளியுள்ளனர்.

சித்தர்களின் பெயர்களை ஆழ்ந்து நோக்கினால் அவர்கள் பல நாட்டினர், பல்வேறு சமயவழி வந்தவர் என்பது விளங்கும். அகத்தியர் (அகஸ்டீன்), உரோமரிஷி (ரோம்), தேரையர் (தேரா), யாக்கோபு (யாகூப்), கொங்கணர் (கொங்கணம்), கோரக்கர் (கூர்க்) என்ற இப்பெயர்களால் புலனாகும் உண்மை இவையெல்லாம் காரணப்பெயர்கள் என்பதும், அவர்கள் பல்வேறு நாட்டிலும் சமயமரபிலும் தோன்றி அவற்றின் சார்புகளைத் துறந்து மக்களுக்கு நன்னெறி காட்டும் ஒரே குறிக்கோளை உடையவர் என்பதும் விளங்கும்.

ஞானயோகத்தாலும், மந்திர ரீதியான பூசைகளாலும் அட்டமகாசித்திகள் கைவரப்பெற்ற சித்தர்கள் தாம் எண்ணியதைச் சாதிக்கும் வல்லமையுடையராகத் திகழ்ந்தனர். தமது ஒப்பரிய ஞானத்தால் வானத்தில் உலவும் விண்மீன்களின் இயக்கங்களையும், கதிரவன் முதலிய கோள்களின் இயக்கங்களையும், அவற்றால் அண்டத்தில் ஒரு கடுகளவாயுள்ள இம்மண்ணுலகம் பொழுதுதொறும் எய்தும் வேறுபாடுகளையும் நன்குணர்ந்து அவற்றால் உடம்பெடுத்த உயிர்கள் அடையும் நிலைகளையும் நன்கு அறிபவராக விளங்கினர்.

அத்தகைய மெய்ஞ்ஞான உணர்வால் புல், பூண்டு, மரஞ்செடி கொடிகளாகிய ஓரறிவுடைய தாவரங்கள் முதலாகப் புழு, பூச்சி, ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன நடப்பனவாகிய ஐயறிவுடைய உயிர்ப்பொருள்களின் அமைப்பு, தன்மை, விளைவு, ஆக்கம், அழிவு முதலிய நிலைகளை அகங்கை நெல்லிக்கனிபோல நன்கறிந்தவராயினர்.

மற்றும் உயிரில் பொருள்களாகிய நிலம், நீர், காற்று ஆகியவற்றின் அமைப்பும் இயக்கமும் அவற்றின் வகையும் பற்றி அறிந்திருந்தனர். நிலத்தின்கண் பிற பூதங்களின் கலப்பாலும் தாக்கத்தாலும் விளையும் மண் வேறுபாடுகள் - உப்புகள், கற்கள், பாடாணங்கள் பற்றியும், நீரின்கண் கலந்துள்ள உப்பு பிற வேதியற் பொருள்கள் நிலத்து வேறுபாட்டால் நீர் எய்தும் வேறுபாடுகள் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர்.

அப்பேரறிவு காரணமாகவே இன்றைக்கு நோய், மருந்து பற்றி மருத்துவ அறிஞர்களாலும் மேதைகளாலும் வேதிமக்கூடங்களில் இயற்பியல் முறையைத் தேர்ந்த பல்வேறு கருவிகளின் துணையால் கண்டறியும் முடிபுகளைச் சித்தர்கள் மிகத் தெளிவாகக் கண்டறிந்து கூறியுள்ளனர். அடுத்து மருத்துவம் பற்றிக் காண்போம்.

மருத்துவம்

மருத்துவம் என்றால் மருந்துகளால் நிகழும், நிகழ்த்தப்படும் தொழில் என்பது பொருள். மருந்தின் செயல் நோயை நீக்குவது, பரிகரிப்பது, குணப்படுத்துவது முதலியனவாகும். எனவே நோய் இல்லையானால் மருந்தில்லை. நோய்கள் பல எனினும் அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று இயற்கை நோய். இதற்குப் பிணி என்பது ஒரு பெயர். அதாவது உடம்போடு பிணைந்திருப்பது. மற்றொன்று செயற்கை நோய். அது மக்கள் தம் நெறிமுறைத் தவறு காரணமாகவும், ஊழ்வினை காரணமாகவும், சூழ்நிலை காரணமாகவும் ஏற்படும். இவற்றை மற்றொரு கோணத்திலும் காணலாம். ஒன்று. உடலைப் பற்றிவரும் நோய், மற்றொன்று உள்ளத்தைப் பற்றி வரும் நோய்.

இயற்கை நோயான பிணி என்பது பசி, தாகம், காமம் ஆகியவை காரணமாக உடம்பைப் பற்றுவது. செயற்கை நோய் என்பது பேரவா, அழுக்காறு, சினம் முதலியவை காரணமாக உள்ளத்தைப் (மனத்தைப்) பற்றுவது. உடம்பைப் பற்றி வரும் பசி என்னும் இயற்கையான பிணிக்கு உணவு, நீர், காற்று முதலியவையும், காமத்திற்குப் பொருத்தமான உடலுறவும் மருந்துகளாகும். உள்ளத்தைப் பற்றி வரும் பேரவா முதலிய பிணிக்கு நிலையாமையை உணரும் அறிவு, அருள், அன்பு, நல்லொழுக்கம், சான்றோர், நட்பு, இறை வழிபாடு முதலியவை மருந்தாகும். இவ்விருவகை நோய்களைப் பற்றியும், அவை வந்தடையும் சூழ்நிலை பற்றியும், அவை வராமல் தடுத்துக் கொள்வது பற்றியும், வரின் அவற்றை நீக்கும் நெறிமுறைகள் பற்றியும் சித்தர்கள் தம் நூல்களில் குறிப்பாகவும், வெளிப்படையாகவும், மறைமுகமாகவும், சுருக்கியும், விரித்தும் கூறியுள்ளனர். பெரும்பாலும் மக்களிடம் வரும் நோய்களையும் அவற்றைப் போக்கும் மருந்துகளையும் பற்றியே கூறியுள்ளனர். அதனால் மக்கள் பற்றியும் நோய்கள் பற்றியும் சிறிது காண்போம்.

மக்களும் நோயும்

மக்கள் என்பவர் இவ்வுலகத்தில் தோன்றி மறையும் ஓர் உயிரினம்; ஐம்பொறிகளோடு மனம் என்னும் ஆறாவது அகப்பொறியும் உடையதோர் உயிரினம்; குழவியாகத் தாயினின்றும் தோன்றி உலகப் பொருள்களைத் துய்த்து வளர்ந்து முதிர்ந்து பொறி புலன்கள் செயலற்றுக் கிழத்தன்மையுற்று இறுதியில் மறைவது; பிறப்பும் இறப்பும் இயற்கை நியதி; அவற்றை மக்களால் மாற்றவோ நீக்கவோ இயலாது. பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழும் நேர்ச்சியை உலகப் பொருள்களையும் தம் அறிவுத்திறத்தையும் கொண்டு அனுபவித்தல் இயற்கை நியதியாகும்.

மக்கள் இம்மாபெரும் மண்ணுலகத்தில் பலகோடி அளவில் ஒரு சிறிய கூறு; மலையில் ஒரு மணலும் கடலில் ஒரு துளியும் போல அமைந்திருப்பது; உலகம் வேறு மக்கள் வேறல்ல; உலகத்தின் ஒரு சிறு கூறே மக்கள். எனவே உலகத்தின் அமைப்பு எவ்வெவ்வாறெல்லாம் அமைந்துள்ளதோ அவ்வளவு அமைப்பும் மக்கள் உயிருடம்பிலும் அமைந்துள்ளன. உலகம் பஞ்சபூதங்களின் கலப்பினால் அமைந்ததாகும். மக்களும் பஞ்சபூதக் கலப்பினால் அமைந்துள்ள பொருளேயாகும். பஞ்சபூதங்களாவன: நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம். நிலம், நீர், நெருப்பு உருவப்பொருள். காற்று அருவுருவப்பொருள். ஆகாயம் அருவப்பொருள். மக்களுடம்பு எழுவகைத் தாதுக்களாலானவை. அவை நிலமும் நீரும் நெருப்புமாக இருக்கும். மூச்சு இதன் இயக்கம். காற்றாக இருக்கும் எண்ணங்கள் ஆகாயமாக இருக்கும்.

உலகத்தைச் சுற்றி அசுவினி முதலாய நட்சத்திரக் கூட்டங்களும், சூரியன் முதலிய கோள்களும் உள்ளன. அவற்றின் தாக்கங்கட்கு உட்பட்டதே உலகம். உலகம் சுழல்வதால் இரவு பகல் முதலிய அறுவகைப் பொழுதுகளும் கதிரவனைச் சுற்றி வருவதால் கார், கூதிர், வேனில், பனி முதலிய அறுவகைப் பருவக் காலங்களும் தோன்றுகின்றன. இவை யாவும் உலகத்தின் சிறு கூறாகிய மக்களையும் செயற்படுத்தும்; துய்க்கச் செய்யும்.

அதனான் சித்தர்கள் மக்களின் பிணிகளையும் நோய்களையும் போக்க வகுத்துக் கொண்ட மணி, மந்திரம், ஔடதம் என்பவற்றுள் மணி என்னும் காலக் கூறுகளையும் ஒன்றாக அமைத்தனர். மணி என்பது ஒளிரும் விண்மீன்களையும், கதிரவன் முதலிய கோள்களையும் குறிக்கும். அவற்றால் அமைவது காலமாதலின் காலம் மணி எனப்பட்டது. பெரும்பாலான மருத்துவர்கள் பாதரசம் முதலியவற்றால் கட்டப்பெறுவது மணி என்னும் கருத்தினராவர். குளிகை என்பது அவர் கருத்து. குளிகை - இரசமணி போன்றவை ஔடதத்தில் அடங்கும். குரு, முப்பு, குளிகை, அஞ்சனமை முதலியவை ஔடதத்தின் கூறுகளேயாகும்.

பஞ்சபூதங்களாலும் அவற்றின் தன்மாத்திரைகளாலும் உருப்பெற்ற இம்மண்ணுலகம் இடையறாமல் சுழன்று கொண்டிருப்பதாலும் கதிரவனைச் சுற்றி வருவதாலும் ஏற்படும் ஒளியையும், இருளையும், மழையையும், பனியையும், வெப்பத்தையும் ஏற்றுக் கோள்களின் தாக்கம் விண்மீன்களின் கதிர்வீச்சுகளால் கணந்தொறும் மாற்றமடைந்து கொண்டே உள்ளது.

இம்மண்ணுலகின் சிறு கூறுகளே உயிரினங்கள். உயிரினங்களுள் ஒரு பிரிவு மக்களினம். மக்களின் உடம்பும் உள்ளமும் உணர்வும் அப்பஞ்சபூதக் கூறுகளுக்கேற்பவும் நாள், கோள்மீன்களின் கதிர்வீச்சுக்களுக்கேற்பவும்

நாள்தொறும் மாற்றங்களைப் பெற்று நிலவுகின்றன. மக்களுக்கும் பிற உயிரினங்களுக்குமுள்ள தலையாய வேறுபாடு மக்களின் உயிருடம்பின்கண் ஆகாயக் கூறுகள் மிக்கிருப்பதே. ஆகாயம் எல்லையற்ற பரப்புடையது, பேராற்றலுடையது. அதனால் மக்களும் பிற உயிரினங்களிலிருந்து வேறுபட்டுச் சிறக்கின்றனர்.

மக்களின் அறிவியல் மெய்ஞ்ஞான அறிவுகள் உலகப் பொருள்களையும் உயிரினங்களையும் வாழவும் அழியவும் செய்கின்றன. அவற்றிற்கான ஆற்றலை இயற்கையாகவே பெற்றிருக்கின்றன. உயிரினங்களின் பொதுவான குறிக்கோள் இன்பம். அளவற்ற இன்பம். வெறுப்பது துன்பம். இன்பதுன்பங்களை உணர்வது அனுபவிப்பது மனம். மனத்திற்கு இன்ப துன்பங்களைக் கொண்டு செல்வது உடம்பு. உடம்பிற்கு ஒத்தது, ஒவ்வாததை உறுவிப்பன உணவு, நீர், காற்று, வெப்பம், குளிர். உடம்பின் உட்செல்வன உணவு, நீர், காற்று. புறத்தே தழுவுவன வெப்பம், குளிர். உடம்பு இவற்றை வாய், மூக்கு, மெய் என்னும் பொறிகளுக்குரிய புலன்களால் அடைகின்றது. இவை உடற்பிணி, உடம்பு என்னும் போது உள்ளுறுப்புகளாகிய மூளை, ஈரல், இதயம், வயிறு, குடல், எலும்பு, நரம்பு என்பவற்றையும், புறத்தே தெரியும், கண், காது, தோல் ஆகியவற்றின் கூட்டத்தையும் குறிக்கும். இதனைப் பொதுவாகப் புறஉடம்பு என்று கூறுவர். அகஉடம்பு என்பதைப் பொதுவாக மனம் என்று குறிப்பிடுவர். மனம் என்பது புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் உறுப்புகளைத் தன்னகத்தே கொண்டதாகும். மனத்தைப் பற்றும் நோய்கள் உணர்வுடம்பின் தாக்கத்தாலும், கண்ணும் செவியுமாகிய புலன்கள் வாயிலாகவும் வரும். மனத்தைப் பாதிக்கும் நோய்கள் புறஉடம்பையும் பாதிக்கும்.

எனவே மருந்து என்பது மனத்தைச் செம்மைப்படுத்துவதாகவும் உள்ளும் புறமுமாகிய உடலுறுப்புகளைச் செம்மை செய்வதாகவும் அமைய வேண்டும் என்பது விளங்கும். உயிருக்கு இன்பத்தைத் தருவன மனமும் உடம்புமாகும். துன்பத்தைத் தருவனவும் அவையேயாகும். இனிய இசை, அன்பான உரை, பாராட்டுரை, புகழுரை போன்றவை செவி வாயிலாக மனத்தைப் பற்றி உயிருக்கு இன்பத்தைத் தரும். கொடிய கூக்குரல்கள், அளவுக்கதிகமான ஓசை ஒலிகள், பொய், வஞ்சம், ஏமாற்றுகளை அடிப்படையாகக் கொண்ட பேச்சுகள், வெறுப்புரைகள், வசவுகள் பொய்யாகக் குற்றம் சாற்றிப் பேசுதல் முதலியவை செவி வழியாக மனத்தைப் பற்றி உயிருக்குத் துன்பத்தைத் தரும்.

அருவருப்பான காட்சிகள் வறுமையினாலும் நோயினாலும் துன்பப்படுவோரையும் தமக்கு வேண்டியவர், நட்பினர்கள், குடும்பத்தார்கள் வறுமையினாலும் நோயினாலும் துன்பப்படுவோரையும் காணும் காட்சியாலும் கட்புலன் வாயிலாக மனம் பற்றும் பொழுதும் மனத்திற்குத் துன்பந்தரும். நல்ல காட்சிகள் இன்பத்தைத் தரும்.

இருவகை நோய்களுக்கும் அடிப்படை அளவைக் கடந்த ஆசையும் கட்டுப்பாடில்லாத புலன்களின் சுவை வேட்கையுமேயாகும். உடல் நலத்திற்கு ஊறு செய்யும் உணவு அதிகப்பட்டால் கேடு விளைவிக்கும். பல்வகையான பழங்கள், ஒவ்வாத புலால், மீன்கள், முறைப்படிப் பக்குவம் செய்யப்பெறாத அசைவ உணவுப்பண்டங்கள், பாதுகாக்கப்பெறாத உணவுப் பண்டங்கள், ஊறுகாய்கள், பல்வேறு சுவைகளையுடைய பானகங்கள், சுவைநீர்கள், மது வகைகள், கஞ்சா, புகையிலை, அபின் முதலிய மயக்கந்தரும் பொருள்கள் நோய்களை விளைவிப்பனவாகும். நல்ல உணவு வகைகளாயினும் அளவுக்கதிகமாக உண்ணுதல், காலங்கடந்து உண்ணுதல், விரைந்து விழுங்குதல் முதலிய செயல்களும் நோயை உண்டு பண்ணும். தூய்மையற்ற நீர், மாசுபட்ட காற்று, அதிக வெப்பம், அதிகக் குளிர், பனி முதலியனவும் நோய்களை உண்டாக்கும். மற்றும் ஈ, எறும்பு, கொசு, வண்டு போன்றவை மொய்த்த உணவுப் பண்டங்கள், களிம்பும் துருவும் கசியும் பாத்திரங்களில் சமைத்த உணவுகள், ஒருமுறைக்கு மேல் சுடப்பட்ட எண்ணைகள், அதிகக் கொழுப்புள்ள எண்ணெய்களில் வறுத்த உணவுகள். இவை யாவும் உடல் நலத்திற்குக் கேடு செய்பவையாகும். ஒவ்வாத உடலுறவு, அளவுக்கதிகமான உடலுறவு, நோயாளர்களோடு உடலுறவு, சுய இன்பச் செயல்கள், விலங்குப் புணர்ச்சி ஆகியவை மனத்திற்கும் உடம்பிற்கும் நோயை விளைவிப்பனவாகும். முறைப்படி உடம்பைத் தூய்மை செய்து கொள்ளாமையாலும், நச்சுப் பூச்சிகளின் காணாக்கடிகளாலும் உடல்நோய் உண்டாகும். கடுமையான உழைப்பினாலும் உறக்கத்தைத் தவிர்ப்பதாலும்கூட நோய்கள் உண்டாகும்.

மக்களுக்கு உடம்பு பற்றியும், மனம் பற்றியும் வரும் நோய்களைப் பல கோணங்களில் நோக்கிப் பல நூறு வகையாகப் பகுத்துள்ளனர். மற்றும் குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களையும் மகளிர்க்கே உரிய நோய்களையும் கருப்பை - கருப்பம் பற்றி வரும் நோய்களையும் ஆராய்ந்து சித்தர்கள் வகைப்படுத்தியுள்ளனர். இன்றைய அலோபதி, ஓமியோபதி, ஆயுர்வேத, யூனானி மருத்துவர்களும் நோய்களைப் பல கோணங்களில் கண்டு ஆராய்ந்து ஆயிரக்கணக்கான பெயர்களால் வகுத்துள்ளனர். இவை யாவும் சித்தர் பகுத்துள்ள பகுப்புகளில் அடங்கிவிடும். திருவள்ளுவர் உடல் நோய்களைப் பற்றி மிகச் சுருக்கமாகச் சித்தர்கள் கூறுவதைச் சுட்டி,

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று

என்பார். இவற்றை நூலோர் வாத, பித்த, சிலேட்டுமம் என்றும், நீர் நெருப்பு, காற்றென்றும் கூறுவர். ஏனைய நிலமும், ஆகாயமும் அம்மூன்றனுள் அடங்கி நிற்கும். மொத்தத்தில் பஞ்சபூதக் கூறுகளால் உருப்பெற்றிருக்கும் மக்கள் அந்தப் பஞ்சபூதங்களோடு முரண்படுமிடத்து அவை நோய்களை எய்துவிக்கும் என்பது விளங்கும்.

இங்ஙனம் பஞ்சபூதக் கூறுகளின் முரண்பாடுகளால் மக்களுக்கு வரும் நோய்களைப் பஞ்சபூதக்கூறுகள் அமைந்த தாவர மூலிகைகள், நிலத்திலும் நீரிலும் விளையும் உப்புகள், நிலத்தில் கலந்து விளையும் பாஷாணக் கற்கள், உலோகங்கள், நவமணிகள், நீரில் விளையும் சங்கு, சிப்பி முதலியவற்றைக் கொண்டே நீக்கும் முறைகளைக் கண்டனர். அவற்றைப் பக்குவப்படுத்தவும் வீரியமூட்டவும் பல வழிகளைக் கண்டனர். எவ்வெவற்றை எவ்வெவ் அளவில் கலந்தால் உடம்பில் பஞ்சபூதக் கூறுகள் ஒவ்வாமற் கலந்த கலப்பினால் ஏற்படும் நூற்றுக்கணக்கான நோய்களைத் தீர்க்கத் தாவர மூலிகைகளை எவ்வெவற்றொடு கலக்க வேண்டும், எவ்வெவ் மூலிகைகளை எவ்வெப்பாஷாணங்களோடு எவ்வெவ்வளவில் சேர்க்க வேண்டும், அவற்றை எந்த முறையில் கலக்க வேண்டும் என்றும், அவற்றை நெருப்பிலிட்டுப் பக்குவப்படுத்தும் முறைகளையும் கண்டறிந்தனர். நெருப்புப் புடம், நெருப்பில் எரித்தல், வெயிலில் காய வைத்தல் முதலியவை நெருப்பென்னும் பூதக்கூறுகளை அளவறிந்து சேர்க்கும் முறையாகும்.

சித்தர்கள் மருந்துகளைக் குடிநீர் (கியாழம்), சாறு, மை, களிம்பு, களி (இலேகியம்) சூரணம், சுண்ணம், கற்பம், பற்பம், செந்தூரம், எண்ணெய் (தைலம்), குழம்பு, குளிகை முதலிய பல்வேறு வடிவங்களில் உருவாக்கினர். அவற்றிற்கு வீரியமூட்டக் குரு, முப்பு முதலிய தலைமையான மருந்துகளை உருவாக்கினர். செம்பு, இரும்பு, ஈயம் முதலியவற்றைத் தூய்மை செய்யும் இரசவாத முறைகளைக் கண்டமைத்தனர். இளமை மாறாமல் முதுமை எய்தாமல் காக்கும் காயகற்ப முறைகளையும் மருந்துகளையும் படைத்தனர்.

பல்வேறு மூலிகைகள், பாஷாணங்களில் கூட்டிக் கலந்து மருந்துகளைத் தயாரித்த பின்னர் அம்மருந்துகளை உண்ணக் கொடுக்கும்போது பல்வேறு அனுபானங்களைச் சேர்த்து உண்ணச் செய்தனர். ஒரே மருந்து, அனுபானங்களால் பல்வேறு நோய்களைப் போக்கும் முறைகளைக் கண்டறிந்தனர். அம்மருந்துகள் செம்மையாகச் செயல்படப் பத்திய முறைகளை

வகுத்தனர். மருந்துண்ணும் போது எவ்வெவ்வுணவுப் பண்டங்களைச் சேர்க்க வேண்டும் எவ்வெவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதையும் அனுபவத்தால் கண்டறிந்து நோயாளர்களுக்கு அறிவித்து அவற்றைக் கடைப்பிடிக்கச் செய்தனர்.

இனி, சித்த மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்கும் மருத்துவர்களின் இலக்கணம் பற்றியும், மருத்துவர்கள் மேற்கொள்ள வேண்டிய நெறிபற்றியும் நோயாளர்களுக்கு உற்ற நோய் யாது என்று கண்டறியும் முறைகளையும் நோயின் நிலை எவ்வளவில் உள்ளது என்று கண்டறியும் முறைகளையும், அந்நோய் ஏற்பட்டதன் மூலகாரணத்தை ஓர்ந்துணரும் திறம் பற்றியும், நோயாளர்களைப் பார்வையிட வேண்டிய முறை பற்றியும், நோயின் வேகம், அந்நோய் பற்றியுள்ள உடம்பின் நிலை பற்றியும் நன்கு ஆராய்ந்தறிந்து, அவற்றிற்கேற்ப ஏற்ற அளவில் மருந்து கொடுக்கும் முறை பற்றியும் சித்தர்கள் கூறியுள்ளனர்.

முன்கை வழியாகவும், கணைக்கால் வழியாகவும் நாடித்துடிப்புகளை அறிந்து முக்குணத் தோடங்களைக் கண்டறிவதோடு உடல் நிறவேறுபாடு, கண்களின் ஒளி, குருதியோட்ட நிலை, உடம்பில் ஏற்படும் சுழித்துடிப்புக்கள் நாவின்நிலை, நகங்களின் நிலை முதலியவற்றால் நோயின் வன்மை, மென்மைகளை அறியும் வழிமுறைகளைச் சித்தர்கள் ஆங்காங்கே குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறியுள்ளனர். சித்தர்களின் இக்கோட்பாடுகளைத் திருவள்ளுவர்,

நோய்நாடி நோய்முதல் நாடிஅது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்றும்,

உற்றா னளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்

என்றும் கூறுகிறார்.

காலமறிதலைச் சித்தர்கள் தனியாகச் சோதிடக்கலையாக வகுத்துக் கூறியுள்ளனர். மந்திரங்களையும் தனியே வகுத்துக் கூறியுள்ளனர்.

சித்த மருத்துவத்தின் கோட்பாடுகளை மிகச் சுருக்கமாகக் கூறுங்கால்,

உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான் என்று
அப்பால்நாற் கூற்றே மருந்து

எனத் தெரிவிக்கின்றார்.

சித்த மருத்துவ நூல்கள்

தவயோக ஞானங்களால் அட்டமா சித்திகள் கைவரப்பெற்ற அகத்தியர் முதலான சித்தர்கள் தம் பேரருள் காரணமாக மெய்ஞ்ஞான உணர்வாற் கண்டறிந்த மருந்துகள், மருத்துவ முறைகள், மருந்தைத் தயாரிக்கும் முறைகள், நோயைத் தேரும் முறை, மருந்தை அளிக்க வேண்டிய முறை முதலியவற்றை என்றும் நின்று நிலவி மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்று கருதித் தம் மாணாக்கர்களுக்கு உபதேச முறையால் அறிவித்துச் செய்முறைப் பயிற்சியும் அளித்தருள்வாராயினர். மாணவர்கள் தம் மாணவர்கட்கு உபதேசித் தருளினர். இங்ஙனம் ஆசிரிய, மாணவர் பரம்பரையாக உணர்ந்து கடைப்பிடித்து வந்த முறைகளை மாணவர்கள் சுவடிகளில் பதிவு செய்து பயின்று வந்தனர்.

மெய்ஞ்ஞானம் பெற்ற சித்தர்களிடம் ஞானயோக ஆதனங்களையும் மருத்துவம், சோதிடம், மாந்திரீகம் முதலியவற்றைப் பயின்றவர்களுள் பலர் இல்லறத்தாராகவும் அமைவாராயினர். அவர்கள் இக்கலைகளைத் தம் மக்களுக்கும் மாணக்கர்க்கும் கற்பித்து வந்தனர். சித்தர்கள் இல்லறத்தாராய் அமைந்த மாணவர்களுக்குக் கற்பிக்குமிடத்துச் சில அடிப்படையான மருந்து முறைகளைப் பரிபாஷை மூலமாகக் கற்பித்தனர். அவற்றை அம்மாணவர்கள் பரிபாஷை மூலமாகவே ஏட்டில் பதிவு செய்து கொண்டு பயின்று வந்தனர். காரணம் சித்த மருந்துகளில் காயகற்பம், முப்பு, குரு முதலிய மருந்துகள் இரசவாதம் செய்வதற்குப் பெருந்துணை புரிவனவாகும். மண்ணாசை, பெண்ணாசை காரணமாக மனந்திரியின் அம்மருந்துகளைப் பொன்னாசையுற்றுத் தவறான வழியில் சிலர் பயன் கொள்ள முனைவர். ஆதலின் அவற்றை ஞானயோகம் கைவரப்பெற்ற பற்றற்ற துறவிகளுக்கு மட்டுமே விளங்கும் முறையில் பரிபாஷைகளால் அமைத்துச் சென்றனர் என்பது புலனாகின்றது.

இவ்வாறே மந்திர, யந்திர, தந்திரக் கருத்துகளையும் சித்தர்கள் பரிபாஷை வாயிலாகவே மொழிந்துள்ளனர். முத்தோடங்களால் உண்டாகும் நோய்கள் தீர்வதற்கான மருத்துவமுறைகள் பெரும்பாலும் வெளிப்படையாக அருளப்பட்டுள்ளன. வெளிப்படையாகக் கூறுமிடத்துப் பல கருத்துகளைச் சிலேடை, இலேசம், பிறிதுமொழிதல் என்னும் அணிநயப் படவும் கூறியுள்ளனர்.

உதாரணமாக '**நாமத்தாகி வெள்ளியும் நல்ல சேவகன் நெஞ்சென்பும்**' என்பது புகழ் பெற்ற வெள்ளி சேவலின் நெஞ்செலும்பு என்னும் பொருள் தரும். ஈயோடு எறும்பி நாயுருவி என்னுமிடத்து ஈ இஞ்சியையும், எறும்பி அத்தியையும் குறிக்கும். **தாயைக் கொன்றான் சாறுவிட்டு** என்னுமிடத்து, வாழை - வாழைத்தண்டு என்று பொருள் தரும். **இரு குரங்கின் கை** என்னுமிடத்துக் குரங்குமுகு இரு முசுமுசு முசுகை சேர்ந்தால் முசுமுசுக்கை என்னும் மூலிகையைக் குறிக்கும். **யானைக் கன்றின் ஓர் பிடியும், அசுரன் விரோதி இளம்பிஞ்சும்** என்னுமிடத்து யானையின் பெயர் அத்தி. அத்தியின் இளம் பிஞ்சு அசுரன் பத்மாசூரன், அவர் விரோதி முருகன். அவன் அசுரனைக் கொன்ற கருவி வேல். வேல் = வேல மரத்தைக் குறிக்கும். அதன் பிஞ்சும் என்பது பொருள். இங்ஙனம் பிறிதுமொழிதலாகக் கூறுவதுடன் சொற்களைத் தலைகீழாக வைத்தும் கூறுகின்றனர். மிளகு என்பதைக் குளமி என்றும், கடுகு என்பதைக் குடுக என்றும் கூறுவர். இவற்றைக் குழூஉக் குறியாகவும் கொள்ளலாம்.

பேரருள் காரணமாகச் சித்தர்கள் பரிபாஷையைப் புரிந்து கொள்ளப் பரிபாஷை விளக்க நிகண்டுகளும் செய்துள்ளனர். நிகண்டுகளால் ஒரு மூலிகைக்குரிய பல பெயர்களும் உலோகம், பாடாணம், நவமணி போன்றவற்றிற்குரிய பல பெயர்களும் புலனாகும். பெரும்பாலான கருத்துகளைப் பாடல் வடிவில் இலக்கியமாகப் புனைந்து பாடியுள்ளமையின் இலக்கியத்திற்குரிய யாப்பு நலன் அணிநயங்கள் யாவும் கையாளப்பட்டுள்ளன. யாப்பிலும் அணியிலும் மிகக் கடினமானவை மடக்கு, திரிபு, அந்தாதி, யமகம் முதலிய செய்யுள் அமைப்புகளாகும். யமகமும் திரிபுமாகச் சித்தர்கள் பல மருத்துவ நூல்களை யாத்துள்ளனர்.

சங்க காலத்திலும், காப்பிய காலத்திலும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா ஆகிய யாப்பு வகைகளும், வரிப்பாடல், குரவைப் பாடல் முதலிய இசைப்பா வகைகளுமே இலக்கிய ஆக்கத்திற்கு மேற்கொள்ளப் பெற்றன. பின்னர்த் தோன்றிய தேவாரத் திவ்வியப் பிரபந்தங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் பல்வேறு யாப்பமைந்த பாடல்களும், பண்ணமைந்த இசைப் பாடல்களும் தோன்றின. அவை பற்றிய பலப்பல செய்யுளிலக்கண நூல்கள் தோன்றின. அணிநூல்களும் நிகண்டுகளும் தோன்றின. அம்முறை இடைக்காலத்தில் சித்தர்களின் நூல்வழி மருத்துவம் மேற்கொண்ட அறிஞர்கள் மருந்து, மருத்துவம் பற்றிய கருத்துகளைப் பல்வேறு யாப்பமைப்புடையவாக மருத்துவ நூல்களை யாத்தனர். சிறந்த புலவர்கள் கவிஞர்களைக் கொண்டு இயற்றச் செய்தனர். அம்முறையில் இற்றைக்கு ஏராளமான மருத்துவச் சுவடிகள் கிடைத்துள்ளன.

மருத்துவ நூல்களும் யாப்பமைதியும்

மருத்துவ நூல்களில் பெரும்பாலானவை விருத்த நடையில் அந்தாதியாக அமைந்துள்ளன. ஆறு சீர்கள் முதல் பதினான்கு சீர்கள் வரையிலான ஆசிரிய விருத்தங்கள், கழிநெடிலாசிரிய விருத்தங்களாலான நூல்களே மிகுதியாக உள்ளன. வஞ்சி விருத்தத்தில் மிகச் சிலவும், கலிவிருத்தக் கலித்துறைகளில் அமைந்த நூல் சிலவும் அமைந்துள்ளன. விருத்தத்திற்கு இணையான மற்றொரு யாப்பு தண்டகம். தண்டகம் (தாண்டகம் என்பது தமிழ்) சந்த விருத்தங்களிலும் பல நூல்கள் அமைந்துள்ளன. நேரிசை, இன்னிசை, பஃறொடை வெண்பாக்களாலும், சிறுபான்மை குறள் வெண்பா, சிந்தியல் வெண்பாக்களாலும் அமைந்துள்ளன. அவற்றுள்ளும் யமகம், திரிபு அமைந்த வெண்பாக்களாலான மருத்துவ நூல்களும் உள்ளன. கலிப்பாவின் உறுப்புகளாகிய தரவு கொச்சக யாப்பிலும், தாழிசை யாப்பிலும் சில அமைந்துள்ளன. ஆசிரியப்பா வகையில் சில பாக்களே காணப்படுகின்றன.

மற்றும் இசையும் பண்ணுமமைந்த யாப்பு நடையில் சில நூல்கள் அமைந்துள்ளன. அவற்றுள் நொண்டிச் சிந்து, கும்மி, பள்ளு, வண்ண நடைகளில் பல நூல்கள் அமைந்துள்ளன. சில நூல்கள் தருவென்னும் கீர்த்தனை வடிவிலும் அமைந்துள்ளன.

அம்முறையில் மருத்துவம் பற்றிய இலக்கியங்களை மதிப்பிட்டால் இடைக்கால, பிற்காலப் புராண இலக்கியங்களான தூது, பரணி, கலம்பகம் முதலிய சிற்றிலக்கியங்களுக்கு எவ்வகையிலும் தாழ்வுறாமல் தலை நிமிர்ந்து நிற்பதைக் காணலாம்.

மெய்ஞ்ஞானியராக விளங்கும் சித்தர்களின் சோதிட, மருத்துவ, மாந்திரீகக் கருத்துகள் வாழையடி வாழையாக வாய்மொழியாகவும் உரைநடை நூலாகவும் நடைபெற்ற நிலை பெரும்பாலும் பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் செய்யுள் இலக்கிய வடிவங்களைப் பெறத் தொடங்கின எனத் தெரிகின்றது. பாரம்பரியமாகச் சித்த மருந்துகளைத் தெரிந்து மருத்துவம் புரிந்து வந்தவர்கள் எல்லோரும் தமிழ்ப் புலவராகவும் கவிஞராகவும் இருந்திருக்க இயலாது. உரைநடை மருத்துவ நூல்களையும் தமது அனுபவங்களையும் தக்க புலமை வாய்ந்த கவிஞர்களைக் கொண்டே செய்யுள் வடிவில் பாடச் செய்திருக்க வேண்டும். பாடிய கவிஞர் யாவரும் மருத்துவக்கலை வல்லவரல்லர். அதனால் இலக்கிய நயம், யாப்பமைதிகளுக்கேற்பச் சில கருத்துக்கள் பிறழ்ந்திருத்தல் வேண்டும். சில, பல இடங்கள் பிழையாகவும் முரணாகவும் அமைந்திருப்பதற்குக் .காரணம் அதுபோன்று புலனாகின்றது.

மற்றும் சித்தர்கள் மொழிந்தருளிய மருத்துவம் பற்றிய செய்திகள் பாரம்பரியமாகத் தொடர்ந்து வந்தமையின், அம்மருந்துகளைக் கையாண்டு மருத்துவம் செய்தவர்கள் தங்கள் அனுபவத்தையும் அவற்றொடு சேர்த்து நூல்களைப் படைத்து வந்திருத்தல் வேண்டும். கண்ணாடி, குப்பி, பீங்கான் போன்ற சொற்கள் நிறுத்தல், முகத்தல் போன்ற அளவுப் பெயர்கள், சில மருந்துச் சரக்குகளின் பெயர்கள் பன்னிரண்டு, பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை. இசுலாமியர் படையெடுப்புகளுக்குப்பின் இசுலாமியர் ஆட்சிக் காலத்து இசுலாமியரானவர் பலர் சித்த மருத்துவராக விளங்கினர். அவர்களால் பல மருத்துவப் பாக்கள் இயற்றப்பட்டுள்ளன. வழக்குத் தமிழ், கொச்சைத் தமிழ்ச் சொற்கள் பல கையாளப்பட்டுள்ளன. பொருளற்ற எதுகை மோனைச் சொற்கள் அமைந்த விருத்தப் பாக்கள் பலவாக உள்ளமை யாவும் மேற்கூறப் பெற்ற கருத்துகளை வலியுறுத்துவனவாக உள்ளன.

இக்குளறுபடிகள் சிறுபான்மையாக இருக்கப் பல நூல்களில் மிகப் பிற்காலத்து நடைமுறைக் கருத்துகள் அமைந்திருத்தலைக் காணும் போது இடைச்செருகல் பல நிகழ்ந்திருப்பதை ஊன்றி நோக்கின் அறியலாம். ஆயுர்வேத, யூனானி முறைகள் சில இடங்களில் காணப்படுதற்குக் காரணம் இவ்வகையான இடைச்செருகல்களே எனப் புலனாகின்றது.

இடைச்செருகல் ஒரு புறமிருக்க, ஓலைகளைப் படி எடுப்போர் செய்துள்ள பிழைகள் கணக்கிலவாக உள்ளன. ஏடு பெயர்த்தெழுதுவோர்க்கு மொழிப் புலமையும் இருப்பதில்லை; மருத்துவ அறிவும் இருப்பதில்லை. அந்நிலையில் காணார் என்பதைக் கோனார் என்றும், பலி என்பதைப் புலி என்றும், கரடு என்பதைக் காடு என்றும், பச்சிலை என்பதைப் பச்சோலை என்றும் எழுதி விடுவர். சுவடிகளில் வரிகள் அழிந்தோ சிதைந்தோ இருப்பின் முன், பின் பாடல்களில் அமைந்துள்ள அடிகளை எடுத்து மாற்றி எழுதிவிடுவர். அதற்கு மேலும் சுவடியை அடுக்கினால் பக்க எண்கள் பெரும்பாலும் குறிப்பதில்லை. அதனால் ஏடுகள் பிறழ்ந்திருந்தால் அதை அறியாமல் ஒரு பாடலில் முற்பகுதி ஒன்றாகவும் பிற்பகுதி ஒன்றாகவும் அமைந்துவிடும். இதனாலேயே 'பாடினவன் பாட்டைக் கெடுத்தான் எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்னும் பழமொழி எழுந்தது. இவ்வளவு சிக்கல்களுக்கும் இடையே கிடைத்த சுவடிகள்தாம் இப்பொழுது இயந்திர அச்சுப் பதிப்பில் அச்சாகி உலவுகின்றன. அச்சிடுவோர்க்கு அதுபற்றிய கவலையுமில்லை.

சித்த மருத்துவ நூல்களின் வகைகள்

பன்னூற்றுக் கணக்கில் கிடைத்துள்ள சித்த மருத்துவ நூல்களை எல்லாம் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

பெரும் பிரிவுகள்

1. பாடல்கள், *2.* வைத்திய முறைகள் (Melhops), *3.* மந்திரம், *4.* ஜாலம் (Magic), *5.* இரசவாதம், *6.* குணம் (Action), *7.* நாடி, *8.* எண்கள், *9.* சுருக்கம், *10.* ஞானம், *11.* யோகம், *12.* உடற்கூறு, *13.* சிகிச்சை முறை *14.* அகராதி, *15.* கலவி இன்பம் (கொக்கோகம்).

சிறு பிரிவுகள்

1. வைத்திய முறைகள். *2.* பாடல்கள், *3.* சுருக்கம், *4.* நிதானம், *5.* சாகரம், *6.* சூத்திரம், *7.* பெரு நூல், *8.* வாகடம், *9.* நூல், *10.* வாக்கியம், *11.* கிரந்தம், *12.* எண்கள், *13.* மருத்துவ முறைகள், *14.* மருந்து செய்முறைகள், *15.* தருக்கம், *16.* சிந்தாமணி, *17.* சிந்து *18.* சுத்தி, *19.* குணம், *20.* குறி, *21.* முப்பு, *22.* அகராதி, *23.* நிகண்டு, *24.* விநோதம், *25.* ஆரூடம், *26.* பட்சணி, *27.* கொக்கோகம், *28.* அநுபவம், *29.* மணி, *30.* வழலை, *31.* யோகம், *32.* மாரணம், *33.* சில்லறைக் கோவை, *34.* உடற்கூறு, *35.* தீட்சை, *36.* சரநூல், *37.* வாதம், *38.* திருமந்திரம், *39.* சாத்திரம், *40.* அட்டவணை, *41.* பஞ்சபட்சி, *42.* வைப்பு, *43.* கண்ணாடி, *44.* கற்பம், *45.* வல்லாதி, *46.* வெண்பா, *47.* கரிசல், *48.* காண்டம், *49.* ரத்னாகரம், *50.* பூசாவிதி, *51.* திரட்டு, *52.* ஞானம், *53.* சிகிச்சை, *54.* திறவுகோல், *55.* சதகம், *56.* வசனம், *57.* குணம் (பிணிகள்), *58.* சாரம், *59.* வித்தை, *60.* ஜாலம், *61.* பரிபாஷை, *62.* சைதன்யம், *63.* விளக்கம், *64.* முன்னிக்கல், *65.* பரீட்சை, *66.* பட்சணி, *67.* மருந்து, *68.* உற்பத்தி, *69.* பீரங்கி, *70.* நட்டாமுட்டி, *71.* சஞ்சீவி, *72.* விதி, *73.* வெண்பா, *74.* காவியம், *75.* கும்மி, *76.* மூலிகை, *77.* விவரம், *78.* கடமை, *79.* சிலாசத்து, *80.* வசியம், *81.* பேர், *82.* மலை, *83.* மறைப்பு, *84.* மாலை, *85.* வெட்டி (யான்), *86.* குறள், *87.* வித்தை, *88.* பூரணம், *89.* பிராமணம், *90.* சாரி, *91.* அதிசயம், *92.* தந்திரம், *93.* மகிமை, *94.* சரக்கு, *95.* பச்சை, *96.* லட்சணம், *97.* கூறு, *98.* கருமானம், *99.* அடக்கம், *100.* கோவை, *101.* இலக்கணம், *102.* நாடகம், *103.* உலா, *104.* அந்தாதி, *105.* பிள்ளைத்தமிழ். *106.* தரு.

இவையெல்லாம் நூலின் பெயர்த் தலைப்புக்களாக அமைந்துள்ளன. கிடைத்துள்ள சுவடிகளில் அநுபவ வைத்தியம் பற்றிய சுவடிகளே மிகுதியாக உள்ளன. நோய் விளக்கம் பற்றிய சுவடிகள் மிகக் குறைவாக உள்ளன.

சுவடிக் காப்பகங்கள்

தனியார் வசம் உள்ள சுவடிகள் தவிர்ந்த சுவடிக் காப்பகங்கள் பல தமிழகத்தில் உள்ளன.

அவை வருமாறு:

1. அரசினர் கீழ்த்திசைச் சுவடி நிலையம், சென்னை.
2. உ.வே.சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை.
3. பிரமஞான சபை நூல் நிலையம், அடையாறு, சென்னை.
4. தொல்பொருள் ஆய்வுத்துறை நூலகம், சென்னை.
5. உலகத் தமிழாராய்ச்சி நிலையம், சென்னை.
6. சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சென்னை.
7. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.
8. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், ஓலைச்சுவடித் துறை, தஞ்சாவூர்.
9. மதுரைத் தமிழ்ச் சங்க நூல் நிலையம், மதுரை.
10. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

இந்த நூலகங்களில் உள்ள சுவடிகள் பற்றி மு.கோ. இராமன் பின்வரும் செய்திகளைத் தெரிவித்துள்ளார்.

இன்றைக்குக் கிடைத்துள்ள சுவடிகள் ஏறத்தாழ இருபதினாயிரம். இவற்றை வகைப்படுத்திக் காணுங்கால் அறுபது விழுக்காடு மருத்துவச் சுவடிகள். பத்து விழுக்காடு சோதிடம் பற்றிய சுவடிகள் மற்றவை பிற துறைகளைப் பற்றியனவாகும்.

இன்றைக்குக் கிடைத்துள்ள மருத்துவச் சுவடிகளுள் யமகமும், மடக்கும், திரிபுமாக அமைந்த சில நூல்களுக்கு ஏறத்தாழப் பதவுரையும் சிலவற்றிற்குப் பொழிப்புரையும் அமைந்துள்ளன. அவ்வுரைகள் நூல் தோன்றிப் பல ஆண்டுகளுக்குப் பின் தோன்றியவை என்பதை அவ்வுரைநடை காட்டுகின்றது. சில நூலின் உரைகள் அளவுக்கதிகமான சொற்களையும், சொற்றொடர்களையும் கையாண்டு எழுதப்பட்டுள்ளன. சில உரைகள் நூற்கருத்தை விளக்குவதை முக்கியமாகக் கொள்ளாமல் தங்கள் புலமையைக் காட்ட எழுதியுள்ளனவாக அமைந்துள்ளன.அவ்வுரைகள் இல்லையாயின் இன்றைக்கு அந்த நூல்களைப் புரிந்து கொள்ளுதல் மிக அருமையாகும்.

அயல் நாடுகளில் சுவடிகள்

தமிழகத்தில் மட்டுமன்றிச் சில அயல் நாடுகளிலும் ஓலைச் சுவடிகள் அரசு நூலகங்களில் உள்ளன. தமிழகத்திற்கு அடுத்தபடி இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் நிறையச் சுவடிகள் உள்ளன. இலண்டன், பிரான்சு நாட்டு நூலகங்களில் அடுத்தபடியாகச் சுவடிகள் உள்ளன. அதற்குக் காரணம் ஆங்கிலேயர் ஆட்சியும், பிரஞ்சுக்காரர்கள் ஆட்சியும் தமிழகத்தில் பல

ஆண்டுகள் அமைந்திருந்தமையேயாகும். அந்நூலகங்களைத் தக்க அறிஞர் குழு சென்று ஆராயின் பல மருத்துவ சோதிட மாந்திரிக நூல்கள் கிடைக்கும். அவற்றை இன்றைய அறிவியல் கருவிகளைப் பயன்படுத்திப் படி எடுத்துக் கொண்டு வரலாம்.

அதற்குச் சித்த மருத்துவ நிலையங்களும் தமிழக அரசும் ஆவன செய்தல் வேண்டும்.

குறிப்பிடத்தக்க சித்த மருத்துவச் சுவடிகள்

அகத்தியர் பிள்ளைப் பிணி வாகடம்	நாடிநூல்
அகத்தியர் வாலை வாகடம்	சித்தர் நாடி சாத்திரம்
அகத்தியர் குழந்தைகள் மாந்த சாத்திரம்	நரகாரூடம்
பாலர் வாகடம் - வைசூரி சாத்திரம்	வாத நிதானம்
சித்தர் ஆரூட நொண்டிச்சிந்து	குட்ட நிதானம்
அகத்தியர் பஞ்சகாவிய நிகண்டு	சண்டமாருதக் குழம்பு
அகத்தியர் பரிபாஷை	சர்ப்பநூல்
சட்டைமுனி கற்பம்	அகத்தியர் தீட்சைவிதி
கொங்கணர் சரக்கு வைப்பு	கலைஞானம்
கோரக்கர் கற்பம்	சௌமியம்
தட்சிணாமூர்த்தி காவிய நிகண்டு	பரிபூரணம்
போக இரணவாகடச் சூத்திரம்	பூரண சூத்திரம்
அகத்தியர் குழம்பு	பூரண காவியம்
அகத்தியர் குணபாடம்	மதிவெண்பா
அகத்தியர் பஞ்சபூதக் கும்மி	காயசித்தி
நந்தீசர் நிகண்டு	சிவயோகம்
கொங்கணர் ஞான அட்டாங்கம்	ஞானகாவியச் சுருக்கம்
சித்தராரூட நொண்டி	கன்ம காண்டம்
திருமூலர் அட்சர நிகண்டு	சட்டைநாதர் ஞானம்
அகத்தியர் பரிபாஷைத் திரட்டு	குருநூல்
சன்னி வாகடம்	இராமதேவர் பூசைவிதி
சித்திர வல்லாதி	இராமதேவர் வைத்தியம்
தன்வந்திரி நிகண்டு	கொங்கணர் கடைக்காண்டம்
பிரமமுனிவர் வாதம்	கொங்கணர் தண்டகம் - ஞானம்
அகத்தியர் சர்ப்பராச மாத்திரை	கருவூரார் பூசாவிதி
அகத்தியர் வாதத்திரட்டு	சுந்தரானந்தர் பூசைவிதி

அகத்தியர் வைத்தியக் கும்மி

அட்டகர்ம நிகண்டு
பிள்ளைப்பிணி நிதானம்
உத்தரக்கிரிகை
விஷபாக நிதானம்
அகத்தியர் வைத்தியக் கும்மி
திருமூலர் நயனவிதி
திசைநாடி சாத்திரம்
வான்மீகர் பூதநாடி சாத்திரம்
ஜென்ம நிதானம்
சுர நிதானம்
கசாய மருந்துகள்
காயகற்ப விதி
பலசரக்கு நிதானம்
பித்த எண்ணெய் அகவல்
புசிப்புவிதி நாடி நிதானம்
பெரிய சுரராமபாணக் குளிகை
விரணரோக குணவாகடம்
மேகக் கோடாலி
மேக நிதானம்
அகத்தியர் பதார்த்தகுண சிந்தாமணி
கசாயவர்க்கம்
காயகற்பம்
இரசவர்க்கம்
அகத்தியர் பாண்டு வைப்பு
தன்வந்திரி வைத்திய சிந்தாமணி
உரோமரிஷி சூத்திரம்
அகத்தியர் பரிபூரணம்
அகத்தியர் அமுதக்கலை
சிரோரத்ன நடன காண்டம்
மச்சமுனி வைப்புத் திருமந்திரம்
திருமூலர் (திருமந்திரம்)
சன்னிவாத லட்சணம்
வாகட நிகண்டு

கும்பமுனி சட்டைமுனி
தர்க்கம்
சிந்தாமணி *1500*
சட்டைமுனி காயகற்பம்
தட்சிணாமூர்த்தி நயனவிதி
தனவந்திரி வைத்தியக் கும்மி
திருமூலர் நாடி
விஷ வைத்தியம்
சட்ரச நிகண்டு
கண் மருத்துவம்
சுரபேந்திரர் நயன வைத்தியம்
நயன சாத்திரம்
இரண வைத்தியம்
சர்பாரூடம்
சித்தாரூடம்
சித்திராரூடம்
சட்டைமுனி நிகண்டு
போகமுனி நிகண்டு
அகத்திய நயனவிதி
தட்சிணாமூர்த்தி ரசக்குளிகை
யூகி குணவாகடம்
அகத்தியர் வைத்திய சிந்தாமணி
அகத்தியர் பரிபாஷை
அகத்தியர் ஔடதசாரம்
புலிப்பாணி சிதம்பர பூசை
புலிப்பாணி சாலத்திரட்டு
தேரையரின் நோயின் சாரம்
தேரையர் கரிசல்
தேரையர் வைத்தியம்
தேரையர் வைத்திய காவியம்
சத்தியாரூடம்
சூலைநிதானக்குணம்
சட்ரச நிகண்டு
அஞ்சனம்
அங்காதிபாதம்

போகர் காயகற்பச் சூத்திரம்
அடுக்குநிலை போதம்
அண்டக்கல் முப்பு
அதிசய சூத்திரம்
அம்மை சாத்திரம்
அட்டகர்மயோகம்
அசுவ காண்டம்
கருக்கடை
இரசமணி சூத்திரம்
இரசவாதம்
உலோகமாரணம்
பதார்த்தகுணமூலி

பிள்ளை தோடம்
பறவை தோடக்குணம்
பிள்ளை வாகடம்
பிள்ளைப்பிணி கர்ப்ப உற்பத்தி
கர்ப்பக்கோன்
கர்ப்ப சிந்தாமணி
மலடிகளுக்கு வைத்தியம்
வழலைச் சுருக்கம்
அட்டகர்மம்
கல்பாந்தனம்
வித்யாநகம்

இவ்வட்டவணைத் தொடரில் சில நூல்களே குறிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒட்டிப் பல தலைப்புகளில் சுவடிகள் உள்ளன. இத்தலைப்புகள் பலவற்றில் பல சுவடிகள் உள்ளன. இவற்றுள் பல அச்சாகியுள்ளன, அச்சாக வேண்டியவையும் உள.

உடல் சார்ந்த எல்லா நோய்களுக்கும் உரிய மருந்துகளும் அவற்றைச் செய்யும் முறைகளும் கூறப்படுகின்றன. மனநோய்களுக்கும் குறிப்பாக மருத்துவம் கூறப்பட்டுள்ளது. மருந்து, மருத்துவம் ஆகியவற்றுடன் அறுவை மருத்துவமும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளது. கண் நோய்களுக்குச் சிறப்பாகச் சில சித்தர்கள் சிகிச்சை முறையும் மருந்தும் கூறியுள்ளனர். மகளிர்க்குரிய நோய்கள், கருப்பம் பற்றிய நோய்கள், முதல் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்கள் வரை பல சித்தர்களால் கூறப்பட்டுள்ளன.

சித்த மருத்துவத்தில் தனிச் சிறப்பாகக் கருத வேண்டிய பகுதி காயகற்பம், இரசமணி, கவன குளிகை, இரசவாதம் ஆகியவையாகும். பெரும்பாலும் மூலிகை பற்றியன. யாவும் எளிதாகக் கிடைக்கக் கூடியவையே. சில மருந்து மூலப்பொருள்கள் விலங்குகளிடத்தினின்றும் பெறப்படுவனவாக உள்ளன. வேதியியல் முறை என்னும் போது நிழல், வெயில், பனியில் உலர்த்தல், காய்ச்சுதல், புடமிடுதல் சிறுபான்மை வாலைவழி வடித்தலும் கூறப்படுகின்றன. உணவே மருந்தாகச் செயற்படக்கூடிய மருந்து முறைகளும் கூறப்பட்டுள்ளன.

சித்த மருத்துவ அமைப்புகள் சில தமிழ் இலக்கணத்துடன் ஒற்றுமைப்பட்டிருப்பதையும் காணலாம். தமிழ் இலக்கியங்கள் அகம், புறம் என

அமையும். அவ்வாறே மருத்துவத்திலும் அக மருத்துவம், புற மருத்துவம் என அமைந்துள்ளது. தமிழை இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரித்துக் கூறுவர். அவ்வாறே சித்த மருத்துவம் அரச மருத்துவம், அசுர மருத்துவம், அறுவை மருத்துவம் என அமைந்துள்ளது. அரச மருத்துவம் என்பது எளிய நிலையையும், அசுர மருத்துவம் என்பது பத்தியம் முதலியவற்றால் கடின நிலையையும் குறிக்கும். தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு என அமைந்திருப்பது போலவே நோய்க்கு அடிப்படை வாதம், பித்தம், கபம் என மூன்றாக அமைந்துள்ளன. நூல்கள் முதல் நூல், வழி நூல், சார்பு நூல், எதிர் நூல் என்னும் முறையில் அமைந்துள்ளது. பிறிதொரு வகையில் தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு என அமைந்திருப்பது போலவே சித்த மருத்துவ நூற்பொருள்கள் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் என அமைந்துள்ளன. படைப்பு நிலையில் எல்லாவகையான யாப்பும் அமைந்துள்ளன.

தமிழ் இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, காப்பியம், புராணம், தோத்திரங்களாக அமைந்திருப்பது போலவே சித்த மருத்துவ நூல்களும் திரட்டு, கோவை எனவும் தனியாசிரியரின் நூல்கள் சித்தர் பலரின் தொகுப்பு நூல்கள், சிற்றிலக்கிய வகைகள் போலப் பல நூல்கள் செய்யப்பட்டுள்ளன. பெயர்களும் சிந்தாமணி, சதகம், கலம்பகம் என்றாற்போல அமைந்துள்ளன. அகத்தியர் கும்மி, காவியம், நிகண்டு என்பனவும் அத்தகையனவே. புராணக்கதை மேற்கோள்களும் பல்வேறு பழமொழிகளும் கையாளப்பட்டுள்ளன. மருத்து பாரத நாடகம் என்பது ஒரு நூலின் பெயராக அமைந்துள்ளது. அகப்புற இலக்கியங்கள், காப்பியங்களில் அமைந்துள்ள இலக்கிய நயம் போலவே பல பாடல்கள் நயமாக அமைந்துள்ளன.

உரை நூல்களைக் காணும்போது சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் போலச் சுருக்கமாகவும், அடியார்க்கு நல்லார் உரை போல வரலாற்றுச் செய்திகள், கலைச்செய்திகளோடு விளக்கமாகவும், இலக்கண நூல் உரைகள் போல அளவானதாகவும், திருவாய்மொழி ஈட்டுரை போல மேற்கோள்களோடு மிக விரிவாகவும் அமைந்துள்ளன. பல்வேறு கோணங்களில் பல்வேறு நிகண்டுகள் செய்யப்பட்டுள்ளன.

பொதுவாகச் சுவடியிலிருந்து படி எடுத்து, உரை எழுதி அல்லது பழைய உரைக்கு விளக்கங்கள் தந்து பதிப்புச் செய்தல் என்பது கடுமையான முயற்சியாகவே இன்றும் உள்ளது.

தட்டானிடத்தில் தங்கப் பணிகள் சமைப்பதும்
வட்டாடுவாரைத் திருத்தி நன்மார்க்கத்தில் வைப்பதும்
பட்டாங்கில் உள்ளதைக் காகித அச்சில் பதிப்பதும்
தொட்டார்மனத்தை நாளும் துயர்செய்யுமே

என்ற வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பாடல், சுவடி பதிப்போர்க்கு எக்காலத்தும் பொருந்துவதாக அமைந்துள்ளது. மூலச்சுவடியை இனம் கண்டறிதலும், படி எடுத்தலும், பாடபேதம், பிரதிபேதம் என்பனவற்றைக் குறித்தலும், மிகவும் திறமையும், புலமையும் பெற்றவர்களுக்கே இயலும். இப்பணியில் உள்ள பெருமக்களின் தொண்டு போற்றுதற்குரியதாகும். ஏடுகளின் எழுத்துகள் எளிதில் காணமுடியாமல் பொருள் அறிய முடியாத மயக்கநிலை ஏற்படும்.

வரிகள் கடுமையாய் வல்லவரை உற்றும்
பெரியதலை, கால்கொம்பைப் பெற்ற - மருவுதலால்
கோணாமலே உதவு ஒப்பனவே உளசுவடி
ஓணான் நேர் ஆமென்றுணர்

என்று கார்மேகக் கவிஞர், அங்கதப் பாடலை ஓணானுக்கும், சுவடிக்கும் பொருந்துமாறு பாடியுள்ளார். மேலும் படி எடுக்கின்றவர்கள் செய்யும் தவறுகளும், பதிப்புச் செய்வோரையே பாதிக்கும், அதிலும் சித்த மருத்துவ நூல்களைப் பதிப்புசெய்யும் போது, பாடல்கள் அதற்கான பொருள் சரியான முறையிலே கொள்ளுதல் வேண்டும் இதில் ஏற்படும் தவறுகள், மருந்து செய்யும் முறையையே மாற்றிவிடும்.

சுவடிகள்

வடு என்றால் காயம், கீறல், அடையாளம், அழுந்திய பள்ளம் என்பது பொருள். ஈர மணற்பாங்கான இடங்களிலும் களிமண் மீதும் மக்கள், விலங்குகள் நடந்து சென்றபின் அவர்கள் பாதங்களின் அடையாளம் இருக்கும். அவற்றைச் சுவடு என்பர். சு என்பது மதிப்பையும் சிறப்பையும் மேன்மையையும் குறிக்கும் ஒரு முன்னொட்டு இடைச்சொல். சுநாதம் - இனிய நாதம், சுபிரமம்- மேலான பிரமம், சுமுகம் - சுபம், சுகன்யா முதலிய சொற்களில் உள்ள முன்னொட்டு பின்னுள்ள சொற்பொருளைச் சிறப்பித்து நிற்கும். புண் ஆறிய காயத்திற்கும் வடு என்பது பெயர். அதுவும் கீறல் அடையாளமே அதனினின்றும் எழுத்தொலியைக் குறிக்கும். வடுவை வேறுபடுத்த சு என்னும் மதிப்புணர்த்தும் முன்னொட்டைச் சேர்த்துச் சுவடு என்றமைத்தனர். சுவடுகளை உடையது சுவடி. 'இ' உடைமைப் பொருள் தரும் சொல்லாக்க விகுதி. கொடு என்றால் வளைவு. வளைந்து சுற்றுதலால் முல்லைக் கொடி. வளைந்து அசைவதால் சேவற்கொடி, கயற்கொடி என அமைந்தன. இதனடியாகப் பிறந்தது வடிவம். ஒலி உருவமாக உள்ள எழுத்தொலிகளை வடுச்செய்தலால் வடி எனப்பட்டது. அது ஆகுபெயராக வடிவெழுத்துக்களைக் கொண்ட நூலுக்காயிற்று. எனவே

சுவடி என்றால் சொற்களால் அமைந்த நூல் என்பது பொருள். சுவடிக்குப் புத்தகம் என்பது ஒரு பெயர். அது பதிவு செய்தது என்னும் சொல்லின் சிதைவாக ஆக்கப்பெற்றது. பதிதல், பொதிதல், பொத்துதல்; பொத்துதலைக் கொண்டது பொத்தகம்; அது புத்தகம் என ஆக்கம் பெற்றது. எனவே மருத்துவச் சுவடிகள் என்றால் மருத்துவத்தைக் கூறும் வரி வடிவால் அமைந்த மருத்துவ நூல்கள் என்பது பொருள்.

பழங்காலத்தில் களிமண்ணைப் பதமாக்கி ஏடுகளாக வடிவம் செய்து எழுத்துகளை எழுதி வைத்தனர். கூரிய உளி கொண்டு கற்களில் கீறி எழுதி வந்தனர். செம்பு, ஈயம் முதலிய உலோகத் தகடுகளில் எழுதி வந்தனர். அவற்றில் அதிகமான செய்திகளை எழுதவியலாது, எளிதாக எடுத்துச் செல்ல இயலாது. தடித்த நாணற்புல், தாமரை இலை, தாழை மடல் முதலியவற்றில் கூரிய குச்சிகளால் எழுதினர். அது அப்பொழுதைக்குப் பயன்பட்டு உடன் காய்ந்து அழிந்து விடுதலைக் கண்டு, அழியாத காய்ந்த ஓலைகளில் எழுதின் பல நாள் நிலைத்து நிற்கும் என்பதால் பனை ஓலையை எழுதுதற்குப் பயன்படுத்தினர். அதிற் கீறப்படும் சுவடு அழியாமையோடு நெருக்கமாகப் பல எழுத்துகளைத் தொடர்ந்து எழுத அது வாய்ப்பாக அமைந்தமை கண்டு பனை ஓலைகளில் கூரிய முட்களால் எழுதி வந்தனர். முட்கள் விரல்களால் பிடித்து எழுதுவதற்கு எளிதாக அமையாமையால் கூரிய ஆணிகளால் எழுத முற்பட்டனர். அவ்வாணிக்கு எழுத்தாணி என்று பெயர் அமைந்தது. பனைமட்டை ஒன்றோடொன்று இணைந்த இதழ்களை உடையது. அதனைக் கூறுகூறாக வகிர்ந்து, அளவாக நறுக்கிக் கொண்டமையால் அது ஏடு எனப்பட்டது. ஏடு என்றால் இதழ் என்பது பொருள். ஏடும் எழுத்தாணியும் தேர்ந்து கொண்ட பின் எண்ணிய கருத்துகளை எல்லாம் பதிவு செய்து நூலாகப் படைத்தனர்.

இன்றைக்கு நாணற் புல், மரக்கூழ்களால் விளைவு செய்யப் பெற்ற காகிதம் ஏறத்தாழ *14, 15* ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தமிழகத்திற்கு வந்தது. காகிதங்கள் மெல்லிதாகவும், கசங்கி மக்கிப் பிய்ந்து விடுவதாலும் வண்ண நீரைக் கொண்டு கழுகுகளின் இறகு, நரம்பால் ஆகிய எழுதுகோலால் எழுத வேண்டியிருந்தமையாலும், மக்கள் நூல்கள், ஆவணங்கள் முதலியவற்றைப் பனை ஓலைகளிலேயே எழுதி வந்தனர். இயந்திர அச்சும் வழவழப்பான காகிதமும் வந்த பின்னர்ப் பனை ஏடுகளில் எழுதும் வழக்குக் குறைந்து இன்றைக்குப் பெரிதும் மறைந்துவிட்டது.

பனை ஓலை காய்ந்து, வெடித்து, முறிந்து சேதமுறாமல் நீண்ட நாள் நிலைத்திருக்க, அதனை நீராவியில் பாடஞ்செய்து அதற்கெனத்

தயாரிக்கப்படும் எண்ணெய் பூசிப் பக்குவப்படுத்துவர். எந்த எந்த நூலுக்கு எவ்வளவு அகலம் நீளம் அமையவேண்டுமென்று அளவிட்டு நறுக்கிக்கொள்வர். இரு முனைகளில் கயிறு கோத்துக் கட்டுதற்கேற்பத் துளையிட்டு மிகவும் கூரில்லாமலும் மழுங்காமலும் செம்மை செய்த எழுத்தாணியால் இடக்கைப் பெருவிரலால் அணைத்து ஏடு சேதமுறாமல் அளவான ஆழம்பட எழுதித்துடைத்து எழுத்துகள் நன்கு தெரிய மை பூசித் துடைத்துப் பக்குவமாகக் காப்பாற்றுவர். ஏட்டில் ஆணியால் வரையுமிடத்து மெய் எழுத்துக்குப் புள்ளி குத்தாமல் சுழி எழுத்துகளை விழிப்புணர்வோடு எழுதுவர். செம்மையாக அமைந்த சுவடிகளைப் பார்த்து வேண்டுவோர் படி எடுத்துக் கொள்வர். படி எடுப்போர் தக்க புலமையில்லாதவராயின் எழுத்துப் பிழைகள் நேரும். அங்ஙனம் பிழையமைந்த ஏடுகளைப் படியெடுப்போர் மேலும் பிழை செய்வர். சிலர் பிழைகளைத் திருத்தி எழுதிக் கொள்வதாக நினைத்துச் சொற்களையே மாற்றி எழுதி விடுவர். சிறிது சிதைந்த ஏடுகளாயின் தங்கள் ஊகத்திற்கேற்ப வரிகளையே மாற்றி எழுதி விடுவர். இங்ஙனம் பல இடர்ப்பாடுகளுக்கு ஆட்பட்ட சுவடிகளே மருத்துவத் துறையில் இன்றைக்கு அமைந்துள்ளன.

சுவடிப் பாதுகாப்பில் அறிவியலின் பங்கு

சுவடியைப் பாதுகாக்க இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. காலமாறுபாட்டுக்கு ஏற்பப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மாற்றப்பட்டே வந்திருக்கின்றன. பழங்காலத்தில் கருவிகளின் துணையின்றி இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்திக் காத்து வந்தனர். இன்றோ காலவோட்டத்தில் கருவிகளின் பயன்பாடும், வேதிமப் பொருட்களின் கண்டெடுப்பும் பழைய பாதுகாப்பு முறையில் பெரிதும் மாற்றம் செய்துவிட்டன. பழைய பாதுகாப்பு முறையில் நான்கு விதமான பாதுகாப்பு முறைகள் கையாளப்பட்டு வந்தன.

1. மஞ்சள் பூச்சு முறை

கிழங்கு மஞ்சளைத் தூள் செய்தோ நன்றாக அரைத்தோ தண்ணீரில் கரைத்தோ குழம்பாக்கிக் கொண்டு சுவடியின் மேற்புறமும் அடிப்புறமும் தடவவேண்டும். அவ்வாறு தடவுவதால் சுவடியில் தங்கி இருக்கும் சுவடி அழிப்பான்களான கரையான், அந்துப்பூச்சி ஆகியன இறந்து சுவடிக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கும். இதை இவ்வாறு பயன்படுத்தினால் இப்பூச்சிகள் அழியும் என அறிவியல் அறிவு சார்ந்த முறையில் சிந்தித்திருக்கின்றனர்.

2. வேப்ப எண்ணெய்ப் பூச்சு முறை

வேப்ப எண்ணெயைத் தூரிகையின் உதவியால் மேற்புறமும் அடிப்புறமும் தடவினால் மேற்சொன்னது போல் அழிப்பான்கள் இறக்கும். சுவடியும் நீண்ட நாள் வாழும்.

3. கோவையிலைச் சாறுமுறை

கோவையிலைச் சாறில் அடுப்புக்கரி, வசம்புக்கரி, கொட்டாங்குச்சிக் கரி இம்மூன்றில் ஏதாவதொன்றை எடுத்துக் கொண்டு அதனுடன் விளக்கெண்ணையின் புகையைச் சேர்த்துக் கோவையிலைச் சாற்று மையைத் தயார் செய்ய வேண்டும். இவ்வாறு தயார் செய்த மையைச் சுவடிகளின் மீது தடவிப் பாதுகாப்பு முறையைக் கையாளலாம்.

4. மணப்பொருள் முடிச்சு முறை

வசம்பு, கருஞ்சீரகம், ஓமம், கிராம்பு, மிளகு, இலவங்கப்பட்டை ஆகிய ஆறு வகையான பொருட்களையும் சமபங்கு எடுத்து உலர்த்தி நன்கு பொடி செய்து, இருபங்குக் கற்பூரம் கலந்து சேமித்து வைக்கப்பட்ட சுவடிகளுக்கு அடியில் வைத்துச் சுவடிகளைப் பாதுகாக்கலாம்.

இவ்வாறு இந்நான்கு முறைகளைப் பழைய பாதுகாப்பு முறைகளாகப் பயன்படுத்தி வந்தனர். ஆனால் இன்றோ அறிவியல் கருவிகளின் மூலம் பாதுகாப்பு நடவடிக்கைள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் புதிய முறையில் இரண்டு விதமான பாதுகாப்பு அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

1. இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தும் முறை

நுண்கிருமி நீக்கப் பேழையில் பூச்சிக் கொல்லி மருந்துகளை வைத்து அதன் ஆவியால் அழிப்பான்களை அழிக்கின்றனர். பூச்சிக் கொல்லிகளாக ஆர்சனிக் பென்ட்டாக்சைடு, டிடிடீ சோடியம் ஃபுளுரைடு, எத்திலீன் ஆக்சைடு, லெமன் கிராஸ் எண்ணை, சாவா சிட்ரோநெல்லா எண்ணெய் போன்றவை பயன்படுகின்றன.

2. அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தும் முறை

அறிவியல் கருவிகளைப் பயன்படுத்திச் சுவடிகளைப் பாதுகாத்தும் படியெடுத்துப் பாதுகாத்தும் வருகின்றனர். இம்முறையில் மின்னச்சு இயந்திரம், (Xerox), நுண்படச் சுருள் இயந்திரம் (Micro film), அச்சு இயந்திரம் (Press), கணிப்பொறி இயந்திரம் போன்ற கருவிகளின் துணைகொண்டு சுவடிகளைப் பாதுகாத்து வருகின்றனர். இதில் குறிப்பாகக் கணிப்பொறியின் மூலம் பாதுகாப்பது வியக்கத்தக்கது. கணிப்பொறியில் செய்திகளைப் பதிவு செய்து அதிலிருந்து பல ஆய்வுகளுக்கும் பயன்படுத்திக் கொள்வது கருதத்தக்கது.

சுவடியாய்வில் கணிப்பொறியின் பங்கு

கணிப்பொறியில் உருவேற்றிய சுவடிகளைப் பலநிலைகளில் ஆய்வுகளுக்குப் பயன்படுத்த முடியும். சுவடியில் காணப்படும் உரையினை

ஆய்வு செய்து உரை ஒற்றுமையையும் வேறுபாட்டையும் காணலாம். உரைகளுக்குத் தேவையான சொல்லடைவு மற்றும் பொருளடைவுகளைத் தயாரிக்கலாம். சுவடி எழுதிய ஆசிரியரையும் அவரின் காலத்தையும் துல்லியமாகக் கணித்தும் கால ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தியும் சுவடிகளுக்கான அட்டவணையைத் தயாரித்தும் சுவடி ஆய்விற்கான அடிப்படை ஆதாரங்களைத் திரட்ட முடியும்.

கணிப்பொறியின் மூலம் சுவடியின் ஆசிரியர் மற்றும் அவரின் காலத்தைக் கணித்தல்

சுவடி எழுதிய ஆசிரியர் யார்? அவர் எந்தக் காலக்கட்டத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கணிப்பொறியின் மூலம் எளிதாகக் கணக்கிட முடியும். சுவடியின் ஆசிரியர் மற்றும் காலம் தெரியாத நிலையில் கணிப்பொறியைப் பயன்படுத்தி ஆசிரியரையும் காலத்தையும் கணக்கிடலாம்.

ஆசிரியர் பெயரும் காலமும் இல்லாத சுவடியின் ஆசிரியரையும் காலத்தையும் நிர்ணயிப்பது கடினச் செயலாகவே கருதப்படுகிறது. ஏனெனில் ஒரே பணியினைப் பலர் செய்திருக்கின்றனர். ஒருவரே பல பணியினைச் செய்திருக்கின்றதனால் ஆசிரியரின் பெயரையும் காலத்தையும் நிர்ணயிக்கக் கணிப்பொறி பயன்படுத்தப்படுகிறது. ஆசிரியர் காலத்து நடையமைப்பும், சொல்லமைப்பும், சொற்றொடர் அமைப்பும், பொருளமைப்பும், ஆசிரியரின் தொழில் முறையும் நடையில் ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை, வேற்றுமையை எளிதில் கணித்துணர்ந்து, ஆசிரியரின் பெயரையும் காலத்தையும் நிர்ணயம் செய்ய முடியும்.

கணிப்பொறியினால் ஏற்படும் நன்மைகள்

1. சுவடிகள் பற்றிய எண்ணிறந்த செய்திகள் எளிதாகவும், குறுகிய காலத்திலும் மின்காந்தப் பதிவின் மூலம் பதிவு செய்து காத்தல்.
2. மின்காந்தப் பதிவில் உள்ள செய்திகளை வேண்டிய நேரத்தில் பெறுதல் மற்றும் மாற்றம் செய்தல்.
3. குறுகிய காலத்தில் அட்டவணை தயாரித்தல்.
4. கணிப்பொறி அட்டவணை தயாரித்துள்ளதால் தேவையான பொழுது குறிப்பிட்ட பகுதியை மட்டுமே அச்சாக்கிப் பெறுதல்.
5. கணிப்பொறி வழி அமைந்துள்ள அட்டவணைச் செய்திகளைக் கொண்டு நூலடைவுச் செய்திகளை ஆய்வு செய்து பலப்பல அரிய உண்மைகளைக் கண்டறிதல்.

6. கணிப்பொறி மூலம் குறிப்பிட்ட தலைப்புகளில் உள்ள அரிய சுவடிகளைக் கண்டறிந்து பேணிப் பாதுகாத்தல்.

7. கணிப்பொறி மூலம் சுவடிகளைப் படப்பகுப்பாய்வு செய்தல்.

போன்ற ஏழு வகையான நன்மைகள் தரும் வகையில் ஆய்வு செய்யும் ஆய்வாளர்களுக்குக் கணிப்பொறி பயன்படுகின்றது.

மருத்துவச் சுவடிகள் பெரும்பாலும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளதால் புணர்ச்சி இலக்கணமும் யாப்பிலக்கணமும் தெரியாதவர் பல பிழைகளைச் செய்து விடுவர். அப்பிழையான பாடங்களையே மெய்யெனக் கருதிச் செய்த உரைகளும் உள. சித்த மருத்துவ நூல்கள் பெரும்பாலும் வணிக நோக்கிலேயே அச்சிடப்பட்டு வந்தமையால் தக்கவர்களைக் கொண்டு ஆய்ந்து தெளியாமலேயே ஏட்டில் உள்ளவாறே அச்சிட்டு வந்துள்ளனர். பொறுப்புள்ள நிறுவனத்தினர் ஓரளவு பிற சுவடிகளைச் சேகரித்து ஒப்புநோக்கிப் பாடவேறுபாடுகளைக் குறிப்பிட்டும் மருத்துவப் புலமையும் மொழிப்புலமையும் வாய்ந்த சிலரால் அச்சிடப்பெற்ற நூல்கள் ஓரளவு செம்மையாக உள்ளன.

சுவடிகள் படியெடுக்கப்பட்டு வளர்ந்த நிலை

பண்டைக் காலத்தில் ஆசிரியர்கள் பாடங்களை வாய்மொழியாகவே மாணாக்கர்களுக்குச் சொல்லி வந்தனர். வாய்மொழியாகக் கற்ற பாடங்களை மாணாக்கர் தம் தேவைக்கேற்பப் படியெடுத்து வைத்துக் கொண்டனர். ஒரு சிலர் பேரிலக்கியங்களைக் கற்கின்ற பொழுது அவற்றை, ஆசிரியர் எழுதி வைத்திருக்கும் சுவடிகளைப் பார்த்துப் படியெடுத்து வைத்துக் கொண்டு பாடங் கேட்டனர். ஆசிரியர் ஒரு நூலினைக் கற்பிக்கின்ற பொழுது தம் நூலினைக் கொடுத்து, மாணாக்கரைப் படியெடுத்துக் கொள்ளச் செய்வதும் உண்டு. ஓலைச்சுவடிகள் நெடிய ஆயுளை உடையவை அல்ல. அவை சிதைந்துபடுகின்ற பொழுது, அவை மீண்டும் படியெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. பேச்சுமொழி, வட்டார வழக்குச் சொற்கள், எழுத்துப் பிழைகள் தோன்றத் தொடங்கிவிட்டன. இவ்வாறு காலந்தோறும் ஏற்பட்ட வடிவ வேறுபாடுகளோடு சுவடிகள் பல்கிப் பெருகின.

அடுத்த நிலையில் ஜமீன்தார்கள், மடாதிபதிகள் முதலானோர் தங்கள் தேவைக்காகக் கூலிக்குப் படியெடுப்போரை நியமித்து, நூல்களைப் படியெடுத்துப் பயன்படுத்தினர். இதன் மூலம் அக்காலத்திலிருந்தே கூலிக்குப் படியெடுப்போர் இருந்திருக்கின்றனர் என்பதை அறியமுடிகிறது.

சோதிடம், மருத்துவம் போன்ற தொழில் செய்பவர்கள், தங்கள் தேவைக்கு வேண்டுவனவற்றை மட்டும் படியெடுத்து வைத்துக் கொண்டனர்.

உ.வே. சாமிநாதையர், சுவடிகளை வைத்திருப்பவர்கள் அவற்றைத் தர மறுத்தால், தக்கவர்களைக் கொண்டு அவற்றைப் படியெடுத்து வைத்துக் கொண்டார் என்னும் செய்தியை அவருடைய 'என் சரித்திரம்' மூலம் அறியமுடிகிறது.

தாள்கள் தோன்றியபிறகு, ஓலைச்சுவடியிலுள்ளவை தாள்களில் படியெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. ஆவணங்கள் ஓலைச்சுவடியிலிருந்து தாள்களில் படியெடுக்கப்பட்டன என்பதற்குச் சான்றுகள் இன்றும் கிடைக்கின்றன. பெரும்பாலும் பரம்பரையாக மருத்துவக் குடும்பத்தில் வருபவர்கள் தங்கள் தேவைக்கு ஏற்றவற்றை மட்டும் தாள்களில் படியெடுத்து வைத்துக் கொண்டனர். ஏனெனில் இத்தகைய மருத்துவர்கள் ஒரு குறிப்பிட்ட நோய்க்குரிய மருந்தை மட்டுமே தயார் செய்தனர். இதிலேயே சிறப்பும் பெற்றிருந்தனர். எடுத்துக்காட்டாகச் சிலர் வாத நோய்க்கு மட்டுமே வைத்தியம் செய்தனர். சிலர் குழந்தைகளுக்கு மட்டுமே மருத்துவம் செய்து குழந்தை மருத்துவர் எனப் பெயர் பெற்றனர். இவற்றிற்குரிய மருந்து செய்முறைகளை மட்டும் தாள்களில் படியெடுத்து வைத்துக் கொண்டனர்.

இவ்வாறே இலக்கியம், இலக்கணம் மற்றும் பிற துறையைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் அல்லது சில பகுதிகளை மட்டும், தான் கற்கவோ கற்பிப்பதற்கோ ஆர்வமுடையவர்களாக அவற்றை மட்டும் தாள்களில் படியெடுத்து வைத்துக் கொண்டனர்.

இக்காலத்தில் படியெடுத்தலின் நிலை

இக்காலத்தில் தஞ்சை சரசுவதி மகால் நூலகம், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், அறிஞர் அண்ணா மருத்துவமனை போன்ற இடங்களில் ஓலைச்சுவடிகளில் உள்ள நூல்களை அழித்துவிடாமல் பாதுகாக்கும் நோக்கத்தோடு படியெடுத்துப் பாதுகாத்து வருகின்றனர். ஏனெனில் சுவடிகள் எவ்வளவுதான் பாதுகாக்கப்பட்டாலும் அவை குறிப்பிட்ட காலத்திற்கு மேல் அழிந்து விடுகின்றன. எனவே இதற்கெனப் படியெடுப்போரை நியமித்துத் தாள்களில் படியெடுக்கச் செய்து பாதுகாக்கின்றனர்.

சில நிறுவனங்கள், சுவடியியலில் பயிற்சி பெற்றோரைக் கொண்டு படியெடுக்கின்றன. சில நிறுவனங்கள், நூலகங்கள் போன்றவை சுவடியியலில் நன்கு பயிற்சி இல்லாதவர்களை எழுத்துக்கூலி அடிப்படையில் நியமித்துப் படியெடுக்கின்றன. இக்கால அறிவியல் உலகத்தில் நுண்படச் சுருள்களில் படமெடுத்துப் பாதுக்காக்கின்றனர். இதனால் ஓலைச்சுவடிகளில் உள்ளவை பாதுகாக்கப்படுகின்றன. இருப்பினும் சுவடிப் பயிற்சி இல்லாதவர்கள் இதனைப் படிக்கச் சிரமப்படுவர். காரணம் சுவடியில் உள்ளவை நிழற்படங்கள் போல

உள்ளது உள்ளபடியே காணப்படுகின்றன. எனவே ஓலைச்சுவடிகளை நுண்படச்சுருள்களில் படமெடுத்தாலும், அவற்றையும் தாள்களில் படியெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

கையெழுத்துப் படிகளின் நன்மை தீமைகள்

நன்மைகள்

ஓலைச்சுவடிகள் தாள்களில் படியெடுக்கப்படுவதன் மூலம் அழிவு நிலையில் இருக்கும் நூல்கள் பாதுகாக்கப்படுகின்றன. இதனால் அக்காலத்தில் வழக்கிலிருந்த சொற்கள், அவை பேச்சு மொழியில் வழங்கப்பட்ட முறை, பொருள்கள் ஆகியவற்றை இக்கால மொழி ஆய்வாளர்கள் அறிந்து கொள்ள முடிகிறது. மற்றப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து ஆய்வு செய்து பதிப்பிக்கவும் பயன்படுகிறது. இக்கையெழுத்துச் சுவடிகள் அக்கால மக்களின் பண்பாடு, கலை இவற்றை அறிந்து கொள்ளப் பயன்படும் ஒரு வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்கிறது.

தீமைகள்

"பாமரரும் பிரதி செய்தார்கள்; பண்டிதரும் பிரதி செய்தார்கள். பாமரர்கள் கூலிக்காகவே பிரதி செய்தல் பெரும்பான்மை வழக்கு. புலமையில்லாமையால் சொற் பிழைகள், எழுத்துப் பிழைகள் நிரம்ப ஏற்பட்டன" என்ற திருவாசக ஆராய்ச்சிக் குறிப்புகளுக்கேற்பச் சிறந்த மொழிப்புலமை இல்லாதவராலும், சுவடியில் உள்ள நூலினைப் பற்றிய சிந்தனை இல்லாதவராலும் எழுதப்படுகின்ற சுவடியில் பிழைகள் ஏற்படுகின்றன. இவர்கள் வரிவடிவினை மட்டுமே பார்த்து எழுதுபவராக உள்ளனர். மேலும் வட்டார வழக்குச் சொற்களுக்கேற்ப பேச்சு ஒலி மாறுபாடுகளும் கையெழுத்துப் பிரதியில் ஏறிவிடுகின்றன.

கையெழுத்துப் பிரதியில் விடுகைகளும் மிகைகளும் தோன்றக் காரணம்

சுவடியைப் பார்த்து எழுதுகின்ற பொழுது சில விடுகைகளும், மிகைகளும் ஏற்படுவதுண்டு. சுவடியிலுள்ள ஒரு வரியைப் பார்த்துவிட்டு எழுதுவதும், மீண்டும் சுவடியைப் பார்ப்பதுமாகிய செயல்களால், ஒரே மாதிரியான முடிவு, முதற் சொற்கள் அமைந்த வரிகளுள் ஒன்று விடுபடுவதோ மீண்டும் எழுதப்படுவதோ நிகழக்கூடும். சான்று:

கேளேநீ சர்வநோய் எல்லாம் தீர
 கிளத்துகிறேன் கதலிக்கந் தத்தின் மார்க்கம்

கேளேநீ கணபதியைப் போற்றிக் கொள்ளு
குகன்பாதம் வணங்கிச்சற் குருவைப் போற்றி
கேளேநீ கோட்டமது பலன்தான் நாலு
கார்கண்ட திப்பிலியும் பலம்தான் ரெண்டு
கேளேநீ சுக்குஇரண்டு சாதிக்காய் ரெண்டு
கிராம்புஇரண்டு சீரகமும் ரெண்டு கூட்டு
(போகர் வைத்தியம் 700)

இப்பாடலின் அடிக்குறிப்பில் பழனிப்பதிப்பில் முதலடிகள் இல்லை. அங்கு இப்பாடலில் மூன்றடிகளே உள்ளன. இந்த விடுகைக்குக் காரணம் ஒரே மாதிரியான முதற்சொற்கள் அமைந்த காரணத்தால் ஏடு பெயர்த்து எழுதியவர் முதலடியை விடுத்து அடுத்த மூன்றடிகளை மட்டும் எழுதிவிட்டார்.

பேச்சு வழக்குச் சொற்கள் தாள் சுவடிகளில் புகுதல்

புண்ணாக்கு *(பிண்ணாக்கு)*, முத்தே *(முற்றே)*, கயிலாலோச்சல் *(கை காலோச்சல்)*, சித்தாமுட்டி *(சிற்றாமுட்டி)*, சித்தரத்தை *(சிற்றரத்தை)*, தாழி *(தாளி)*, அஞ்சு நாலு, ஒன்னு, மூணு போன்ற பேச்சு மொழிகளும் கையெழுத்துப் படிகளில் எழுதப்பட்டு விடுகின்றன. சிலபொழுது அந்தந்த வட்டார வழக்குச் சொற்களும் படியெடுப்போரின் மனப்படி மாற்றமடைந்து படியெடுக்கப்படுகின்றன.

சுவடிகளில் காணப்படும் எழுத்து முறைகளினால் ஏற்படும் பிழைகள்

சுவடிகளில் உள்ள மெய்யெழுத்துகள் புள்ளியில்லாமல் எழுதப்படுவதாலும், சொற்கள் பிரித்து எழுதப்படாமல், உரைநடை போலத் தொடர்ந்து எழுதப்படுவதாலும் பிழைகள் ஏற்படுகின்றன. சான்று:

ஒதுமபினி கெந்தம் ஓர்நாபி *(சிந்தாமணி தாது நிதானம்)*

என்ற தொடர்,

ஒதும் பினி கெந்தம் ஓர்நாபி

எனப் படியெடுப்போரால் தவறாக எழுதப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் 'ஒதுமபினி' என்றவிடத்து 'மகர'த்திற்குப் புள்ளி வைத்து, 'பினி' என்பது 'பிணி' என இருக்க வேண்டும் எனக் கொண்டு எழுதப்பட்டு விட்டது.

கையெழுத்துத் தெளிவின்மையால் ஏற்படும் பிழைகள்

கையெழுத்துத் தெளிவின்மையால் பிழைகள் ஏற்படுவதுண்டு. ஒரு சொல்லோ, தொடரோ விளங்காத நிலையில் சுவடிப்பிரதி செய்வோர், தங்கள்

அறிவிற்கேற்ப அந்த இடங்களில் இன்ன சொல்தான் இருக்கும் எனக் கொண்டு எழுதுவதாலும் பிழைகள் உண்டாகின்றன. சான்று:

'ஆலீச்சு நாவலரசு மாறமைந்தின்' என்பது 'ஆலீச்சு நாவலரசு மாமரமைந்தின்' என்று கையெழுத்துப் புரியாமலும், பொருள் புரியாமலும் எழுதப்பட்டுவிட்டது.

சுவடி படியெடுத்தவரின் அவசரத்தினாலும், கவனக் குறைவாலும் சுவடியில் பல பிழைகள் நேர்ந்துள்ளன. படியெடுத்தவர் ஒரெழுத்தை இன்னொன்றாகப் புரிந்து கொண்டு எழுதினமையால் ஏற்பட்டுள்ள தவறுகள் பல காணப்படுகின்றன.

திரிபிடனுடைய	-	திரிபிடலுடைய
வூகார வீற்று மொழிக்கும்	-	ஆகார வீற்று மொழிக்கும்

போன்ற பிழைகள் 'னு' கரத்தை 'லு' கரமாகவும் 'வூ' காரத்தை 'ஆ' காரமாகவும் புரிந்து கொண்டதால் ஏற்பட்டவையாகும்.

ஏட்டுப் பிறழ்ச்சி

சுவடிகளில் ஏடுகள் மாறியிருந்தாலும், அவற்றைக் கவனியாமல் சிலபொழுது பிரதி செய்யப்படுவதுண்டு. இதற்குக் காரணம் தமிழ் எண்கள் தெரியதாததால் ஏடுகளின் ஓரத்தில் உள்ள ஏட்டு எண்களோ, பாடல்களின் தொடர்ந்த எண்களோ இன்னவென்று அறியாததாலும், பாடலின் பொருள் தொடர்ந்து வராமல் நடுவில் மாறி வருகிறது என்பது தெரியாததும் ஆகும். இவற்றை அறியாமல் அப்படியே படியெடுத்து வருகின்றனர்.

அறிஞர் அண்ணா மருத்துவமனையில் 'அனுபவ வைத்தியம்' என்ற பெயரில் ஒரு கையெழுத்துப்பிரதி உள்ளது. இத்தலைப்பு சுவடியைப் படியெடுப்போரால் கொடுக்கப்பட்டுவிட்டது. இதற்குக் காரணம் ஏட்டுப்பிறழ்ச்சியேயாகும். இச்சுவடியில்,

பரமசிவ னயன்மால் பார்வதி கணேசன்
அரியபரா சக்திமுத லாக விரவுதெய்வம்
தன்னை வணங்கித் துதித்த தன்வந்திரி பகவான்
சொன்னகிரந் தத்தமிழ் சொல்வேன்
தமிழால் வைத்திய சிந்தாமணி என்னும்பேர்

என்ற காப்புச் செய்யுட்களோடு தொடங்கும் ஏடு இடம் மாறி அமைந்துள்ளது. இதனைக் கவனியாமல் படியெடுத்ததன் காரணமாகப் படியெடுத்தோர் 'தன்வந்தரி வைத்திய சிந்தாமணி' என்று பெயரிடாமல் 'அனுபவ வைத்தியம்' என்று மாற்றி எழுதிவிட்டார்.

கையெழுத்துப்படிகள் எழுதுவோர் கவனிக்க வேண்டியவை

கையெழுத்துப்படிகள் எழுதப்பட்டவுடன் அதனை மூலச்சுவடியோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். படி எடுத்தவர்கள் சுவடியில் கையெழுத்துத் தெளிவின்மையால் தடுமாற்றம் ஏற்படுகின்றபொழுது, இந்நூலில் தேர்ச்சி பெற்றோரைக் கொண்டு தெளிவு பெற்றுப் பின் எழுதலாம். அவ்வாறு இயலாதவிடத்துச் சுவடியிலுள்ள வரிவடிவைத் தங்கள் அறிவிற்கேற்பப் பொருள் கொண்டு எழுதாமல் அதிலுள்ளதை உள்ளவாறே எழுதுதல் வேண்டும். இவ்வாறு எழுதுவதால், அந்நூலினைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியர் தடுமாற்றம் அடையாமல் அவ்விடத்திற்கேற்ற சொல்லைத் தேர்ந்தெடுக்க இயலும்.

ஓர் ஓலைச்சுவடிக்கட்டில் பல நூல்கள் ஒன்றாகக் கட்டி வைக்கப் பட்டிருக்கின்றன. கையெழுத்துப்படிகள் எழுதப்பட்டு, அவை ஓலைச் சுவடியில் உள்ளவாறே அனைத்தும் ஒன்றாகவே வைத்து, 'கட்டு' (பைண்டிங்) செய்யப்படுகின்றன. இதனால் கையெழுத்துப்படிகளைப் பார்ப்போர் ஒவ்வொரு கட்டிலும் என்னென்ன நூல்கள் இருக்கின்றன என்பதை அறிய முடிவதில்லை. எனவே ஒவ்வொரு நூலும் படிகள் எடுக்கப்பட்டுத் தனித்தனியாக வைத்துக் 'கட்டு' செய்து தலைப்புகள் கொடுக்கப்பட்டு, ஓலைச்சுவடியின் எண்ணும் கொடுக்கப்பட்டுவிட்டால் பதிப்பாசிரியர்களுக்குத் தடுமாற்றம் உண்டாகாது; நேரமும் விரயமாகாது.

சுவடிப் பதிப்பிற்குக் கையெழுத்துப் படிகளின் அவசியம்

பதிப்பாசிரியர் அனைவரும் சுவடிப் பயிற்சி உடையவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஒரு துறையில் ஓர் ஆசிரியர் சிறந்த அறிவு பெற்றவராக இருப்பார். ஆனால் அவருக்குச் சுவடியைப் பார்த்துப் படிக்கவோ, எழுதவோ தெரியாது. அதனால் அவருடைய அறிவையோ, அனுபவத்தையோ குறை சொல்ல முடியாது. இத்தகையவர்களுக்குத் தாள்களில் படியெடுக்கப்படும் கையெழுத்துப் படிகள் தேவைப்படுகின்றன. சுவடியைப் பார்த்துப் படிக்கத் தெரிந்த பதிப்பாசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் சிலபொழுது கையெழுத்துப் படிகளைப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகின்றது. காரணம் பதிப்பாசிரியர்களால் பார்க்க நேரிடும் ஓலைச்சுவடிகள் பூச்சிகளால் அரிக்கப்பட்டு இருந்தால் அந்த இடங்களில் உள்ள எழுத்துகளைக் கண்டறியக் கையெழுத்துப் படிகள் சிலசமயம் பயன்படுகின்றன.

பிழையின்றி மருத்துவ நூல்கள் அச்சாகி வெளிவர வேண்டுமாயின் அரசும், சித்த மருத்துவ நிறுவனங்களும் மருத்துவத்திலும் மொழியிலும் புலமை வாய்ந்தவர்களைக் கொண்ட பதிப்பாசிரியர் குழுவை அமைத்து, அவர்கள்

ஒப்புதல் பெற்ற பின்னரே நூலை அச்சிட வேண்டுமெனச் சட்டமிட வேண்டும். இதுவரை அச்சாகியுள்ள நூல் மறுபதிப்புச் செய்யும் நிலை ஏற்படின் அவற்றையும் ஆய்வுக்குழுவினரின் ஆய்வுக்கு உட்படுத்தி அவர்கள் ஒப்புதலைப் பெற்ற பின்னரே மறுபதிப்புச் செய்ய வேண்டுமென்று அரசு சட்டம் இயற்ற வேண்டும். மேலும் இதுவரை அச்சாகியுள்ள நூல்களையும் ஆய்வு செய்து அதுபற்றிய குறிப்புகளை அச்சிட்டு அவற்றுடன் வழங்க ஆவன செய்தல் வேண்டும்.

மற்றும் இனிப் பதிப்பிக்கும் நூல்களுக்குப் பதிப்பு முறைகளை ஆராய்ந்து வகுத்து அம்முறையில் பதிப்பிக்குமாறு செய்தல் வேண்டும். சித்த மருத்துவ நூலைப் பதிப்பிக்குமிடத்து முன்னுரை, நூல் அறிமுகவுரைகளில் நூலாசிரியர் பற்றிய குறிப்பு, அவர் செய்துள்ள பிற நூல்கள், பொருள் அட்டவணை, அந்நூலின் கருப்பொருள் விவரம் முதலியவை அமைதல் வேண்டும். பிற்சேர்க்கையில் அருஞ்சொல் விளக்கம், செய்யுள் முதற்குறிப்பு அகரநிரல் முதலியவை அமைதல் வேண்டும். நூலுள் வரும் உட்பிரிவுகள் தலைப்பாக அமைதல் வேண்டும். பாடவேறுபாடுகள் இருப்பின் அவ்வப்பாடலின்கீழ்க் குறிப்பிடல் வேண்டும். இன்றியமையாத ஒப்புமைப் பகுதிகள் குறிப்பிடல் வேண்டும்.

அடுத்து அரசு செய்ய வேண்டிய பெரும்பணி தனியாரிடம் உள்ள சித்த மருத்துவ நூல்களை, நூற்சுவடிகளைத் தேடி உசாவி அறிந்து, இதுவரை நூலகங்களில் திரட்டி வைக்கப்பட்டுள்ளவற்றில் அந்நூல்கள் இல்லையாயின் அவற்றைப் பெறல் வேண்டும். இன்றேல் அதனை ஒளிப்பதிவு செய்து படியெடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இதற்கென ஒரு குழுவை அமைத்துக் களஆய்வு செய்து முடித்தல் வேண்டும்.

மருத்துவப் பதிப்பு

மருத்துவ நூல்களைப் பதிப்புச் செய்யும்போது, மருத்துவ அகராதிகளைக் கொண்டும், பரிபாஷை அகராதி என்ற மருத்துவ நிகண்டுகளாகிய உரிச்சொல் பனுவல்களை ஆய்ந்தும் கவனமுடன் பதிப்பித்தல் அவசியம். இவ்வாறு பதிப்புச் செய்யாவிடில், ஏற்படும் தவறுகள் மருந்துகளின் முறைகளையே மாற்றிவிடும். சான்றாகத் தேரையரின் சித்த மருத்துவ முறையில் உள்ள - 'மூதண்ட லேகியம்' என்பது பற்றிய குறிப்பைக் கூறலாம். 'மூதண்டம்' என்பது அறுகம்புல்லைக் குறிக்கும். ஆயின் இதனால் செய்யப்படும் இலேகியத்திற்குப் பொருள் கூறவந்த உரையாசிரியர், 'மூதண்டம் என்பது

கஞ்சாவாகும்' என மருந்து செய்முறையைக் கூறுகின்றார். இதனால் மருந்து முறையும், அது நீக்கும் நோயும் மாறியுள்ளது காண்க. மூதண்டம் என்பது கஞ்சா என்பதாக எந்த மருத்துவ அகராதியிலும் கூறப்படவில்லை. எனவே, இதுபோன்று மாறுபட்ட பொருளைக் கூறும்போது, அடிக்குறிப்பில், எந்த அகராதியில் இதற்கான விளக்கம் உள்ளது என்பதைக் குறிப்பிடுவது மிகவும் அவசியமாகும். இக்குறிப்புகள் பின்வரும் சித்த மருத்துவ ஆய்வாளர்களுக்கு மிகவும் பயன்படும்.

எளிய, ஓர் இலேகியம் செய்யும் முறையானது, பொருள் மாற்றத்தால் சட்டத்தின் ஒப்புதலைப் பெறும்படியான சூழ்நிலை உண்டானது, கஞ்சா, அபின் போன்ற மருந்துகளைச் செய்ய, சட்டத்தின் ஒப்புதல் அவசியமானதாகும்.

மருத்துவ முதல்நூல்

பொதுவாக இலக்கியங்களை முதல்நூல், வழிநூல் என வகுத்துள்ளனர். சங்கப் பாடல்கள் யாவும் ஐந்திணையை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டன. சங்க இலக்கியங்களை அடுத்த, சிற்றிலக்கியங்கள் யாவும், இலக்கண நூல்களின் அடிப்படையில் அமைக்கப்பட்டன. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் யாவும் முதல் நூல்களாகும். ஆயின், சித்த மருத்துவ நூல்களின் முதல்நூல், வழிநூல், விரிநூல் என்பனவற்றைக் கண்டறிவது இயலாதபடி உள்ளது. கண்டறியத் தேவையான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. "சித்தர்களின் காலத்தையும் வரலாற்றையும் ஊடுருவி அறியாதபடி ஆய்வாளர்களின் பார்வையில் பனிமூட்டங்கள் செறிந்திருக்கின்றன".

சங்க இலக்கியங்களில் சித்த மருத்துவம் பற்றிய செய்திகள் உள்ளன. தேரையர், ஐயாதி, சிறு வெண்தேரையர், இடைக்காடர், வான்மீகியார், மருத்துவன் தாமோதரனார், மருத்துவன் நல்லனச்சுதனார், சல்லியங்குமரனார் போன்ற மருத்துவர்களின் பெயர்கள் சங்கப் பாடல்களின் காணப்படுகின்றன. ஆயின் சங்க காலத்தைச் சேர்ந்த சித்த மருத்துவ நூல் எதுவும், இன்று இல்லை. 'சித்தம்' என்ற சொல்லாட்சியானது முதன் முதலாகச் சிலப்பதிகாரத்தில் கூறப்படுகிறது. திருமூலரின் திருமந்திரம் 3000இல் இரண்டாம் தந்திரத்தில் உள்ள 'கர்ப்பகிரிகை" மருத்துவம் தொடர்பானவற்றை எடுத்துரைக்கின்றது. திருக்குறளில் 'மருந்து' என்ற ஓர் அதிகாரம் உள்ளது. பத்துப்பாடல்களில் 'மருத்துவம்' தொடர்பான செய்திகள் கூறப்படுகின்றன. மருத்துவம் தொடர்பான அடிப்படையான கருத்துகள் இன்றும் பொருந்துவனவாக உள்ளன. வளி, அழல், ஐயம் என்ற மூவகை நாடிகள்

பற்றியும், உணவுக் கட்டுப்பாடு, உண்ணும்முறை, நோய்களைக் கணிக்கும் முறை போன்றவை பற்றியும் மருத்துவத்தின் நான்கு வகையான பிரிவுகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கின்றது. பரிமேலழகர், பரிதியார் போன்ற உரையாசிரியர்களின் விளக்கங்களும் அக்கால மருத்துவம் பற்றிய செய்திகளை அறிய வாய்ப்பளிக்கின்றன. திருமந்திரத்திலுள்ள 'கர்ப்பக்கிரிகை'யில் *40* பாடல்கள் உள்ளன. அவை கரு ஏற்படும் முறை பற்றியும், உயிர் வாழும் நாட்கள் பற்றியும் கூறுகின்றன. இன்று அறிவியல் அடிப்படையில் ஆர். என். ஏ., ஆகும். டி. என். ஏ., போன்ற மரபியல் கூறுகள் பற்றியவற்றைத் திருமூலர் அன்றே கூறுகின்றார். திருமூலரின் காலம் கிபி. *5*ஆம் நூற்றாண்டு துடிசைகிழார் போன்றவர்கள் கி.மு.வில் வாழ்ந்ததாகக் கூறுகின்றனர். எனினும் இதற்கு அடிப்படையான அறிவியல் சான்றுகள் இல்லை. திருமூலரின் திருமந்திரத்திற்கு ஏற்றதொரு விரிவுரை இன்றுவரை வராதது பெருங்குறையேயாகும்.

திருமூலரின் திருமந்திரம் போன்ற மருத்துவக் கருத்துகளடங்கியது திருத்தக்கதேவரின் 'சீவகசிந்தாமணி'யாகும். சிந்தாமணியில் உள்ள பதுமையார் இலம்பகம், உயிர்நஞ்சான - பாம்புகளின் நஞ்சு பற்றிய செய்திகளைத் தருகின்றது. இதற்கு உரையாசிரியர் - நச்சினியார்க்கினியர். இவர் 'சித்தர் ஆரூடம்' என்ற நூலைப் பற்றிக் கூறுகின்றார். சித்தர் ஆரூடம் பாம்புகளைப் பற்றியும், அதன் நச்சுத் தன்மைகளைப் பற்றியும், அதற்கான மந்திரம், மருந்து என்பன பற்றியும் விளக்குகின்றது. இந்த நூல், மதுரை இராமசாமிக்கோன் அவர்களாலும், செகன்னாத முதலியார் அவர்களாலும் மனோன்மணி விலாச அச்சுக்கூடத்தில் *1881*இல் சென்னையில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த நூல் இன்றும் வழக்கில் உள்ளதாகும்.

இந்நூலானது "*13*ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. எளிய நடை இருப்பது தெளிவு. மிகவும் பிற்கால நூல் என்று ஒதுக்கிவிட முடியாது" என்று மு. அருணாசலம் குறிப்பிடுவார். சீவக சிந்தாமணி கூறும் 'சித்தர் ஆரூடச் சிந்து' இன்று வழங்கும் சித்த மருத்துவ நூல்தான் என்பதற்கு மு. அருணாசலம் எவ்விதமான சான்றுகளையும் வழங்கவில்லை. இவருடைய இந்த வாதத்தையே வைத்து, அனைத்துச் சித்த மருத்துவ நூல்களும், தொன்மையானது என்று வரையறுக்க இயலும். எனவே, திருமந்திரம், திருக்குறள், சீவகசிந்தாமணி போன்ற நூல்களில் உள்ள மருத்துவப் பகுதிகளையே ஓரளவு முதல் நூலாகக் கொள்ள இயலும்.

ஆசிரியர்கள்

சித்த மருத்துவ நூல்களின் ஆசிரியர்களாகச் சித்தர்கள் உள்ளனர். சித்த மருத்துவச் சுவடிகளை ஒப்பிடும்போது, சித்த மருத்துவ நூல்களின்

வெளியீடு மிகவும் குறைவாகவே உள்ளன. வெளியான சித்த மருத்துவ நூல்களின் மறுபதிப்பு, மறு அச்சு என்பன பெரும்பான்மையாக இல்லை எனலாம். சித்தர்களின் பெயரால் சித்த மருத்துவ நூல்கள் அச்சிடப்பட்டு வெளியாகின. எனினும் உறுதியாக, நூலாசிரியரின் பெயரைக் கூற முடியாத அவலநிலை இன்றும், செம்பாதியாக உள்ளது. எடுத்துக்காட்டாகப் 'போகர் வைத்தியம் *700*' என்ற நூலைச் சுட்டலாம். போகர் பெயரால் வழங்கும் இந்நூல், பிரமமுனி *800* என்ற பெயரில் பதிப்பு செய்யப்பட்டது. சித்த மருத்துவம் பற்றி நன்கறிந்துள்ள சித்த மருத்துவராலேயே இந்நூல் பதிப்பு செய்யப்பட்டது. இப்பாடல்களைப் பற்றிய தெளிவான கண்ணோட்டம் இருக்குமெனில் இந்நூற்பதிப்பைத் தவிர்த்திருக்கலாம்.

ஒரே ஆசிரியரின் பெயரில் பல்வேறு சித்த மருத்துவ நூல்கள் பதிப்புச் செய்யப்பட்டுள்ளன. ஒரே ஆசிரியரின் பெயர்களில் உள்ள நூல்களில் முரண்பட்ட கருத்துகள் காணப்பட்டன. சான்றாக, 'திருமூலர் கருக்கடை *600*', 'திருமூலர் வைத்தியம் *600*' என்ற திருமூலர் பெயரில் உள்ள இரு நூல்களை எடுத்துக் கொள்ளலாம். கருக்கடை *600*இல் காயகற்ப மூலிகைகள் *108* எனவும், வைத்தியம் *600* காயகற்ப மூலிகைகள் *113* எனவும் கூறும். எனவே திருமூலர் என்ற ஆசிரியர்கள் இருவர் என அறியலாம். அதுபோன்றே 'திருமூலரின் வைத்தியப் பகுதி' என்ற நூலானது திருவாவடுதுறை ஆதீனத்தால், தா. பா. வேங்கடசுப்பிரமணியன் உரையுடன் *1957*இல் வெளியானது. இதற்கடிப்படையான சுவடி, திருவாவடுதுறைத் திருமடத்தில் உள்ளது. சுவடியின் பெயர் 'கர்ப்பத் திருமந்திரம்' என்பதாகும். இச்சுவடி *126* பாடல்களைக் கொண்டது. இந்நூலாசிரியரே, தன் உரையில் 'திருமூலர் அருளியவை இவை, அச்சிடப்பெற்றவை இவை என உண்மை காண இயலாது' என்று கூறியுள்ளார். திருமந்திரம் *3000*இல் உள்ள 'கர்ப்பக்கிரிகை'யுடன், 'கர்ப்பத் திருமந்திரத்'தை ஒப்பிட்டுப் பார்த்ததில் ஒன்பது பாடல்கள் மட்டுமே ஒத்துள்ளன. திருமந்திரப் பாடல்கள் *454, 455, 458, 478 - 480, 481, 483, 482* என்பன ஒத்துள்ளன. எனவே கர்ப்பத் திருமந்திரத்தின் ஆசிரியர் திருமந்திரத்தின் ஆசிரியர் அல்லர் என்பது விளங்கும்.

இதுபோன்று அகத்தியரின் பெயரில் வழங்கும் நூல்கள் அகத்தியர் இரத்தினச் சுருக்கம், அகத்தியர் குருநாடி என்பன உள்ளன. அகத்தியர் இரத்தினச் சுருக்கத்தில் *500* பாடல்களும், குருநாடியில் *235* பாடல்களும் உள்ளன. இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அவ்விதமாக ஒப்பிட்டுப் பார்த்ததில், நோய்களின் எண்ணிக்கைகள் மாறுபட்டிருந்தன: எடுத்துக்காட்டாகப் பித்தம் என்ற நோயின் வகையைப் பார்க்கலாம். பித்த நோய்களின் எண்ணிக்கை *48* என்று அகத்தியர் இரத்தினச் சுருக்கம் *500*இலும்,

பித்த நோய்களின் எண்ணிக்கை *44* என்று குருநாடியிலும் கூறப்பட்டுள்ளது. எனவே அகத்தியர் பெயரிலுள்ள ஆசிரியர்கள் வெவ்வேறானவர்கள் என்று உணரலாம்.

இதுபோன்ற சான்றுகளை ஏராளமாகக் காட்ட முடியும். ஒரே வகையான பாடல்கள், இரு சித்த மருத்துவ நூல்களில் உள்ளதும் காண முடியும். சான்றாக, 'ஆத்ம ரட்சாமிர்தம்' என்ற நூலைக்காட்டலாம். இதனை மருத்துவர் ஆர். தியாகராசன், பழனி தண்டாயுதபாணி கோயில் பதிப்பாக மீண்டும் பதிப்பித்துள்ளார். இதில் சூல் மருத்துவம், மலட்டு நோய் பற்றிய பாடல்கள் 'கர்ப்ப இலட்சணம்' என்ற தலைப்பில் உள்ளன. கர்ப்ப 'பாலரோக சிகிச்சை' என்ற நூல் சரசுவதி மகால் வெளியீடாக உள்ளது. இரண்டிலும் பாடல்கள் ஒன்றாகவே காணப்படுகின்றன. சரசுவதி மகாலில் இதுவரை வெளிவராத சுவடி 'வாலை வாகடம்' என்பதாகும். இச்சுவடியிலுள்ள சூல் மருத்துவம், மகளிர் மருத்துவம் பற்றிய பாடல்கள் மேற்கூறிய ஆத்மரட்சாமிர்தம், கர்ப்பிணி, பாலரோக சிகிச்சையில் உள்ளன. ஒரே பாடல் இரண்டு பதிப்புகளிலும், சுவடியிலும் இடம் பெற்றுள்ளதைப் பதிப்பாசிரியர்கள் அறிந்திருந்தால், இதுபற்றிய விளக்கத்தை அடிக்குறிப்பில் தந்திருக்க முடியும். திறனாய்வு நூல்கள் வெளிவரவும், ஆய்வு நடத்தவும், ஆய்வாளர்களுக்கு இக்குறிப்புகள் மிகவும் உதவக்கூடும்.

இன்னுமொரு சான்று: 'அகத்தியர் நூற்றிரட்டு' என்ற பெயரில் அகத்தியரின் பெயரிலுள்ள சில சிறு நூல்களை சரசுவதி மகால் நூலகம் தொகுத்து வெளியிட்டு உள்ளது. மூலிகை மர்மம் என்ற சுவடியில் உள்ள சில பாடல்கள், போகர் கருக்கடை நிகண்டில் காணப்படுகின்றன. இப்பாடலின் பொருள், *'4444* மூலிகைகளைக் கொண்டு *4448* நோய்களை நீக்குவோம்' என்பதாகும். இப்பாடல்கள் சுவடியிலும், பதிப்பான நூலிலும் உள்ளதால், யாரால் எக்காலத்தில் எடுத்தாளப்பட்டன என்பது இதுவரை விளங்காமல் உள்ளது.

சித்தர்களின் பெயரால் சில போலி மருத்துவ நூல்கள் பதிப்பு செய்யப்பட்டும், அச்சிடப்பட்டும் உள்ளன. சான்றாக, வீரமாமுனிவர் பெயரிலுள்ள மருத்துவ நூல்களைக் கூறலாம். நீலகண்டி, வீரமெழுகு வைத்திய முறை, பாதர் திவ்யானந்தா இரத்தினச் சுருக்கம், நசகாண்ட வெண்பா *100*, மேகநாத எண்ணெய், சிந்தாமணி குணபாடம் என்பதாகப் பட்டியலிட்டுள்ளனர். ஆயின், இரணவாகடம், ஜாலத்திரட்டு, வாகடத்திரட்டு என்பன விடுபட்டுள்ளன. வீரமாமுனிவரின் பெயரிலுள்ள அனுபோக வைத்திய சிந்தாமணி, எஸ். ஏ. கே. சுவாமி வாசுதேவனால் *1969*இலும், நசகாண்டம் *1980*இல் மாங்காடு வடிவேலு முதலியாராலும், இரணவாகடம் *1990*இலும், சாலத்திரட்டு *1882*இலும்

வாகடத்திரட்டு *1912*இலும் வெளிவந்துள்ளன. இவை யாவும் இன்று கிடைப்பது இல்லை. நசகாண்டம் போன்றே நவகாண்டம் என்ற சுவடி செண்பகனூர் திருமடத்தில் உள்ளது என்றும் தெரிய வருகிறது. வீரமாமுனிவர் பெயரிலுள்ள மருத்துவ நூல்கள் குறிப்பாக நசகாண்டம், சிந்தாமணி - இரு நூல்களே ஐயத்திற்கு இடமானவை என்று தே. லூர்து கூறுகின்றார். இசுலாமியரான இராமதேவர், *18* சித்தர்களில் ஒருவர் ஆதல்போல், கிறித்தவரான வீரமாமுனிவரைச் சித்தராக்கச் சிலர் முயற்சி செய்திருத்தல் கூடும்.

பதிப்பின் வகையும் தொகையும்

சித்தர்களின் நூல்கள் தனியாக ஆசிரியர் பெயரிலும், தொகுப்பு நூல்களாகவும், மொழிபெயர்ப்பாகவும் காணப்படுகின்றன. சங்கப் பாடல்கள் யாவும் ஐந்திணையைக் கொண்டு தொகுக்கப்பட்டது போலச் சித்த மருத்துவ நூல்களும் வாதம், வைத்தியம், யோகம், ஞானம் என்ற பிரிவுகளைக் கொண்டு முறைப்படுத்தப்பட்டன. சித்தர்களின் நூல்கள் பற்றிய செய்திகள் யாவும் நூல் தொகை என்ற தலைப்பில் குறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சித்தர்களின் நூல்களைப் பற்றி அறியும் வாய்ப்பானது ஆய்வாளர்களுக்கு ஏற்படுகிறது.

தொடக்கக் காலத்தில் சித்த மருத்துவ நூல்கள் யாவும் மூலம் மட்டும் கொண்டிருக்க, மூலநூலுடன் சிறப்புப் பாயிரம் என்ற பகுதியானது பல பெரியோர்கள் அளிக்கச் சேர்க்கப்பட்டது. சான்றாக 'வண்ண வைத்திய சாத்திரம்' என்ற நூலின் பாயிரத்தைக் காணலாம்.

பூமகள் பொலியும் திருவையாறு தன்கண் புனிதமா
அனந்தய்யன் ஈன்ற பா,மரு. சாமிநாதவேள் சுகுணன்
பனிமொழி பயின்றி நற்பனவன் மாமகிழ் வெய்தி மதிகொடு
வண்ண வைத்திய நூலினை வகுத்தான்.

இதன் மூலம் நூலாசிரியர் பெயர் சாமிநாதன், அவர் தந்தை பெயர் அனந்தய்யன், அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர், ஊர் திருவையாறு என்பன தெரியும். இது வரலாற்று நோக்கில் ஆய்வாளர்களுக்கும், பதிப்பாசிரியர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாகும்.

சித்தர்களின் பல பாடல்கள் தொகுக்கப்பட்டு நூலாக்கம் செய்யப்பட்டன. சான்றாக, அகத்தியர் சில்லறைக் கோவை, பெரிய ஞானக்கோவை, *18* சித்தர்கள் நாடி சாத்திரம் என்பனவற்றைக் குறிப்பிடலாம். உரைநடையில் உள்ள சித்த மருத்துவ நூல்கள், அனுபோக வைத்திய தேவ இரகசியம், அனுபோக வைத்திய பிரம்ம இரகசியம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நூல் பதிப்பிலுள்ள குறைபாடுகள்

பழம் பதிப்புகளில் பல்வேறு வகையான குறைகள் உள்ளன. எந்தச் சுவடியிலிருந்து பதிப்புச் செய்யப்பட்டது என்று குறிக்கப்படுவதில்லை. சுவடிகள் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை அறிய முடியாத நிலை உள்ளது. ஆயின் மதுரை, குருசாமிக்கோன் பதிப்பில் நூல்களின் சுவடிகள் பற்றிய விவரங்கள், அதன் உரிமையாளர், அதில் காணப்பட்ட பாடல்களின் எண்ணிக்கை என்பன அடிக்குறிப்புகளில் இடம் பெற்றுள்ளன. 'பால வாகடம்' என்ற நூலைப் பதிப்புச் செய்தவர் மருத்துவர் முருகேச முதலியார். இவருடைய பதிப்புப் பற்றி மருத்துவர் துரைசாமி அய்யங்கார் "பிள்ளைப் பிணி வாகடம் என்ற தன் நூலில் குறிப்பிடுகின்றார். பாலவாகடத் திரட்டு என்ற நூலைத் தான் கண்டதாகவும், அந்நூலின் கண் உள்ள பாடல்களே மருத்துவர் முருகேச முதலியார் பதிப்பில் உள்ளதாகவும் கூறுகின்றார். மருத்துவர் முருகேச முதலியார் சுவடி பற்றிய விவரங்களைக் குறிப்பிடாதது பெருங்குறைபாடேயாகும் என்று குறிப்பிடுகின்றார்.

சித்த மருத்துவ நூல்களில் பாட பேதம் ஒப்பிடப்பட்டுக் குறிக்கப்படுவது இல்லை. மேலும் நூலாசிரியர் வரலாறு, அரும்பொருள் விளக்கம், செய்யுள் முதல் குறிப்பு, பொருட்பண்பு என்பனவும் குறிக்கப்படுவதில்லை. பல நூல்களில் பதிப்பாசிரியர் பெயர்கூட இடம் பெறுவதில்லை. சொல்லடைவு போன்றவை குறிப்பிடாமல் உள்ளதால், நூல் முழுமையும் பார்க்கும்படி நேரிடுகிறது. மூலபாடம் மட்டுமே பதிப்பிக்கப்படுவதால், பொருள் காணும் நிலை ஆய்வாளர்களுக்கு நேரிடும். அண்மைக் காலத்தில் மூலமும் உரையும் பதிப்பிக்கப்படுகிறது. எனினும் இலக்கண, இலக்கிய உரையாசிரியர்களான நச்சினார்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர் போலச் சித்த மருத்துவத்தில் இதுவரை இலர். எனினும் இம்முயற்சி அறவே இல்லை என்றும் கூறவியலாது. கோரக்கர் மலைவாகடம், சட்டை முனி நிகண்டு போன்ற நூல்களில் இம்முயற்சி செய்யப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் வெளிவந்த மாங்காடு வடிவேல் முதலியாரின் அகத்தியர் குறுந்திரட்டு, அகத்தியர் பரிபூரணம் *400*, சிவவாக்கியர் பாடல், தற்கால வைத்திய போதினி, திருவள்ளுவர் ஞானவெட்டி *1500*, *18* சித்தர் வாதக்கோவை போன்ற நூல்கள் மூலத்துடனும் விரிவுரையுடனும் சிறப்புறப் பதிப்பிக்கப் பட்டுள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகம் பதிப்பித்த போகர் வைத்தியம் *700*, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் பதிப்பித்த யூகிமுனிவர் பிடிவாதம் *1000* என்பன திறனாய்வு நூல்களாக வெளிவந்துள்ளன.

சித்த மருத்துவ நூல் பதிப்பாளர்கள், வெளியீட்டாளர்கள்

தொடக்கக் காலத்தில் சித்த மருத்துவ நூல்கள் யாவும் வணிக முறையிலே பதிப்பிக்கப்பட்டன. இவர்களில் பலர் புலவர்களாகவும், துறவியர்களாகவும் இருந்தனர். சிலர் சித்த மருத்துவர்களும் ஆவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் சமகாலப் புலவர் வேதகிரி முதலியார். இவர் இலக்கிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். இவருடைய புதல்வர்களான கந்தசாமி முதலியார், ஆறுமுக முதலியார் ஆகியோரும் பதிப்புப் பணியில் ஈடுபட்டனர். சித்த மருத்துவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மருத்துவர் முகமது அப்துல்லா சாகிப், மருத்துவர் சுப்பிரமணிய பண்டிதர் நாராயணசாமி வைத்தியர்; வேலாயுத வைத்தியர் சுப்பிரமணிய வைத்தியரின் மைந்தனும் இப்பெரும் பணியில் பணியாற்றியவர். உ.வே. சாமிநாதையர், சந்திரசேகர கவிராச பண்டிதர் பற்றிக் குறிப்பிடுகின்றார். இவர் குடந்தைக் கலைக்கல்லூரியில் வித்துவான் தியாகராச செட்டியார் விடுப்பில் சென்றபோது, அவருடைய இடத்தில் பணியாற்றியவர். இவர் 'விடபிரிதீவிடத்திரட்டு' என்ற மருத்துவ நூலைப் பதிப்பித்தவர்.

மொழிபெயர்ப்பு நூல்கள்

மன்னர் சரபோசி தன்வந்திரி மகால் ஆய்வு மையத்தில் பல மருந்துகளைத் தந்து குறிப்புகளை வைத்துள்ளார். அக்குறிப்புகள் யாவும் மொழிபெயர்க்கப்பட்டன. பல சித்தர் முறைகளை மராத்தியில் மொழி பெயர்த்துள்ளார். வைத்திய இரத்தினாவளி என்ற மராத்தி நூலில் பல சித்த மருத்துவர்களின் முறைகளைக் காணலாம். இதுபோன்றே ஆனந்தகந்தம் என்ற வடமொழி நூல், வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது. இதிலுள்ள முறைகள் யாவும் - இரசவாதம் பற்றியது - இது தமிழிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டது. தமிழில் உள்ள மூல நூல் இன்று இல்லை. வடமொழியின்பால் சித்த மருத்துவர்களுக்கு எவ்விதமான காழ்ப்பும் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டுகளாக சீவரட்சாமிர்தம், ஆத்மரட்சாமிர்தம் போன்றவற்றைக் காட்டலாம்.

வெளிநாட்டு மருத்துவ நூல்கள்

ஈழத்தில் பல்வேறு சித்த மருத்துவ நூல்கள் அங்குள்ள சித்த மருத்துவர்களால் பதிப்பிக்கப்பட்டன. பரராசசேகரம், செகராசசேகரம், சுதேசவைத்திய அவுடதத்திரட்டு, பிரசவ வைத்தியம், பால வைத்தியம், நயன வைத்தியம் என்பனவற்றை ஏழாலைப் பொன்னையா அச்சிட்டுள்ளார். பரராசசேகரம் என்ற சித்த மருத்துவ நூல் - வழிநூல்; இதற்கு முதல் நூல்

செகராசசேகரம் ஆகும். பரராசசேகரம் *8000* பாடல்களையும், *7* பிரிவுகளையும் கொண்டது. ஆரிய அரசர்கள் என்றழைக்கப்படும் பரராசசேகரனைப் போற்றி, அவருடைய காலத்தில் இயற்றப்பட்டது. இது பெரும்பாலும் விருத்தப்பாக்களையும், சிறுபான்மை ஆசிரியப்பாக்களையும் உடையது ஆகும். அமுதாகரம் என்பது சித்த மருத்துவ நூல். இது நஞ்சுகளைப் பற்றிச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது. ஒலாந்தாக்காரர்கள் காலத்திற்குப் பின்னர், இது இயற்றப்பட்டது. அமுதாகரத்தின் பாயிரத்தில் உள்ள,

அரங்க நாதன் அருளிய புதல்வன்
....
வரம்பெறு கவிஞன் வரத பண்டிதன்

என்பதால் அரங்கநாதன் மைந்தன், கவிஞர் வரதபண்டிதன் இயற்றியது என்பது தெரியவரும். பண்டிதர் என்பதால் மருத்துவத் தொழிலைப் புரிந்து வந்திருத்தல் கூடும். இவருடைய காலம் *18*ஆம் நூற்றாண்டு. இந்நூலை, சு. தம்பையாபிள்ளை *1892*இல் பதிப்பித்துள்ளார்.

கிறித்தவ சமயம் பரவிய காலத்தில் ஈழத்தில் பல நூல்கள் (நவீன மருத்துவ முறையிலானவை) மொழிபெயர்க்கப்பட்டன. கிரீன் என்பவரால் பல்வேறு மருத்துவ நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டன. அங்காதிபாதம் என்ற உடற்கூறு பற்றிய நூலானது அவரால் பதிப்பிக்கப்பட்டது. இரணவைத்தியம், *1867*இலும் கெமிஸ்தம் *1875*இலும், மருந்துச் சரக்குகள் பெயர்கள் *1870*இலும், மருத்துவ விஞ்ஞான அகராதி *1855*இலும் பதிப்புச் செய்யப்பட்டன. இவை யாவும் சித்த மருத்துவ உலகிற்கு ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய நூல்களாகும். இது போன்றே தமிழகத்திலும் பல மொழிபெயர்ப்பு நூல்கள் வெளிவந்துள்ளன. விரிவஞ்சி, இப்பட்டியல்களை எடுத்துரைக்கவில்லை.

பதிப்புப்பணியை ஊக்குவித்தல்

சித்த மருத்துவ நூல்கள் பெரும்பாலும் இன்றும் கிடைப்பது அரியதாகவே உள்ளன. இந்நிலையில் திறனாய்வு நூல்கள் வெளியிடுதல் என்பதும், ஆய்வு முறையில் நூல்களை எதிர்பார்ப்பதும் இயலாத ஒன்றாகும். எனவே சித்த மருத்துவ நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியர்களை ஊக்கப் படுத்துதல் வேண்டும். சித்த மருத்துவ நூல்களைச் சித்த மருத்துவ வாரியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சரசுவதி மகால் நூலகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் என்பன வெளியிட்டு வருகின்றன. தாமரை நூலகம் சித்த மருத்துவ நூல்களை மறுபதிப்புச் செய்து வருதலும் காண்க. சித்த மருத்துவ வளர்ச்சிக்கு நூல்கள் பதிப்பித்தல் அவசியம்; இதுபோன்று நூல்கள் பற்றிய

கருத்தரங்குகள் நடத்துதல் - கட்டுரைகளை நூலாக்கம் செய்தல் என்பன மிகவும் தேவையான ஒன்றாகும். இதையொட்டிச் 'சித்த மருத்துவ வரலாறு' எழுதப்படுதலும், அதற்கான முயற்சிகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இத்தேவைகளைத் தக்கவர்கள் உணர்ந்து செயல்படுதல் பேருதவியாக இருக்கும்.

சித்த மருந்துகளைச் சோதனைக்குட்படுத்திப் பின் பதிப்பித்தல்

விலங்குகளுக்கு நோய்களை உண்டாக்கி, அதன்பின் அவற்றின் உடல்நிலையைச் சோதித்து, அதற்கான மருந்துகளைக் கொடுத்து, அதனால் ஏற்படும் விளைவுகளைத் தெளிவாகக் கூறுகின்றனர். இதே முறையைக் கையாண்டு சித்த மருந்துகளையும் அறிவியல் முறைப்படிச் சோதித்து அதன்பின் நூலாக வெளியிட்டால், உலகில் சித்த மருத்துவம் தனி இடத்தைப் பெறும். மேலும் ஒரே மருந்திற்குச் செய்முறைகள், மருந்துப் பொருட்கள் போன்றவை பல சுவடிகளில் பல விதமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றையும் ஆய்வு செய்து பதிப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

அடிக்குறிப்பு

உணவு, மதச்சடங்குகள், பழக்க வழக்கங்கள் என்ற முறையில் அறிவியல் முறைப்படிச் சில மூலிகைகள் மக்களின் வாழ்வில் இணைந்தே காணப்படுகின்றன. 'அம்மை நோய்', கண்டவிடத்து வேப்பிலையை வீடு முழுவதும் வைப்பர். தெய்வங்களை வழிபட உதவும் இலைகளான வில்வம், துளசி போன்றவற்றை வழிபாட்டுக்குப் பிறகு மக்களுக்குக் கொடுப்பர். சமயச் சடங்குகளில் நீர்மோர், பானகம் போன்றவற்றைக் கொடுப்பர். சில கோயில்களில் பச்சைக் கற்பூரம், ஏலம் கலந்த நீரைத் தருவர். இவை என்ன காரணங்களால் பின்பற்றப்படுகின்றன? இதன் பயன் என்ன? என்பதை அறியாமல் மக்கள் மேற்கூறிய அனைத்தையும் சமயச்சடங்குகளாகச் செய்து வருகின்றனர். இது போன்ற மூலிகைகள், கடைச்சரக்குகள் அறிவியல் முறைப்படி எவ்வாறு செயல்படுகின்றன என்று மூலிகையின் அடிக்குறிப்பில் தருவதால், மக்கள் அறியாமையிலிருந்து நீங்கி உண்மை உணர ஏதுவாகும்.

மருந்துப் பொருள்களின் அறிவியல் பெயர்கள்

சித்த மருத்துவச் சுவடிகளில் அனேக மருந்து செய்முறைகள் குறித்தும் பல மருந்துப் பொருட்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. இக்கால வழக்கில் உள்ளவையாக இருப்பினும் அவற்றில் சில மருந்துப் பொருள்கள் மறை பொருளாகவும், சில மருந்துப் பொருள்கள் வட்டார வழக்குச்

சொற்களாகவும், சில அருகிய சொற்களாகவும் காணப்படுகின்றன. சில மூலிகைகளின் பெயர்கள் இக்காலத்தில் வேறு மூலிகைகளைக் குறிக்கின்றன. எடுத்துக்காட்டாக, அக்காலத்தில் அசோகமரம், அசோகப்பட்டை (Sarascasoca) என்று கூறப்பட்டது. இக்காலத்தில் நெட்டிலிங்கமரம், பட்டை (Pdyalthia longifolia) இவற்றைக் குறிக்கின்றது.

எலியாமணக்கு (Croton bonplandiaries) என்னும் ஒரு செடி தஞ்சாவூரில் தஞ்சாவூர்ப் பூண்டு, காந்திச் செடி என்றும், நாகர்கோயிலில் பூநாறி, திருநெல்வேலியில் காசிப்பூண்டு என்றும் ஒவ்வொரு வட்டாரத்தில் ஒவ்வொரு பெயராகக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறே,

ஆகாசத் தாமரை (Pistia straliotus) நீர்த் தாமரை	ஓரிலைத் தாமரை (Bulbophyllum)
ஓரிதழ்த் தாமரை (Onidium Suffrutisum)	ஓரிலைத் தாமரை (Bulbophyllum)
நிலத்துத்தி (Sida cordifolica)	வட்டத் திருப்பி (S. acuto) பழம்பாசி (S. veroniculfolia)

என்று மூலிகைகள் பெயர் மாற்றம் பெறுகின்றன.

எனவே, மூலிகைகள், கடைச்சரக்குகள் இவற்றிற்கான தாவரப் பெயர்கள் ஆங்கிலப் பெயர்கள் இவற்றைக் குறிப்பிட்டு நூல் பதிப்பிப்பது பயன் தரும் ஒன்றாகும்.

வரைபடம், நிழற்படம்

அக்காலத்தில் மூலிகைகள் எங்கும் கிடைத்தமையால் அவற்றை அடையாளம் காணக்கூடிய அறிவு பெற்றவர்களாகவும். அதன் பயனைத் தெரிந்தவர்களாகவும் இருந்தனர். ஆனால் நாகரிகம் பெருகிய இக்காலத்தில் ஒரு மூலிகையின் பெயர், அது எந்த மூலிகையைக் குறிக்கின்றது என்பதை அறிவதில் தடுமாற்றம் ஏற்படுகின்றது. எனவே முடிந்த அளவு நூலினுள் கூறப்பட்டுள்ள மருந்துப் பொருள்களின் குறிப்பாக மூலிகைகளின் வரைபடமோ, வண்ண நிழற்படமோ பின்னிணைப்பில் தருவது இன்றியமையாத ஒன்றாகும்.

மேலும் சில மூலிகைகள் சில இடங்களில் மட்டுமே கிடைக்கும். எனவே அருகிய மூலிகைகளாயின் அவற்றின் இருப்பிடங்களையும் குறிப்பிட வேண்டும். அந்த அரிய மூலிகைகள் அழிந்து விடாமல் பாதுகாக்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மறுபதிப்பு

சித்த மருத்துவத்தில் அச்சிடப் பெறாமல் இருக்கும் ஓலைச்சுவடிகள் அனேகம் உள்ளன. அச்சிடப் பெற்றிருக்கும் நூல்கள் மூலம் மட்டுமே உள்ளவை. ஆதலின் இவற்றை அறிவியல் முறைப்படி ஆராய்ந்து மறுபதிப்பாக வெளியிடலாம்.

இன்று மேற்கொள்ள வேண்டிய பணி

சித்த மருத்துவ நூல்களைப் பொறுத்தவரையில் சில ஆக்கமான பணிகளைச் செய்யலாம். அவற்றிற்குச் சித்த மருத்துவ நூலகங்களும், மருத்துவத்துறை வல்லுநரும், மருத்துவப்பணி அனுபவம் பெற்றவர்களும் அரசும் முன்வரவேண்டும்.

பழஞ்சுவடிகளை நிழற்படம் எடுத்தும், நாடாப்பதிவு செய்தும், கணிப்பொறியில் பதித்தும் பாதுகாத்தல் வேண்டும். அச்சேறியுள்ள சித்த மருத்துவ நூல்கள் அனைத்தையும் சேகரித்து ஒரு பல்கலைக்கழகத்தில் நூற்பதிப்புப் பிரிவு ஒன்றை உருவாக்கி மறுஆய்வு செய்து பல்கலைக்கழகம் வாயிலாகப் பதிப்பிக்க வேண்டும். மருத்துவப்பணி புரிவோர்க்குப் பயிற்சிக் கல்லூரிகள் அமைத்துப் பட்டமளித்து அரசு ஒப்புதலோடு பணியாற்றச் செய்வது போலச் சித்த மருத்துவ நூல்களை ஆராய்ந்து பதிப்புச் செய்யும் ஆசிரியர்கள், நூல் வெளியீட்டகங்கள் அரசின் ஒப்புதல் பெற்றே நூல்களை வெளியிட வேண்டும். தக்க புலமையோடு தகுதியான நூல்களை வெளியிட வேண்டும். தக்க புலமையோடு தகுதியான நூல்களை வெளியிட முன்வரும் தனிப்பட்ட ஆசிரியர் பொருளாதார நிலையில் குன்றியிருப்பின் அவர்கள் வேண்டுகோளை முறைப்படி ஆராய்ந்து சில திட்டங்களின் அடிப்படையில் நிதிவுதவி அளித்துதவ வேண்டும். சித்த மருத்துவக் கல்லூரிகளில் பாடமாக அமையும் நூல்களை அறிஞர் குழு ஒன்றின் வாயிலாகவே தேர்ந்து அமைக்க வேண்டும். இவற்றிற்கெனத் தனியொரு பல்கலைக்கழகம் அமைப்பின் மிகவும் பயன்தரும். சித்த மருத்துவம் வளரும், தூய்மை பெறும், பெரும்பயன் தரும்.

3. கதைப்பாடந் சுவடிப்பதிப்புகள்

முனைவர் ஆ. தசரதன்

1. முன்னுரை

'கதைப்பாடல்' என்ற தொடர் விளக்கம், அதற்கு இணையான பெயர்கள், கதைப்பாடல்களின் தோற்றம், அமைப்பு, வகைகள், வாய்மொழி - எழுத்து மரபுக் கதைப்பாடல் ஆய்வுகள், வழக்கொழிந்தவை, சுவடிகளில் அமைந்துள்ள வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்கள் போன்ற பொதுவான செய்திகளைத் தெரிந்து கொண்ட பின்னர், அவற்றின் பதிப்புகள் பற்றி ஆராயலாம்.

1.1. கதைப்பாடல் - பெயர் விளக்கம்

'கதைப்பாடல்' எனும் தொடர் மிக அரிதாக, அண்மையில்தான் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. பொதுவாகக் 'கதையும் பாட்டும் கலந்தவை கதைப்பாடல்கள்' என வழங்கப்பெறுகின்றன. ஆயினும் சில கதைப்பாடல்களில் வசனப்பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. **அய்யனார் கதைப்பாடல்,**[1] **மாரியம்மன் கதைப்பாடல்,**[2] **முப்புராதி அம்மன் கதைப்பாடல்**[3] போன்றவற்றில் 'கதைப்பாடல்' எனும் தொடர் பதிப்பாசிரியர்களால் இடப்பட்டுள்ளது. டாக்டர் கே.ஏ. குணசேகரன் வேறு சிலவற்றை 'நகர்சார் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்' என்கிறார்[4]. மிக அரிதாகக் **காமன் கதைப்பாடல்** போன்றவை இவ்வாறே பெயர் பெற்றுள்ளன[5]. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்கள் இவை போன்றவற்றை 'வாய்மொழிக் கதைப்பாடல்கள்' எனப் பெயரிடுவர். இவற்றை ஆங்கிலத்தில் 'Ballads' என்கின்றனர். சில பதிப்பாசிரியர்கள் 'கதை' எனப் பெயரிட்டுள்ளனர். **பலவேசஞ்சேர்வைக்காரர் கதை**[6], **பிச்சைகாலன் கதை**[7], **சின்னத்தம்பி கதை**[8], **உச்சினிமாகாளி அம்மன் கதை**[9], **குறுக்களாஞ்சிகதை**[10], **வெங்கலராசன் கதை**[11], **அயோத்திகதை**[12], **வலங்கா மாலை எனும் பத்திரகாளி கதை**[13], **முத்துப்பட்டன் கதை**[14], **ஐவர்ராசாக்கள் கதை**[15], **பிரம்ம சக்தி அம்மன் கதை**[16], **முத்தாரம்மன் கதை**[17], **சின்னணைஞ்சான் கதை**[18], **வன்னியராயன் கதை**[19], **தடிவீரசுவாமி கதை**[20], **அழகன் பெருமாள் கதை**[21] போன்ற அண்மைக்காலக் கதைப்பாடல் பதிப்புகள் 'கதை' என்ற பெயர் பெற்றுப் பதிப்பாகியுள்ளன. சமகாலத்தில் 'கதைப்பாடல்கள்' என்றும் 'கதை' என்றும் பெயரிட்டுப் பதிப்பித்தல் நடைமுறையில் உள்ளது. இவற்றின் பெயர்ப் பொருத்தங்களைத் திறனாய்வு செய்வது தேவையானதாகும்.

1.2 இக்காலத்தில் சிறுகதை என்றும், புதினம் என்றும் கதைகளைக் கூறுவதுண்டு. ஆனால், இங்கு நாம் எடுத்துக் கொண்ட இலக்கிய வகையான கதைப்பாடலுக்குக் 'கதை' எனப் பெயர் இடப்பெறும் போது தவறான பொருளைச் சுட்டுவதற்கு இடம் ஏற்பட்டு விடும். எனவேதான், அண்மைக் காலத்துப் பதிப்பாசிரியர்களுக்கு முன்னோடிகளாக விளங்கிய சில பதிப்பகத்தாரும், பதிப்பாசிரியர்களும் **சாஸ்தா கதை வில்பாட்டு**[22], **முத்தாரம்மன் கதை வில்பாட்டு**[23], **பழையனூர் நீலி எனும் இசக்கி அம்மன் வில்பாட்டு**,[24] **சுடலை மாடன் வில்பாட்டு**,[25] **சங்கிலிப்பூதத்தார் விற்கதைப்பாட்டு**[26] போன்ற கதைப்பாடல் பதிப்புகளில் 'கதை+பாட்டு' என்பன அமையுமாறு பெயரிட்டுள்ளனர்.

ஒரு கதை நிகழ்ச்சியைப் பாட்டாகப் பாடி, வில்லிசையிலோ, உடுக்கடித்தோ, கணியான் ஆட்டத்திலோ அல்லது வாய்ப்பாட்டாகவோ பாடுவதையே இவ்வாறு பலரும் பல பெயர்களில் அழைக்கின்றனர். இவற்றைப் பாடியவரோ அல்லது ஏட்டில் எழுதியவரோ சூட்டிய பெயரிலேயே தலைப்பை அமைத்து வெளியிட்ட தொடக்ககாலப் பதிப்புகளே அதிகமாகக் காணக் கிடக்கின்றன. இவை, **அம்மானை, மாலை, கும்மி, சண்டை, போர், தவநிலை, குறம், தூது, கதை, சிந்து, கூத்து, விருத்தம், கல்யாணம், வனவாசம், தபசு** போன்ற பெயர்களில் பதிப்பாகியுள்ளன. இவை பிரபந்தவகைப் பெயர்களிலும், புத்திலக்கிய வகைப்பெயர்களிலும், அந்தந்தக் கதைப்பாடல்களில் வரும் வினையின் அடிப்படையிலும் பிறவாறும் பெயர் பெறுதலை அறியலாம். எனவே, 'கதைப்பாடல்கள்' எனத் தற்காலத்தில் பதிப்புப் பெறுவன அவ்வக் காலகட்டங்களில் வெவ்வேறு பெயர்களில் அமைந்துள்ளமை தெரிகிறது.

1.3 **இராமப்பையன் அம்மானை, பாரத அம்மானை, ஐவர் அம்மானை, மார்க்கண்டேயன் அம்மானை, அரவான் அம்மானை, தேசிங்குராசன் அம்மானை, சிவகங்கை அம்மானை, சீவகசிந்தாமணி அம்மானை, மாகபுராண அம்மானை** போன்ற வரலாறு, இதிகாச, புராண வகைக் கதைப்பாடல்களை **அம்மானை** (Ammanai type ballads) வகைகளுக்குச் சான்றுகளாகக் கூறலாம். 'அம்மானை' என்ற பெயர் கொண்ட இலக்கிய வடிவம், முதலில், பிரபந்த வகைகளுக்கும் நாட்டுப்புற இலக்கிய வடிவம் ஒன்றனுக்கும் பெயராகிப்[27] பின்பு கதைப்பாடல் (Ballad type poetry) வகைகளுக்கே உரித்தாகியிருப்பதைக் காணலாம்.

சிறுமியர் ஒரு கதை நிகழ்வைப் பகிர்ந்து பாடிவரும் போது, ஒருவர் நிறுத்தும் இடத்தில் 'அம்மானை' என முடிப்பதும், அடுத்தவர் அதிலிருந்து தொடங்குவதும் உண்டு. அம்மானைக் காய்களை அவர்கள் மேலே எறிந்து பிடித்துப் பிடித்து விளையாடிப் பாடுவதும் உண்டு; இப்படி ஆடிப்பாடும்

பாடல்களே அம்மானைப் பாடல்கள் ஆகும் என விளக்கம் கூறுகின்றனர். ஆனால், இவ்வழக்கம் மாறி, நிகழ்த்து கலைகளின் போது பாடப்பெறுவதற்கும், தனியாக உடுக்கு அடித்துப் பாடப்பெறுவதற்கும், ஆடியும் பாடியுமான கணியானின்போது பாடப்பெறுவதற்கும் அம்மானை என்ற பெயர் அமைந்து விட்டிருக்கிறது. *அம்மானை வரி* [28] எனச் **சிலப்பதிகாரத்திலும்**, *அம்மானை ஆட்டம்* [29] எனத் **திருவாசகத்திலும் வருகின்றன**.

1.4 'அம்மானை' என்ற பெயரோடு கதைப்பாடல்கள் நின்றுவிடுவதில்லை. இப்பெயர் கதைப்பாடல்களுக்கு முழுதும் பொருத்தம் இல்லாத காரணத்தால் **மாலை** எனச் சில கதைப்பாடல்கள் அழைக்கப்பட்டன. **வலங்கை மாலை, அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, அபிமன்னன் சுந்தரி மாலை, குருசேத்திர மாலை, புலந்திரன் களவு மாலை** போன்ற பெயர்களிலும் கதைப்பாடல்கள் அமைந்தன. இவை அம்மானை வகைக் கதைப்பாடல்கள் போலவே இருந்தன. 'மாலை' என்பது 'பாமாலை' ஆதலால் இந்தப் பெயர் பெற்றது போலும். இவ்வாறு தொடக்கக் காலத்திலும், அதற்குப் பின்பும் கதைப்பாடல்கள் அம்மானை, மாலை போன்ற பெயர்களில் அமைந்தன.

1.5 **அம்மானை, மாலை** போன்றவற்றுக்கு அப்பாலும், கதைப்பாடல்கள் பெயர் பெற்றுள்ளன. அவற்றின் அமைப்பு ஒன்றுபட்டோ வேறுபட்டோ இருப்பினும் ஒரு கதை நிகழ்வைப் பாடுதலால் இவை அனைத்தும் கதைப்பாடல்கள் எனக் கருதப்படுகின்றன. கும்மி, சிந்து போன்ற வடிவில் இருந்தாலும் அவை பாடப்பெறும் அமைப்பை நோக்கிப் பெயர் சூட்டப் பெற்றன. இவ்வகைகள் அனைத்தும் பல சிற்றிலக்கிய வகைப் பெயர்களில் அமைந்தாலும் இலக்கிய வகையில் 'கதைப்பாடல்கள்' என்றே கருதப்படுகின்றன. கதைப்பாடல்களுக்குரிய பொதுப்பண்புகள் இவற்றுள் இருந்த காரணத்தாலேயே அவ்வாறு கூறப்பெறுகின்றன.

அவ்வாறான பொதுப்பண்புகள் சிலவற்றைக் கீழே ஆராயலாம். ஒரு கதை நிகழ்வைப் புனைந்துரைத்துப் பாடுதல் அல்லது பாட்டுக் கட்டுதல், நான்கு நான்கு சீர்களில் அகவல் நடையில் பெரும்பாலும் பாடுதல், எதுகை, மோனை இயைபுகள், இடையிடையே வசனப்பகுதிகள், நிறுத்தங்களின் போது விருத்தங்களில் பாடுதல், நீண்ட பாட்டுகளாகக் கேட்போரைப் பரவசப்படுத்தும் வகையில் வெவ்வேறு நடைகளில் மாற்றிப் பாடுதல், எளிமையாகப் பொருள் புரியுமாறு எடுத்துரைத்தல்[30] போன்றவை கதைப்பாடல்களில் அமைந்துள்ளதால், அவை எந்தப் பெயர்களில் இருந்தாலும் கதைப்பாடல்கள் எனக் கொள்ள இடமுண்டு. பொதுவாகக் கதைப்பாடல்கள் பாமரர்களுக்காகப் பாடப்பெறுபவை. இவற்றுக்கு மேலாக வேறு பொதுப் பண்புகள் கதைப்பாடல்களில் காணப்பெறும்.

2.0 கதைப்பாடல்களின் தோற்றம்

எல்லாக் காலங்களிலும் எல்லா மாந்தர்க்கும், மாந்தர் அல்லாதார்க்கும், சில நிகழ்வுகளுக்கும் கதைகள் அமைவது இயல்பு. அக்கதைகளில் சில கதைகளே புலவர்களாலோ, பாட்டாளிகளாலோ கதைப்பாடல்களாகப் பாடப்பெறுகின்றன. அவ்வாறு பாடப்பெறுவதற்கான முக்கியத்துவத்தை அக்கதை அளிக்குமெனில் அது கதைப்பாட்டாகப் பாடப்பெற்றுவிடும். இவ்வாறு, பாடப்பெறும் மரபுதான் முதலில் நிலைபெற்றிருக்க வேண்டும். இம்மரபு வாய்மொழி **(Oral tradition)** மரபு எனக் கூறப்பெறுகின்றது.

வாய்மொழியாகப் பாட்டுக் கட்டப் பெறுபவை இன்றளவும் வாய்மொழியாகவே இருந்து வருவது ஒரு நிலை. அவை வழக்கொழிந்து போவதும் மற்றொரு நிலை. வாய்மொழி மரபு வழக்கொழிய இருக்கின்ற காலகட்டத்தில் அதை ஏட்டில் எழுதி வைத்துக் காப்பதும், படி எடுத்து வைத்துக் கொள்வதும் பெரும் வழக்காக இருந்ததாலேயே இன்று நம்மிடையே பல கதைப்பாடல்கள் புழங்கி வருகின்றன. எழுதி வைக்கப் பெற்றவற்றில் கூட சில கதைப்பாடல்கள் மறைந்தொழிந்துள்ளன. ஏடுகள் சிதைவுண்டபோதோ, எரிந்த போதோ, புதையுண்டபோதோ, ஆடிப்பெருக்கில் அமிழ்ந்தபோதோ அவற்றின் பிரதிகள் இல்லாமல் அழிந்து விடுகின்றன. அப்படியான காலகட்டங்களில் அக்கதைப்பாடலை அறிந்தவர் எவராயினும் இருப்பின் அவரைப் பாடவைத்து எழுதி எடுத்தோ, ஒலிப்பதிவோ செய்து கொள்ள முடியும்.

2.1 கதைப்பாடல்களின் தோற்றத்தின் அடிப்படையில் அவற்றைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

கதைப்பாடல்கள்

- வாய்மொழிக் கதைப்பாடல்கள்
  - அ. வழக்கொழியாதவை
  - ஆ. வழக்கொழிந்தவை
- எழுத்துமரபுக் கதைப்பாடல்கள்
  - அ. வழக்கொழியாதவை
  - ஆ. வழக்கொழிந்தவை

வாய்மொழியாகவே வழங்கப்பட்டு வரும் கதைப்பாடல்கள் இன்றளவும் உள்ளன. தொடக்கக் காலத்தில் அவற்றில் பல பாட்டுக்கட்டப்பெற்ற நிலையிலிருந்து அவ்வப்போது சில மாற்றங்களைப் பெற்று இன்றளவும் வாய்மொழியாகவே இருந்து வருகின்றன. சில சமூகங்களில் மூதாதையர் பற்றிய வீர வரலாறு

அல்லது சமூகச் சாதனை அடிப்படையில் பாடப்பெற்றவற்றைச் சான்றுகளாகக் காட்டலாம். வேந்தர்கள், சிற்றரசர்கள், வீரர்கள், வேடர்கள், கள்ளர்கள் போன்றோர்களின் சில சாதனைகளின் அடிப்படையில் தோற்றம் பெற்ற வாய்மொழி மரபுக் கதைப்பாடல்கள் இவை. செம்புலிங்கம் கதை நிகழ்ச்சி இதற்குச் சான்றாகும்.

அவ்வக் காலங்களில் வாய்மொழியாகவே நின்று பேசப்பட்டு, தனிப்பாடல்களில் மட்டுமே வாழ்ந்து வருபவை சில. சோழன் கிள்ளி வளவன் பற்றியும், அவனது யானையின் வீரச் செயல் பற்றியும் சோழனின் பசு பற்றியும் அமைந்த பாடல்களையும் சான்றாகக் காட்டலாம். சிற்றரசர்கள் நிலையிலிருந்தவர்களின் வள்ளல் தன்மைகள் அவ்வக் காலங்களில் எடுத்துரைக்கப் பெற்று, இறுதிவரை கதைகளாகவே நிலவி வருகின்றன. வீரர்களின் வீரசாகசங்கள் கூட அவை நடந்த காலங்களில் பிரபலமாகப் பேசப்பட்டு, அடுத்த காலகட்டங்களில் வழக்கொழிந்து விடுகின்றன.

2.2 இதிகாச, புராணங்களில் ஈடுபாடு கொண்ட நம் மக்களுக்காக அவற்றுள் பல நிகழ்வுகளைத் தனியே எடுத்து, முக்கியத்துவம் கொடுத்துப் புலவர்களோ பாமரக்கலைஞர்களோ புனைந்துரைக்கும் போது, அவை வழக்கொழியாது வாய்மொழியாகவும், அதே கட்டத்தில், ஓலைகளில் எழுதி வைப்பதால் எழுத்து மரபிலும் வாழ்ந்து வருகின்றன. இந்த அடிப்படையில் தமிழ்க் கதைப்பாடல்களில் தொடக்கக் காலக் கதைப்பாடல்கள் பெரும்பாலும் இதிகாச, புராண நிகழ்வுகளை மையமாக வைத்துத் தோற்றம் பெற்றன. இதிகாச, புராண, காவியங்கள் பெரிய அளவிலும் (great tradition) கதைப்பாடல்கள் சிறிய அளவிலும் (little tradition) தோற்றம் பெற்றன. பாமரக் கலைஞர்கள் சிறிய அளவில் பாடத் தொடங்கிய காரணத்தால் கதைப்பாடல் எனும் இலக்கிய வகை தமிழில் நிலைபெற்றது. அதற்காக அப்பாமரக் கலைஞர்கள் எடுத்துக் கொண்ட கருக்கள் பெரும்பாலும் இதிகாச - புராண - காவியங்களில் உள்ள சிறு நிகழ்வுகள் ஆகும். அவர்கள் தேர்ந்தெடுத்த நடையாகும். மிக எளிதாகக் கைவரும் அகவல் நடை. இவற்றில் காவியங்களுக்குரிய இலக்கணங்கள் சிறிய நிலைகளில் அமைந்திருந்தன.

2.3 கதைப்பாடல்களின் தோற்றம் பொதுவாகத் தொடக்கத்தில் வரலாற்று நிலையிலும், பின், சமய நிலையிலும், அடுத்துச் சமூக நிலையிலும் அமைந்திருப்பதாக வரையறுக்கலாம். இவற்றிற்கேற்பத் தொடக்கக் காலத் தமிழ்க் கதைப்பாடல்கள் பெரும்பாலும் வரலாற்றுக் கதைப்பாடல்களாக உள்ளன. தெய்வக் கதைப்பாடல்களாக அடுத்த நிலையில் அவை பரிணமித்தன. இறுதியில், சமூக நிலையில், தனிப்பட்டவர்களின் வாழ்க்கையைச் சமுதாயச் சிக்கல்களுடன் பிணைத்துத் தோன்றியுள்ளன. இவற்றிற்குப் புறம்பாகவும் சில அமையலாம்.

2.4 மேலே வரையறுத்த மூன்று நிலைகளின் உட்பிரிவுகளை ஆராய்வதற்கு முன், அவற்றைச் சான்றுகளுடன் விளக்குவது தேவையாகிறது. தமிழில் தோன்றிய முதல் கதைப்பாடலாக இன்று கிடைப்பது **வலங்கைமாலை**[31] ஆகும். இதன் காலம் கி.பி. *1575* ஆகலாம். அடுத்த நிலையில் **வலங்கை வெங்கலராசன் கதை**[32] கி.பி. *1606*ல் பாடப்பெற்றது. மானவீரவளநாட்டு அருத(ன)க் குட்டியார் என்பவர் கி.பி. *1617*இல் **செண்பக நாச்சியார் கதைப்பாடலையும்,** கி.பி. *1623*இல் **பெருமாள் தம்பிரான் கதைப்பாடலையும்** அதன்பின்பு **கபாலகாரசுவாமி கதைப்பாடலையும்** வேறு சில கதைப்பாடல்களையும் பாடினார்[33]. இவை அனைத்துமே முன்னோடி வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்கள் ஆகும். ஆகவே, கதைப்பாடல்களில் வில்லுப்பாட்டுக் கதைகளே தமிழில் தொடக்கக் காலத்தில் தோன்றின எனலாம். நிகழ்வுகள் அல்லது நிகழ்வில் வராத புராணக் கதைப்பாடல்களின் தோற்றத்திற்கு வரலாற்று வில்லுப்பாடல்களே அடிகோலியுள்ளன எனலாம்.[34]

கி.பி. *1640*இல் **இராமப்பையன் அம்மானை** தோற்றம் பெற்றது. அதைத் தொடர்ந்து புகழேந்திப்புலவர் பாடியதாகச் சில பெரிய எழுத்து மரபுக் கதைப்பாடல்கள் தோன்றின. புகழேந்திப் புலவரைத் தொடர்ந்து பெரிய எழுத்துப் பதிப்பகங்கள் தம் பண்டிதர்களைக் கொண்டு கதைகளை அம்மானை, மாலை, கும்மி, சண்டை, போர், விலாசம் போன்ற பல இலக்கிய வகைப் பெயர்களில் பாடவைத்து வெளிப்படுத்தின. அதன்பின் சமூக, வரலாற்றுக் கதைப்பாடல்கள் பலராலும் பாடப்பெற்று வருகின்றன.

2.5 ஆனால் மு. அருணாசலம் **தமிழ் இலக்கிய வரலாறு** *(16*ஆம் நூற்*)* என்ற தமது நூலில், கி.பி. *1575 – 1650* என்ற காலகட்டத்தில் **அல்லி அரசாணி மாலை** முதலாவது கதைப்பாடலாகத் தோற்றம் பெற்றிருக்கலாம் என்கிறார். அது **மூவர் அம்மானை** என்ற வழக்கொழிந்த நூலைப் பின்பற்றிப் பாடப்பெற்றிருக்கலாம் என்கிறார்.

மூவர் அம்மானையை இரட்டைப் புலவர்கள் பாடியிருக்கலாம் என்றும், அது கி.பி. *14*ஆம் நூற்றாண்டதாகலாம் என்றும் கூறுகிறார்.[35] ஆனால், தமிழில் தொடக்கக் காலக் கதைப்பாடல்களின் அமைப்பு, அவற்றைப் பாடியோரின் வரலாற்றுப் பின்னணி போன்றவற்றை ஆராய்ந்தால், அரசர்களுக்குப் பிரசஸ்தி இயற்றும் ஏனாதிகளான படைக்கலப் பயிற்சி ஆசான்களே வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களுக்கு முன்னோடியானவர்கள் என்பது தெரியவரும். இந்த ஏனாதிகள் பற்றி வரலாற்றுச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. களப்பிர ஆட்சியாளர்களைப் பாண்டி நாட்டுத் தலைநகரிலிருந்து அகற்றிய கடுங்கோனின் வீரத்தைப் பாண்டியன் பராந்தக

நாராயணன் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் பட்டயத்தில் பிரசஸ்தியாகப் பொறித்து வைத்துள்ளான். இந்தப் பிரசஸ்தியைப் பாடியவன் ஓர் ஏனாதி ஆவான். அவன் மரபில் வந்த ஏனாதி ஆனந்தன் என்பவரையே தம் குருவாக முதல் கதைப்பாடலான **வலங்கை மாலையின்** ஆசிரியரான சுந்தரமும், **வெங்கலராசன் கதைப்பாட்டைப்** பாடிய ஆறுமுகமும் **செண்பகநாச்சியார் கதைப்பாட்டைப்** பாடிய அருத(ன)க் குட்டியாரும் **வலங்கை மாகாளி அம்மன் கதைப்பாடலைப்** பாடிய இராமனும் கூறுகின்றனர். இவற்றிலிருந்து தமிழ்க் கதைப்பாடல்களின் முன்னோடிகள் ஏனாதிகள் என்பது அறியக் கிடக்கின்றது.

2.6 தொடக்கக் காலத்தில் வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்கள் நாட்டுப்புற மக்களிடையே, குறிப்பாகத் தென்பாண்டி, தென் சேர நாட்டுப் பகுதிகளில் சோழ வீரர்களின் வீர வரலாறுகளை எடுத்துணர்த்தவும், ஊர்த் தெய்வங்களின் பிறவிக் கதைகளை உணர்த்தவும் தோற்றம் பெற்றன. அவற்றைத் தொடர்ந்து அச்சுத் தொழில் நுட்பம் ஏற்பட்ட 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் புகழேந்திப் புலவர் பேரில் அம்மானை நூல்கள் பாடப்பெற்றன. குறிப்பாக, சென்னையிலும், நெல்லையிலும் பதிப்பகங்கள் புற்றீசல்கள் போல் தோன்றி இதிகாச - புராண - காவிய நிகழ்ச்சிகளை மையமாக வைத்து நூற்றுக்கணக்கான நூல்களை அச்சிட்டன. இவ்வகையான அச்சு நூல்களைப் படித்த பாட்டாளிகள் இப்புராண நிகழ்வுகளைத் தம் பட்டறிவுக்கேற்ப வில்லிசையில் பாடி; மக்களிடையே இந்துத்துவத்தைப் பேணி வளர்த்தனர். இவை, **பஞ்சபாண்டவர் வனவாசம், சீதை கல்யாணம், இலவ-குசர் கதை, அர்ச்சுனன் தபசு, கிருஷ்ணன் தூது, அல்லி அரசாணி மாலை, அபிமன்னன் சுந்தரி மாலை, புலந்திரன் களவு, புலந்திரன் தூது, அங்கதன் தூது, அயோத்தி கதை,**[36] புகழேந்திப் புலவர் பாடிய பிற நூல்களான **ஏணி ஏற்றம், பவளக் கொடி மாலை,** மற்றும் பிறர் பாடிய **அரிச்சந்திரன் கதை, அரவான் கதை** போன்றன ஆகும்.

2.7 அடுத்த நிலையில், சமூக வரலாற்றுக் கதைப்பாடல்கள் தோற்றம் பெற்றன. **ஐவர் ராசாக்கள் கதை, வீணாதி வீணன் கதை, மதுரை வீரன் கதை, கன்னடியன் சண்டை, கட்டபொம்மன் கும்மி, சிவகங்கை அம்மானை, பூலித்தேவன் கும்மி, புதுக்கோட்டை சண்டை, இரவிக் குட்டிப்பிள்ளைப் போர், தோட்டுக்காரி கதை, முத்துப்பட்டன் கதை, கான் சாகிபு சண்டை, சேர்வைக்காரன் கதை, குமாரசாமி நாடான் கதை, சிவனணைஞ்ச பெருமாள் கதை** போன்ற சமூக - வரலாற்றுக் கதைப்பாடல்கள் முக்கிய இடம் பெற்றன.

இவை பெரும்பாலும் வில்லுப்பாடல்களில் பாடப்பெற்றும், சிறுபான்மை, உடுக்கு, கணியான் ஆட்டம் போன்றவற்றில் பாட்டுக் கட்டப்பெற்றும் பாடப்

பெற்றன. வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களே மிகவும் வேகமாக வளர்ந்த நிலையில், அவைதாம் தமிழில் நிலைத்து நிற்கின்றன. இந்த அடிப்படையில் வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களைக் கூடுதலாக ஆராய்வதன் மூலம் தமிழ்க் கதைப்பாடல்களின் அமைப்பையும், அவற்றின் வகைகளையும், அவற்றுக்கும் பிற வகைக் கதைப்பாடல்களுக்கும் உள்ள தொடர்பையும் பிறவற்றையும் அறிந்து கொள்ளலாம்.

2.8 இதுவரை கூறப்பெற்றவற்றிலிருந்து நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களும், சுவடியில் இடம் பெறும் கதைப்பாடல்களைப் பதிப்புச் செய்வோரும் 'தமக்குரிய தரவுகளாகக் கதைப்பாடல்களை எடுத்துக் கொள்கின்றனர் எனலாம். 'கதைப்பாடல்', கதை எனும் பெயர்களை இருசாராருமே பயன்படுத்து கின்றனர். தொடக்கக் காலத்தில் வெவ்வேறு மரபு இலக்கியப் பெயர்களில் அமைந்த கதைப்பாடல்கள் தற்காலத்தில் ஆய்வாளர்களால் ஒரு பொதுப்பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றன. இவர்கள் அக்கதைப்பாடல்களை அணுகும் முறை வேறுபட்டிருக்கலாம். ஆனால் தரவுகள் பெரும்பாலும் ஒன்றாகவே' அமைகின்றன.

நாட்டார் வழக்காற்றியலார் சுவடிப் பதிப்பு நூல்களைப் பாராமுகமாய் இருந்த நிலை சற்று மாறி வருகிறது. சுவடிப் பதிப்பாளர்களும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு முறைகளையும் கற்று அக்கதைப்பாடல்களை ஆய்ந்து வருகின்றனர். இதனால், கதைப்பாடல் பதிப்புகளில் தற்காலத்தில் பன்முகப் பார்வை ஏற்பட்டு வருகிறது. இதன் மூலம் கதைப்பாடல்களின் தோற்ற வரலாற்றை ஓரளவு வேறுபட்ட கண்ணோட்டத்தில் பார்க்க முடிகின்றது. **சிலப்பதிகாரத்திலிருந்து** இதுவரை பார்த்து வந்த நிலையுடன் சமூக உணர்விலும் கதைப்பாடல்களை அணுகும் நிலை வளர்ந்துள்ளது தெரிகிறது. வரலாற்றுக் கதைப்பாடல்களைக் கூடக் கல்வெட்டுச் சாசனங்களின் துணையுடன் பதிப்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதிகாச - புராணக் கதைப்பாடல்களைக் கூட ஒப்பீட்டு நிலையில் பதிப்பிக்கும் அளவுகோல்கள் வளர்ந்துள்ளன. அவற்றில் காணக்கிடக்கும் பொதுக் கூறுகள் இவற்றால் வெளிப்படுகின்றன.

3.0 கதைப்பாடல்களின் அமைப்பு

3.1 வாய்மொழிக் கதைப்பாடல்களோ எழுத்துக் கதைப்பாடல்களோ இருவகை அமைப்பைக் கொண்டவை: *1.* புற அமைப்பு, *2.* அக அமைப்பு. வாய்மொழிக் கதைப்பாடலாயின் அதன் புற அமைப்பு மாறிக்கொண்டே இருக்கும். பாடுவோரின் உணர்ச்சிக்கு ஏற்பவும், கால கட்டத்திற்கு இயையவும்

நேரத்திற்குத் தக்கவும், கூட்டியோ குறைத்தோ, சற்று மாற்றியோ மறைத்தோ பாடுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இதனால் ஒரு வாய்மொழிக் கதைப்பாடலை ஓரிடத்தில் பதிவு செய்த பின்னர், வெவ்வேறிடங்களில் வெவ்வேறு ஆட்களிடம் பதிவு செய்து பார்த்தால் அவற்றுக்குள்ளே புற அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைப் பார்க்க முடியும். ஒலி அடிப்படையிலும், பாடல் நீட்சி அடிப்படையிலும், சொல் நிலையிலும் இவற்றைக் காண முடியும். இவ்வகையான வாய்மொழிப்புறவடிவத்தையே நாட்டுப்புற வழக்காற்றியல் ஆய்வாளர்கள் தம் தரவுகளாகக் கொள்வர். இந்த வாய்மொழி வடிவங்கள் அக அமைப்பால் பெரிதும் மாற்றம் அடைந்திருக்கா. பேராசிரியர் நா. வானமாமலை இவ்வகையான வாய்மொழி வடிவக்கதைப்பாடல் ஆய்வுக்கு முன்னோடி ஆவார்.

எழுத்து மரபுக் கதைப்பாடல்கள் பெரும்பாலும் ஓலைச் சுவடிகளிலேயே இடம் பெற்றுள்ளன. ஒரு வில்லுப்பாட்டுக் கதைப்பாடல் முதலில் வாய்மொழியாகப் பாட்டுக் கட்டப்பெற்றோ அல்லது பாட்டுக் கட்டப் பெற்று ஏட்டில் எழுதி வைக்கப்படும் பொழுதோ அதன் வடிவம் குறிப்பிட்ட எல்லைக்குள் நிறுத்தி வைக்கப்படுகிறது. அதைப்பார்த்துப் பிரதி செய்வோர் ஏற்படுத்தும் பாடபேதம், பிரதி பேதம், இடைச்செருகல், குறைத்தல், பேச்சு வழக்குகளைச் சேர்த்தல், ஒலிப்புப் பிழைகளுடன் எழுதுதல் போன்ற மாற்றங்களைச் செய்து விடுகின்றனர். இது புற அமைப்பிலும் அக அமைப்பிலும் ஏற்படும் சிறிய மாற்றங்கள் தாம். ஒட்டு மொத்த வடிவில் எவ்வித மாற்றமும் இல்லாது ஏட்டுச் சுவடிக் கதைப்பாடல்கள் அமைகின்றன. ஆக, கதைப்பாடல்களின் வடிவங்களைப் பொறுத்த வரையில் நமக்கு,

1. வாய்மொழிக் கதைப்பாடல் வடிவங்கள்
2. எழுத்து மரபுக் கதைப்பாடல் வடிவங்கள்

என்ற இரு அமைப்புகள் கிடைத்து விடுகின்றன. முன்னதை நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களும், பின்னதைச் சுவடிப் பயிற்சி ஆய்வாளர்களும் தம் தரவுகளாக எடுத்துக் கொள்கின்றனர். இவ்விரு சாராரின் தரவுகள் அடிப்படையில் ஒன்றாக அமைய, புறவடிவம் வேறுபடுவதால், அவர்கள் தம் ஆய்வு முறையால் தம்மை வேறுபடுத்திக் கொள்கின்றனர். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களும் சுவடி ஆய்வாளர்களும் ஒத்த ஆய்வு முறைகளை ஏற்படுத்தித் தமிழ்க் கதைப் பாடல்களை ஆராய்வார்களேயானால், நல்ல ஆய்வுக்களம் அமைவதோடு மேனாட்டு ஆய்வு முறைகளோடு இயைந்து செல்லும் அணுகுமுறைகளையும் அமைத்தவர்களாவர். எழுத்து வடிவச் சுவடிக்

கதைப்பாடல் ஆய்வுக்கு முன்னோடியாகப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையைக் கொள்ளலாம். **இராமப்பையன் அம்மானையும், இரவிக்குட்டிப்பிள்ளைப் போரும்** சான்றுகளாகும்.

3.2 எழுத்துமரபுக் கதைப்பாடல்களின் ஆய்வு முன்னோடிகளையும் வாய்மொழிக் கதைப்பாடல்களின் ஆய்வு முன்னோடிகளையும் நோக்கினால் அவர்களுக்குள் அமைந்துள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை அறிந்து கொள்ள முடியும். முதலில் எழுத்துக் கதைப்பாடல்கள் ஆய்வு முன்னோடிகளில் பெரிய எழுத்துப் பதிப்பாசிரியர்களை எடுத்துக் கொள்ளலாம். இவர்கள் பெரும்பாலும், கதைப்பாடல் மூலங்களை மட்டுமே வெளியிட்டுள்ளனர். இவை ஓலைப்பிரதிகள் ஆகா. எவ்வித முன்னுரையும் ஆய்வுக்குறிப்பும் இன்றி இவ்வெளியீடுகள் வந்துள்ளன. இக்கதைப்பாடல்கள் எளிமையாகவும் பொருள் புரிந்து கொள்ளத்தக்க அளவிலும் இருக்கின்றன. அவை பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்த இதிகாச - புராணக் கதைகளின் நிகழ்வுகளாகவும் இருக்கின்றன. ஆதலால் அவற்றிற்கு எவ்வித விளக்கக் குறிப்பும் தேவை இல்லை என இப்பதிப்பாசிரியர் நினைத்திருக்கலாம். அகத்தீசுவரம் வைத்தியர் ஆறுமுகப் பெருமாள் நாடாரையும் இக்கூட்டத்தாருடன் சேர்க்கலாம். ஆனாலும் இவர் தம் பதிப்பு மூலங்களாக ஓலைப் பிரதிகளில் உள்ள கதைப்பாட்டுகளையே கொண்டுள்ளார். ஆனால், அடுத்த கட்டத்தில் வரும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, மு. சண்முகம்பிள்ளை, டாக்டர் தி. நடராசன், பேராசிரியர் ஏ.என். பெருமாள், டாக்டர் சு. தங்கதுரை, சி. விவேகானந்தன், டாக்டர் சூ.நிர்மலாதேவி, டாக்டர் ஆ. தசரதன், டாக்டர் எஸ். ஜெயக்குமார் போன்றோர் ஓலைச் சுவடி வில்லுப்பாட்டுக் கதைப் பாடல்களைப் பதிப்புச் செய்து, அவற்றில் ஆய்வு முன்னுரை, அரிய சொற்களுக்குக் குறிப்புகள், மற்றும் சொல்லகராதி போன்றவற்றை அமைத்துப் பதிப்புச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுடைய முயற்சியைத் திறனாய்வு செய்வதை வேறிடத்தில் வைத்துக் கொள்ளலாம்.

3.3 வாய்மொழி மரபுக் கதைப்பாடல் ஆய்வு முன்னோடிகளில் நா. வானமாமலை குறிப்பிடத்தகுந்தவர். இவர், தம் ஆய்வுக்கு எழுத்து மூலக் கதைப்பாடல்களைச் சேகரிக்கவும் பார்வையிடவும் தவறவில்லை. ஆயினும், வரலாற்றுக் கதைப்பாடல் ஓலைச் சுவடி வடிவங்களில் எழுதப்பெற்றுள்ள காலத்தை இவர் கவனிக்கத் தவறிய காரணத்தால் சில வரலாற்று நிகழ்வுகளின் காலங்களைக் கணிப்பதில் இவர்க்கு இடர்ப்பாடு ஏற்பட்டுள்ளது. அதைப்போன்றே, அக்கதைப்பாடல்களில் சமூகவியல் ஆய்வை மேற்கொள்ளும் போது ஒப்பீட்டுப் பார்வையுடன் ஊன்றிப் பார்க்கத் தவறிவிட்டதால்

கதைப்பாடலில் கூறப்படும் சமூகத்தார் பிழைபடக் கணிக்கப்பட்டுள்ளனர். **ஐவர்ராசாக்கள் கதை, கான்சாகிபு சண்டை** போன்றவற்றின் தலைமை மாந்தர்கள் பற்றிக் கணிப்பதில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் இன்றளவும் சிலர்க்கு உடன்பாடில்லாமல் இருந்து வருகின்றன. நா. வானமாமலையைத் தொடர்ந்து வாய்மொழி மரபுக்கதைப் பாடல்கள் சிலவற்றைப் பதிப்பித்து வரும் அ.கா. பெருமாள், என். இராமச்சந்திரன், ஜி. ஸ்டீபன், ஆ.சிவசுப்பிரமணியம், மாணிக்கவாசகம், க. தேரியப்பன் போன்றோர் வெவ்வேறு பிரதிகளைப் பார்வையிடத் தவறியதால், சமூக - வரலாற்று முடிவுகளில் புரண்டுவிட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக இவர்கள் ஒன்றைக் கவனிக்கத் தவறிவிடுகின்றனர். ஒரு கதைப்பாடல், வெவ்வேறு காலகட்டங்களில், வெவ்வேறு இடங்களில், வேறுபட்ட பாட்டாளிகளால் பாடலைப்பாடுபவர்கள் பாடப்பெறுவதால், அவர்கள், இடத்துக்கு ஏற்பவும், சூழலுக்கேற்பவும் உண்மைகளைப் புரட்டிக் கூறும் நிலை ஏற்பட வாய்ப்பு உள்ளது. இவ்வாறான தரவுகளை ஒலிப்பதிவு செய்து ஆய்வு செய்யும் போது சமூக, வரலாற்று முடிவுகள் தடம் புரண்டு விடுகின்றன. மூலக்கதை ஓர் ஊரில் பாடப்பெறும் போது, உண்மையை மறைத்துப் புலவன் பாடினால் ஏற்றுக் கொள்ளப்படாது. அதற்காகவே பாட்டாளிகள் குறியீட்டு நிலையில் சமூக வரலாற்றுக் கதைப்பாடல்களைப் பாடுகின்றனர்.

3.4 இனிக் கதைப்பாடல்களின் அக அமைப்பை ஆராயலாம். காப்பிய இலக்கணத்தில், வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல், நாடு, நகர வருணனை, தலைவன் போன்ற ஒழுங்கமைப்புடன் செய்திகள் பாடப்பட்டிருக்கும். காப்பிய வடிவங்களைப் போன்றே கதைப்பாடல்கள் சிறிய அளவில் அமைவதால், அவற்றிலும் காப்புப்பகுதி, அவையடக்கம், நூலாசிரியர் வரலாறு, நாடுநகர் வருணனை, தலைமாந்தர் பிறப்பதற்கு முன் பெற்றோரின் தவம், தாயின் தலயாத்திரை, பிறப்பு, வளர்ப்பு, போராட்டம் முடிவு, வாழ்த்து என்ற அடிப்படையில் பெரும்பாலான கதைப்பாடல்கள் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

இதிகாச-புராண-காவிய-தெய்வக் கதைப்பாடல்களில் தலைமை மாந்தர் பிறவி எடுக்கும் கைலாய வருணனை, சிவபெருமான் காட்சி, வேள்வித் தீயில் பிறவி எடுத்தல், சிவன் ஏவிய புனிதப் பணிக்காகச் செல்லுதல், புனிதப்பணி முடிந்த பின் வெவ்வேறு பகுதிகளில் கோயில் கொள்ளுதல் என்ற புராண அமைப்பில் பாடப்பெற்றுள்ளன.

சமூக, வரலாற்றுக் கதைப்பாடல்களில் முதலில் கூறிய அமைப்பிலும் முடிவில் அவலத்திலும், பின்பு தெய்வமாகிப் பூசை பெறுதலுமாகப் பாடப்

பெற்றிருக்கும். எந்த வகைக் கதைப்பாடலாயினும் கதையோ, வினையோ இருக்கும். அதற்கு முன்னும் பின்னும் சேர்த்துக் கதை கேட்போர், நேரம் இவற்றுக்கேற்பக் கூட்டியோ குறைத்தோ படிப்பது வழக்கம்.

தலபுராணங்கள் போன்றும் பெருந் தெய்வங்களின் கதைகள் அடங்கிய புராணங்கள் போலவும் ஊர்த்தெய்வங்களுக்கும், அவை கோயில் கொண்டுள்ள ஊர்களுக்கும் கதைகளும் வரலாறும் அமையவேண்டுமென்று தொடக்கக் கால வில்லுப்பாட்டாளிகளுக்கு எண்ணம் இருந்தது. அருத(ன)க்குட்டியார் *(கிபி. 1575-1675)* சார்ந்த கூட்டத்தார் தாம் வில்லடிக்கச் சென்ற ஊர்களிலுள்ள ஊர்த் தெய்வங்களைப் பற்றிய கதைகளைப் புராணங்கள் போலப் பாடி வைத்துள்ளார். உடுக்கடித்துப் பாடுவோரும், கணியான் ஆடுவோரும் இவ்வாறே தொடர்புடைய கதைப்பாட்டுகளையே பாடுகின்றனர்.

35 கதைப்பாடல்களின் அமைப்பில், வில்லுப்பாட்டுக்கு ஏற்ப அவை எவ்வாறு புனைந்துரைக்கப்படுகின்றன என்பதை ஆராயலாம். வில்லிசை எனும் நிகழ்த்து கலை, பெரும்பாலும் ஊர்த்தெய்வக் கோயில் கொடை விழாக்களிலேயே நடத்தப் பெறுகின்றது. பாடுபவர், குடம் அடிப்பவர், உடுக்கு, சிங்கி அடிப்போர், பின்பாட்டுக்காரர் அல்லது பக்கப்பாட்டுக்காரர் என ஒரு குழுவினர் இருப்பர். கோயில் வளாகத்தில், தெய்வங்களின் முன்னிலையில், வில்லிசை மேடையில், இரவு நேரத்தில், பலவகைச் சமூக மக்களும் கூடும் அவையில், எல்லோர்க்கும் கேட்கும் வகையில் பாடப்பெறுவது வில்லுப்பாட்டு. இன்று, சிறு மாறுபாடுகளுடன் தொடர்ந்து பாடப்பெற்று வருகிறது. வில்லுப்பாட்டுகள் தென்மாவட்டங்களில் அதிகம் என்பதால் கதைப்பாடல்கள் தென்மாவட்டங்களிலேயே மிகுதியாக அறிமுகப்படுத்தப் பெற்றன. வில்லுப்பாட்டுகளும் கதைப்பாடல்களே என்பதில் ஐயமில்லை.

வில்லுப்பாட்டாளிகள், தொடக்கக் காலத்தில் தம் சமூக-வரலாற்று முன்னோடிகளின் பிறப்பு, வளர்ப்பு, போர் போன்றவற்றையே அரங்கேற்றினர். பின்பு, இதிகாச-புராணங்களிலிருந்தும் கதை நிகழ்வு ஒன்றைப் பாட்டுக் கட்டிப்பாடினர். அதற்கு மேலாக, ஊர்த்தெய்வங்களில் புராணத் தெய்வங்களுக்கு ஒரு வரலாற்றை ஏற்படுத்திப் பாடினர். அத்தெய்வங்கள் வரிசையில் இடம் பெறும் சமூகத் தெய்வநிலை பெற்ற தலைமை மாந்தர்கள் பேரிலும் வில்லுப்பாட்டுகளைப் புனைந்து பாடினர். இவ்வாறு பாடிய கதைப்பாடல்களில் மூன்று முக்கிய அமைப்புகள் உள்ளதைப் பார்க்கலாம். *1.* புராணப்பிறவி, *2.* வரலாற்றுப் பின்னணி, *3.* சமகால வரலாறு என்ற இவ்வமைப்பையே பெரும்பாலான கதைப்பாடல்கள் பெற்றுள்ளமையைக் காணலாம்.

கதைப்பாடல்கள் நாடகங்களாகவும் தற்கால நாடக ஆசிரியர்களால் எழுதப்பெற்று அரங்கேற்றப்படுகின்றன. மேலும் சில நாடகங்கள்கூடக் கதைப்பாடல் ஆசிரியர்களால் பாடப்படுதலுண்டு. தொடக்கக் கால வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்கள் தமிழகத்தில் இசுலாமிய 'படைப்போர்' இலக்கியங்களுக்கு வழிகாட்டியாக இருந்துள்ளதை மானவீர வளநாட்டு வரலாற்றுக்கதைப் பாடல்களின் அமைப்பில் இருந்து தெரிந்து கொள்ளலாம். தொடக்கக் கால 'படைப்போர்' இலக்கிய ஆசிரியரான 'காயம்புளிப்புலவர் ஹசன்அலி' மானவீர வளநாட்டுப்பகுதியினர் ஆதலால், அப்பகுதி வில்லுப்பாட்டாளிகளின் வரலாற்றுப் புனைவுகளின் தாக்கத்தால் சில 'படைப்போர்' இலக்கியங்களை உருவாக்கியிருக்கலாம்.

'தற்காலக் கதைப்பாடல்கள்' என மகாகவி பாரதியார், பாரதிதாசன், கண்ணதாசன், பிச்சமூர்த்தி போன்றோர் பாடிய நெடுங்கவிதைகளையும் அழைப்பர். இவற்றிலும் முன்பு கூறிய அமைப்பு உண்டு. ஆயினும், இவை ஏட்டோடும், பாட்டோடும், சிலபோது நடிப்போடும் அமைந்து விடுதலுண்டு. நிகழ்த்து கலைகளாக உள்ள வில்லுப்பாட்டுகளும், அவற்றைப் போன்றவற்றையுமே நாம் இங்குக் கதைப்பாடல்கள் என அழைத்து ஆய்வு செய்கிறோம்.

கதைப்பாடல் அமைப்பில், முக்கியமாக இடம் பெறுவது சில பொதுக் கூறுகள் (Common elements) தான். இவை நீதிகளாகவும் இருக்கலாம். நிகண்டுகளில் கூறியிருப்பது போல விலங்குகளின் பெயர், மீன்களின் பெயர், மரங்களின் பெயர், மலர்களின் பெயர், அணிகலன்களின் பெயர், பாவைகளின் பெயர், பூதங்களின் பெயர், ஊர்களின் பெயர் என்றும் இருக்கலாம். வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களில் குமரி மாவட்ட வில்லுப்பாட்டுகள் தொடக்க - முடிவுகளில் நெல்லை மாவட்ட வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களிலிருந்து சற்று மாறுபட்டிருக்கும். இதற்குப் பிரதி செய்வோரே காரணமாக இருக்கலாம்.

4.0 கதைப்பாடல்கள் வகை

கதைப்பாடல்களின் தோற்றம், அமைப்பு ஆகியவற்றின் மூலம் அவற்றின் வகைகளையும் கூறிவிட முடியும். கதைப்பாடல்களைப் பொதுவாக:

1. நிகழ்த்துகலைக் கதைப்பாடல்கள்
2. நிகழ்த்துகலை அல்லாத கதைப்பாடல்கள்

என வகைப்படுத்தலாம். நிகழ்த்து கலை அல்லாதனவற்றுள் சில வழக்கொழிந்து போனதாகவும் இருக்கலாம். எஞ்சியன வெறும் படிப்போருக்கு மட்டுமே எழுதப்பெற்றவையாகும். நிகழ்த்துகலைக் கதைப்பாடல்களைக் கூட,

1. வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்கள்
2. வில்லுப்பாட்டு அல்லாத கதைப்பாடல்கள்

என வகைப்படுத்தலாம். இவற்றுள் வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களே மிகுதி. வில்லுப்பாட்டுகளல்லாத, உடுக்கடிக் கதைப்பாடல்கள் (கோணங்கி), கணியான் ஆட்டங்கள் மற்றும் தனியொருவரின் பாட்டு என்பன தற்கால சமூக ஓட்டத்தில் போட்டிபோட இயலாதவாறு நலிந்து வருகின்றன. வில்லுப்பாட்டுகளே இன்றும் கோயில் கொடைவிழாக்களில் மரபு விடுபடாது பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இதனால், தமிழில் தற்போதுள்ள வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களே பெரும்பாலான நாட்டுப்புறக் கதைப்பாடல் ஆய்வாளர்களுக்குத் தரவுகளாக அமைந்து வருகின்றன. அவ்வில்லுப்பாட்டுகள் இடம்பெற்றுள்ள சுவடிகளே சுவடிப்பதிப்பு ஆசிரியர்களுக்குத் தரவுகளாக இருந்து வருகின்றன.

வில்லுப்பாடல்களில், 1. தென்பாண்டி நாட்டின; 2. குமரி மாவட்டத்தின எனப் பிரித்துக் கொள்வதற்கு ஏற்ப அமைப்பால் வேறுபட்டிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டக் கதைப்பாடல்கள் அனைத்தும் மானாட்டையே வில்லுப்பாடல்களின் தாயகமாகக் கொண்டவை. அதனால்:

1. மானாட்டு வில்லுப் பாடல்கள்
2. மானாடு அல்லாத வில்லுப்பாடல்கள்

எனப் பகுப்பதற்கும் சாத்தியப்படுகின்றன. இதனால், மானாடு என்ற மானவீர வளநாடே வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களுக்குத் தாயகம் என்பது வரலாற்று அடிப்படையில் உறுதியாகியுள்ளது.

கதைப்பாடல்கள் தென்பகுதிகள் அல்லாத எஞ்சிய தமிழ்நாட்டுப் பகுதிகளிலிருந்தும் தோன்றின என்றாலும், தற்போது கிடைத்துள்ளவற்றில் வில்லுப்பாட்டுகளாகப் பாடப்பெற்றுள்ள தென்தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களே அதிகம் ஆதலால், அவை பற்றிய பதிப்பும், வெளியீடும், முக்கியத்துவமும் இனி விளக்கப்படும்.

4.1 தமிழ்க் கதைப்பாடல்களை ஆராய்ந்த பலரும், அவை, பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர்.

1. புராண வகைக் கதைப்பாடல்கள்
2. தெய்வக் கதைப்பாடல்கள்
3. வரலாற்றுக் கதைப்பாடல்கள்
4. சமூகக் கதைப்பாடல்கள்

5. காதல் கதைப்பாடல்கள்
6. தற்காலக் கதைப்பாடல்கள்
7. சமயக் கதைப்பாடல்கள்
8. ஊர்த்தெய்வக் கதைப்பாடல்கள்
9. பிறவகையின

என்பன இதிகாச-புராண-காவிய-தலபுராண இலக்கியங்களின் ஏதாவதொரு நிகழ்ச்சியை மையமாக வைத்தோ அல்லது முழுவதையும் மையமாக வைத்தோ கதைப்பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. **மகாபாரதம், இராமாயணம், பாகவதம், சிலப்பதிகாரம், இசுலாமியக் காப்பியங்கள், கிறித்தவக் காப்பியங்கள், சமயக் காப்பியங்கள், சைவ சமயக் காப்பியங்கள் மற்றும்** புராணங்கள் போன்றவை தொடர்பான கதைப்பாடல்கள் மிகுந்து காணப்படுகின்றன. இவ்வகைக் கதைப்பாடல்கள் மக்களிடையே பக்தி உணர்வையும், ஒழுக்கம், மற்றும் நீதிக்கருத்துகளையும் எடுத்தியம்பக் கூடியன. **பஞ்சபாண்டவர் வனவாசம், அர்ச்சுனன் தபசு, அரக்குமாளிகை, அரவான் கதை, நச்சுப் பொய்கை, கிருஷ்ணன் தூது, கர்ணன் சண்டை, புலந்திரன் களவு மாலை, புலந்திரன் தூது, அபிமன்யு சண்டை, அபிமன்னன் சுந்தரி மாலை, ஆரவல்லி சூரவல்லி கதை, பொன்னுருவி புலம்பல், பொன்னுருவி மசக்கை. பவளக்கொடி மாலை, ஏணி ஏற்றம், வைகுந்த அம்மானை** போன்ற நூற்றுக்கும் அதிகமான கதைப்பாடல்கள் படிக்கவும், வில்லுப்பாட்டாகக் கேட்கவும் பாடப்பெற்றுள்ளன. இவற்றுள் சில இன்றும் பாடப்பெற்று வருவன. ஆனாலும் திரௌபதி பற்றிய கதையும், அதைத் தொடர்ந்த வழிபாடுமே மக்கள் சமுதாயத்தில் பங்கேற்கக் கூடியனவாக உள்ளன. இவை போன்றவற்றைத் தெய்வக் கதைப்பாடல்கள் எனலாம். இவை பல நாடகங்களாகவும் நடிக்கப்பட்டுள்ளன. இராமாயணத்தை அடியொற்றி நூற்றுக்கும் அதிகமான கதைப்பாடல்கள் பாட்டாளிகளால் பாடப்பெற்றுள்ளன. **இராமர் கதை, அயோத்தி கதை, சீதை கல்யாணம், இலவ-குசர் கதை, மயில் இராவணன் கதை, உத்தரகாண்டக்கதை, அனுமான் கதை, அங்கதன் தூது, இராமாயணக்கும்மி, இராமாயணச்சிந்து** போன்றன இவ்வகைக்குச் சான்றுகளாம்.

இராமாயணம், மகாபாரதம், பாகவதம் போன்றவற்றில் கிளைக் கதைகளாக வரும் **அரிச்சந்திரன் கதை, சத்தியவான் - சாவித்திரி கதை, நளன் கதை,** கிருஷ்ணன் பற்றிய கதைகள் போன்றவை இந்தியப் பகுதிகள் முழுதும் கதைப்பாடல்களாக இருந்தாலும், தமிழ்நாட்டில், குறிப்பாக வில்லுப்பாடல்களில் பொதுவாகப் பாடப்பட்டு வருவனவாகும். **மார்க்கண்டேயன் கதை, சித்திரபுத்திரன் கதை, எமன் காலன் தூதன் கதை** என்பனவும் புராணக்கதைகள். புராணங்களில், முக்கியமாகச் சிவ புராணங்களில்,

மன்மதன் கதை, பார்வதி அம்மன் கதை எனும் **வலை வீசியபடலம், வள்ளி அம்மன் கதை, வேடன் கதை, கந்தர் அம்மானை, வள்ளி - தெய்வானை ஏசல்** போன்றனவும், **சீவகசிந்தாமணி அம்மானை** போன்றனவும் புலவர்களால் கதைப்பாடல்களாகச் சித்திரிக்கப்படுகின்றன. **கோவிலன் கதை, கண்ணகி கதை, நல்ல தங்காள் கதை** போன்றவை காவியக்கதைகளாம். இவ்வகையான கதைப்பாடல்களில், இன்றும் மக்களிடையே தெய்வமாக வழிபடப்பெறும் தெய்வக் கதைப்பாடல்கள் பற்றிச் சிறிது ஆராயலாம். இவ்வகைக்கு **அரவான் கதை, திரௌபதி அம்மன் கதை, பார்வதி அம்மன் கதை, வள்ளியம்மன் கதை** போன்றவற்றில் வரும் தலைமை மாந்தர்கள் மக்களிடையே கோயில்களில் வழிபடப்பெறுவது குறிப்பிடத்தக்கது. ஊர்த் தெய்வ வழிபாட்டினுள் அடங்கும் இத்தெய்வங்கள் பெருந்தெய்வ வழிபாட்டில் வரும் இராமர், முருகர், கிருஷ்ணன் போன்றவர்களுக்கு முற்றிலும் வழிபாட்டு முறையில் மாற்றம் பெற்றவர்களாவர்.

4.2 புராணப் பெண் தெய்வக் கதைப்பாடல்களில் **இசக்கி எனும் நீலி கதை, மாரிஅம்மன் கதை, முத்தாரம்மன் கதை, காளி அம்மன் கதை, பச்சை அம்மன் கதை, பிரமசக்தி அம்மன் கதை, பேய்ச்சி அம்மன் கதை, செண்பக நாச்சியார் கதை, சின்னப்பிள்ளை அம்மன் கதை, முப்புராதி அம்மன் கதை, முத்துமாலை அம்மன் கதை, காமாட்சி அம்மன் கதை, பவானி அம்மன் கதை, சப்தமாதர் கதை, மீனாட்சி கதை** போன்றன சிறப்பாகப் பாடப்பெற்று வருபவை. மக்களால் இத்தெய்வங்கள் வழிபடப்பெற்றும் வருகின்றன.

புராண ஆண் தெய்வக் கதைகளில், **சுடலைமாடன் கதை, சங்கிலிப்பூதத்தான் கதை, அய்யனார் கதை** எனும் **சாஸ்தா கதை, பைரவன் கதை, செங்கிடாய்க்காரன் கதை, கருப்பசாமி கதை, காத்தவராயன் கதை, பெருமாள் சுவாமி கதை, வீரபத்திரர் கதை, சேத்திரபாலன் கதை** போன்றவை கதைப்பாடல்களாகப் பாடப்பெற்றும், இவை போன்ற தெய்வங்கள் மக்களால் வழிபடப்பெற்றும் வருகின்றன.

4.3 வரலாற்றுக் கதைப்பாடல்கள் வகையில், **வலங்கைமாலை, வெங்கலராசன் கதை, சிவனணைஞ்ச பெருமாள் கதை, சீவலமாறன் கதை, அழகன் பெருமாள் கதை, தேசிங்குராசன் கதை, உடையார் கதை, கான்சாகிபு சண்டை, வெட்டும் பெருமாள் பாண்டியன் கதை, இராமப்பையன் அம்மானை, இரவிக்குட்டிப் பிள்ளைப் போர், தம்பிமார் கதை, அந்திரமுடையார் கதை, கட்டபொம்மன் கதை, பூலித்தேவன் கதை, புதுக்கோட்டை சண்டை, சிவகங்கை அம்மானை, குமாரசாமி நாடான் கதை, எட்டு வீட்டுப் பிள்ளைமார் கதை, அண்ணன்மார் கதை, ஐவர் ராசாக்கள் கதை, கன்னடியன் கதை, பொன்னுருவி தவநிலை, முத்து நாச்சியார் சண்டை, பலவேசஞ் சேர்வைக்காரன்**

கதை, மண்டக்ராசன் கதை போன்றவை அடங்கும். இக்கதைப்பாடல்களில் வரும் சில சரித்திர மாந்தர்கள் தெய்வங்களாக வழிப்படப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இது சமூக, வரலாற்று ஆய்வுக்கு வழிவகுக்கக் கூடியதாக உள்ளது. •

4.4 சமூகக் கதைப்பாடல்கள் பல வரலாற்றுக் கதைப்பாடல்களில் அடங்குவனவாகவும் உள்ளன. **சிதம்பர நாடார் கதை, பூலங்கொண்டாள் கதை, முத்துப்பட்டன் கதை, குறுக்குளாஞ்சி கதை, வண்ணார மாடன் கதை, பகடை சுவாமி கதை, தடிவீரசுவாமி கதை, வன்னியராயன் கதை, வடுகராசன் கதை, பொன்னிறத்தாள் கதை, மதுரை வீரன் கதை, ஈன முத்துப் பாண்டியன் கதை, பிச்சை காலன் கதை, அகிலத் திரட்டு அம்மானை, தோட்டுக்காரி கதை, பெரியண்ணன் சின்னண்ணன் கதை, நாஞ்சில் குறவன் கதை, வீணாதிவீணன் கதை, மெச்சும் பெருமாள் கதை, அண்ணன்மார் கதை, பலவேசஞ்சேர்வைக்காரர் கதை** என்பன இவ்வகைக்குச் சான்றுகளாம்.

4.5 காதல் கதைப்பாடல்கள் என்பன இதிகாச-புராண-காவியக் கதைப்பாடல்களில் வரும் சில நிகழ்ச்சிகளை அடியொற்றியனவே. சான்றாக, அர்ச்சுனன், புலந்திரன், கிருஷ்ணன், மன்மதன் போன்ற பாத்திரங்களின் தொடர்புடைய கதைப்பாடல்களே இவ்வகையில் அடங்குவனவாகும். காதல் என்பது அடிப்படையாக அமைந்தாலும் அதனுடன் போர், அவலம் என்பனவும் சேர்ந்துவிடுவதையும் காணமுடிகிறது. காதல் கதைப்பாடல்களுக்குச் சில சமூகக் கதைப்பாடல்களும் சான்றுகளாம்.

4.6 சமயக் கதைப்பாடல்களில், சைவ வைணவ சமயக் கதைகளின் அடிப்படையில் தோன்றியவை மிகுதியாகவும், சமணம், கிறித்தவம், பௌத்தம் என்ற அடிப்படையில் தோன்றியன குறைவாகவும் இருப்பதை அறியலாம். முதலில் கூறப்பட்ட வகையில் இதிகாச-புராண - காவிய நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த பல கதைப்பாடல்கள் சான்றாகும்.

4.7 பிறவகைக் கதைப்பாடலாக, விலங்குகள், பற்றியும், பறவைகள் பற்றியும் மரங்கள் பற்றியும் பாடப்பெற்றவை பெரும்பாலும் நீதிகளைக் கூறுவதற்கே அமைந்தவை. இவை பஞ்ச தந்திரக்கதைகள் போன்றவை. ஊர்க்கதைகளிலிருந்தும் சில முகிழ்த்தெழுந்தவை. இவற்றுள், **சோழன் பசுக்கதை** என்ற **கபிலை கதை, தேரூர்ந்த சோழன் கதை** என்பன பசுக்களைப் பாத்திரமாக வைத்துப் பாடப்பெற்றவை . பசுவும் புலியும் உரையாடுதல், பக்தனும் அரக்கனும் உரையாடுதல், பூதமும் மனிதனும் உரையாடுதல் என்ற அடிப்படையில் கதைப்பாடல்கள் எழுந்துள்ளன.

4.8 தரையிலும், கப்பலிலும் யாத்திரை செய்தல் பற்றிய கதைகளும் உள. சான்று: **வெள்ளைக்காரன் கதை.** கப்பல் போர் பற்றிய **கபாலகாரன் கதை,** மீனவர் தொடர்பான கதைப்பாடல்கள் இன்றும் நம்மிடையே வழங்கி வருவனவற்றுள் சிலவாம்.

4.9 இதுவரை கூறப்பெற்றுள்ளனவற்றுள் ஊர்த் தெய்வக் கதைப்பாடல்களே மிகுதியானவை. ஆதலால் அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்திக் காணலாம்.

4.10 மேலே வகைப்படுத்தியது போல் கதைப்பாடல்களை வகைப்படுத்தினாலும், அவை பாடப்பெற்ற அல்லது கிடைக்கப்பெற்ற அடிப்படையில் இருபெரும் வகைகளாகப் பிரித்து, அவற்றின் முக்கியத்துவத்தையும் பதிப்பு முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறுதல் இன்றியமையாததாகும். இந்நிலையில் தமிழ்க் கதைப்பாடல்களை இருவகைகளாகப் பகுத்து ஆராயலாம். வடபகுதியில் தோன்றிய கதைப்பாடல்கள் பெரும்பாலும், மதுரை, கொங்கு, தருமபுரி, தொண்டை நாடு, சென்னை, சோழநாடு என்ற பகுதிகளில் பரவலாக எழுந்தவைதாம். **மதுரை வீரன் கதை, அண்ணன்மார் சுவாமி கதை, தேசிங்கு கதை, பெரியண்ணன் சின்னண்ணன் கதை, அமராவதி கதை,** புராண, இதிகாசப் புனைவுகளின் அடிப்படையில் எழுந்த பல சோழநாட்டுக் கதைப்பாடல்களையும், **சிறுத்தொண்டர் கதை** போன்றவற்றையும் வடபகுதிக் கதைப்பாடல் வகைக்குச் சான்றுகளாகக் கூறலாம். இவை விரல் விட்டு எண்ணக் கூடியவைதாம். ஆனால் வில்லுப்பாட்டு என்ற நிகழ்த்துகலை மிகுதியாகப் புழக்கத்தில் இருந்த *1.* மானாட்டுப் பகுதி, *2.* வள்ளியூர், *3.* தென்காசிப்பகுதி, *4.* கருவை, *5.* கயத்தாற்றுப்பகுதி, *6.* கொற்கைப் பகுதி, *7.* குமரிப் பகுதி எனத் தென்பாண்டி நாட்டின் எல்லை நிலப்பகுதிகள் அடிப்படையில் அமைந்த ஊர்களை மையமாக வைத்துப் பிரித்து, ஆங்காங்கே தோற்றம் பெற்ற கதைப்பாடல்களை ஆராய்ந்தால், கதைப்பாடல்களின் தோற்ற உண்மை, அமைப்பு, சமூக வரலாற்று உணர்வு போன்றவை மிக நன்றாக வெளிப்படும். இவ்வாறு அமைந்த எல்லை நிலமும் - கதைகளும் அந்தந்தப் பகுதிகளின் வரலாற்றையும், சமூக அமைப்பையும் அறிந்து கொள்வதற்குத் துணையாகும் என்ற காரணத்தாலேயே இப்பகுப்பு முறை மேற்கொள்ளப்படுகின்றது. வலங்கைச் சான்றோர் மானாட்டிலும் பஞ்ச பாண்டியரும் அவர்களை அண்டியோரும் எஞ்சிய பிற ஊர்களிலும், மானாட்டிலிருந்து குடிபெயர்ந்து சென்றோர் தங்கிய குமரிப்பகுதிகளிலுமே இக்கதைப்பாடல்கள் பெரும்பாலும் வில்லுப்பாடல்களாகப் பாடப் பெற்றுள்ளன. இவ்வில்லுப்பாடல்களைத் தொடக்கத்தில் மானவீரவளநாட்டு வலங்கைச் சான்றோர் குலப் பாட்டாளிகளே அடியெடுத்துக் கொடுத்தனர். பின், பல பகுதிப் பாட்டாளிகளும் பாடிச்சென்றனர்.


தமிழ்க் கதைப்பாடல்கள்
வடதமிழ் நாட்டுக் கதைப்பாடல்கள்
தென்தமிழ்நாட்டுக் கதைப்பாடல்கள்
மதுரைப்பகுதி
கொங்குப்பகுதி
தொண்டைமண்டலம்
சோழநாட்டுக் கதைப்பாடல்கள்
வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்கள்
வில்லுப்பாட்டுக் கதைகள் அல்லாதவை
மானாட்டுக் கதைப்பாடல்கள்
மானாடு அல்லாத கதைப்பாடல்கள்
வரலாற்றுக் கதைப்பாடல்கள்
தாய்த்தெய்வ வழிபாட்டுக் கதைப்பாடல்கள்
பள்ளிப்படைக் கதைப் பாடல்கள்
சமூகக் கதைப் பாடல்கள்
பிற வகையின
வலங்கை சான்றோர் பற்றிய கதைப் பாடல்கள்
பிறவரலாற்றுக் கதைப்பாடல்கள்
பெண்தெய்வக் கதைப் பாடல்கள்
ஆண் தெய்வக் கதைப் பாடல்கள்
மாடக் கோயில் கள்
இராசா கோயில்கள் பற்றியவை
சான்றோர் சமூகக் கதைப் பாடல்கள்
பிற சமூகத்தினர் பற்றிய கதைப் பாடல்கள்
வள்ளியூர்க் கதைப்பாடல்கள்
தென்காசிக் கதைப்பாடல்கள்
கருவைப் பகுதிக் கதைப்பாடல்கள்
கயத்தாற்றுப் பகுதிக் கதைப் பாடல்கள்
கொற்கைவட்டாரக் கதைப்பாடல்கள்
குமரிமாவட்டக் கதைப்பாடல்கள்

5.0 மானாடு அல்லது மானவீர வளநாட்டுக் கதைப்பாடல்கள்

5.1 மானவீரவளநாட்டின் சமூக வரலாற்றைத் தெரிந்த பின்னர் அப்பகுதியில் தோன்றிய வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களை ஆராயலாம். திருநெல்வேலி மாவட்டத்தின் தென்கிழக்கு, தூத்துக்குடி மாவட்டத்தின் தென்பகுதி அடங்கியதே மானவீரவளநாடாக முன்பு கருதப்பட்டது. பிற்காலச் சோழர்களின் படைவீரர்கள் சோழ ஆட்சிக்குட்பட்ட பல பகுதிகளிலிருந்து மானவீரவளநாட்டிற்கு வந்து படைவீடமைத்தும், குடியமர்ந்தும் வாழத்தொடங்கிய கி.பி. *11*ஆம் நூற்றாண்டிலிருந்தே மானவீரவளநாடு வரலாற்றுச் சிறப்பு அடையத் தொடங்கியது.[38] சோழர் ஆட்சியும், அதனைத் தொடர்ந்து பாண்டியர் ஆட்சியும் பின்பு சேரர் ஆட்சியும் கி.பி. *13*ஆம், *14*ஆம் நூற்றாண்டுகளில் வீழ்ச்சி அடைந்தபோதும், இசுலாமியர் படையெடுப்பின் பின்னரும், தென்பாண்டியில் பிற்காலப் பாண்டியர் ஆட்சியின் போதும், நாயக்கர்களின் ஆட்சியின் காலகட்டத்திலுமான கி.பி. *14, 15, 16, 17*ஆம் நூற்றாண்டுகளில் மானவீரவளநாட்டில் வலங்கைச் சான்றோர் இனத்தோர் பெரும்பாலாக வாழ்ந்த பகுதி மானவீரவளநாடு ஆகும். இப்படையின் ஏனாதிச் சான்றோரில் சிலர் போரற்றுப் போன காலகட்டத்தில், தம் முன்னோர் பெருமையைப் பறைசாற்றுவதற்காகச் சரித்திரக்கதைகளை வில்லுப்பாட்டாகப் புனைந்து பொதுமக்களிடையே பாடத் தொடங்கினர். இவ்வாறு பாடிய கால கட்டம் கி.பி. *1550* ஆகலாம். இதற்குக் காரணமாக இருந்தவர் ஏனாதி ஆனந்தன். இவருடைய சீடரான சுந்தரம் கி.பி. *1575*இல் **வலங்கைமாலை** எனும் வரலாற்றுக் கதைப்பாடலைப் புனைந்து, மானவீரவளநாட்டுச் சுந்தரநாச்சியார் கோயிலின் முன்பு அரங்கேற்றினார். வலங்கை மகாசேனையின் கீழ்ப் பணியாற்றிய எழுநூற்றுவர் படைப்பிரிவு காலங்காலமாகச் சோழர்களுக்காகத் தேடித்தந்த வெற்றி, அப்படையினரின் அரசியல் பங்கு, ஈழநாட்டுத் தொடர்பு போன்ற வரலாற்றுச் சமூகப் பண்பாட்டு நிகழ்ச்சிகளைஇந்தக் கதைப்பாட்டு கொண்டுள்ளது.[39] இதைத் தொடர்ந்து, கி.பி. *1606*இல் அகத்தீசுவரம் ஆறுமுகம் என்பார் மானவீரவளநாட்டில் மடிந்த **வெங்கலராசன்** என்பவன் கதையை வில்லில் அரங்கேற்றிப் பாடினார்.[40] ஏனாதி ஆனந்தனையே குருவாகக் கொண்ட அருத(ன)க் குட்டி என்பார் கி.பி. *1617*இல் **செண்பக நாச்சியார் கதையை** வில்லில் பாடி அரங்கேற்றினார்.[41] இதே காலகட்டத்தில் வள்ளியூர் இராமன் என்பார் **வலங்கை மாகாளி அம்மன் கதையை** வில்லுப்பாட்டாகப் பாடி அரங்கேற்றினார். இவ்வாறாக ஏனாதி ஆனந்தனின் சீடர்கள் நால்வர் பாடிய வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்களே தமிழில் ஏற்பட்ட முன்னோடிக் கதைப்பாடல்கள் எனில் மிகையாகாது. இவர்களுடன் சேர்ந்து பாடிய பிற வில்லுப்பாட்டாளிகள் கால ஓட்டத்தில்

தனித்தனி வில்லிசைக் குழுக்களாகப் பிரிந்து வெவ்வேறு ஊர்களில் சென்று வில்லிசைக் கதைகளைப் பாடியதன் காரணமாக, கிபி. *17* ஆம் நூற்றாண்டில் கதைப்பாடல்கள் பல்கிப் பெருக ஆரம்பித்தன. கிபி. *18* ஆம் நூற்றாண்டில் தென்பாண்டி முழுவதும், குமரி முதல் திருவனந்தபுரம் வரையும் இவ்வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் பரவின.

5.2 தொடக்கக் கால இவ்வில்லிசைப் பாட்டாளிகள் தம்மை மானவீரவளநாட்டு வலங்கைச் சான்றோர் என்று கூறிக் கொண்டனர். தாங்கள் சோழ குலத்தவர் என்றும், காளி வளர்த்த மைந்தர்கள் என்றும் கதைகளைப் புனைந்துரைத்தனர். இவர்கள் பாடிய கதைப்பாடல்களையே பெரும்பாலான பிற்காலச் சீடர்களும் பாடியதால், மானவீரவளநாட்டுக் கதைப்பாடல்கள், குமரி, தென்காசி, கொற்கை, வள்ளியூர்ப் பகுதிகளுக்கும் பரவின. பின்பு அவ்வப் பகுதிப் பாட்டாளிகள் சுயமாகவே தம் பகுதிக் கதைகளைப் பாட்டாக வில்லிசையில் அல்லது வேறு வடிவில் பாடினர். மானவீரவளநாட்டு வலங்கைச் சான்றோர் வில்லிசைக் குழுவினரிலிருந்து பிரிந்து சென்ற பிற சான்றோர் இனத்தாரும் சான்றோர் அல்லாதாரும் வில்லிசை நிகழ்ச்சிகளைத் தம்தம் பகுதிகளிலும் பரப்பத் தொடங்கினர். வில்லிசை நிகழ்ச்சி அவர்களுடைய தொழிலாக ஆகிவிட்டது. அதனால், ஆண்டுதோறும் குறிப்பிட்ட சிலமாதங்கள் திருவிழாக் காலமாதலால் வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்கள் எங்கணும் பரவத் தொடங்கின. வாய்மொழியாக இருந்த வில்லிசைப் பாடல்கள் பின்பு ஏடுகளில் எழுதப் பெற்றும் பரவின.

5.3 மானவீரவளநாட்டில் தங்கியிருந்த வலங்கை மகாசேனையைச் சார்ந்தோர் அய்யனார் தெய்வங்களைக் குல தெய்வங்களாக வணங்கி வந்தனர். ஆதலால், அத்தெய்வங்கள் மீதும் வில்லுப் பாட்டுகள் தோன்றின. தாழையடி அய்யனார் என்ற அருஞ்சுனை காத்த அய்யனார், கருக்கு வேல் அய்யனார், பொன்வண்டு அய்யனார், தூத்துவால் அய்யனார், ஆயிரங்காவு அய்யனார், தலையூனி அய்யனார், வணங்காமுடி அய்யனார்,[43] குன்றிமலை சாஸ்தா, கலியுகவரத அய்யனார், கல் வாழை அய்யனார், அடைக்கலம் காத்த அய்யனார், அரிச்சந்திர அய்யனார், அல்லியூத்து அய்யனார் போன்ற பல அய்யனார் தெய்வங்களை ஒவ்வொரு கூட்டத்தாரும் வணங்கி வருகின்றனர். இத்தெய்வங்கள் பலவற்றுக்கும் வில்லுப்பாட்டுகள் புனையப்பட்டன. அவற்றுள் சில கதைகளே வழக்கிலுள்ளன. அதிலும் வாய்மொழியாகவே அவை கிடைக்கின்றன. அய்யனார் வழிபாட்டுக் கூட்டத்தினர் பெரும்பாலும் மானவீரவளநாட்டைவிட்டு அகன்று வெவ்வேறு பகுதிகளில் குடியேறியதால் அத் தெய்வங்கள் பற்றிய வில்லுப்பாடல்களும் வழக்கொழிந்திருக்கலாம்.

5.4 வழக்கொழிந்த மானாட்டு வரலாற்றுக் கதைப்பாடல்களில், **பஞ்சாதித்தன் கதை,**[44] **மண்டங்குடி நாட்டு மன்னன் வரலாறு,**[45] **மாலணைந்த நாடான் கதை,**[46] **குமாரசாமி நாடான் கதை,**[47] **தீத்தியப்பன் கதை,**[48] **குமரப்பராசன் கதை,**[49] **செண்பகராம பணிக்கன் கதை**[50] என்பன குறிப்பிடத்தக்கன. இங்குக் குறிப்பிடப் பெற்றுள்ள கதைப்பாடல்கள் அனைத்தும் வலங்கைச் சான்றோர் குல வீரர்கள் பற்றியதாகும். அவற்றைப் பாடியோரும் வலங்கைச் சான்றோர் குலத்து வில்லுப்பாட்டாளிகளே ஆவர். ஆதலால், மானவீரவளநாட்டு தொடக்கக்கால வரலாற்றுக் கதைப்பாடல்கள் வலங்கைக்குலச் சான்றோர் கதைப்பாடல்கள் என அழைக்கப்படுகின்றன. அக்குலத்தோர் வணங்கும் தெய்வங்கள் மீதும் பாடப்பெற்ற கதைப்பாடல்களும் உள்ளன. இவை அனைத்தும் அக்குலத்தோர் பற்றிய சமூக வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ள உதவுகின்றன.

5.5 வலங்கைச் சான்றோர் பாடிய வலங்கைச் சான்றோர் அல்லாதோர் பற்றிய கதைப்பாடல்களாக **உடையார் கதை,**[51] **பலவேசஞ்சேர்வைக்காரர் கதை,**[52] **வண்ணாரமாடன் கதை,**[53] **பகடைசுவாமி கதை,**[54] **திருடிமுத்து கதை**[55] என்பன மானவீரவளநாட்டைச் சார்ந்தனவாக உள்ளன. திருக்கோளூரில் கங்கைகுலக் களப்பாள கார்கார்த்தார் வமிசத்தைச் சார்ந்த உடையார் என்பவர் தென்காசி அரசனுக்குப் பணிவிடை செய்து மறவர் சதியால் கழுவேறிய கதை **உடையார் கதைப்பாடலாக** உள்ளது. உடையாரை மானாட்டுச் சான்றோர் சிலர் வழிபடுகின்றனர். சேர்வைக்காரர்கள் தமக்குரிய தென் மானாட்டுக் காவல் உரிமையை மீட்கும் போராட்டத்தில் மாண்ட பின்னர் வழிபடப்பட்டு வருவதைக் கூறுவதாகப் பலவேசஞ் சேர்வைக்காரர் கதை உள்ளது. வண்ணார மாடன், பகடை என்போர் பற்றிய கதைகளை அறிய முடியவில்லை. கொழும்பிலிருந்து தேடிவந்த தங்கக் காசுகளை முத்து என்பவனிடமிருந்து திருடர்கள் பறித்து, அவனைக் கொன்றது பற்றியும் பாடப்பெறும் கதை இன்று வழக்கில் இல்லை. இவ்வாறு மானவீரவளநாட்டுப் பகுதியில் தோன்றிய வழக்கொழிந்த மற்றும் வழக்கொழியாத வரலாற்று வில்லுப்பாட்டுக் கதைகள் வேறுபகுதிகளைச் சார்ந்த புலவர்களாலும் பாடப்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

5.6 மானாட்டுக் கதைப்பாடல்களில் அருத(ன)க் குட்டியார் என்பவரும் அவர் சீடர்களான சிந்தாமணிப் புலவர், சிவனணைந்த பெருமாள் நாடார், வெள்ளைக் கண்ணு ஆகியோர் பாடிய 50க்கு மேலான வில்லுப்பாட்டுக் கதைப்பாட்டுகளுமே குறிப்பிடத்தக்கவை. இவை இன்றும் பாடப்பட்டு வழக்கிலும் சுவடிகளாகவும் உள்ளன.[56] அருத(ன)க்குட்டியார் 16ஆம் 17ஆம்

நூற்றாண்டுகளில் வாழ்ந்தவர். நாச்சியார் கோயில் பூசாரியாக இருந்தவர். ஊர்த்தெய்வங்களுக்கு ஒரு வரலாறு இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவற்றுக்கு வில்லுப்பாட்டுக் கதைகளைப் பாடியவர். இவர் பாடியதாக இதுவரை *10* வில்லுப்பாட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் பல வரலாற்றுத் தொடர்பு கொண்டு அமைபவை. தற்காலத்தில் அருத(ன)க்குட்டியாரின் சீடர்கள் பாடிய கதைப்பாடல்களே மிகுந்து மானாட்டில் வழக்கில் இருந்து வருகின்றன. தென்னாட்டில் வில்லுப்பாட்டுக்கு வித்திட்டவர் என இவரை அழைப்பது மிகப் பொருந்தும்.[57] அருத(ன)க்குட்டியார் பாடிய கதைப்பாடல்களில் **செண்பக நாச்சியார் கதை, பெருமாள் தம்பிரான் கதை, கபாலகாரன் கதை, அந்திரமுடையார் கதை** போன்றவை வரலாற்றுக் கதைப்பாடல்கள் ஆகும். அருத(ன)க்குட்டியாரின் சீடர்களும் அவர் விட்டுச் சென்ற கதைப்பாடல்களைப் புதுக்கியும் புதிதாகப் புனைந்தும் வில்லுப்பாட்டுக் கதைப்பாடல் இலக்கிய வகைக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

57 மானவீரவளநாட்டில் தோன்றிய அம்மன் கதைப்பாடல்களில் வலங்கை மாகாளி அம்மன் பேரில் பாடல் பெற்ற தொடக்கக் கால வில்லுப்பாட்டுக் கதைதான் பின்பு வெவ்வேறு வடிவங்களில் பல புலவர்களால் பாடப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது. வலங்கை மாகாளி பற்றிக் கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் குறிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. சோழநாட்டுக் காளி அம்மன் வழிபாடு அச்சோழர் கோலோச்சிய பகுதிகள் அனைத்திலும் ஏற்பட்டது என்ற வரலாறும் தெரிய வருகிறது. முத்தாரம்மன், முப்புராதி அம்மன், முத்துமாலை அம்மன் எனும் அம்மன் தெய்வங்கள் பற்றிய வில்லுப்பாட்டுக் கதைகள் ஏறத்தாழ *300* ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மானவீரவளநாட்டிலும் எஞ்சிய பகுதிகளிலும் பாடப்பெற்று வருகின்றன. இம்மூன்று தெய்வங்களுக்குரிய கதை நிகழ்ச்சிகள் ஒன்றாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் பிற அம்மன் தெய்வங்களாக *64* கன்னித் தெய்வங்கள் உள்ளமை இவ்வில்லுப் பாடல்களில் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது சிறப்பு. பத்திரகாளி போன்று பார்வதி அம்மன் வில்லுப்பாட்டும் அதைத் தொடர்ந்து நாச்சியார் அம்மன் தெய்வங்கள் வழிபாடும் மானாட்டில் குறிப்பிடத்தக்கவை. திருவிளையாடல்களில் ஒரு விளையாடலான வலைவீசும் படலக் கதையைத்தான் பார்வதி அம்மன் கதைப்பாட்டாகப் பாடியுள்ளனர். ஆயினும், வழிபாட்டு நிலையிலேயே பார்வதி அம்மன் தெய்வம் சிறப்புப் பெறுகிறது. இதுபோன்றே பிரமசக்தியும் அமைகிறாள். இத்தெய்வங்கள் ஏதாவதொரு புனிதப் பணிக்காகவே இறைவனால் ஏவப்படுவதாகக் கதைப்பாடல் ஆசிரியர்கள் புனைந்துரைத்துள்ளனர். சொக்க நாச்சியார், சுந்தர

நாச்சியார், பேய்ச்சி, செண்பக நாச்சியார், பெரிய தெய்வம் எனும் மாலை அம்மன், சின்னப் பிள்ளை நாச்சியார், ஆனந்த வல்லி அம்மன், சப்த கன்னியர் போன்ற மானாட்டு நாச்சியார் அம்மன் தெய்வங்களுக்குத் தனித்தனியாக வில்லுப்பாட்டுகள் பாடப்பெற்றுள்ளன.

மானவீரவளநாட்டிலிருந்து வெவ்வேறிடங்களுக்குக் குடிப்பெயர்ந்தோர் மானாட்டு அம்மன் தெய்வங்களின் பிடிமண் எடுத்துத் தம் புதிய ஊர்களில் அத்தெய்வங்களைப் பிரதிட்டை செய்து வருவதால், இங்குப் பாடப்பெற்ற கதைப்பாடலே சிறிய மாற்றத்துடன் ஆங்காங்கே பாடப்பெறுவது இயல்பாக உள்ளது. மானாட்டிலும் பாடப்பெறும் அம்மன் கதைப்பாடல்களாக மாரியம்மன் பேரிலும், நீலி எனும் இசக்கி அம்மன் பேரிலும், முருகன் மணந்த வள்ளி அம்மன் பேரிலும் வில்லுப்பாடல்களும் அதற்கான சுவடிகளும் ஏராளமாகக் கண்டறியப்பட்டுள்ளன.

5.8 மானவீரவளநாட்டுப் பொதுக் கதைப்பாடல்கள் வரிசையில், சுடலைமாடன் கதை, சாஸ்தா கதை, பெருமாள் சுவாமி கதை, இசக்கி எனும் நீலியம்மை கதை, மாரியம்மன் கதை, முத்தாரம்மன் கதை போன்றவை கண்டறியப்பட்டுள்ளன. இவை எல்லா வில்லுப்பாட்டுக் கலைஞர்களாலும், உடுக்குப் பாட்டுக்காரர்களாலும் பாடப்படுபவையே. நீலி அம்மன் கதையைக் கணியான்குழுவினர் எல்லாப் பகுதியிலும் ஆடிப் பாடுவதைக் காணலாம்.

சுடலை மாடன் கைலாயத்தில் தோன்றிக் காசியில் பிணம் தின்று, மலையாளப் புலையனை வென்று, மேற்கு மலைத் தொடர் மரமொன்றில் குடியிருந்தான். திருச்செந்தூர் முருகன் கோயில் கொடி மரத்திற்காகத் தச்சர்கள் அம்மரத்தை வெட்டும்போது, பலி வாங்கிப் பின், அம்மரத்தோடு திருச்செந்தூர்க்கு வந்து கோயில் கொண்டதாக வில்லுப்பாடல் வடிவமைக்கப் பெற்றுள்ளது. இதைக் கூட்டியோ குறைத்தோ பல ஊர்களில் பல பாட்டாளிகள் பாடுவதுண்டு. இதன் அடிப்படையில் தோன்றியதே **மலையாளப் புலையன் கதை** என்ற வில்லுப்பாட்டு. சுடலை மாடன் வழிபாடு பற்றி ஆராய்வோருக்கு இக்கதைப்பாடலின் எல்லாப் பிரதிகளும் துணையாகும் என்பதில் ஐயமில்லை. சீவலப்பேரி சுடலைமாடன் பிரபலமடைந்த தெய்வம் என்பது குறிப்பிடத்தக்கது. சாஸ்தா எனும் அய்யன் கதையை வில்லிசையில் பாடாத பாட்டாளி இருக்கவே முடியாது. அவ்வளவிற்கு அது தென் பகுதியிலும் குமரிப் பகுதியிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சாஸ்தா எனும் தெய்வம், பல வடிவில் தமிழகத்தில் கண்டறியப்பட்டுள்ளது. பூரண-புட்கலையோடு இருக்கும் அய்யனார்

வடிவங்களே மானவீரவளநாட்டில் மிகுதி. அய்யனார் வழிபாட்டினூடே ஐயப்பன் வழிபாடும் கலந்துவிடுவதை இக்கதைப்பாடல்களிலிருந்து அறிய முடிகிறது.

பெருமாள் எல்லா இடத்திலும் கோயில் கொண்டிருந்தாலும் தென்பாண்டி நாட்டில் நம்மாழ்வார்க்குப் பின்பும், குமரியில் வைகுண்டர் எனும் முத்துக்குட்டி சுவாமிக்குப் பின்பும் பிரபலம் அடைந்திருப்பது குறிப்பி. ந்தக்கது. சிவனும் பெருமாளும் இணைந்த வழிபாட்டைத் தென்ன ட்டில் அறிந்து கொள்ள முடிகிறது. பெருமாளுக்கென்று தனியாகச் சிறுகோயில்கள் தென்னாடு எங்கணும் காணப்படுவதால், அக்கோயில்களில் பாடத்தக்கதாக அருத(ன)க்குட்டியார் கி.பி. *1623*ல் அரங்கேற்றியதான **பெருமாள் தம்பிரான் கதைப்பாடலின்** சுவடிப் பிரதிகள் பயன்படுத்தப்படுகின்றன. திருவரங்கத்திலிருந்து பெருமாள் இடம் பெயர்ந்து சோழநாட்டு, பாண்டியநாட்டுத் திருத்தலங்கள் சிலவற்றின் வழியாகச் சேரநாடு சென்று திருவனந்தபுரத்தில் பள்ளி கொள்வதாக இக்கதை அமைந்துள்ளது. சேர, சோழ, பாண்டியர் பகுதிகளை இக்கதை தொட்டுச் செல்வதால் தென்னாட்டு மக்களும் குமரி மக்களும் குறிப்பாக அவர்களில் சான்றோர் குலத்தினர் **பெருமாள் தம்பிரான் கதைப்பாடலைப்** போற்றி வருகின்றனர்.

சோழநாட்டு, தொண்டை நாட்டு நிகழ்ச்சிகளின் அடிப்படையில் நீலி எனும் பழிகாரத் தெய்வக் கதை நடந்தாலும் அதற்குத் தென்னாட்டுப் புலவர்களே வில்லுப்பாட்டிலும் கணியான் ஆட்டத்திலும் உயிரூட்டி வருகின்றனர். இதையே **இசக்கி அம்மன் கதைப்பாடல்** என்றும், **பேய்ச்சி அம்மன் கதைப்பாடல்** என்றும் வழங்குகின்றனர்.

மாரி அம்மன் கதையும், அது தொடர்பான பிறபாடல்களும் தமிழகம் முழுவதும் பாடப்பெறுபவை. **மாரியம்மன் தாலாட்டு, மாரியம்மன் வருணிப்பு, மாரியம்மன் பேரில் துதிப்பாடல்கள்** போன்றவை இவ்வரிசையில் குறிப்பிடத்தக்கவை. ஆயினும் **மாரியம்மன் வில்லுப்பாட்டு** தென்னாட்டிலும் குமரிப் பகுதியிலுமே ஒரு கதை அமைப்பில் புனையப்பட்டிருக்கின்றமை சிறப்பானதாகும்.

முத்தாரம்மன் போன்ற அம்மன் தெய்வங்களைப் பெரும்பாலும் தென்பகுதி மக்கள் வணங்கி வில்லுப்பாட்டுகளையும் புனைந்துள்ளனர். அவர்கள் குடிபெயரும் நகரங்களில் கோயில்கள் அமைப்பார்களே அல்லாது வில்லுப்பாட்டு, அல்லது வேறு கதைப்பாடல் வடிவில் பாடல்களைப் பாடுவதில்லை. வழிபாட்டோடு நிறுத்திக் கொள்கின்றனர். ஆனால் தென்பகுதிக்

கோயில்களில் வில்லிசைக் கச்சேரி இல்லாமல் வழிபாடே இருப்பதில்லை. எனவே வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்கள் மக்களின் சமூகப் பழக்க வழக்கங்களோடு ஒட்டி உறவாடுகின்றன எனலாம்.

மானவீரவளநாட்டுடன் நிலத் தொடர்பும் வரலாற்றுப் பண்பாட்டுத் தொடர்பும் கொண்ட வள்ளியூர்ப் பகுதி, அதனுடன் தொடர்பு கொண்ட தென்காசிப் பகுதி, இம்மூன்று பகுதிகளிலிருந்து குமரிக்குக் குடியேறியோர் பாடிய கதைப்பாடல்கள் போன்றவற்றை இனி ஆராய்வது அவசியமாகிறது.

6.0 வள்ளியூர் வட்டார வில்லுப்பாட்டுக் கதைப்பாடல்கள்

6.1 பாண்டியர்கள் மதுரையை விட்ட பிறகு தென்பாண்டி நாட்டில் சில இடங்களில் ஆட்சி புரிந்துள்ளனர். இந்த ஆட்சியாளர்களைப் பஞ்ச பாண்டியர் என்றும் ஐவர் ராசாக்கள் என்றும் கதைப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. ஐவர் ராசாக்களில் வள்ளியூர் குலசேகர பாண்டியனே முதன்மையாகக் கருதப்படுகிறான். மதுரையின் தொடர்பு அல்லது எச்சம் வள்ளியூர்ப் பாண்டியனுக்கே இருப்பது சில கதைப்பாடல்களிலிருந்து தெரிய வருகின்றது. **பொன்னுலகர் கதை,**[58] **உலகுடை நாயனார் கதை,**[59] **முத்துப்பிள்ளை நாச்சியார் கதை,**[60] **மாலை அம்மன் கதை**[61] என்பன மதுரை அரசியலுக்கும் வள்ளியூர் அரசியலுக்கும் உள்ள, விட்ட குறை தொட்ட குறைகளை எடுத்தியம்புகின்றன. குலசேகர பாண்டியனின் அன்னை, அவள் சகோதரர்கள், அவள் கணவன் போன்றவர்கள் மதுரையிலும் வள்ளியூரிலுமாகப் பேசப்படுகின்றனர். இவை அனைத்தும் வில்லிசையில் பாடப்பெற்றுச் சுவடிக் கதைப்பாடல்களாக உள்ளன.

6.2 குலசேகரபாண்டியன் வரலாற்றைக் குறிப்பது **ஐவர்ராசா கதைப்பாடலாகும்**. இது முதன் முதலாக விருத்தத்தில் பாடப்பெற்று அச்சாகியுள்ளது.[62] பின்பு *1975* இல் நா. வானமாமலையால் பதிப்பிக்கப் பெற்றது.

குலசேகர பாண்டியனைக் கன்னடியராசனின் மகள் விரும்பினாள். ஆனால் பாண்டியன் அத்திருமணத்தை வெறுத்தான். கன்னடியன் போர் செய்து வலிந்து பாண்டியனைக் கொண்டு செல்லும் போது அவன் தற்கொலை செய்து கொண்டான். கன்னடியன் மகளும் உடன் இறந்தாள். இவை பற்றிய வரலாற்றுப் புனைவாக இக்கதைப்பாடல் அமைந்துள்ளது. **கன்னடியன் சண்டை**[63] என்ற பெயரிலும் இவ்வரலாற்று நிகழ்வு கதைப்பாடலாகப் பாடப் பெற்றுள்ளது. **அஞ்சு தம்பிரான் கதை**[64] என மலையாள எழுத்திலும் **ஐவர்ராசா கதை** வழங்கப்படுகிறது. இக்கதைப்பாடலின் தமிழ் ஏட்டுப்பிரதிகள்

மானவீரவளநாட்டிலுள்ள குலசேகர பாண்டியன் பெயரிலமைந்த இராசாங்கக் கோயில்களிலும் பாதுகாக்கப் பெறுகின்றன. ஆண்டுதோறும் இக்கோயில்களில் படிக்கப்பெறுகின்றன. இக்கோயில்களில் குலசேகர பாண்டியனை நாடார்களில் சில பிரிவினர் தெய்வமாக வணங்கி வருகின்றனர். **இடைச்சி செல்லி கதையும்** வள்ளியூர்க் கோட்டை பற்றியதே. **மன்னன் மகிபன் கதை, பாடும் பரசி கதை** என்பதும் இவ்வூர் தொடர்பானவையே. ஐவர்ராசா கதையுடன் தொடர்பு கொள்வது **வீணாதி வீணன் கதை.**[65]

6.3 குலசேகர பாண்டியன் வேறிடம் சென்றிருந்தபோது கொள்ளையடித்துப் பொருள் சேர்த்தவன் வீணாதி வீணன். பின்பு இவன் பாண்டியனால் மன்னிக்கப்படுகிறான். ஆனால், வள்ளியூர்க்கு அருகிலுள்ள சித்தூரய்யன் கோயிலில் கன்னித் திருட்டைச் செய்து தண்டனை பெற்றவர்களின் கதையை **வன்னியடி மறவன் கதை**[66] சித்திரிக்கின்றது. **ஈனமுத்துப் பாண்டியன்** கதையும் இப்பகுதி சார்ந்ததாகவே காணப்படுகிறது.[67] இவ்வாறு வள்ளியூர் வட்டாரக் கதைப்பாடல்களில் ஒரு பகுதி அப்பகுதியில் நடந்த கொள்ளைகளைத் தொடர்பு படுத்தியே பாடப்பெற்றுள்ளது. **அந்திரமுடையார் கதையிலும்**[68] வள்ளியூர்க்கு வந்து கொள்ளையடித்த பிரான்மலைக் கள்ளர்களே பிடிபடுகின்றனர். மானவீரவளநாட்டுக் கருக்குவேலய்யன் கோயிலில் நடைபெறும் கள்ளர் வெட்டு விழாவிலும் கோயிலில் திருடியவர்களே பாண்டியனால் தண்டனை பெறுவதாகச் சித்திரிக்கப்படுகிறது.[69] இக்கோயிலில் பத்து நாள் திருவிழாவில் குலசேகரபாண்டியன் (ஐவர்ராசா) கதை வில்லில் பாடப்பெறுவதும் உள்ளது. வள்ளியூர் வட்டாரத்தில் ஒரு நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்த ஜெம்புலிங்கம் கதையும் கொள்ளை தொடர்பானது தான். இதனருகேயுள்ள மலைத்தொடரில் நடந்த முத்துப்பட்டன் கதையிலும் கூட மாடுகளைத் திருடியோரைப் பிடித்தடக்கிய கதை நடந்ததாகக் கூறப்படுகிறது.

6.4 வள்ளியூர் வட்டாரத்தில் ஊர்த் தெய்வங்கள் பல வில்லிசைக் கதைப்பாட்டுகளைப் பெற்றுள்ளன. இவற்றைப் பாடிய பல பாட்டாளிகள் மானாட்டு அருத(ன)க்குட்டியாரின் சீடர்களும், அம்மரபினரும் ஆவர். வெள்ளைக்கண் நாடார், சிவனணைந்த பெருமாள் நாடார் போன்றோரின் சீடர்கள் பலர் பல தெய்வக் கதைப்பாடல்களை இயற்றியுள்ளனர். இராமன் என்பவர் வலங்கைமாகாளிக் கதையைப் பாடினார் என முன்பே கூறப்பட்டது காண்க. இவ்வாறு வள்ளியூர் வட்டாரத்துத் தொடக்கக் காலக் கதைப்பாடல்கள் வள்ளியூர் - மதுரை அரசியல் தொடர்புடனும், பிற்காலக் கதைப் பாடல்கள் கொள்ளைகள் தொடர்புடனும் இருப்பது தெரிகின்றது.

7.0 தென்காசி வட்டாரக் கதைப்பாடல்கள்

7.1 வள்ளியூர் அரசியல் போல் தென்காசிக்கும் மதுரைத் தொடர்பு உள்ளது. ஆயினும், தென்காசிக்கு வடகாசியின் தொடர்புதான் தொடக்கக் காலத்திலிருந்ததாக ஆங்குள்ள செய்திகள் கூறுகின்றன. தென்காசி ஆட்சியாளர் தொடர்பாகப் **பொன்னுருவி தவநிலை, சிவனணைஞ்ச பெருமாள் கதை, சீவலமாறன் கதை, அழகன் பெருமாள் கதை**, போன்றனவும், அதன் அருகிலுள்ள ஊர்கள் தொடர்பாக **இலட்சுமி அம்மன் தவநிலை, பொன்னிறத்தாள் கதை, வடுகராசன் கதை, முத்துப்பட்டன் கதை, குறுக்குளாஞ்சி கதை, சின்னத்தம்பி கதை** என்பனவும், தெய்வக் கதைப்பாடல்களாக, **சொரிமுத்தையன் கதை, சங்கிலிப் பூதத்தார் கதை** போன்ற கதைப்பாட்டுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவை அனைத்தும் வில்லுப்பாட்டுக் கதைகளாகவும், ஏட்டில் கிடைப்பனவாகவும் உள்ளன.

7.2 தென்காசியைத் தலைநகராக வைத்துத் தென்பாண்டி நாட்டை ஆண்டவர்களில் ஒருவன் சீவலமாறன் எனும் அதிவீரராம பாண்டியன் ஆவான். இவனது தங்கை பொன்னுருவி. மானூரை அரசாண்ட செண்பகராமனுக்குப் பொன்னுருவி மாலையிட்டாள். குழந்தை வரம் வேண்டிக் கோவில் தொறும் தவமேற்கொண்டாள். இறுதியில் சிவனணைந்த பெருமாளைப் பெற்றெடுத்தாள். சிவனணைந்த பெருமாள் வளர்ந்து பின் தென்காசிப் படைவீட்டிலிருந்தான். தென்காசியைச் சேர்ந்த வண்ணார் வீட்டுப் பெண் சிவனணைஞ்சியை வசியம் செய்து வைத்துக் கொண்டான். அவளை விட்டு விடச் சொல்லிச் சீவலமாறன் கேட்ட பிறகும் விடாததால் ஏற்பட்ட போரில் சிவனணைஞ்சியைக் கொன்று விட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டான்.[72] மேலேயுள்ளவற்றைப் **பொன்னுருவி தவநிலை** என்றும், **சிவனணைஞ்ச பெருமாள் கதை** என்றும் இரு பிரிவாகப் பிரித்துப் பார்ப்பாரும் உளர்.[73] வில்லுப்பாட்டாக இல்லாமல், விருத்தத்திலும் இருப்பது அதனைப் பாடிய ஆசிரியர் வில்லுப்பாட்டாளியல்லாத புலவர் பரம்பரையினர் என்பது தெரிகின்றது.[74]

சீவலமாறனின் மெய்க்காப்பாளனான உடையார் என்பவர் வஞ்சகத்தால் காட்டிக் கொடுக்கப்பெற்றுக் கழுவேறிய உடையார் கதையும், அதைத் தொடர்ந்து அவரைத் தெய்வமாக வணங்குவதும் ஏற்பட்டுள்ளது.[75] இதைப் போன்றே, மண்டைக்காட்டுப் பகுதியிலிருந்து தென்காசி வழியாக வந்து கொண்டிருந்த மண்டக் ராசா என்பவரின் உறவினரோடு சிவனணைந்த

பெருமாள் தெய்வமும் மூலப்பொழிக்கு வந்ததாகவும், அத்தெய்வத்திற்குத் தனிக்கோயிலும் இருப்பதும் அறியப்படுகின்றன.[76] **இலட்சுமி அம்மன் தவநிலை** தென்காசியை அடுத்த புளியறை தொடர்பான கதை தான்.[77] பொன்னுருவி தவநிலையைப் போன்றது இது.

7.4 தென்காசிப் பகுதியைப் பிற்காலத்தில் வன்னிய மறவர்களும் வடுகர்களும் ஆண்டுள்ளனர். வடுகர் இனத்தவரில் ஒருவன் **வடுகராசன்** என்ற பெயருடையவன். அவன் தென்காசி முதல் சீவலப்பேரி ஆற்றுப்பாலம் வரை வேட்டை ஆடி வருபவன். வேட்டை நாய்கள் சில அவனிடமிருந்தன. சீவலப்பேரி ஆற்றுப்பாலத்தின் கீழ் புதையல் எடுப்பதற்காக வடுகராசனை வெட்டிக் கொன்று புதையலெடுக்கச் சென்ற மூன்று வேடதாரி முனிவர்கள் மாண்டனர். இக்கதை **வடுகராசன் கதை**[78] என வில்லில் பாடப்பெறுகிறது. புதையல் எடுப்பது தொடர்பான மற்றொரு கதை **பொன்னிறத்தாள் கதை** என்பது.[79] தென்காசியை அடுத்த கடையம் மலையில் நடந்த ஒரு கோரக்கொலை தொடர்பானது. பொன்னிறத்தாள் நிறைமாத கர்ப்பிணி. வடுகர் குலத்தைச் சார்ந்தவள். சில கள்ளர்கள் அவளை ஏமாற்றிப் பலி கொடுத்தனர். இக்கதை மலையாள எழுத்திலும் இடம் பெற்றுள்ளது.[80] தமிழ் வில்லுப்பாட்டுக் கதையும் உள்ளது.[81] புதையல் எடுப்பதற்காகத் தலைப்பிள்ளையைப் பலிகொடுத்த கதை, கடையத்தை அடுத்த பகுதியில் நடந்தது. இது **சின்னத் தம்பி கதை** எனப்படுகிறது.[82] முதலில் வேட்டைக்காரனாக இருந்த **சின்னத்தம்பி** பின்பு கோட்டைக் காவலன் ஆனான். அதைப் பொறுக்காத சிலர் அவனைப் பலியிட்டுப் புதையல் எடுத்தனர். கடையத்துக்கு மேற்கேயுள்ள மேற்குமலை தொடர்பான கதைப்பாடல்கள் பல இப்போது கண்டறியப்பட்டுள்ளன.

7.5 **சின்னத்தம்பி கதை** நடந்த திருக்குறுங்குடிப் பகுதியில்தான் **சங்கிலிப்பூதத்தார் கதையும் பிரம்ம ராட்சசன் கதையும்** நடந்ததாகப் பாடப் பெற்றுள்ளன.[83] சங்கிலிப் பூதத்தார் உறையும் கோயிலில் தலைமையாக விளங்கும் சொரிமுத்து அய்யனார் தொடர்பாகத் தனிக்கதைப்பாடல் உள்ளது.[84] அம்மலைத் தொடர் வழியாகச் சென்று மலையாள நாட்டில் வேலை செய்த குறுக்குளாஞ்சி வெட்டப்பட்ட கதை குறுக்குளாஞ்சி கதைப்பாட்டில் சித்திரிக்கப்படுகிறது.[85] மலையில் நடந்த மற்றொரு கதை **முத்துப்பட்டன் கதை.**[86] சொரிமுத்து ஐயனார்க்கு அருகே முத்துப்பட்டனுக்கும் கோயில் உள்ளது. சாதி விட்டுச் சாதி மாறித் திருமணம் செய்த முத்துப்பட்டன் மாடுகளை ஓட்டிச் சென்ற கள்ளர்களை வென்று வாளைக் கழுவும் போது

வெட்டப்பட்டு இறந்தான். **அய்யனார் கதையும்**[87] இம்மலையில் இருந்த கள்ளர்களை அடக்கிய செய்தியை மையமாகக் கொண்டதுதான். இவ்வாறு தென்காசி வட்டாரக் கதைகள், ஆட்சி வர்க்கத்தாரிடையேயும், ஆட்சிக்குத் துணைநின்றவர், மற்றும் தெய்வக் கதைப்பாடல்களாகவும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

8.0 கருவை - கயத்தாற்றுக் கதைப்பாடல்கள்

8.1 வள்ளியூர், தென்காசி எனும் நகர்களை ஆண்டவர்களின் தாயாதிகளே கருவையிலும் ஆண்டனர். கருவை என்பது கரிவலம் வந்த நல்லூர். பிற்காலப் பாண்டியர்களில் ஒருவனான வரதுங்கராம பாண்டியன் அங்கே ஆட்சி செய்தான். கரிவலம் வந்த நல்லூர்ப்பகுதியின் வட எல்லையில் அமைந்த மலைத் தொடர்களில் நடந்ததாக **வனமூர்த்திலிங்க அய்யனார் கதை** அல்லது **பொன்னோட்டக்காரன் கதை**[87] கண்டறியப்பட்டுள்ளது. இக்கதைப்பாட்டு வில்லிலும் பாடப்பெறுவது. இது **ஓட்டக்கார சுவாமி** கதை[88] என்றும் பெயர் பெறும். மதுரைப் பாண்டியனிடமிருந்த பொன்னோட்டக்காரன், சின்னோட்டக்காரன் எனும் சகோதரர்கள் மீனாட்சி அம்மன் கோயிலுக்குக் கொடி மரம் வெட்டச் சென்றவர்களிடம் ஓடி அரசனின் செய்தியை அறிவித்து இறுதியில் வன மூர்த்திலிங்க அய்யன் கோயிலில் தெய்வமாகின்றனர். இப்பகுதியில் கிபி. *16* ஆம் நுற்றாண்டில் நடந்த கதையான **வன்னியராயன் கதை**[89] களவு தொடர்பானது.

8.2 **பூலித்தேவன் சிந்து,**[90] **சந்தனத் தேவன் கதை**[91] என்பன முறையே கிழக்கு இந்தியக் கம்பெனியின் படைகளை எதிர்த்த பூலித்தேவனின் வரலாற்றையும், அப்பகுதிகளில் கொள்ளையிட்ட சந்தனத் தேவனின் வரலாற்றையும் விளக்குவன. பூலித்தேவன் காலத்தில் கம்பெனிப் படையிலிருந்து பின்பு மதுரைக்குக் கவர்னராகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட கான்சாய்பு என்ற வீரன் கருவையை அடுத்த பகுதியில் பிறந்தவன். **கான்சாகிபு சண்டை**[92] என இவன் கதை பாடப்பெற்றுள்ளது. கருவைக்குக் கிழக்கே மானூரில் சோழர்களின் பிரதிநிதியாக ஆண்டவன், செண்பகராசன்.[93] இவன் பெயரிலும் வில்லுப்பாட்டுக் கதை எழுந்துள்ளது.

8.3 கயத்தாறு வரலாற்று முக்கியத்துவம் பெற்ற பகுதியாகும். பிற்காலப் பாண்டியர்களில் முன்னோடியான வெட்டும்பெருமாள் பாண்டியன் கயத்தாற்று அரசனாவான். விசுவநாத நாயக்கரும் வெட்டும் பெருமாள் பாண்டியனும் நேருக்கு நேர் பொருது, அதில் பாண்டியன் தோல்வியுற்றதால், பாண்டியனும்

அவனைச் சார்ந்தோரும் கயத்தாற்றை விட்டுக் கொற்கை முதலான பல பகுதிகளில் குடியேறிய செய்தியை **வெட்டும் பெருமாள் பாண்டியன் கதைப்பாடல்**[94] சித்திரிக்கின்றது. இதே வெட்டும் பெருமாள் பாண்டியன் தென்காசி அரசர்கள் உறவினன் ஆவான் என அழகன் பெருமாள் கதை (பதிப்பாசிரியர் சு. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, 2000) கூறுகின்றது. பாஞ்சாலங்குறிச்சிப் பாளையம் போன்ற பல பாளையங்களும் ஜமீன்களும் இந்நிகழ்ச்சிக்குப் பின்தான் தோற்றுவிக்கப்பட்டன. அவ்வாறானவற்றில் ஒன்றான பாஞ்சாலங்குறிச்சியில் வீரவரலாறு ஒன்று ஏற்பட்டது. கட்டபொம்மு பற்றியதே அது.[95] வில்லிலும், உடுக்கு, கோணங்கி போன்றவற்றிலும் கட்டபொம்மு கதை பாடப்பெறுகின்றது. கட்டபொம்மு தென்பாண்டி நாட்டில் பல பகுதிகளுக்கு ஒருங்கிணைப்பாளனாக இருந்துள்ளான். கம்பெனிப் படைக்கும் கட்டபொம்முவுக்கும் நடந்த பல சண்டைகளுக்குப் பின் அவனைக் கயத்தாற்றில் தூக்கிலிட்டனர். அவ்னுக்குப்பின் ஊமைத்துரை மீண்டும் சண்டையிட்டுத் தோற்று மடிந்தான்.

இக்கதைநிகழ்ச்சி **ஊமைத்துரை சண்டை** அல்லது **புதுக்கோட்டை சண்டை**[96] எனப் பாடப்பெற்றுள்ளது. சிவகங்கை தொடர்பான கதைப்பாடல்களையும் இப்பகுதியில் கூற இயலும். இவ்வாறு கருவை-கயத்தாற்றுப் பகுதிகளில் வீரவரலாறுகள் பெரும்பாலும் கதைப்பாடல்களாக எழுந்துள்ளன. ஆயினும் திருட்டுத் தொடர்பாகவும், தெய்வங்கள் பேரிலும் கதைப்பாடல்களைப் பாடியுள்ளனர். இவ்வட்டாரத்தில் வாழ்ந்த ஆண்டான் எனும் ஒரு வசைக் கவிஞன் கூட கவிராயர்களுக்குத் தலைவனாக வாழ்ந்துள்ளான். தண்டபாணி சுவாமியார் இக்கவிராயன் வரலாற்றை 70 பாடல்களில் பாடியுள்ளார். இக்கவிராயன் கொற்கை வட்டாரங்களில் நாடார்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகவே திகழ்ந்துள்ளான்.[97]

9.0 கொற்கைக் கதைப்பாடல்கள்

9.1 மேலே கூறப்பெற்ற பகுதிகளில் தோற்றம் பெற்ற கதைப்பாடல்கள் போலவே கொற்கை வட்டாரங்களிலும் ஆட்சியாளர் தொடர்பாகவும், சோழநாட்டுத் தொடர்பாகவும் சில கதைப் பாடல்கள் தோற்றம் பெற்றுள்ளன.

பிற்காலச் சோழர்களின் நிலப்படை கொற்கைப் பகுதியில் தங்கியிருந்ததால், அப்படைவீரர்களை மகிழ்விக்க எழுந்த சில சோழநாட்டுக் கதைப்பாடல்கள் விலங்குகளை மையமாக வைத்து எழுந்துள்ளன. **தேரூர்ந்த சோழன் கதை** போன்று, **சோழன் பசுக்கதைப்பாடல்** எழுந்துள்ளது.[98] பசுவும்

புலியும் தம்முள் வாதம் புரிந்து, இறுதியில் பல நீதிகளைப் பரிமாறி, மோட்ச மடைந்த கதை ஓலைச்சுவடிகளில் கிடைக்கிறது. இதைப்போன்றே சோழநாட்டு மன்னன் மனைவியும், மந்திரி மனைவியும் தம்முள் பந்தயங்கட்டிக் கொண்டு, அதனால் தோன்றிய மந்திரி குமாரன் ஆமை வடிவானான். இறுதியில் பல தேர்வுகளில் வென்று அரசன் மகளை மணமுடித்தான். இக்கதை **ஆமையர் அம்மானை** என்ற பெயரில்[99] கொற்கை வட்டாரங்களில் வில்லுப்பாட்டாகப் பாடப்பெறுகின்றது.

9.2 கொற்கையிலும் கோலோச்சிய அதிவீரராம பாண்டியனைப் பற்றிய கதைப்பாடல் ஒன்று விற்கதைப்பாட்டாகப் பாடப்பெற்று ஏட்டிலும் எழுதி வைக்கப்பெற்றுள்ளது.[100] இவ்வட்டாரத்தில் வாழ்ந்த மந்திரமூர்த்தி எனும் **தடிவீரசு... ட** பெயரிலும் ஒரு கதை கி.பி. *1877* இல் ஏட்டில் எழுதப்பெற்றுள்ளது.[10] பொன்னையா புலவர், அவர் மகன் தங்கப்பாண்டி நாடார் போன்றோர் வில்லிசையில் கைதேர்ந்த பாடகர்களாகவும், விற்கதை இயற்றும் திறமை வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். இவர்கள் இயற்றிய **முத்துநாச்சியார் சண்டை**[102] இப்பகுதியில் பேசப்படும் முக்கிய கதை நிகழ்ச்சியின் அடிப்படையில் தோற்றம் பெற்றதுதான். இப்பாட்டாளிகள் பல தெய்வக் கதைப்பாடல்களைப் பாடியுள்ளனர். அவை அனைத்தும் ஏடுகளிலும் இடம்பெற்றுள்ளன. **வேடன் அம்மானை, விசயன் தவநிலை** போன்ற பாரதக் கிளைக் கதைகள் கொற்கை வட்டார வில்லுப் பாட்டாளிகளால் பாடப்பெற்றவை. இவை போன்ற பொதுக் கதைப்பாடல்கள் எண்ணிலடங்கா.[103]

10 . குமரிமாவட்டக் கதைப்பாடல்கள்

10.1 மானவீரவளநாட்டிலிருந்தும் தென்காசிப்பகுதியிலிருந்தும் தென்திருவிதாங்கூர்ப் பகுதிகளுக்குக் குடிபெயர்ந்தோர் தம் குலதெய்வங்களையும், அக்குலதெய்வங்களுக்குரியதான வில்லுப்பாட்டுகளையும் அங்கே கொண்டுசென்றனர். குமரி மாவட்ட வில்லுப் பாடல்களை ஆராய்ந்த ஸ்டூவர்ட் பிளாக்பர்ன் என்பவர் அகத்தீசுவரம் வைத்தியர் கு. ஆறுமுகப் பெருமாள் நாடாரைப் பேட்டி கண்டபோது அன்னாரின் முன்னோர் மானாட்டிலிருந்து குமரிப்பகுதிக்குக் கிபி. *1658*க்கு மேல் குடியேறியதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் அதற்கு முன்பாகவே கிபி*1606* இல் அகத்தீசுவரம் ஆறுமுகம் என்பவர் **வெங்கலராசன் கதைப்பாடலை** வில்லுப்பாட்டாகப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

10.2 அகத்தீசுவரத்தில் கிபி. *17* ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பல வில்லுப்பாட்டாளிகள் பரம்பரை பரம்பரையாக வில்லுப்பாட்டுக் கதைகளைப்

புனைந்தும், ஊரூராகச் சென்று பாடியும், அவற்றைச் சுவடிகளில் எழுதியும் வந்துள்ளனர். அணைஞ்சபெருமாள் கவிராயர், நாகமணி மார்த்தாண்டன் போன்ற கி.பி. *18*ஆம், *19* ஆம் நூற்றாண்டுப் பாட்டாளிகள் பாடிய வில்லுப்பாடல்களும், சரவெழுதிய சுவடிக் கதைப்பாடல்களும் எண்ணற்றவை. அந்த மரபில் வந்து தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டவர் வைத்தியர் கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் ஆவார்.

10.3 தென்திருவிதாங்கூர் வில்லுப்பாட்டாளிகள் தொடக்கத்தில் வரலாற்றுக் கதைப்பாடல்களையும், இதிகாச, புராணங்களில் வரும் கிளைக்கதைகளையும் கோயில்களில் பாடினர். இவ்வரிசையில், மானாட்டு, தென்காசி நாட்டுக் கதை நிகழ்ச்சிகளே இடம்பெற்றிருந்தன. பின்பு திருவாங்கூர்ப் பகுதியிலேயே நடைபெற்றதான சிலருடைய வீரவரலாறுகளைப் புனைந்துரைத்தனர். **தம்பிமார் கதை, இரவிக்குட்டிப் பிள்ளை போர், தோட்டுக்காரி கதை, புருசாதேவி கதை, எட்டு வீட்டுப் பிள்ளைமார் கதை, ஒட்டன் கதை** போன்றவை இவ்வீர வரலாறுகளில் சிலவாம்.

10.4 தென்திருவிதாங்கூரில் சிறப்பாகத் தோன்றிய கதைப்பாடல்கள் சமூகக் கதைப்பாடல்கள் எனில் அது மிகையாகாது. **சிதம்பர நாடார் கதை, பூலங்கொண்டாள் கதை, பிச்சைகாலன் கதை** என்பனவும், பிற்காலத்தில் கலைவாணர் தொடக்கம் பாடப்பெற்ற, சுதந்திரப் போராட்ட நிகழ்வு வில்லுப்பாட்டுக் கதைப் பாடல்களும் குறிப்பிடத்தக்கவை. கவிமணியின் **நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மான்மியமும்** கூட இவ்வகையில் சேரும் வில்லுப்பாட்டு அல்லாத கதைப்பாடலாம். நீலி கதைபோல, நீலன் கதைப்பாடலும் குமரிமாவட்டத்தின் பங்களிப்பு ஆகும். **அகிலத்திரட்டு அம்மானையும்** கவிமணியின் மருமக்கள்வழி மான்மியமும் இருவேறு சமூகங்களில் சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தி வெற்றிகண்டன. மானாட்டுக் கதைப்பாடல்கள் குமரிக்குப் போனதுபோல், **அகிலத் திரட்டு அம்மானை,** மானாட்டையும் தாண்டித் தென்பாண்டி முழுவதும் பாடப்பட்டுவருவது அறியக் கிடக்கின்றது. குமரிமாவட்டக் கதைப்பாடல்கள் எண்ணிக்கையில் தென்பாண்டிக் கதைப்பாடல்களுக்குக் குறைந்தவை அல்ல என்பது உண்மையாகும்.

10.5 அகத்தீசுவரம் கு. ஆறுமுகப்பெருமாள் நாடார் வில்லுப்பாட்டுக் கதைப் பாடலுக்கு ஆற்றிய தொண்டை விரிவாக அறிவது இன்றியமையாதது. அன்னார்க்கு அம்மாவட்டத்தினரும் ஏனைய கதைப்பாடல்கள் ஆய்வாளர்களும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவராவர். மானாட்டு அருத(ன)க்குட்டியார் போல்

அகத்தீசுவரம் கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் வில்லிசையில் பாடுவதற்கு ஏற்பக் கதைப்பாடல்களைப் புனைந்து ஏட்டிலும் எழுதிக் கொடுத்துள்ளார். தம் குலத்து வரலாற்றுக் கதைப்பாடல்களை ஏட்டில் சரவெழுதி அழியாமல் காத்துள்ளார். **சுடலைமாடன், பத்திரகாளி, முத்தாரம்மன், மாரியம்மன், தோட்டுக் காரி அம்மன், பூலங்கொண்டாள் அம்மன், குமரி அம்மன், முத்துப்பட்டன், வெங்கலராசன்** போன்றோர் பற்றிய கதைப்பாடல்களை அச்சடித்து வெளியிட்டுள்ளார். பலரிடத்துமிருந்த அரிய சுவடிக் கதைப்பாடல்களைப் பெற்று, அவற்றைப் பிரதிசெய்தும், புதுக்கியும் எழுதிவைத்துக் காப்பாற்றி வந்துள்ளார். அன்னாருடைய எல்லாக் கதைப்பாடல் சுவடிகளும் சென்னை ஆசியவியல் நிறுவனத்திற்காக *15.8.1985*இல் டாக்டர் சு. தங்கதுரையாலும் சொற்பொழிவாளராலும் பெறப்பட்டன. இன்றும் அவை ஒவ்வொன்றாகப் பதிப்பாகிவருவது குறிப்பிடத்தக்கது.

10.6 குமரிமாவட்டக் கதைப்பாடல்கள் வரிசையில் மணிகட்டிப் பொட்டல் என்ற ஊரும் குறிப்பிடத்தக்கது. இங்கும் பல வில்லுப்பாட்டாளிகள் பல நிகழ்ச்சிகளை மையமாக வைத்துப் பாடல்களைப் புனைந்தனர். மலையாள அரசர்க்கும் மானாட்டு அரசர்க்குமுள்ள தொடர்புகள், மலையாள மந்திரவாதிகளின் மாந்திரிகத் தந்திரங்கள் அமைந்த கதைப்பாடல்கள், கடலில் யாத்திரை சென்ற வெள்ளைக்காரனைச் செங்கிடாய்க்காரன் கொன்றதை மையமாக வைத்துப் பாடப்பெற்ற **வெள்ளைக்காரன் கதை,** மற்றும் **செங்கிடாய்க்காரன் கதை, சேத்திர பாலன் கதை** போன்றவை இவ்வரிசையில் குறிப்பிடத்தக்கன. சில கிறித்தவக் கதைப்பாடல்களும் இப்பகுதியில் தோன்றின.

10.7 வில்லுப்பாட்டாளிகள் குழுவில் எல்லா இனத்தவரும் இடம்பெற்ற நிலை கி.பி.*20*ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் ஏற்பட்டது. கோயில்கள் அனைத்திலும் ஒரே நேரத்தில் கொடைவிழா நடைபெறுவது வழக்கம். ஆதலால் மிகுந்த அளவு வில்லுப்பாட்டுக்குழுவினர் தோன்றினர். அவர்களுடைய திறமையாலும், வாய்ச்சாதுர்யத்தாலும், வீசுகோலாலும் அவர்கள் பல பட்டப் பெயர்களைப் பெற்றிருந்தனர். மானாட்டுப் பாட்டாளிகளுக்கு நிகராகவே இவர்களும் பெயர்பெற்றனர். அதனால் மிகுந்த கதைப்பாடல்கள் தமிழில் தோன்றின.

11. கதைப்பாடல் பதிப்புகள்

11.1 கதைப்பாடல் பதிப்புகள் பற்றி இக்கட்டுரையில் ஆங்காங்கே குறிப்பிடப் பட்டுள்ளது. ஆயினும் இறுதியாக அவற்றைத் தொகுத்துரைப்பது

முறையாகும். தொடக்கத்தில் பெரிய எழுத்து-மலிவுப்பதிப்பு-குஜ்லிப்பதிப்புக் கதைப்பாடல்கள் பதிப்பகங்கள் மூலம் பாடல்கள் மட்டும் பதிப்பாகி அச்சடிக்கப்பட்டன. சென்னை, நெல்லை ஆகிய நகரங்களில் அதிகமாகவும் ஏனைய ஊர்களில் குறைவாகவும் இவை பதிப்பாகிவந்தன. இந்த அச்சு நூல்கள் ஊருக்கு ஒருவர் கையில் இருந்தால் போதும். அதை அப்படியே ஓலைச் சுவடியில் பிரதிசெய்து ஓலையில் எழுதிய நாள், எழுதியவர் பெயரையும் பதிவுசெய்வதும் வழக்கமாக இருந்தது. இவற்றைப்போல் சுயமாகவும் பாட்டுக் கட்டி ஏட்டில் எழுதுவதும் பாட்டாளிகளின் இயல்பாக இருந்தது. இதுவே முதற்கட்ட கதைப்பாடல் பதிப்புகள் ஆகும்.

11.2 அடுத்த கட்டத்தில், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் கதைப் பாடல் பதிப்பில் இறங்கியது. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை சுவடிக்கதைப் பாடல் பதிப்பிற்கு வரலாற்றுச் சுவடிகளை எடுத்துக்கொண்டதுபோல் நா.வானமாமலையும் கதைப்பாடல் பதிப்பிற்கு வாய்மொழிக் கதைப்பாடல் வடிவங்களை எடுத்துக் கொண்டார். கூடவே, எழுத்துப் பிரதிகளையும் பார்வையிட்டார். இவர்போன்றோர்களைத் தொடர்ந்து, ஆறுமுகப்பெருமாள் நாடார், டாக்டர் தி. நடராசன், சு. தங்கதுரை, ஏ.என். பெருமாள், சிவ. விவேகானந்தன், அகா.பெருமாள், டாக்டர் சூ.நிர்மலாதேவி, ந. இராமச்சந்திரன் போன்றோர் குமரிமாவட்டச் சுவடிகளைப் பதிப்பித்துள்ளனர். அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாளையங்கோட்டையிலும், மதுரையிலும், தஞ்சையிலும், கொங்குநாட்டிலும், பெங்களூரிலும் தமிழ்க் கதைப்பாடல்கள் பதிப்பாகி வருகின்றன. ஆயினும், சென்னையில் ஆசியவியல் ஆய்வு நிறுவனமும், அதைத் தொடர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் சுவடிக் கதைப்பாடல்களை, முறையே, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும், விரிவாகப் பதிப்புரைகளைக் கொண்டும் பதிப்பித்து முத்திரை பதித்து வருகின்றன. இவ்வரிசையில் தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையமும் சேர்ந்து கொண்டுள்ளது. நா.வானமாமலை போன்றும், வையாபுரிப்பிள்ளை போன்றும் கதைப்பாடல் பதிப்புகளை இக்காலத்திலும் பலர் பதிப்பித்து வருகின்றனர். இவர்களில் சிலர், தம் முன்னோடிகள் செய்த பாணியிலேயே நின்று பதிப்பித்து வருவது வருந்தத்தக்கதாக உள்ளது. அப் பதிப்பு முறை பற்றிச் சிறிது ஆராயலாம்.

11.3 இக்கட்டுரையின் தொடக்கத்தில் வாய்மொழிக் கதைப்பாடல் வடிவங்களை ஆய்வுப் பதிப்பாகப் பதிப்பித்தவர்களில் நா.வானமாமலையை முன்னோடியாகக் கொள்ளலாம் என்றும் எஸ்.வையாபுரிப் பிள்ளையைச்

சுவடிப்பதிப்பு ஆய்வு முன்னோடியாகக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டோம். இருவருமே வரலாற்றுக் கதைப்பாடல்களைத் தம் பதிப்பிற்கு எடுத்துக் கொண்டனர். **ஐவர் ராசாக்கள் கதை, கான்சாகிபு சண்டை, கட்டபொம்மு கதை** என்பன வானமாமலை எடுத்துக் கொண்டவை. அவர்க்கு முன்பாகவே **இராமப்பையன் அம்மானையையும், இரவிக்குட்டிப் பிள்ளைபோரையும்** வையாபுரிப்பிள்ளை தம் பதிப்புக்கு எடுத்துக்கொண்டார். வானமாமலை இன்னும் ஒருபடி மேல் சென்று **முத்துப்பட்டன் கதை** எனும் சமூகக் கதைப்பாடலையும் ஆராய்ந்து பதிப்பித்தார். இவ்விருவரும் தமக்குத் தம் காலக்கட்டத்தில் கிடைத்த சான்றுகளின் அடிப்படையில் இக்கதைப்பாடல்களைப் பதிப்பித்தனர். இன்றைய சூழலில் அப்பதிப்புகள் போதுமானவையாக இல்லாதிருப்பது இயல்பே அதனால், இக்காலகட்டத்தில் அறியப்பட்டுள்ள புதிய சான்றுகளைக் கொண்டு அவற்றைப் பதிப்பிக்க அணுகுவோமாயின், புதிய வரலாற்று உண்மைகளை அறியக்கூடும். இதனால், நா.வானமாமலையைப் போற்றத் தக்க ஆய்வு முன்னோடி என நாம் கொள்ள முடியாது என்பது தெரிகிறது. வரலாற்றுக் கதைப்பாடல் பதிப்புக்குத் தகுதியில்லாதவராகவே அவர் இக்காலகட்டத்தில் கருதப்படுகிறார். சான்றாக, **ஐவர்ராசாக்கள்** கதையை எடுத்துக்கொள்வோம். **ஐவர் ராசாக்கள் கதையின்** சுவடிப் பிரதிகள் தென்பாண்டி நாட்டில் பல கிடைத்துள்ளன. இராசாங்கோயில் எனக் குலசேகர பாண்டியனின் பள்ளிப்படைக் கோயிலும் அதிலிருந்து பிடிமண் எடுத்துக் கட்டப்பெற்ற இருபதுக்கும் மேலான கோயில்களும் தென்னாட்டில் உள்ளன. ஒவ்வொரு கோயிலிலும் ஒரு சுவடி பாதுகாக்கப்பட்டு வருகிறது. வானமாமலை தவறான முன்முடிவுடன் குலசேகரபாண்டியன் எனும் ஐவர்ராசாவைப் பார்த்துள்ளார். ஐவர் ராசாக்கள் எனில் ஐந்து அரசர்கள் எனச் சில சுவடிகளிலிருந்து எடுத்துப் பட்டியலிடுகின்றனர். குலசேகர பாண்டியன், வெட்டும் பெருமாள் பாண்டியன், சீவலமாறன், அதிவீரராமபாண்டியன், வெங்கலராசன், சிவனணைந்த பெருமாள் என்பவர்களில் முதலில் வருவோர் பிற்காலப் பாண்டியர்களாகவும் பின்வரும் இருவர் சோழர் பரம்பரையினராகவும் அறியப்படுகின்றனர். இவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு இடங்களில் ஆட்சி செய்தவர்கள். இவர்களைப் பற்றிய கல்வெட்டுக்கள் செப்புப் பட்டயங்கள், காசுகள் போன்றவை தற்போது கிடைத்துவருவதால், வானமாமலையைப் பின்பற்றிக் கதைப்பாடல்களைப் பதிப்பித்தோர் கூறிய முடிவுகள் எல்லாம் முற்றிலும் தலைகீழாக மாற்றம் பெறுவது வியப்பன்று. வெங்கலராசன் என்ற பெயரில் இருவர் இருந்துள்ளனர். முதலாம் வெங்கலராசன் படைநடத்தியதும் பணம் வெளியிட்டதும் அறியக்கிடக்கின்றன. கதைப் பாடல்களைச் சுவடிகளில் பிரதிசெய்தோர்

சிலர்க்கு வரலாற்றுப் பார்வை குறைவாதலால் ஏற்பட்ட குறைபாடே அவற்றைப் பதிப்பிப்போரிடமும் ஏற்பட்டு விட்டது குறிப்பிடத்தக்கது.

11.4 ஒரே வரலாற்றுக் கதையைப்பேசும் நெல்லை மாவட்டக் கதைப்பாடல் சுவடிகளும் குமரி மாவட்டக் கதைப்பாடல் சுவடிகளும் பெருமளவில் வேறுபட்டிருப்பது அறியக் கிடக்கின்றது. நெல்லை மாவட்டச் சுவடிக் கதைப் பாடல்கள் இரண்டாந்தர ஆதாரங்கள் (Secondary source materials) எனில் குமரிமாவட்டக் கதைப்பாடல் சுவடிகள் மூன்றாந்தர ஆதாரங்கள் (Tertiary sources) என்பது குறிப்பிடத்தக்கது. ஆதலால், இரண்டாந்தர ஆதாரங்களை வைத்து வரலாற்றுக் கதைப்பாடல்களைப் பதிப்பிப்பதும் மூன்றாந்தர ஆதாரங்களை வைத்துப் பதிப்பிப்பதும் போதுமானதாகக் கருதப்படமாட்டாது. எனவே முதன்மை ஆதாரங்களையும் நாம் தேடவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அவை கல்வெட்டு, பட்டயம் போன்றவை ஆகும். இப்படியான முதன்மை (Preliminary sources) ஆதாரங்கள் கிடைப்பதால் வரலாற்றுக் கதைப்பாடல் ஆய்வாளர்கள் அவ்வாறான ஆதாரங்களின் அடிப்படையிலேயே தம் பதிப்பை மேற்கொள்ளவேண்டும். இவ் வரலாற்றுக் கதைப்பாடல் தொடக்க காலத்தில் அரசர்களுக்குப் படைப்பயிற்சி அளிப்போர்களான ஏனாதிகளின் பரம்பரையினரால் பாடப்பட்டன. பின்பு அவர்களில் ஒரு பிரிவினரான பணிக்கன் மரபினர்களாலும், மானவீரவளநாட்டு வலங்கைச் சான்றோர்களாலும் பாடப்பெற்றன. இதற்கான சுவடிக்குறிப்புகள் (Colophons) இரண்டாந்தர ஆதாரங்களான சுவடிகளிலிருந்து கிடைக்கின்றன. ஆயினும், பணிக்கன் மரபுதித்தோன் என்பதை அப்பணிக்கன் பெயராகக்கொள்வதும், மானவீரவள நாடனான அருத(ன)க்குட்டியாரை நாஞ்சில் நாட்டுத் தாமரைக் குளத்தினராகக் கொள்வதும் இராமர் கதை பாடியவரைப் பெயர்மாற்றி முருகத் தெய்வமாகக் கொள்வதும் இவ்வாறு வரலாற்று நூல்கள் வெளியிடுவது காலவெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுவிடும் என்பதை எச்சரிக்கையாக நாம் கொள்ளவேண்டும்.

11.6 . வரலாற்றுக் கதைப்பாடல்கள் பதிப்பிற்குச் சான்றாக, *1617*ல் அருத(ன)க்குட்டியாரால் பாடப்பெற்ற **செண்பக நாச்சியார் கதைப்பாடலை** எடுத்துக் கொள்ளலாம். இக் கதைப்பாடலில், முதற்கட்டத்தில் இடும்பன் வரலாறும், இடும்பன் முருகனுடன் செய்த போரும், அதைத் தொடர்ந்து நாச்சியார் ஆவினன்குடியிலிருந்து தொண்டைநாடு, சோழநாடு, பாண்டிய நாடுகளின் வழியாக மானாடு அடைவதும் கூறப்பட்டுள்ளது. ஆவினன்குடியில் இடும்பர்கள் பற்றிய சமூக, வரலாற்று ஆய்வுக்கு மேலாக அவ்வூரிலிருந்து தொண்டைநாட்டுப் பனையூர்க்கு முதலாவதாகச் செண்பகநாச்சியார்

செல்வதாகக் கூறிப் பனையூர் பற்றிய கதையையும் அருத(ன)க் குட்டியார் கூறிச்செல்கிறார். வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், ஆண்பனைகளைப் பெண்பனைகளாக மாற்றிய ஞானசம்பந்தர் காலத்துக்குப் பின் முக்கியத்துவம் பெற்ற அத்தலத்து வேதபுரீசுவரர் ஆலய வளாகத்தில் அருத(ன)க்குட்டியாரின் முன்னோரின் மடம் ஒன்றிருந்ததும், அதிலுள்ளோர் ஆலயத் திருப்பணிகளைச் செய்வதற்காக ஆதித்த உய்யவந்தான் என்பவனாலும், விடையின்மேல் வருபவனாகிய எமன் என்ற பெயர் கொண்டவனாலும் இறையிலி நிலம் அளித்த செய்தி தெரியவருகிறது. அடுத்ததாகத் தோணிபுரக் கதையைச் சீர்காழியிலும், திருவாரூரில் பசு ஒன்று மேய்ந்த கதையையும் அருத(ன)க்குட்டியார் கூறுகின்றார். இவற்றுக்கு நான்கு கல்வெட்டுச் சான்றுகள் அறியப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று கல்வெட்டுகள் முதலாம் ஆதித்தசோழன் காலத்தியவை. மேலும் பல தலங்கள் பற்றிய கதைகளையும் இக்கதைப்பாட்டில் அவர் குறிப்பிட்டுள்ளார். அவற்றிக்குக் கல்வெட்டு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆதலால், வரலாற்றுக் கதைப்பாடல் புனையும் பாட்டாளி கூறும் எந்தச் செய்திக்கும் முதன்மை ஆதாரங்கள் நிச்சயமாக இருக்கும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகின்றது. வரலாற்றுக் கதைப்பாடல்களின் பதிப்புகள் சிறப்படைய வேண்டுமெனில் முதன்மை ஆதாரங்களே இன்றியமையாதவை என்பது இதனால் உணரப்படுகின்றது.

117 வரலாற்றுக் கதைப்பாடல்களைப் பதிப்பிப்போர்,

1. குலதெய்வ வழிபாட்டுக் கதைப்பாடல்கள்
   (Hero worship type ballads)
2. மூதாதையர் வழிபாட்டுக் கதைப்பாடல்கள்
   (Ancestral worship type ballads)
3. பெருமாக்கள் வழிபாட்டுக் கதைப்பாடல்கள்
   (Divine Kingship worship type ballads)
4. பள்ளிப்படை வழிபாட்டுக் கதைப்பாடல்கள்
   (Sepulchral temple worship type ballads)
5. மாடக்கோயில் வழிபாட்டுக் கதைப்பாடல்கள்

எனவும் வகைப்படுத்திப் பதிப்பிக்கலாம். மானவீரவள நாட்டில் மேலே வகைப்படுத்திய வழிபாடுகளும், அவற்றுக்கான கதைப்பாடல்களும் பாடப்பட்டுள்ளன. எனவே, இவ்வாறான கதைப்பாடல்களைப் பதிப்பிப்போர் முதன்மை ஆதாரங்களுடன் பதிப்பித்தாலே அப்பதிப்பு சிறப்படையும். வரலாற்றுக் கதைப்பாடல் பதிப்புகளின் மூலம் சமூக, வரலாற்றை முழுமையாகத் தெரிந்து கொள்ளமுடியும்.

துணை நூல்கள்

1. **Māṉāḍu : A Social History of Māṉaviravaḷanāḍu** by Dr. A. Thasarathan, Centre for Preservation of Tamil Palm - leaf Manuscripts, *2001.*

2. **களப்பிரர் : அன்றும் இன்றும்,** நெல்லை நெடுமாறன், தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம், *2002.*

3. **செண்பகநாச்சியார் கதைப்பாடல்,** டாக்டர் ஆ. தசரதன், தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம், *2001.*

அடிக்குறிப்புகள்

1,2,3. டாக்டர் ஆ. தசரதன் (பதிப்.), தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை-*41.*

4. டாக்டர் கே.ஏ. குணசேகரன், **நகர்சார் நாட்டுப்புறக்கதைப்பாடல்கள்,** அன்னம் (பி) லிட்., *1988.*

5. கோவி. இராசகோபால், **காமன்கதைப்பாடல்** - ஓர் ஆய்வு, *1985.*

6. சு. தங்கதுரை, நாகர்கோயில், *1985.*

7. நா. இராமச்சந்திரன், பாளையங்கோட்டை.

8,9,10,11. இவை ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் ஆங்கில மொழிபெயர்ப்புடன் பதிப்பாகியவை.

12,13. டாக்டர் தி. நடராசன், மதுரை.

14,15. நா. வானமாமலை, மதுரைப்பல்கலைக்கழகம், *1974.*

16. சிவ. விவேகானந்தன், நாகர்கோயில்.

17,18,19,20,21. இவை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்.

22. கு. ஆறுமுகப்பெருமாள் நாடார், நாகர்கோயில்.

23. பிச்சைகுட்டி நாடார், கோவில்பட்டி, *1955.*

24. கலைமகள் & கம்பெனி, திருநெல்வேலி, *1955.*

25. கு. ஆறுமுகப்பெருமாள் நாடார், நாகர்கோயில்.

26. கலைமகள் கம்பெனி, திருநெல்வேலி.

27. மணிவாசகரின் **திருஅம்மானை;** பிள்ளைத் தமிழ் நூல்களில் வரும் அம்மானைப் பருவம் போன்றவற்றைச் சுட்டலாம்.

28. **சிலப்பதிகாரத்தில்** (வாழ்த்துக்காதை) வரும் அம்மானை வரியின் வடிவம் நான்கு நான்கு அடிகளாகும்.

29. **திருவாசகத்தில்** அம்மானையின் வடிவம் *20* அடிகளாகும்.

30. M. Arunachalam. Ballad Poetry, 1976 : ". . . it is told in a long poem; it is composed in a language simple, familiar and full of appeal to the masses. Here the illiterats listener feels that all the lines are his own; not only the words and the lines, but the ideas emotions, imagery, situations and characters are all his own, which he can enjoy and enter into." (p.6)

31. "The first ballads took shape probably some years round A.D.1600. The composition of Ramappaiyan Ammanai by 1640 enables us to presume that it was modelled on **Alli Arasanimalai** the first long ballad story poem, which could have been written earlier, by 1600. The song pattern of Alli Arasanimalai with the refrain **ammanai** was obviously taken from **Muvar ammanai,** whose date may be 1575 A.D. at the latest (Cf. **Ballad Poetry**, p.9)

32. "Though it may not be a ballad in the true sanse but only a folk song, it deserves mention in an account of the ballad because its songs served as a model for later ballad composition" (Ibid : p.9).

33. மானவீரவளநாட்டுக் குடுவைக் கிணறு சுந்தரம் என்பவர் பாடியது **வலங்கைமாலை**. கி.பி. *1904*இல் பதிப்பைப் பெற்றது.

34. **வெங்கலராசன் கதையை**, கிபி *1968*இல் கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் பதிப்பித்தார். வேறொரு பிரதி ஆங்கில மொழிபெயர்ப்புடன் (The Dafeless muse) *1988*இல் ஆசியவியல் நிறுவனத்தில் பதிப்பாகியது. பதிப்பாசிரியர் டாக்டர் சு.நிர்மலாதேவி

35. அருத(ன)க் குட்டியார் பாடிய நூல்கள் வருமாறு: 1.வள்ளி அம்மன் விற்கதைப்பாட்டு, 2. சீவகசிந்தாமணி அம்மானை, 3. செண்பக நாச்சியார் கதைப்பாடல், 4. அந்திர முடையார் கதைப்பாடல், 5. வண்ணார மாடன் கதைப்பாடல், 6. பகடைசுவாமி கதைப்பாடல், 7. பெருமாள் தம்பிரான் கதைப்பாடல், 8. சின்னப்பிள்ளை நாச்சியார் கதைப்பாடல் 9. சிதம்பரர் அந்தாதி, 10. கபாலகாரன் கதைப்பாடல் போன்றன.

36. டாக்டர் தி. நடராசன், மதுரை(பதி)

37. இதைப்போன்ற மற்றொரு பிரதி **இராமன் கதை** என ஆசியவியல் நிறுவனத்தால் வெளியிடப்பெற்றுள்ளது.

38. Dr. A. Thasarathan, 2001. **Mānādu : A Social History of Māna vira Valanādu,** Centre for Preservation of Tamil Palm-leaf Manuscripts, Chennai-41.

39. **வலங்கைமாலையின்** சுருக்கமான **வலங்கைச் சான்றோரும் சோழரும்** என்ற நூலைப் பார்க்க : தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம்.

40. **வலங்கை வெங்கலராசன் கதையை** அகத்தீசுவரம் கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் என்பவர் கி.பி.*1926*இல் சரவெழுதி, கி.பி. *1968*இல் பதிப்பித்து வெளியிட்டார்.

41. பார்க்க : **செண்பகநாச்சியார் கதைப்பாடல்.**, பதிப் : டாக்டர் ஆ. தசரதன், *2001*, தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம் சென்னை-*41*.

42. **வலங்கை மாகாளி அம்மன்கதை**, பதிப்பு : கு. ஆறுமுகப் பெருமாள் நாடார், *1968*.

43. பார்க்க : டாக்டர் ஆ. தசரதன், அருஞ்சுனைகாத்த அய்யனார் (கையேடு), *1995, 1996* தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம்.

44. See Dr. A. Thasarathan : "The social and historical study of the Nadar Community, especially those migrated from Tuttukkudi district of Tamil Nadu, ICSSR Report (1998). Revised in my Manadu book.

45. பார்க்க : டாக்டர் ஆ. தசரதன், **ஆதித்த வமிச வரலாறு**, தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம்.

46. வெளியீடு : ச. மண்டக்ராசா நாடார், *1990*, மூலப்பொழி. கி.பி.*1780*ல் பாடப் பெற்றது.

47. ப.யோ. தங்கசாமி, சென்னை, *1992*.

48. இக்கதை ஏட்டில் எழுதப் பெற்ற காலம் கி.பி.*1824*. இதன் ஏட்டுப்பிரதி அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளது.

49. **தோட்டுக்காரி கதையே** இது. மானவீரவளநாட்டில், பரமன் குறிச்சியில் தோட்டுக் காரியை மணந்த குமரப்பராசன் பரம்பரையினர் வாழ்ந்ததால், தலைவன் பெயரால் இக்கதை பாடப்பெற்றுள்ளது.

50. மானாட்டுச் செண்பகராமபணிக்கன், இலங்கை அரசனால் தத்து எடுக்கப்பெற்று, ஏழாம் சங்கபோதி புவனேகபாகு என்ற பெயரில் ஆண்டகதை இது.

51. **உடையார் கதை** மதுரையிலிருந்து முனைவர் தி. நடராசன் மற்றும் அவர் நண்பராலும் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. உடையாரைக் குலதெய்வமாக வணங்கும் வகையறாக்களில் ஆறுமுகநேரி தவசிமுத்து என்பவர் இக்கதைப்பாடல் பிரதிகளில் ஆய்வுப்பட்டத்திற்கு எழுதிவருகிறார்.

52. **பலவேசஞ்சேர்வைக்காரர்கள் கதைப்பாடலை**, டாக்டர் சு. தங்கதுரை, டாக்டர் ஏ.என். பெருமாள் ஆகியோர் மூலம் மட்டும் பதிப்பித்துள்ளனர். ஆசியவியல் நிறுவனம் ஆங்கில மொழிபெயர்ப்புடன் (The unsung melodies)

பதிப்பித்துள்ளது. கி.பி. 1833இல் பாடப்பெற்ற முதல் வில்லுப்பாட்டைத் தமிழகப் பண்பாட்டு மையம் மைய அரசின் தேசிய ஆவணக் காப்பக நிதிவுதவியுடன் டாக்டர் ஆ. தசரதனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பதிப்பித்து வருகிறது.

53,54. இக்கதைப்பாடல்கள் இதுவரை சேகரிக்கப்படவில்லை.

55. திருடிமுத்து கதை மூலப்பொழி என்ற ஊர்க்கருகில் ஒருமுறை பாடப்பெற்று அச்சிலும் வந்துள்ளது.

56. பார்க்க : டாக்டர் ஆ. தசரதன் (பதி.)செண்பகநாச்சியார் கதைப்பாடல், 2001

57. பார்க்க : அடிக்குறிப்பு எண் 35.

58. இக்கதைப்பிரதி ஆசியவியல் நிறுவனத்தில் சுவடியாக உள்ளது.

59. இதன் விவரம் தெரியவில்லை.

60. பார்க்க : டாக்டர் சு. தங்கதுரை, (பதி.).

61. மாலைஅம்மன் கதை ஏட்டுப்பிரதியாக உள்ளது. குலசேகரபாண்டியனின் தாய் மாலை அம்மன் ஆவாள்.

62. பெரியபெருமாள் புலவர்; கி.பி. 1909இல் அச்சாகி உள்ளது.

63. டாக்டர் சு. சண்முகசுந்தரம், பதிப்பாசிரியர்.

64. தெக்கன்பாட்டாக உள்ளது. திருவனந்தபுரம் வட்டத்தில் இக்கதை பாடப்பெறுகிறது.

65. பார்க்க : நா. வானமாமலை, 1975.

66. தி. நடராசன், (பதிப்பாசிரியர்), மதுரை, 1982.

67. சு. சண்முகசுந்தரம், (பதிப்பாசிரியர்), தமிழாய்வு, தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1985.

68. அந்திரமுடையார் அருத (ன)க் குட்டி நாடார் வகையறாவில் மூதாதை. ஒன்பது ஊர்களுக்குப் பட்டமாணியம். வள்ளியூரில் அய்யர் பண்டாரம் மகளை மணந்த இரவு, கொள்ளையர்களைப் பிடித்துத் தண்டனை வழங்கினார். பின்பு செண்பகநாச்சியார் கோயிலில் தெய்வமாக வணங்கப்படுகிறார். இவ்வரலாற்றை அந்திரமுடையார் கதை சித்திரிக்கின்றது. இதனை ஆந்திரமுடையார்கதை என்ற பெயரில் சக்திவேல், (தஞ்சாவூர்), அச்சிட்டுள்ளார்.

69. கருக்குவேலய்யனார் கோயிலில், களப்பணியின் போது கேட்டறிந்தது.

70. ஜெம்புலிங்கம் பற்றிய கதைகள் உரைநடையிலும் நாட்டுப்புறத்தனிப் பாடல்களாகவும் உள்ளன (பார்க்க : மலை அருவி, கி.வா.ஜ).

71. முத்துப்பட்டன் கதையை நா. வானமாமலை பதிப்பித்துள்ளார்.

72. **சிவனணைந்த பெருமாள் சுவாமி கதைப்பாடல்**, டாக்டர் ஆ. தசரதன் (பதிப்பில்) இந்நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் டாக்டர் கு. நிர்மலாதேவியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளியிட்டுள்ளது.

73. தனித்தனியாகவும், சேர்ந்தும் நூல்கள் வெளியாகியுள்ளன. **பொன்னுருவி தவநிலை**, ஒரு யாத்திரை நூல் போன்றது.

74. **சீவலமாறன் கதை**, உ.வே.சாமிநதையர் நூலகம், *1984*.

75. **உடையார் கதை**, டாக்டர் தி. நடராசன் *(பதிப்பாசிரியர்)*, மதுரை, **அரவமுத்து வீரன் கதை** என்ற பெயரில் சுருக்கமாக கு. ஆறுமுகப் பெருமாள் நாடாரால் ஏட்டில் எழுதவும் பெற்றது. இதன் ஏடு சென்னை ஆசியவியல் நிறுவனத்தில் உள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் *1998*-ல் வெளியிட்டுள்ளது. பதிப்பாசிரியர் சூ. நிர்மலாதேவி. **பொன்னுருவி தவநிலை, உடையார் கதை** இம்மூன்றும் வேறு பெயர்களில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பதிப்பாகியுள்ளன.

76. **சிவனணைந்த பெருமாள் கதை**யின் சில பகுதிகள் **வலங்கை மண்டங்குடிநாட்டு மன்னன் வரலாறு** என்ற நூலில் காணப்படுகின்றன. மூலப்பொழியில் சிவனணைந்த பெருமாளுக்குத் தனிக்கோயில் உள்ளது. கொடை விழாவில் வில்லுப் பாட்டும் பாடப்பெறும்.

77. **இலட்சுமி அம்மன் தவநிலை** ஏடு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ளது

78. இக்கதையின் தாள் பிரதி தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் உள்ளது

79. பொன்னிறத்தாள் பலகோயில்களில் ஒரு பரிவார தெய்வமாக வழிபடப் பெறுகிறாள்.

80. மலையாளத்தில், சூரநாடு குஞ்ஞன்பிள்ளை, கேரளப்பல்கலைக் கழக வெளியீடாக வெளியிட்டுள்ளார்.

81. தமிழில் அ.க. பெருமாள் **பொன்னிறத்தாள்** கதையை வெளியிட்டுள்ளார் (நியூசெஞ்சுரி புக் அவுஸ், சென்னை *1998)*.

82. **சின்னத் தம்பி** கதையை முதலில் கு.ஆறுமுகப் பெருமாள் நாடாரும், பின்பு ஆங்கில மொழி பெயர்ப்புடன் சென்னை ஆசியவியல் நிறுவனத்தாரும் வெளியிட்டுள்ளனர். பதிப்பாசிரியர் சூ. நிர்மலாதேவி. *(பார்க்க :* The Wandering Voice*)* **சங்கிலிப்பூதத்தார் கதை** கலைமகள் கம்பெனி, திருநெல்வேலி.

83. சொரிமுத்தையனார் கதைப்பாடல் *(பதிப்பில்)*.

84. **குறுக்குளாஞ்சி கதை**, (பதி. சூ. நிர்மலாதேவி*)* The Wandering Voice என்ற நூலில் உள்ளது.

85. **முத்துப்பட்டன் கதை**யை முதலில் கு. ஆறுமுகப்பெருமாள் நாடாரும் பின்பு நா. வானமாமலையும் பதிப்பித்துள்ளனர்.

86. **அய்யனார் கதைப்பாடல்**, டாக்டர் ஆ. தசரதன் (பதி*.) 1992, 1995* சென்னை.

87. ஒரு நூற்றாண்டுக்கு முன்பு பொன்னோட்டக்காரன் பற்றிய கதைப்பாட்டும் பிற பிரபந்தங்களும் அச்சிடப்பெற்றுள்ளன.

88. **ஓட்டக்கார சுவாமி கதைப்பாடல்,** தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம்.

89. **வன்னியராயன் கதையைக்** கேரளப்பல்கலைக் கழகத் தமிழ்த்துறை முதுகலை மாணவர் லாரன்ஸ் நாயகம் முதன்முதலில் பதிப்பித்துள்ளார். இது வன்னியடி மறவன் கதையுடன் தொடர்புடையது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் *1996*-இல் வெளியிட்டுள்ளது. பதிப்பாசிரியர் சூ. நிர்மலாதேவி.

90. பூலித்தேவன் பற்றிய வரலாற்றுக் கதைப்பாடல் உடுக்கடிப் பாட்டாகப் பாடப் பெறுகின்றது. சென்னை ஆசியவியல் நிறுவனம் புலவர் டாக்டர் இராசய்யா அவர்களை வைத்துத் தமிழில் பதிப்பித்து ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட்டுள்ளது.

91. **சந்தனத் தேவன் கதையும் , களவு,** கொள்ளை தொடர்பானது. சென்னை ஆசியவியல் நிறுவனம் இதை ஆங்கில மொழிப்பெயர்ப்புடன் வெளியிட்டுள்ளது.

92. **கான்சாகிபுசண்டை** முதன்முதலில் கொழும்பில் பதிப்பிக்கப்பெற்றது. பின்பு ஆய்வு முன்னுரையுடன் நா. வானமாமலை பதிப்பித்துள்ளார்.

93. **செண்பகராமன் கதைக்கும்** சிவனணைந்த பெருமாள் கதைக்கும் பெயரால் தொடர்புண்டு.

94. **வெட்டும் பெருமாள் பாண்டியன் கதை, கயத்தாற்றரசன் கதை** என்பன இன்னும் கண்டறியப் பெறவில்லை.

95. **கட்டபொம்மு கும்மி, கலியுகப் பெருங்காவியம்** எனச் சில கதைப்பாடல்கள் கட்டபொம்மு பற்றித் தோன்றியுள்ளன.

96. **ஊமத்துரை சண்டை** அல்லது **புதுக்கோட்டை சண்டை** என்ற கதைப்பாடலைப் புலவர் டாக்டர் இராசய்யா அவர்கள் பதிப்பித்து வருகிறார்.

97. **தமிழில் வசைப்பாடல்கள்,** ஆண்டான் கவிராயனின் தனிப்பாடல்கள் டாக்டர். ஆ. தசரதன், தமிழ் ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், சென்னை, *1995*.

98. **சோழன் பசுக்கதைப்பாடல்** விருத்தத்தில் அமைந்த **கபிலை கதை** போன்றது.

99. **ஆமையார் அம்மானையை** கு. ஆறுமுகப்பெருமாள் நாடார் முதலில் பதிப்பித்தார். பின்பு சென்னை ஆசியவியல் நிறுவனம் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வெளியிட்டுள்ளது.

100. கொற்கையை ஆண்ட அதிவீரராமபாண்டியன் பெயரில் ஒரு வில்லுப்பாட்டுக் கதைப்பாடல் சுவடி சிறுத்தண்டு நல்லூரில் உள்ளது.

101. **தடிவீரசுவாமிகதை & வன்னியராயன் கதை,** பதிப்பாசிரியர் சூ. நிர்மலாதேவி, 1996. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பதிப்பாகியுள்ளது.

102. இதுவும், இதைப்போன்ற *50* கதைப்பாடல்களும் ஓலைச் சுவடிகளாகச் சிறுத்தண்டு நல்லூரிலிருந்து தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு வாங்கப்பெற்றன.

103. இவை போன்றவை அடுத்த பகுதியில் ஆராயப்படுகின்றன.

சுவடிப் பதிப்பில் யாப்பு

தி.வே. கோபாலய்யர்

'யாப்பும், பாட்டும் தூக்கும் தொடர்பும் செய்யுளை
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே'

என்பவாகலின் சுவடிப்பதிப்பில் யாப்பு என்பது சுவடிகளில் உள்ள செய்யுள்களைப் பதிப்பித்தலில் கொள்ள வேண்டிய செய்திகளைப் பற்றிய தலைப்பாகும்.

சுவடிகளில் செய்யுள்களைப் பொறிப்பதன்முன் உள்ள மொழியின் வரலாற்றைக் கூறுதல் முதற்கூறாகவும், சுவடிப்பதிப்புப் பற்றிய செய்திகளைக் கூறுதல் இரண்டாம் கூறாகவும் அமையும்.

முதற்கூற்றில், மொழிகளின் தோற்றம், மொழிகளின் வளர்ச்சி, வரிவடிவத் தோற்றம், நெடுங்கணக்கின் தோற்றம், தமிழ் ஒரு தனிமொழி என்பது, தமிழின் நெடுங்கணக்கு, வரிவடிவ வேறுபாடுகள், எழுத்தொலியும், ஓசையும், ஆய்தம், குறுகிய இஉ, அளபெடை, குறுக்கங்கள், எழுத்து, உயிர், மெய், உடம்படுமெய், மொழிமுதல்கடை எழுத்துக்கள், இடைநிலை மெய்ம்மயக்கம், இலக்கணத்தோற்றம், தமிழ் முதல் மொழியே என்பது, தமிழில் வடமொழிச் சொற்கள், வரிவடிவில் குறில் நெடில், சொற்புணர்ச்சி, இலக்கணமரபின் இன்றியமையாமை, தனிநிலை தொடர்நிலைச் செய்யுள்கள், தமிழுக்கு நேர்ந்த வாட்டம் என்பன பற்றிய சிலசெய்தி கூறப்படும்.

இரண்டாம் கூற்றில், ஓலைச்சுவடிகள், ஓலை ஆவணங்கள், ஓலைக்கடிதங்கள், இலக்கியச்சுவடிகளும் அவற்றைப் படிஎடுத்தலும், சுவடி எழுத்தும் அச்சுப்பதிப்பும், பனைஓலைச்சுவடிகளைப் பேணுதலும் பயன்படுத்துதலும், பழஞ்சுவடிகளின் இன்றைய நிலை, அவற்றை வாசித்துப் படிஎடுக்கும்போது ஏற்படும் சிக்கல்கள், சுவடிகளில் பாடல் எழுதும் முறை, பாடவேறுபாடுகள், சுவடியில் பொறிப்போர் செய்யும் பிழைகள் போல்வன விளக்கப்படும்.

மொழியின் தோற்றம்

மக்களை விலங்குகளினின்றும் பிரித்துச் சிறப்பாக நோக்குவதற்கு அடிப்படையான மனஉணர்வின் காரியமாக ஏற்பட்டனவே மொழிகள். மொழிகள் மனிதனுடைய ஆக்கப்பொருள்களே எனினும், எல்லையிடமுடியாத ஓர்

இயற்கைப் பெருஞ்சக்தியின் காரியமாகவே மனிதஇனங்களுக்கு மாத்திரம் உள்ளத்தில் உள்ளதனைத் தெள்ளிதின் புலப்படுத்த மொழி என்ற கருவி வாய்த்திருக்கிறது.

மனிதனைப் போல ஏனைய உயிரினங்களுக்கும் தத்தமக்குள் புலப்படுத்திக்கொள்ளும் வகையில் மொழிகள் உள்ளன என்பதும், அந்த ஏனைய உயிரினங்களின் மொழிகளையும் உணரும் தனி ஆற்றலுடைய மனிதர்களும் இருந்தனர் என்பதும் பண்டை நூல்கள் வாயிலாக அறியப்படுவனவாகும்.

மனிதஇனத்தின் உடல்அமைப்பில் பொதுவாக ஆண் பெண் என்ற இருவகை வேறுபாடுகளையே காணலாம். ஆனால் சிறப்பாக நோக்கும்போது ஒருவருடைய முகஅமைப்பினைப் போல மற்றவருடைய முகஅமைப்பு இருப்பதில்லை. ஒருசிலர் அழகுடையவராகவும் ஒருசிலர் அழகற்றவராகவும் இருத்தலைக் காண்கிறோம். அழகுடையவராகப் பிறப்பதும் சென்ற பிறப்பில் செய்த நல்வினைப்பயன் என்றே நம் முன்னோர் கருதினர்.

மக்கள் தாம் வாழும் இயற்கைச் சூழ்நிலைக்கேற்பவும் உடல்வேறுபாடு உடையவர் ஆதலைக் காண்கிறோம். உடல்வேறுபாடு போலவே நடையிலும் வேறுபாடு காணப்படுகிறது. இவை கண்கூடாகக் காணப்படுகின்றன. மனம் காட்டலாகாப் பொருளைச் சார்ந்தது. அம்மனநிலைக்கண் ஒருவர் மனநிலைக்கும் மற்றவர் மனநிலைக்குமிடையே வேறுபாடுகள் உள்ளன. ஒருவனுக்குச் சிரிப்பை உண்டாக்கும் செய்தி மற்றவனுக்கு அழுகையை உண்டாக்கலாம். பாலைவனத்திலிருந்த ஆறலைக் கள்வர்கள் அவ்வழிப் போந்தவர்களிடமிருந்த செல்வங்களைக் கொள்ளையிட்டனர். கொள்ளையடிப்பதற்குப் பொருள்களோடு வாராதவர்களை வெட்டிவீழ்த்தினர். கள்வர்கள் தங்களால் வெட்டி வீழ்த்தப்பட்டவர்களின் உடல்கள் துள்ளுவதைப் பார்த்து மகிழ்ச்சி உற்றனர். அவர்களுடைய துயரக்காட்சி இவர்களுக்கு மகிழ்ச்சி தரும் பொருளாக அமைகிறது. இங்ஙனம் பிறருக்குத் துன்பம் செய்து மகிழ்பவர் ஒரு சாராராக, பிறருக்குச் சிறுதுன்பம் நேரினும் அதனைக் காணச் சகியாது கண்ணீர் வடித்து அதனைப் போக்க உதவிய அருளுள்ளம் படைத்தவர்களின் மனநிலை அதற்கு மறுதலைத்தாக அமைகிறது.

இங்ஙனமே பிறருடைய ஆக்கத்தைக்கண்டு வியத்தலோடு, தம்முடைய குறைபாட்டைக் கண்டு வாழ்க்கையை அருவருக்கும் மனநிலையையும் காணலாம். தன்னுடைய வீரச்செயல், மற்றொருவனுக்கு அச்சம் விளைவிப்பதும் கண்கூடு. தன்னுடைய விருப்பம் ஈடேறாமை கொண்டு ஒருவனுக்கு வெகுளி வருதலையும், உள்ளியது முடிக்கும் தெள்ளிய அறிவுடையவன் மகிழ்வோடு இருப்பதையும் காண்கிறோம்.

இன்பத்திலும் துன்பத்திலும் சிறிதும் சலிப்பின்றித் தம் கடமையை எந்நிலையிலும் தவறாது செய்துவரும் சாந்தவடிவினரோ அருகிக் காணப்படுகின்றனர்.

இவற்றையெல்லாம் நோக்க, வெளிப்படையான உடல் வேறுபாட்டிலும் உள்ளார்ந்த மனவேறுபாட்டிலும் ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையற்று நிற்கும் இயல்பு மனிதஇனத்திடையும் பரந்து இன்றும் காணப்படுகிறது. இந்நிலை மனிதஇனம் தோன்றிய காலத்திலிருந்தே நிகழ்வது ஒன்றாகும். மனிதஇனம் தோன்றிய காலத்திலே மனிதர்கள் தம் உள்ளத்துப்பட்ட செய்திகளைத் தம் கைகால்கள் அசைவுகளால் சில சைகைகள் காட்டி அவற்றின் உதவியாலே வெளிப்படுத்தியிருத்தல் கூடும். இந்நிலையில் ஆண்டில் மூத்தவர்கள் பின்பற்றும் சைகைகளை ஆண்டில் இளையாரும் அம் மூத்தவர்களைப் பின்பற்றித் தாமும் பயன்படுத்தியிருக்கக்கூடும். மனநிலையை வெளிப்படுத்தத் தன்வாயினின்று வெளிப்படுத்தும் ஒலியை மக்கள்இனம் இயற்கையாகவே பயன்படுத்துகிறது. மகிழ்வில் தோன்றும் ஒலிக்கும், அழுகையில் தோன்றும் ஒலிக்கும், அச்சத்தில் தோன்றும் ஒலிக்கும், வியப்பில் தோன்றும் ஒலிக்கும், வெகுளியில் தோன்றும் ஒலிக்குமிடையே வேறுபாடு உள்ளமை இன்றும் உணரப்படுகிறது. இத்தகைய மனநிலையை விலங்கினங்கள் சிலவற்றிடையேயும் இன்றும் காணலாம். நம்மோடு பழகி நம் வீட்டில் வளரும் நாய்கள் அவ்வப்போது வெளிப்படுத்தும் ஒலிவேறுபாடுகளைக் கண்டு அவற்றின் மனநிலையை அறிகிறோம். இவையெல்லாம் மனிதன் தொடக்கக்காலத்தில் தன் கருத்தைப் புலப்படுத்தப் பின்பற்றிய கருவிகளாம். ஒவ்வொருவர் குரல்வளையில் இருந்து வெளிப்படும் ஒலியிடையேயும் சிறிது வேறுபாடு உண்டெனினும் இத்தகைய மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தும் வகையில் பலருடைய குரலிடையேயும் சிறிது ஒற்றுமை இருப்பதைக் காணலாம்.

இத்தகைய பொதுஒற்றுமையே பின்னர் மொழி தோன்றுதலுக்கு அடிப்படையாக அமைந்திருத்தல் கூடும்.

கதிரவனிலிருந்து தெறித்துவிழுந்து அனற்பிழம்பாக இருந்த உலக உருண்டையின் நடுப்பாகமே முதலில் குளிர்ந்திருக்க வேண்டும் எனவும், அவ்விடத்திலேயே முதலில் உயிரினங்கள் தோன்றியிருக்கக்கூடும் எனவும், முதல் மனிதஇனமும் அங்கேயே முதலில் தோற்றம் பெற்றிருத்தல்வேண்டும் எனவும், அம்மனிதஇனமே செய்கை வகைகளையும் குரல் ஒலிவகைகளையும் தன் மனக்கருத்தை வெளியிடப் பின்பற்றிய பின்னர், மனக்கருத்தை வெளியிடச் செப்பமான கருவியாகிய மொழியைப் படைத்திருத்தல் வேண்டும் எனவும், அத்தகைய நடுநிலப்பரப்பு கடலில் முழுகிய குமரிக்கண்டமாகவே இருந்திருத்தல்

வேண்டும் எனவும், அங்கிருந்தே மக்களினம் உலகின் பல பகுதிகளுக்கும் பரவியிருத்தல் வேண்டும் எனவும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

மொழியின் வளர்ச்சி

மொழி என்பது ஒருசில ஆண்டுகளில் உருவாக்கப்படுவதொன்றன்று. பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒருமனப்பட்டு ஒவ்வொரு பொருளை உணர்த்தவும் ஒவ்வோர் ஒலியை வரையறை செய்துகொண்டு, அவ்வொலியையே அப்பொருளை உணர்த்தப் பலஆண்டுகள் பயன்படுத்தியபின், அவ்வப்பொருளின் செயல்கள் பலவற்றையும் வெளியிட முறையாகப் பல ஒலிகளையும் பயன்படுத்தியிருத்தல் வேண்டும். பலரும் ஒற்றுமையாக ஒரேவித ஒலிகளை இவற்றிற்குப் பயன்படுத்தப் பலகாலம் ஆகியிருத்தல் கூடும். பொதுவாகத் தனித்தனி மனநிலை கொண்ட மக்கள் பலரும் ஒருமனப்பட்டு ஒற்றுமையாக இவ்வொலிகளைப் படைக்கும் ஆற்றல் அவர்களுக்கு ஒரு மாபெருஞ் சக்தியினாலேயே ஏற்பட்டிருத்தல் வேண்டும். அம்மாபெருஞ்சக்தி மக்கள்இனத்திற்கு ஒருமனப்பட்டு ஒலிகளைப் படைக்கும் ஆற்றலை வழங்கிய செய்தியே மக்களினத்தை ஏனைய உயிர்களிலிருந்து வேறுபடுத்தி அதனை மேம்பட்டதாக்கியுள்ளது. இக்கருத்துப் பற்றியே மக்களினத்துக்கு இறைவனே மொழியைப் படைத்துக் கொடுத்தான் என்று நம் முன்னோர்கள் சுருக்கமாகக் குறிப்பிடுவாராயினர்.

'இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்'
'ஆதிசிவன் படைத்துவிட்டான்'

என்பன போன்ற சான்றோர் கூற்றுக்கள் நோக்கத்தக்கன.

மொழிவளம் ஏற்பட்டுப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆயினபின்னரும் உறுப்புக்குறையான் ஊமையாய் இருப்பவர் செவியறிவும் அற்றிருத்தலின், அவர்கள் பிறர் உள்ளக்கிடக்கையைத் தம் கண்களினால் அறிந்து தம் உள்ளக்கிடக்கையைத் தம் கைச் சைகைகளினால் தெரிவித்தலைக் காண்கிறோம்.

மொழி படைக்கப்படுவதன்முன் இத்தகைய செய்திகளை அறிதற்கண் பயன்படுத்தப்பட்ட மக்களின் கூர்த்த அறிவு, மொழிவாயிலாகத் தம் கருத்தைப் புலப்படுத்தத் தொடங்கிய பிறகு ஓரளவு மழுங்கிவிட்டது என்றே கருதவேண்டியுளது.

முதற்கண் மொழி பேச்சுவழக்காக எழுந்தகாலை, முதலில் பொருளையும் பிறகு பொருளின் செயலையும், அடுத்து அதன் பண்பையும்

குறிப்பிடத் தொடங்கியிருக்கலாம். ஒரு பொருளைக் குறிப்பிடுவதனால் மாத்திரம் மனத்திலுள்ள செய்தியை முழுமையாகக் குறிப்பிடமுடியாமையால் முதலில் மொழியின் பேச்சுவழக்குத் தொடர்மொழியாகவே தொடங்கியிருத்தல் வேண்டும் என்பது மொழிநூலார் கருத்து. மொழி பேச்சுவழக்காக எழுந்த காலத்து எவ்வெவ்வாறெல்லாம் வடிவுற்றுப் பலவாறாகக் கிளைத்து மக்கள் உள்ளக்கருத்தினைப் புலப்படுத்தியது என்பது நம் கற்பனையால் பலவாறாக ஆராய்ச்சி செய்யத்தக்க ஒரு சுவையான செய்தி எனினும், அது முறையாக வளர்ந்து பரவிய செய்தியை முறையாக வரையறுத்து உரைப்பது என்பது எளிய செய்தியன்று.

வரிவடிவத் தோற்றம்

பல்லாண்டுகள் பேச்சுவழக்கில் மொழி பயின்ற பின்னரே அதற்கு வரிவடிவம் அமைந்திருத்தல் வேண்டும், முதல் வரிவடிவம் பொருளையும் அதன் செய்கையையும் குறிக்கும் சித்திரவடிவினதாக அமைந்திருக்கலாம். பிறகு ஒவ்வொரு சொல்லிலும் உள்ள ஒலிகளை ஆய்ந்து ஒப்பிட்டுப் பொதுவாக வழங்கும் ஒலிகளைத் தனித்தனியே கண்டு, அவற்றிடை உள்ள வேறுபாடுகளைக் கூர்ந்து நோக்கி, அவ்வொலிகளை எழுத்துகளின் கூட்டமாக அமைத்துச் சொல்லாக்க முறையை உண்டாக்கியிருக்கலாம். எழுத்துகளை வரையறுத்த பின்னரும் இன்ன எழுத்திற்குப்பின் இன்ன எழுத்தினை அமைத்து நெடுங்கணக்கினை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதற்கும், அவ்வெண்ணத்தைச் செயற்படுத்துவதற்கும் பல நூற்றாண்டுகள் ஆகியிருக்கலாம்.

நெடுங்கணக்கின் தோற்றம்

எவரோ சிலர், தாம் விரும்பியவாறு நெடுங்கணக்கினை அமைத்துவிட்டனர் என்று கூற இயலாது. பலரும் ஒருங்குகூடி ஒலிகள் தோன்றும் இடங்களை ஆராய்ந்து அவற்றை வரிசைப்படுத்தி முறையாக நெடுங்கணக்கினை அமைத்துள்ளனர். தொடக்கத்தில் படைக்கப்பட்ட தமிழ்மொழி போன்றவற்றில் மிக இன்றியமையாத ஒலிக்கூறுகளே நெடுங்கணக்கில் எழுத்துகளாகத் தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வோரொலியிலும் எடுத்தும் கனைத்தும் உரப்பியும் உண்டாக்கும் சிறு சிறு வேறுபாடுகளையும் அறியத் தனித்தனி எழுத்துகளை வரிவடிவில் படைத்தல் என்பது சற்றுப் பிற்பட்ட காலத்தில்தான் ஏற்பட்டிருத்தல் வேண்டும். எடுத்தும் கனைத்தும் உரப்பியும் ஒலிக்கும் சிறு வேறுபாடுகளை விடுத்துச் சொற்களிடையே காணப்படும் அடிப்படை ஒலிகளை எழுத்து என்று பெயரிட்டு, அவ்வெழுத்துகளைத் தொகுத்து ஒலிப்பதால் சொற்களைப் படைக்கும் நெறி

மிகப் பண்டைய மொழியாகிய தமிழ்மொழிக்கண் சிறப்பாக அமைந்திருத்தலை ஆராய்ச்சியாளர் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்மொழியில் ஒவ்வோரெழுத்திற்கும் ஒவ்வோரொலி யுண்டு. இம்முறை ஒவ்வோரெழுத்திற்கும் இடம் நோக்கிப் பல ஒலிகளையும் ஓரொலிக்குப் பல எழுத்துகளையும் கொண்டு சில எழுத்துக்களுக்கு ஒலித்தல் வாய்ப்பே இன்று என்று வரையறுத்துக் கூறும் மேல்நாட்டு மொழிகளை நோக்க, தமிழ்மொழி மிகச் செப்பமுடையதாக அமைந்திருத்தலை உணரலாம். எழுத்தொலிகளை உணர்ந்த சிறுவர்கள் கூட எழுத்தொலிகளைக் கூட்டிச் சொற்களை எளிமையில் ஒலிக்கும் இம்முறை தமிழ்மொழியில் சிறப்பாகக் காணப்படுகிறது. இந்தி முதலிய வடஇந்திய மொழிகளிலும்கூட, சொற்களிடையே உயிர்மெய் எழுத்துக்களை மெய்எழுத்தாக ஒலிக்கும் சிக்கல் உள்ளது. தமிழில் தனித்தனி எழுத்தாக அமைந்திருக்கும் ஒலிகள் ஆரியமொழியில் கூட்டெழுத்து என்ற 'ஸம்யுக்தாட்சரமாக' அமையும் சிக்கல் உள்ளது. அச்சிக்கல் இக்காலத்துச் சிறிதுசிறிதாக நெகிழ்க்கப்பட்டுவருகிறது.

தமிழ் ஒரு தனிமொழி

நெடுங்கணக்கு முறையில் ஓரளவு ஒற்றுமை இருப்பதனை உட்கொண்டு, சீர்திருத்தம் செய்யப்பட்டமொழி என்ற பொருளில் பெயரிடப்பட்டுள்ள சமசுகிருதத்திலிருந்து (வடமொழி) தமிழ் தோன்றியது என்று இடைக்காலச் சான்றோர் கொண்ட கொள்கை பொருத்தமானது அன்று என்பதனை மொழிநூல் அறிஞர் யாவரும் அறிவர். தத்தமுள் சிறிது வேறுபாடுடைய நால்வகை ஒலிகளை அமைப்பதற்குத் தொடக்கத்தில் ஒரே எழுத்தினையே கொண்டிருப்பர் என்பதும், பின்னரே ஒவ்வோரொலிக்கும் தனித்தனி எழுத்தினைப் படைத்துக்கொண்டிருப்பர் என்பதும் இயல்பான செய்திகளேயாம். சீர்திருத்தம் செய்யப்பட்ட ஒன்றனுக்குமுன், செய்யப்படாததொன்று இருந்திருத்தல் வேண்டும் என்பதன்கண்ணும் ஐயத்துக்கு இடன் இன்று. எனவே, வடமொழி தோன்றுவதற்கு முன்பே மக்களால் படைக்கப்பட்ட மொழி தமிழாதல் தேற்றம்.

இன்றுள்ள போக்குவரத்து வசதிகள் பண்டைக்காலத்தில் இல்லை. எனவே குமரியிலிருந்து இமயம் செல்வதற்குப் பல ஆண்டுகள்கூட ஆகியிருக்கலாம். இன்று சிலமணி நேரத்தில் முடிக்கும் பயணம் பண்டு பல ஆண்டுகளைச் செலவிட்டது. பண்டு குமரியிலிருந்து இமயம்வரை பரவியிருந்த ஒரே இனமக்கள் தத்தமக்குள் போக்குவரத்து அருகிய காலையில் தாம்தாம் பேசி வழங்கிய மொழிகளிடையே சிலசில வேறுபாடுகள் ஏற்பட, அப்பேச்சுமொழிகளை ஒவ்வொரு பகுதியில் வாழ்ந்தவரும் தனித்தனிப் பெயரிட்டழைக்கத் தொடங்கினர்.

பொது மொழியின் தேவை

காலம் செல்லச்செல்ல அம் மொழிகளிடையே வேறுபாடுகளும் பல்குவன ஆயின. ஒருமொழி பேசியவர் கூறிய கூற்றுக்களை வேற்றுமொழி பேசியவர் எளிதின் உணரும் வாய்ப்பு அருகுவதாயிற்று. ஆகவே, எல்லா மொழிகள் பேசுவோரும் எளிதின் உணரும் வகையில் எல்லாருக்கும் பொதுவான ஒருமொழியைச் செப்பமாகப் படைத்துப் பயன்கொள்ளும் எண்ணம் மக்களிடையே இன்றியமையாததாக ஏற்பட்டது. அக்காலத்துப் படைத்துக் கொள்ளப்பட்ட மொழியே சமசுகிருதம். அம்மொழியைப் படைத்தற்கண்ணும் அதனை வளர்த்தற்கண்ணும் இமயம்தொட்டுக் குமரிகாறும் வாழ்ந்த நன்மக்கள் அனைவருடைய பங்கும் இருந்தது. எனவே அம்மொழியை இப்பாரததேசத்தில் வாழ்ந்த அறிஞர் அனைவரும் கற்றனர்.

அறிஞர்குழாம் இப்பாரதகண்டத்தின் எந்தப் பகுதியில் கூடினும் அவர்கள் தத்தமக்குள் உரையாடுதற்குச் சமசுகிருதத்தையே பயன்படுத்தினர். நுட்பமான அறிவியற் செய்திகள் பலவும் பலராலும் பயிலப்படுதற்கு வாய்ப்பாக அவற்றை மக்கள் தத்தம் பேச்சுமொழியாகிய தாய்மொழிகளில் வரையாமல் சமசுகிருதமொழியிலேயே வரைந்து அம்மொழியை வளப்படுத்தினர். இதனால் சமசுகிருதமொழியில் பல்லாயிர நூல்கள் தோன்றலாயின. வடமொழி எந்தக் காலத்தும் யாருக்கும் தாய்மொழியாகவோ பொதுமக்களின் பேச்சுவழக்கு மொழியாகவோ இருந்ததில்லை. இமயம்தொட்டுக் குமரிகாறும் வாழ்ந்த மக்களுள் அறிஞர் பலரும் சமசுகிருதமும் கற்றவராகவே இருந்தனர்.

தமிழோடு பல்லாற்றாலும் ஒப்புமையுடைய மொழிகளைத் திராவிட மொழிகள் எனவும் வடநாட்டில் வழங்கும் மொழிகள் பலவற்றையும் வடமொழிச்சார்புடைய வடஇந்திய மொழிகள் எனவும், மொழிநூலறிஞர் பாகுபடுத்தி வழங்குவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு என்பன திருந்திய திராவிட மொழிகள் எனவும் துதம், கோதம், கோண்டு, குயி, ஒராவோன், இராச்மகால், பிரகுயி என்பன திருந்தாத திராவிட மொழிகள் எனவும் அவர்கள் வழங்குவர். இம்மொழிகளிடையே காணப்படும் இலக்கண அமைப்பு ஒப்புமைகளில் பல, வடமொழிச் சார்புடையனவாகக் கூறப்படும் வடஇந்திய மொழிகளிடையே காணப்படுதல், ஒருகாலத்தில் பாரததேசம் முழுதும் தமிழ்மொழி பரவியிருந்த பகுதியாக இருந்திருக்கலாம் என்று கருதுதற்கு வாய்ப்பளிக்கிறது.

தமிழ் நெடுங்கணக்கு

தமிழில் எழுத்தொலிகள் படைக்கப்பட்ட காலம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். எழுத்தொலிகளை நெடுங்கணக்கு முறையில்

வரிசைப்படுத்திய தமிழ்ச் சான்றோர்களின் நுட்பமான அறிவு போற்றற்குரியது. நெடுங்கணக்கு அமைப்பினை நோக்குவோம்.

அகரம் வாயைத் திறந்த அளவில் வெளிப்படுதலால் அது முதல் எழுத்து ஆயிற்று. இகரம் கன்னங்களின் விரிதலொடு வாயைத் திறக்க வெளிப்படுவதால் அடுத்து வைக்கப்பட்டது. உகரம் உதடு குவிதலொடு வாயைத் திறப்பதனால் வெளிப்படுவதால் அதனை அடுத்து வைக்கப்பட்டது. ஆகார ஈகார ஊகாரங்கள் அகர இகர உகரங்களின் நீட்சியாகவே, அவை முறையே அகர இகர உகரங்களை அடுத்து வைக்கப்பட்டன. அகரக்கூறும் இகரக்கூறும் இணைய ஏற்படும் எகர ஒலியும் அதன் நீட்சியாகிய ஏகார ஒலியும் அடுத்து வைக்கப்பட்டன. அகரஇகரக்கூறுகளோடு யகரமெய்க்கூறும் இடைக்கலப்பதால் உண்டாகும் ஐகாரம், ஏகாரத்தை அடுத்து வைக்கப்பட்டது. அகரக்கூறும் உகரக்கூறும் கலப்பதால் உண்டாகும் ஒகரமும் அதன் நீட்சியாகிய ஓகாரமும் நெடுங்கணக்கில் அடுத்து இடம் வழங்கப்பட்டுள்ளன. அகர 'உகர ஒலிகளோடு வகரமெய் ஒலியும் இடை மிடையத் தோன்றும் ஔகாரம், உயிரெழுத்து நெடுங்கணக்கில் இறுதியாக இடம் பெற்றது.

எனவே, வாய் உறுப்புகளின் செயற்பாடின்றி அவை சமநிலையில் நிற்க, வாய் அங்காப்பக் குரல்வளையிலிருந்து வெளிப்படும் உயிர்இசையே அகரம் என்னும் அடிப்படை எழுத்தாகும். இவ்வகரம் எல்லா எழுத்தொலிகளுக்கும் அடிப்படையாகவும் துணையாகவும் அவை உள்ளிருந்து வெளிப்படும் நிலையில் செயற்படும். எனவே, எந்த எழுத்து ஒலிக்கப்படினும், அவ்வெழுத்தொலியில் அகரவுயிரின் தொடர்பு ஓரளவேனும் தவறாது இணைந்திருக்கும். இது பற்றியன்றே வள்ளுவனாரும்,

'அகர முதல எழுத்தெல்லாம்' (குறள் 1)

என்று குறிப்பிடுவார் ஆயினார். அவ்வகரமாகிய எழுத்தே வாய்இதழ்களின் கோணத்தாலும் நாவிளிம்பின் விரிவாலும் சுருக்கத்தாலும் ஏனைய பதினோருயிர்களையும் தோற்றுவித்துத் தான் தலையாக நின்று தமிழில் உயிர்ஒலிகள் பன்னிரண்டனையும் அமைத்துள்ளமை புலனாகும்.

குரல்வளை வாயிலாக வெளிப்படும் ஒலியை நாவும் இதழும் தடைசெய்யாது நிற்பின், அவ்வோசை உயிர்ப்பு இசையாய் உயிரெழுத்துகளைப் பிறப்பிக்கும். நாவும் இதழும் பல்லும் அண்ணமும் செயற்பட்டுத் தடைசெய்து அவ்வொலிகளை வெளிப்படுத்தும்போது, அவை மெய்எழுத்துகளைப் பிறப்பிக்கும். எனவே, உயிர்ப்புஇசையால் வெளிப்படும் ஒலிகளாகிய உயிரெழுத்துகள் முன்னரும், தடைப்பட்டு வெளிப்படும் ஒலிகளாகிய மெய்யெழுத்துகள் பின்னரும், நெடுங்கணக்கில் வைக்கப்பட்டுள்ளன.

ககரம் அடிநா அடிமேல்வாயைப் பொருந்தலாலும், சகரம் இடைநா இடைமேல்வாயைப் பொருந்தலாலும், டகரம் நுனிநா நுனிமேல்வாயைப் பொருந்தலாலும் பிறக்கும். ஙகார ஞகார ணகாரங்கள் முறையே ககர சகர டகரங்களின் பிறப்பிடத்தையே தம் பிறப்பிடமாகக் கொண்டு அதனோடு மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றுதலினாலே பிறத்தலின் முறையே கங, சஞ, டண என வல்லொலியும் அதற்கு இனமாகிய மெல்லொலியுமாக வைக்கப்பெற்றன.

முன்வாய்ப்பற்களை நாவின் நுனி நன்கு பொருந்துவதால் தகரமும் மேல்உதட்டைக் கீழ்உதடு பொருந்தப் பகரமும் தோன்றுதலான் அவை அடுத்து இடம் பெற்றுள்ளன. தகரத்தின் ஒலியோடு மூக்கிசை சிவணுதலால் தோன்றும் நகரமும், பகரத்தின் ஒலியோடு மூக்கிசை இணைதலால் பிறக்கும் மகரமும், தகர பகரங்களை அடுத்து முறையே வைக்கப்பட்டன. வல்லினமெய்யாகிய ககரத்தில் தொடங்கியது போல, வல்லினமெய்களுள் அழுத்தமான ஓசை உடைய றகரத்தில் முடிதல் பொருத்தமானது என்ற கருத்தால் நுனிநா வளைந்து மேல்வாயை நன்கு தொடுவதால் தோன்றும் றகரம் இறுதி வல்லொலியாகவும், அதன் மூக்கின் வளியிசையொடு இணைந்த னகரஒலி அதன் இனமாதலின் அதனை அடுத்து மெய்யெழுத்து நெடுங்கணக்கில் ஈற்றெழுத்தாகவும் வைக்கப்பட்டன.

அடிநா அடிமேல்வாயினை அழுத்திப் பொருந்துவதனால் யகரமும், நாவின் நுனி மேல்நோக்கி மேல்வாயைத் தொடுவதனால் ரகரமும், நாவின்நுனி முன்வாய்ப்பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதனால் லகரமும், மேற்பல்லைக் கீழ்உதடு பொருந்துவதனால் வகரமும், நாவின்நுனி சிறிது உள்வளைந்து மேல்வாயைத் தடவுவதனால் ழகரமும், நாவின்நுனி உள்வளையாது மேல்வாயைத் தடவுவதனால் ளகரமும் பிறத்தலின் அவை பகர மகரங்களை அடுத்தும் றகர னகரங்களுக்கு முன்னரும் முறையே வைக்கப்பட்டன.

ஆய்தம் உயிரெழுத்துக்கள் போல ஒலிப்புடனேயே தோன்றுவதனாலும், மெய்எழுத்துகள் போல அரைமாத்திரை அளவே ஒலித்தலாலும், உயிர்வருக்கத்து இறுதியில், மெய்வருக்கத்துக்கு முதலில் வீரசோழிய நூலுக்கு முற்பட்ட காலம் தொடங்கித் தமிழ் நெடுங்கணக்கில் இடம்பெற்றுவருகிறது.

தொல்காப்பியனார் காலத்து முற்பட்ட காலம்தொட்டுத் தமிழ் நெடுங்கணக்கில் இம்முறையிலேயே உயிர்ஒலிகள் பன்னிரண்டும், ஒற்றுஒலிகள் பதினெட்டுமாக முப்பது ஒலிகள் தமிழின் அடிப்படை எழுத்துக்களாகப் போற்றப்பட்டுள்ளன. மொழியிடையிலேயே படுத்து ஒலிக்கப்படும் ஆய்தம் ஏனைய குற்றியலிகர குற்றியலுகரங்கள் போலச்

சார்பெழுத்தாகக் கொள்ளப்பட, தமிழின் அடிப்படை எழுத்துகள் முப்பதும் சார்பெழுத்துகள் மூன்றுமாக முப்பத்துமூன்றும் தமிழ்எழுத்துகளாக வரையறுக்கப்பட்டன.

வரிவடிவ வேறுபாடுகள்

மொழி பல்லாயிரம் ஆண்டுகள் வளர்ந்து பேச்சுவழக்கில் பயில, அம்மொழி பேசும் மக்கள் தத்தம் மனத்துப்பட்ட கருத்துகளைத் திறம்பட மற்றவர் உணருமாறு மொழிவாயிலாகப் பல சொற்றொடர்கள்மூலம் வெளிப்படுத்தியபின், தாம் அரிதின் முயன்று கண்ட செய்திகளைப் பின்தோன்றுபவர்களும் அறியவேண்டும் என்ற வேணவா அவர்கள் உள்ளத்தில் வெளிப்பட்ட காலத்திலேயே, மொழியில் உள்ள ஒலிஎழுத்துகளுக்கு வரிவடிவம் அமைத்தல் வேண்டும் என்ற இன்றியமையாமை அவர்கள் உள்ளத்தில் முகிழ்த்திருத்தல் வேண்டும். அங்ஙனம் ஒலிஎழுத்துகளை வரிவடிவில் யாவரும் உள்ளங்கொள்ளும் வகையில் அமைப்பதற்குச் சிறிது காலம் ஆகியிருத்தல் கூடும். எழுத்துகளுக்கு வகுத்த வடிவத்தைச் சிதைவின்றிக் கற்கள் முதலியவற்றில் பொறிக்கலாம். அங்ஙனம் பொறிக்கப்படும் எழுத்துகள் கோடுகள் முதலியன செம்மையாக அமையப் பொறிக்கப்பட்டிருத்தலின் அவைகளே எழுத்து எனப்பட்டன என்ப.

எழுத்துகளைக் கையின்துணையால் பனையோலை முதலியவற்றில் எழுத்தாணிகொண்டு எழுதும்போது, ஒவ்வொருவரும் தத்தம் கையினைப் பயன்படுத்தும்போது ஏற்படும் சிலசில மாறுதல்களால், பனையோலை முதலியவற்றில் எழுதப்படும் எழுத்துகளின் பொதுஅமைப்பு யாவரும் உளம்கொள்ளும் வகையில் ஒருபடியாக இருப்பினும், வடிவில் அவரவர் கை பயன்படும் வகையை நோக்கச் சிறிதுசிறிது வேற்றுமை உடையதாகவே காணப்படுவது இயற்கை. இன்னும் ஒரே மொழியின் எழுத்துகளை எழுதும் பலருடைய கையெழுத்துகளும் பலதிறப்பட்டவையாக இருத்தல் கண்கூடு. விரைவில் எழுத முயலும்போது எழுத்துகளை வளைத்து எழுத முற்படுவதனால் சுவடிகள் முதலியவற்றில் எழுதப்படும் எழுத்து வட்டெழுத்து எனப்படும் என்பார் ஒருசாரார். மொழிஅமைப்பில் தமக்கென்று ஒரு மரபினை வகுத்துக்கொண்ட தமிழ்ச்சான்றோர்கள் வரிவடிவிலும் எழுத்தமைப்பிற்குத் தமக்கென்று ஒரு தனிவழியை வகுத்துக்கொண்டனர். வரிவடிவில் எழுதப்பெறாது, ஒலிவடிவினதாகவே-எழுதாக் கிளவியாகவே-தமிழில் எந்த ஒரு நூலும் இருந்ததாக அறியக்கூடவில்லை. சிலகாலம் இறையனார் அகப்பொருள் உரை கர்ணபரம்பரையாக வந்தது என்பது ஒரு கற்பனையே. எனவே, பேச்சுமொழி செப்பமுற்று அம்மொழியில் சான்றோர் தம் கருத்துகளை நூலாக வடித்துத்

தர முற்பட்ட காலத்திலேயே, தமிழ் எழுத்துகளுக்குத் தமிழ்ச்சான்றோர் வரிவடிவமும் அமைத்துவிட்டனர் என்றே கருதவேண்டியுள்ளோம்.

கிரந்த எழுத்து

எழுத்தமைப்பு தமிழர்களுக்குக் கைவந்த கலையாகும். பாரததேசம் முழுதும் பரவியிருக்கும் சமசுகிருதத்தைத் தமிழகம் தவிர ஏனைய பாரதப் பகுதியிலுள்ளோர் யாவரும் தேவநாகரி வடிவிலேயே எழுதிய காலத்தில் சமசுகிருதத்தை எழுதுவதற்குத் தமிழர் கிரந்த எழுத்து என்ற ஓர் எழுத்து முறையை உருவாக்கினர். அக்கிரந்த வரிவடிவம் தமிழ்எழுத்தின் வரிவடிவை ஒத்ததாகவே அமைந்துள்ளது. தேவநாகரி வடிவில் நான்கு ஏடுகளில் எழுதப்படும் பகுதியைக் கிரந்த எழுத்தில் ஒன்றரை ஏடுகளில் அடக்கிவிடலாம். அச்சுப் பொறியின் தொடக்ககாலத்தில் பாரததேசத்தின் ஏனைய பகுதியிலுள்ளோர் தேவநாகரி எழுத்தில் பெரிய எழுத்துகளை அமைத்து ஆயிரக்கணக்கான பக்கங்களில் பதிப்பித்த வான்மீகி இராமாயணம் மூலமும் உரையும் போன்ற நூல்கள் தமிழகத்தில் கிரந்த எழுத்தில் சிலநூறு பக்கஅளவில் முழுமையாகப் பதிப்பிக்கப்பட்டன. தேவநாகரி எழுத்தைவிடக் கிரந்த எழுத்து விரைவில் எழுதுவதற்கும் ஏற்றதாய் அமைந்தது. ஆகவே, தமிழகத்தில் அச்சுவடிவில் வெளிவந்த சமசுகிருத நூல்கள் யாவும் கிரந்த எழுத்தின் வாயிலாகவே வெளியிடப்பட்டன. ஓரைம்பது ஆண்டுகளாகத் தமிழகத்தார் கிரந்த எழுத்தைப் புறக்கணித்ததாலும், கிரந்த எழுத்து அறியாமை காரணமாகப் பாரததேசத்தின் ஏனைப்பகுதிகளில் வாழும் சான்றோர்கள் அந்த எழுத்தில் எழுதப்பட்ட வடமொழி நூல்களை உணர இயலாததாலும், கிரந்த எழுத்துப் பெரும்பாலும் வழக்கற்று வருகிறது. வடமொழியில் பட்டங்கள் பெற்ற சான்றோர்களில் தமிழ்நாட்டில் வாழ்பவர்கூடக் கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்ட நூல்களை வாசிப்பதற்கு இயலாது தடுமாறுவதனைக் காண்கிறோம்.

தமிழகக் கல்வெட்டுப் பகுதிகளிலுள்ள வடமொழிப்பகுதி ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலையிலும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டதாகவே காண்கிறோம். வடமொழி கலந்த தமிழ்நடையில் வரையப்பெற்ற வைணவ நூல்கள் பலவும் அண்மைக்காலம் வரை வடமொழிப் பகுதிகளுக்குக் கிரந்த எழுத்தையே அச்சிடப் பயன்படுத்திவந்தன. இப்பொழுது வரும் புதிய பதிப்புகளில் கிரந்த எழுத்தின் இடத்தைத் தேவநாகரி எழுத்து எனப்படுவதும், வடஇந்திய மொழிகள் பலவற்றையும் எழுதப் பயன்படுவதும் ஆகிய எழுத்தே ஆக்கிரமித்துக்கொண்ட நிலையைக் காண்கிறோம். நம் முன்னோர் தம் தனித்தன்மையை வெளிப்படுத்தப் படைத்துத் தந்ததும், ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆண்டுகளாகத் தாம் சமசுகிருத நூல்களையும் சொற்களையும்

எழுதப்பயன்படுத்தி வந்ததும் ஆகிய கிரந்த எழுத்தைப் போற்ற முன்வாராது நெகிழ்க்க முற்பட்டது நம் பேற்றுக்குறைவே. அதுமட்டும் அன்று. கிரந்த எழுத்துகளில் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற ஐந்து எழுத்துகளை மாத்திரம் நாம் நடைமுறையில் ஏற்றுப் பயன்படுத்திவருகிறோம். வடமொழி மெய்யெழுத்துகளின் நெடுங்கணக்கில் முப்பதாவது எழுத்தாகிய என்பதனை நாம் பயன்படுத்த மறந்ததன் காரணம் புலப்படவில்லை. அதனைப் பயன்படுத்தாது போயினும் தவறில்லை. அதனைத் தமிழ்எழுத்தாகிய சகரத்தின் வாயிலாக நாம் மேற்கொள்ளலாம். அதனையும் செய்யாமல் என்ற எழுத்துப்பயன்பட வேண்டிய இடங்களில் ஸ என்ற எழுத்தைப் பயன்படுத்துவதே பெருந்தவறாகும். இப்பெருந்தவறு நம் திருக்கோயில்களிலே முதலில் முகிழ்த்தெழுந்தது எனலாம். தஞ்சைப் பெருவுடையாரைத் தஞ்சை ராஜராஜீ வரம் உடையார் எனப் பண்டைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அப்பெருமானை, ப்ரஹதீஸ்வரர் என்று இக்காலத்தார் வழங்குகின்றனர். ப்ரஹதீ வரர் என்பதனைத் தமிழ் எழுத்தால் பிரகதீசுவரர் என்று குறிப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் தமிழ்மரபோடு வடஎழுத்தையும் அருகித் தேவைப்பட்ட இடங்களில் பயன்படுத்துவதாகக் கூறிக்கொண்டு, பிரகதீ வரர் என்று வரவேண்டிய இடத்தில் ஸகரத்திற்கு இடம் கொடுப்பது பெருந்தவறு. சிவன் (வன்) என்பதனை ஸிவன் என்று தவறாக எழுத முற்படாத தமிழ்ச் சான்றோர் ஈ வரன் என்பதனை ஈசுவரன் என்று எழுத மனமின்றி ஈஸ்வரன் என்று தவறாக எழுதி வருவது வருந்தத்தக்கது.

தமிழின் நெடுங்கணக்கு வடமொழியின் நெடுங்கணக்கைப் பார்த்து அமைந்தது அன்று என்பது போலவே, தமிழின் வரிவடிவங்களும் வடமொழி எழுத்து வரிவடிவங்களை உட்கொண்டு அமைக்கப்பட்டன அல்ல என்றும், வடமொழியை எழுதத் தமிழர் தமக்கென்று சிறப்பான முறையில் அமைத்துக் கொண்ட வரிவடிவம் ஆகிய கிரந்தம் இக்காலை போற்றப்படாது நெகிழ்த்தப்படுகிறது என்றும் கண்டோம். இதனால் தேவநாகரி எழுத்தில் அச்சிடப்படாது கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்ட சென்ற நூற்றாண்டுத் தொடக்கத்து நூல்கள் பல தொடரும் நூற்றாண்டில் உணர்வார் அற்று வழக்கிழந்து போகும் என்பது ஒருதலை.

இனி, தமிழ்மொழி எழுத்துகளின் தனித்தன்மையையும், அவை தமிழ் மக்களால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எங்ஙனம் செப்பமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தன என்பதனையும், தொல்காப்பியம் துணைக்கொண்டு நோக்குவோம். தொல்காப்பிய எழுத்துப்படலத்துக்கு ஆசிரியர் பாலசுந்தரனார் அண்மையில் வரைந்துள்ள ஆராய்ச்சிக் காண்டிகை தமிழ்மொழியின்

எழுத்தமைப்பின் சீர்மையைத் திறம்படச் சுட்டியுள்ளமையின், அவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ள பல செய்திகளை இதன்கண் எடுத்துக்கூறுதல் பொருத்தமானதாகும்.

எழுத்தொலியும் ஓசையும்

மூலாதாரத்தின் மேல் அமைந்துள்ள நாததத்துவம், சிதாகாசம் என்னும் உச்சி நடுவின் உணர்வினால் எழுத்தொலிகள் தூண்டப்பட்டுக் கிளர்ந்து, உயிர்க்காற்றினது ஓசையாய் வளியொடு கூடி உந்தியிவ் நிலைபெற்றுச் சிந்தையில் நிகழும் கருத்துக்களைத் தனக்கு அகநிலையாகவும் பிறருக்கு அவர்தம் செவி வாயிலாக உணரப்படும் புறநிலையாகவும் அறிவிக்கும் நிலையில் உருப்பெற்று நிகழும். இவற்றுள் அகத்தெழு வளியிசை உள்ளுணர்வு உடைய யோகியர்க்கே புலனாகிப் பயன்தரும் ஆதலின் மிகச் சிறுபான்மையராகிய அவர்களை விடுத்து, பொதுவாக மொழியைப் பயன்கொள்ளும் எல்லாருக்கும் பயன்படும் மெய்தெரிவளியிசையே இலக்கண நூல்களில் விளக்கப்படும் என்பது தொல்காப்பியனார் கருத்து.

இவ்வாறு இலக்கண நூல்களில் விளக்கப்படும் புறத்தெழுவளியிசை உயிர்ப்புஒலியாய் உயிர்களையும், ஒற்றுஒலியாய் மெய்கள் குற்றியலிகரம் குற்றியலுகரங்களையும், அஃகு ஓசையாய் ஆய்தத்தையும், கண்டத்தின் வாயிலாக வெளிப்படுத்தும். எழுத்துஒலி தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைபெற்று வெளிப்படும். இவற்றுள் தலை, கருத்து மையமாக உணர்வு அடிப்படையை உண்டாக்கும். மிடறு, உணர்வு மையமாகக் குரல்வளை நரம்புகளை இயக்கும். நெஞ்சு, உந்தியிலிருந்து தோன்றிவரும் காற்றின் ஓசையை நிரப்பி மேற்செலுத்தும். இங்ஙனம் உந்தியிலிருந்து வரும் ஓசையை ஒலிஎழுத்துகளாக வெளிப்படுத்தும் உறுப்புக்கள் மிடறும் உள்மூக்குமாகும். அவ்வொலி எழுத்துகளைச் செப்பமாக உருவாக்கும் நிலைஉறுப்புகள் மேல்வாயும் பற்களும் ஆகும். இயங்கு உறுப்புகள் நாவும் உதடுகளும் ஆகும். ஒலியை வெளிப்படுத்த உதவும் இந்த உறுப்புகளில் பற்கள் நீங்கலாக ஏனைய உறுப்புகள் யாவும், உடல் நன்னிலையில் இருக்கும்வரைத் தடங்கலின்றிச் செயற்படக்கூடியன. ஆனால் மூப்பு நலியப் பற்கள் எஞ்சாமல் உதிர்ந்துவிடுதலும் நிகழும். அந்நிலையில் நிலை உறுப்புக்களுள் தலைசிறந்த பற்கள் இல்லாமல் போவதால் எழுத்தொலிகளை எவ்வளவு முயன்றாலும் எதிர்பார்க்கும் அளவிற்குச் செப்பமாக ஒலித்தல் இயலாதுபோகின்றது. இதனாலன்றோ 'பல்லுப் போனால் சொல்லுப் போச்சு' என்ற பழமொழியும் வழங்குவதாயிற்று.

உயிரெழுத்து மெய்யினை ஊருவதால் ஏற்படும் கூட்டெழுத்து உயிர்மெய்எழுத்து என்று தமிழ்ச்சான்றோர்களால் பெயரிடப்பட்டது. வடமொழியில் உயிர்மெய்எழுத்துகள் பலவகை இருப்பினும், அவற்றிற்குத் தனியே உயிர்மெய் என்றாற்போலப் பெயர் வகுக்கப்படாதது வியப்பாகவே உள்ளது. இந்த உயிர்மெய்எழுத்துகளில் மெய்ஒலியும் உயிர்ஒலியும் கலந்து இருப்பினும், மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னுமாக அமைய, மெய்யொலியின் சுவடும் உயிரொலியின் பெரும்பான்மை முழுமையும் அமைந்திருத்தலினால் தமிழ்ச்சான்றோர்கள் 'உயிர்மெய் எழுத்து உயிரளவிற்றே', என்று குறிப்பிட்டனர். அகரம் முதலாகப் பன்னிரண்டு கோணங்களில் வெளிவரும் உயிர்ப்பிசையினை நாவானது அண்பல்லோடும் அண்ணத்தோடும் உற்றும், உறழ்ந்தும், இதழானது பல்லொடும் இதழொடும் இயைந்து தடைப்படுத்தி வெளிப்படுத்தும் நிலைமையான் வருவன உயிர்மெய்-*1* என்ற பாலசுந்தரனாரின் விளக்கம் உயிர்மெய்எழுத்தில் உயிரொலியின் சிறப்பினை விளக்குவதாகும்.

இந்த உயிர்மெய் ஒலிக்குத் தனி வரிவடிவம் அமைத்த சான்றோர்களின் செயல் பாராட்டத்தக்கது. நாம் பேசும்போது தமிழ்மொழியின் உயிர்மெய்எழுத்துகள் உயிர்களின் மாத்திரை அளவாகவே ஒலிக்கப்படுதலை உட்கொண்டு, உயிர்மெய்யை ஒரெழுத்தாகவே எழுதியதனால் ஒலித்தல் தூய்மையோடு எழுத்துச்சுருக்கமும் உண்டாதலைக் காணலாம்.

உயிர்மெய் பற்றிப் பாலசுந்தரனார் கூறுவது சிறப்பாக உள்ளது. பதினெட்டு மெய்களும் வாய்க்குள் வடிவு கொள்ளுங்கால் செவியுள் வருவதில்லை. அவற்றிற்கு உரிய அநுகரண ஓசையைக் கொடுத்து அவற்றை வெளிப்படுத்தும்போது, அவற்றுக்கான ஓசை அரைமாத்திரை அளவிற்றாகவே இருக்கும். இதனைத் தொல்காப்பியனார். 'மெய்யின் அளவே அரைஎன மொழிப' (எழுத்து *11*) என்கிறார். மெய்யினது முழுத்தன்மையைப் புலப்படுத்த வேண்டின் எழுத்துச்சாரியையாய்த் தமிழுக்கே உரித்தான அகரச்சாரியையைப் புணர்த்தே ஒலித்தல் வேண்டும். இதனைத் தொல்காப்பியனார். 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' (எழுத்து *46*) என்கிறார். எனவே, மெய்க்கு வடிவுகொள்ளும் அகநிலை, ஒலிப்புற்று நிற்கும் புறநிலை என்ற இருநிலை உண்டு. வடிவுகொள்ளும் அகநிலையாக உள்ள நிலையிலேயே மெய்கள் உயிர் ஏற இடம் கொடுக்கின்றன. ஒலிப்புற்று நிற்கும் நிலையில் புள்ளி என்று கூறப்படும் அம்மெய்கள், ஒலிப்புற்று நிற்கும் அந்நிலையை நீத்துப் பண்டை வடிவுடைய நிலையிலேயே உயிர் ஏற இடங்கொடுத்தலைத் தொல்காப்பியனார்,

> **'புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது**
> **மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே'** **(எழுத்து. 138)**

என்று குறிப்பிடுகிறார். மெய்யினை ஊர்ந்துவரும் உயிர், தன் தலைமைப்பாட்டினையும் பிறப்பிடத்தையும் இழந்து மெய்க்குத் துணையாகி அவற்றுக்குத் தலைமைப்பாட்டினைத் தருவதால் மெய் ஊர்ந்து வரும் உயிரை உயிர்மெய் என்கிறோம். ஒலிப்புற்று நில்லாது வாய்க்குள் வடிவுற்று நிற்கும் மெய்யின் பிறப்பிடத்தையும் வளியிசையையும் பெற்று உயிர், உயிர்மெய்யாக வெளிப்படுவதால் உயிர் மாத்திரையே பெறுகிறது. இவ்வாறு மெய்க்குத் துணையாகும் உயிர்கள் தமக்குரிய கண்டமாகிய பிறப்பிடத்தையும் மிடற்று வளியிசையையும் நெகிழ்த்து தாம் ஊர்ந்து வரும் மெய்யின் பிறப்பிடத்தையும் வளியிசையையும் பெற்று வெளிப்படுவதை 'மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே' *(எழுத்து. 18)* என்கிறார். உயிர்மெய் உயிருக்குரிய குறில் நெடில் தன்மையையும் மெய்க்குரிய வன்மை மென்மை இடைமைத் தன்மையையும் கொண்டு, ஒரே எழுத்தாகக் கொள்ளப்பட்டு, வரிவடிவிலும் ஒரே எழுத்தாக எழுதப்படினும், புணர்ச்சி என்பது எழுத்தொலியின் மயக்கம் ஆதலின், உயிர்மெய் புணர்ச்சிக்கண் ஒற்றொலியும் உயிரொலியுமாகப் பிரித்துக் கொள்ளப்படும். மெய்க்குத் துணையாகி உயிர்மெய்யை அமைக்கும் உயிர் தனக்குரிய பிறப்பிடத்தையும் வளியிசையையும் நெகிழ்ப்பது போலவே, வரிவடிவின் கண்ணும் உயிர்மெய் தனக்குரிய உயிர்வடிவத்தை நெகிழ்த்து மெய்வடிவத்தை முழுமையாகக் கொண்டு அதன்கண் உயிர்வடிவத்தின் சிறுசுவடே புலப்படுமாறு எழுதப்படுவதனை நோக்கலாம்.

தமிழில் குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் மூன்றும் சார்பெழுத்துகளாக உள்ளன.

ஏவல் ஒருமை வினைப்பகுதியை அடுத்துவரும் மியா என்ற அசைச் சொல்லின் இகரமும், யகரம் வருமொழி முதலில் வர நிலைமொழி இறுதியிலுள்ள குற்றியலுகரம் கெட அதனிடத்து வந்து பொருந்தும் இகரமும், அரைமாத்திரை அளவினதாகிய குற்றியலிகரமாகும். இஃது அரைமாத்திரை அளவிற்று என்பதனைக் காட்ட வரிவடிவில் புள்ளியிட்டு எழுதப்பட வேண்டுவது. குற்றியலிகரத்தை ஈற்றில் கொண்ட ஒரு சொற்கும் முற்றியலிகரத்தை ஈற்றில் கொண்ட அதே சொற்கும் பொருள் வேறுபாடு உண்டு.

ஆடி, சுவடி, தொண்டி, கொக்கி, கண்டி, குறும்பி போன்ற சொற்கள் யகர முதல் மொழியொடும் புணரும்போதும், ஆடு, சுவடு, தொண்டு, கொக்கு, கண்டு, குறும்பு போன்ற குற்றியலுகரஈற்றுச் சொற்கள் யகர முதல்மொழியொடு புணரும்போதும், ஆடியாது, தொண்டியாது, கொக்கியாது, கண்டியாது,

குறும்பியாது என்றே புணரும். இவை முற்றியலிகரமாகும்போது பொருள்வேறு; குற்றியலிகரமாகும்போது பொருள் வேறு என்பதனை உய்த்துணர்ந்து குற்றியலிகரம் என்ற எழுத்தின் இன்றியமையாமையை உணரலாம்.

கண்டி - ஆண் எருமை. கண்டு - கற்கண்டு. குறும்பி - புற்றாஞ்சோறு. குறும்பு - சேட்டை. தொண்டி - ஓர் ஊர். ஆடி - கண்ணாடி.

குற்றியலுகரம்

தடையுற்றுப் பிறக்கும் வல்லெழுத்துக்கள் ஆறும் குறை உரிச்சொற்களின் ஈற்றெழுத்துக்களாக அமையுங்கால் அவற்றை வெளிப்படுத்தற்குத் துணையாகி வரும் அரைமாத்திரை உயிர்ப்பிசை உடைய ஒலியே குற்றியலுகரம் ஆகும். அரைமாத்திரை உயிர்ப்போலியே உடையதாதலின் உயிர்எழுத்து ஏற இடங்கொடுத்துத் தன் அரைமாத்திரையை இழந்துவிடும். இச்செய்திகள்

மெய்யின் அளவே அரைஎன மொழிப. *எ-11*
அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே. *எ-12*
மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல். *எ-104*
குற்றிய லுகரத்து இயற்கையும் அற்றே. *எ-105*
புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித்து இயலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே. *எ-138*
மெய்உயிர் நீங்கின் தன்னுரு வாகும். *எ-134*

எனச் சார்பெழுத்துகளுக்கு மெய்யெழுத்திற்கு ஓதப்படும் இலக்கணங்களை மாட்டெறிந்து கூறப்படுவதனால் அறியலாம்.

ஒரே வகையாக அமைந்த குற்றியலுகரச் சொல்லிற்கும் முற்றியலுகரச் சொல்லிற்கும் பொருள்வேறுபாடு உண்டு. மொழிஇறுதிக் குற்றியலுகரச் சொல் பெயராகவே இருக்கும். அதே வடிவுடைய முற்றியலுகரச்சொல் ஏவல் ஒருமை வினைமுற்றாகவே இருக்கும். வரிவடிவில் முற்றியலுகரம் புள்ளி பெறாது. குற்றியலுகரம் புள்ளியிட்டு எழுதப்பெறும்.

குற்றியலுகரம்	முற்றியலுகரம்
நாடு (தேயம்)	நாடு - ஆராய்வாயாக
காது (செவி)	காது - மோதுவாயாக
கட்டு (பொதி)	கட்டு - பிணிப்பாயாக
கொத்து (இணர்)	கொத்து - தோண்டுவாயாக

நோக்கு (விழி)	நோக்கு	- பார்ப்பாயாக
நுங்கு (பனஞ்சுளை)	நுங்கு	- விழுங்குவாயாக
ஒன்று (முதல் எண்)	ஒன்று	- பொருந்துவாயாக
முருகு (அழகு)	முருகு	- முதிர்வாயாக
கடுகு (ஒரு தானியம்)	கடுகு	- விரைவாயாக
பெருக்கு (வெள்ளம்)	பெருக்கு	- மிகுப்பாயாக
ஒற்று (ஒற்றன்)	ஒற்று	- பிறர் அறியாமல் அறிந்து வருவாயாக
கொட்டு (களைக்கொட்டு)	கொட்டு	- வீசி ஊற்றுவாயாக
ஆடு (ஒரு விலங்கு)	ஆடு	- ஆடுவாயாக
ஓடு (கூரை வேயும் ஓடு)	ஓடு	- விரைந்து செல்வாயாக
பாடு (துன்பம்)	பாடு	- பாடுவாயாக
நூறு (ஓர் எண்)	நூறு	- அழிப்பாயாக

மேற்குறிப்பிடப்பட்டவற்றில் குற்றுகரத்தை இதழ் குவியாமலும் முற்றுகரத்தை இதழ் குவித்தும் முறையே அரை மாத்திரை, ஒரு மாத்திரை அளவினவாக ஒலித்துப் பொருள் வேறுபாடும் உணர்த்தி வந்தனர் நம் பண்டைச் சான்றோர்கள் என்பதும் அவர்கள் குற்றியலுகரத்திற்கும் முற்றியலுகரத்திற்கும் வரிவடிவிலும் வேற்றுமை காட்டக் குற்றியலுகரத்துக்குப் புள்ளியிட்டு எழுதி வந்தனர் என்பதும், அவர்தம் எழுத்துப் பற்றிய தெளிவான கருத்துகளைப் புலப்படுப்பனவாகும்.

ஏவல் ஒருமைக்கண் குற்றியலுகரஈறு வாராது என்பதனைத்

தொல்காப்பியனார்,

'குற்றிய லுகரத்து இறுதியும் உளப்பட
முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே' - எ. *152*

என்ற நூற்பா அடிகளில் குறிப்பிட்டதும் நோக்கத்தக்கது.

ஆய்தம்

இச்சார்பெழுத்து, வாயின் அங்காப்பு வாய்இதழ்களின் குவிவு நா விளிம்பின் விரிவு சுருக்கம் என்ற உயிர் முக்கோணத்தின் இசையை உள்ளடக்கி மெய்யைப் போல அரைமாத்திரை அளவிற்றாய், உயிரைப் போல ஒலிப்புடனேயே தோன்றும் தனித்தன்மையுடையதாய், மொழிஇடையே குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடையே தோன்றி வரும் தனிச்சிறப்பு உடைமை பற்றித் தனிநிலை எனவும் கூறப்படுவதாய், யாப்பில் ஒரோவழி

உயிர்போல எழுத்தாகக் கொள்ளப்பட்டும் ஒரோவழி மெய்போல எழுத்து எண்ணப்படாமலும் வருவது. வரிவடிவிலும் கோடுகளாக அமையாமல் தனிச்சிறப்பாக மூன்று புள்ளிவடிவிற்றாகவே எழுதப்படுவது.

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு -குறள் *943.*

என்புழி உயிர்போல அலகுபெற்றும்,

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று -குறள் *236.*

என்புழி மெய்போல அலகுபெறாமலும் ஆய்தம் வரும் நுணுக்கத்தைக் காண்க. இவ்வாய்தம் செய்யுளில் தொடைநலம் நோக்குமிடத்து எதுகைக்கண் யகரத்துக்கு மாற்றெழுத்தாக வரும்.

செய்கபொருள் யாரும்செறு வாரைச்செறு கிற்கும்
எஃகுபிறி தில்லைஇருந் தேஉயிரு முண்ணும்
ஐயமிலை இன்பம்அற னோடவையு மாக்கும்
பொய்யில்பொரு ளேபொருள்மற் றல்லபிற பொருளே.

-சிந்-*497.*

ஆய்தம் அமைந்துவரும் சொற்கள் சிலவே. ஆதலின் அருகிப் பாடலில் எல்லா அடிகளிலும் ஆய்தமே எதுகையில் வரும் இடனும் உண்டு.

எஃகென இலங்கு வாட்கண் எறிகடல் அமுத மன்னாள்
அஃகிய மதுகை தன்னால் ஆய்மயில் ஊரும் ஆங்கண்
வெஃகிய புகழினான்தன் வென்றிவெம் முரசம் ஆர்ப்ப
எஃகெறி பிணையின் மாழ்கி இறுகிமெய் மறந்து சோர்ந்தாள்.

-சிந். *299.*

இவ்வாறு எதுகைத் தொடை அமைப்பிலும் தமிழ்ச் சான்றோர்கள் ஆய்தத்துக்கு இருநிலையும் வழங்கியுள்ளனர்.

அளபெடை

இனி, உயிரெழுத்துகள் ஒரோவழி நீண்டும் ஒரோவழிக் குறுகியும் ஒற்றெழுத்துகள் ஒரோவழி நீண்டும் ஒரோவழிக் குறுகியும் ஒலிக்கும் திறனையும் நம் முன்னோர்கள் வரையறுத்துள்ளனர்.

தனியே உயிர்நெடிலோ, உயிர்மெய்நெடிலோ, இரண்டு மாத்திரைக்கு மேல் ஒலித்தல் கூடாது. ஒலியை நீட்ட வேண்டின் தேவைப்பட்ட மாத்திரைக்கு

வேண்டிய அவ்வந் நெடிலின் இனக்குற்றெழுத்தை இணைத்து அவ்வொலி நீட்டத்தைக் கோடல் வேண்டும். அங்ஙனம் ஒலிநீட்டத்துக்குப் பயன்படும் இனக்குற்றெழுத்து அளபெடைஎழுத்து எனப்படும். உயிர்நெடில் ஏழும் அளபெடுக்கும். இனக்குறில் இல்லாத ஐகார ஔகாரங்கள் முறையே இகர உகரங்களை இனக்குறிலாகக் கொண்டு அளபெடுக்கும்.

குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே. -எ.*41*

ஐ ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கும்
இகர உகரம் இசைநிறை வாகும். -எ. *42.*

அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே. -பொ. *329.*
(உம்மையான் ஆகாமையும் உரித்து)

ஒரோவழிக் குறில் நெடிலாக நீண்டு, பின் அளபெடுப்பதும் உண்டு.

புகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான. -எ.*261*

இவ்வளபெடை பெரும்பாலும் செய்யுட்கண் சீர் நிறைக்கவும் பா என்னும் ஓசை நிகழவும் தோன்றும்.

'அளபெடை நிலையும் காலத் தானும்
அளபெடை இன்றித் தான்வரு காலையும்
உளவெனப் படுப பொருள்வேறு படுதல்' சொ-*283.*

என்ற நூற்பாப் பகுதி அளபெடை ஒரோவழிப் பொருள் வேறுபாடு தருதற்கும் பயன்படுதலைக் குறிப்பிடுகிறது. இந்நூற்பா உரையுள் ஆசிரியர் நச்சினார்க்கினியர் வெள-கைப்பற்று, வெளஉ-தவறாது கைப்பற்றியே விடு என்ற பொருள்வேறுபாடுகளைக் காட்டுகிறார்.

இனி, அளபெடையை ஆசிரியர் அறிமுகம் செய்துவைக்கும்

நூற்பாவிலேயே,

நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் -எ.*6*

என, எழு-தன்வினை; எழூஉ-பிறவினை என்பதனை உடம்பொடு புணர்த்துக் கூறுகிறார். தன்வினையைப் பிறவினையாக்குதற்கண் வினைப்பகுதியின்

ஈற்றுக் குற்றுயிர் நீண்டு அளபெடுத்தலை ஆசிரியர் உட்கொண்டுள்ள செய்தி உணரப்படுவதால், உயிர்அளபெடை ஓசை நிரப்புவதற்கு மட்டும் பயன்படாமல், தமிழில் பொருள்வேறுபாடு தரவும் பயன்படுத்துப்பட்டுள்ள செய்தியை உணர்கிறோம். குறில் நெடிலாகிப் பின் அளபெடுக்கும் நிலையிலேயே தன்வினை பிறவினையாக்கப்படும் செய்தியை,

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு -குறள். *94.*

என்ற குறட்பாவானும் உறுதி செய்யலாம். துன்புறு-வருந்து, இன்புறு-மகிழ்; துன்புறூஉ-பிறரை வருத்து; இன்புறூஉ - பிறரை மகிழச் செய்.

வினையெச்ச, பெயரெச்ச வாய்பாடுகளைச் சற்று மாற்றி அமைக்கும் இடத்தும் இவ்வுயிரளபெடை தமிழில் பயன்படுகிறது.

உடுத்து-உடீஇ; தூவி-தூஉய்;குழுமி-குழீஇ;
மருவி-மரீஇ;விரவி-விராஅய்;நச்சி-நசைஇ.

நீக்கி நிறுத்தும் உரவோர்

'நீக்கி நிறூஉம் உரவோரே' நாலடி. *57.*

என்பனவும் காண்க.

வடமொழியில் ஆ+ய்+இ-ஐகாரம்

ஆ+வ்+உ-ஔகாரம்

எனவே வடமொழியில் ஐகார ஔகாரக் குறுக்கங்களுக்கு வாய்ப்பு இல்லை.

ஒற்றளபெடை

'கண்ண் டண்ணெனக் கண்டும் கேட்டும்' - மலைபடு-*352* என்றாற் போலச் செய்யுட்களில் மாத்திரம் வரும் ஒற்றளபெடை ஓசை நிறைப்பதற்கே பயன்படுதலின் தொல்காப்பியனார் ஒற்றளபெடையைச் செய்யுளியலில் குறிப்பிட்டார்.

லகர ளகரங்கள் திரிந்த னகர ணகரங்களில் பின் ஒருமொழிக்கண் ஈற்றெழுத்தாக வரும் மகரம், தன் இயல்பான அரைமாத்திரையிலும் குறுகும். அவ்வாறே நிலைமொழி ஈற்று மகரம் வருமொழி தொடர்நிலையில் வகரம் வரின் குறுகும். இத்தகைய குறுக்கம் முன்னெழுத்து பின்எழுத்து இவற்றின்

பிறப்பியல் முயற்சியான் ஏற்படக்கூடியது என்ற நுட்பத்தை யறிந்து போன்ம், மருண்ம், வரும் வளவன் என்றாற் போல்வனவற்றில் வரும் மகரம் கால்மாத்திரை அளவிற்றாகக் குறுகும் என்பது முன்னவர் கருத்து.

தொல்காப்பியனார் லகரம் திரிந்த னகரத்தை அடுத்த மகரத்தை மாத்திரம் சுட்டினார். பின்னையோர் ளகரம் திரிந்த ணகரம் அடுத்த மகரத்தையும் கொண்டனர். மகரக் குறுக்கத்தின் வரிவடிவம்

"உட்பெறு புள்ளி உருவா கும்மே" எ. *14*.

எனப் புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற் பெறும் புள்ளியும் அடுத்து வரும் என்று சுட்டப்பட்டுள்ளது. ஒரோவழி உரையாடும்போது ஈற்றில் வரும் ஏகாரம் ஒருமாத்திரை உடைய எகரம் போல ஒலிக்கப்படுவதும் உண்டு. உண்டாயோ என்ற வினாவிற்கு விடையிறுப்பவன் உண்டேனே என்று மறுமொழி கூறும்போது, ஈற்று ஏகாரம் ஒரு மாத்திரை குறைந்து உண்டேனெ என்று ஒலித்தலாகிய நுட்பமும் தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளது.

ஈற்று நின்று இசைக்கும் ஏ என் இறுதி
கூற்றுவயின் ஓரளபு ஆகலும் உரித்தே. சொ. *287*

இவ்வாறு பண்டைத் தமிழச்சான்றோர்கள் உயிர்எழுத்து, மெய்யெழுத்து, சார்பு எழுத்து என்பனவற்றைப் பற்றிய பல தெளிவான கருத்துகளை உட்கொண்டுள்ளதனை அறிகிறோம்.

எழுத்து இலக்கணம் உயிர்எழுத்தின் இலக்கணம், மெய்எழுத்தின் இலக்கணம் பற்றித் தொல்காப்பியனார் குறிப்பிடுவதை ஆசிரியர் பாலசுந்தரனார் தொகுத்துக் கூறியுள்ளார்.

எழுத்து

நாதகாரியமாய் மக்களின் உந்தி முதலாத் தோன்றிக் கண்டத்தில் அழுத்தம் பெற்று, வாய் உறுப்புகள் உள்மூக்கு இவற்றின் முயற்சியால் பிறக்கும் செவிக்குப் புலனாகும் ஒலி வடிவமாகிய எழுத்து கண்ணுக்குப் புலனாகும் வரிவடிவமாகவும் எழுதப்பெறும். மாத்திரை என்னும் இசை அளவுக்கு உட்பட்டு ஒலிக்கும். சொல்லாகவோ, சொல்உறுப்பு ஆகவோ நின்று இருதிணை ஐம்பாற் பொருளையும், இவற்றின் பண்பு தொழில் என்பனவற்றையும், உணரவும் உணர்த்தவும் கருவியாக அமையும். தனித்து ஒலிப்பினும் மொழி இடைப்படுத்து ஒலிப்பினும், தன் இலக்கணத்தில் திரியாது.

உயிரெழுத்து

உந்தி முதலா முந்து வளி, கண்டத்தில் அழுத்தம் பெற வாய் உறுப்புகளின் ஒற்றுதல்தொழில் இன்றி, இதழ்களின் கோணத்தான் மிடற்றுவளியான் தம் நிலை திரியாது உயிர்ப்பொடு கண்டத்தினின்றும் பிறந்து செவிப்புலனாகும். அவ்வொலியே உயிராம்.

இவ்வுயிர், தனித்தும் மெய்யினை ஊர்ந்தும் சொல் உறுப்பாயும் அமைந்து பொருள் குறித்து நிற்கும்; மெய்கள் உயிர்மெய்யாதற்குத் துணை நின்று அவற்றின் பிறப்பிடமே இடமாகத் தோன்றி வரும்;

தனித்து இசைக்குங்கால் குறுமையும் நெடுமையும், உயிர்மெய்க்குத் துணையாகுங்கால் வன்மையும் மென்மையும் இடைமையும் பெறும்;

தனித்தும் மெய்யினை ஊர்ந்தும் செய்யுட்கண் அலகுபெறும்; உயிர்-மெய்க்குத் துணையாகுங்கால் வரிவடிவில் தன் கூறுகளை நிறுத்தித் தன் வரிவடிவினை இழக்கும்.

உயிர்எழுத்துகள் யாவும் மொழிமுதற்கண் வரும்.

செய்யுள் ஓசை கருதியும், சீர்அமைப்புக் கருதியும், ஒரோவழிப் பொருள் வேறுபாடு கருதியும், இசை விளி பண்டமாற்று முதலியன கருதியும், உயிரானது அளபெடை கொண்டு ஒலித்தலும் உண்டு.

உயிர்மெய்யாய நிலையில் மொழியிறுதியில் எகரம் நீங்கிய ஏனைய உயிர்கள் வரும். எகரம் அளபெடைக்கண்ணே மொழிஇறுதியில் வரும்.

மெய் எழுத்து

தனித்து ஒலிக்கும் இயல்பு இன்றி, வாய் உறுப்புகளான் உருவாகி வடிவுற்று அநுகரண ஓசையால் ஒலிநிலை எய்தித் தடையுற்று வெடித்தும், அடைவுஉற்று நழுவியும், தடையின்றி உரசியும், நெஞ்சுவளி மூக்குவளி மிடற்றுவளி இவற்றான் மெய்யெழுத்துப் பிறக்கும்.

உயிர், உயிர்மெய் எழுத்துகளின் பின் உயிர்இசைஅலகின் துணையால் மெய் ஒலிக்கும்; வாய்உறுப்புகளில் தொழில்நிகழ்ச்சியும் வளி இசையும் காரணமாக வன்மை, மென்மை, இடைமை என்ற ஒலித் தன்மைகளைப் பெறும்; உயிரின் துணையால் உயிர்மெய்யாக்கத்தை நிகழ்த்தும்.

மெய், உயிரும் குற்றியலுகரமும் ஏற இடம் கொடுத்து அவ்வழித் தன் மாத்திரையை இழந்து அவற்றின் மாத்திரை அளவே ஒலிக்கும்;

மொழிக்கண் விட்டிசையாது தொடர்ந்து வரும்; உடன்நிற்றற்கு ஏலாத மெய் இணைய வரும்வழி திரிந்து பிளவுபடாமல் தொடரும்;

உயிரோடு இணைந்தோ உயிரைச் சார்ந்தோ சொல்லாயும் சொல் உறுப்பாயும் இணைந்து பொருள் விளைக்கும்;

உயிரோடு உயிரை இயைக்க உடம்படுமெய்யாய் வரும்.

உடம்படுமெய்

உயிர், மெய்யோடு மயங்கும்; உயிரோடு மயங்காது. ஆகவே உயிரோடு உயிரை இணைக்கப் பற்றாசு போன்ற மெய்யெழுத்துத் தேவைப்படுகிறது. அங்ஙனம் தேவைப்படும் எழுத்து உயிர்அழுத்தம் பெற்றுப் பிறக்கும் மிடற்று வளியால் பிறப்பதாகவும் உயிரைப் போன்று மொழிக்கு முதலில் வரும் ஆற்றல் உடையதாகவும் இருத்தல் வேண்டும். அத்தகைய தகுதி உடைய மெய்கள் யகரமும் வகரமுமே. யகரத்தோடு ஒத்த ஒலி உடையன இ ஈ ஐ என்பன. எனவே இ ஈ ஐ வழி யகரமும், ஏனைய உயிர்வழி வகரமும், ஏ முன் இரண்டும் பெரும்பான்மையும் உடம்படுமெய்யாக வந்து ஈருயிர்களை இணைக்க உதவும்.

மொழி முதல், கடை, இடை எழுத்துகள்

முதலும் சார்புமான *33* எழுத்துகளுள் *22* எழுத்துகள் மொழி முதலிலும் *24* எழுத்துகள் மொழி ஈற்றிலும் வரும்.

மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின்
இரண்டு தலையிட்ட முதலா கிருபஃது

அறுநான்கு ஈற்றொடு நெறிநின்று இயலும்
எல்லா மொழியும் எ. *103*

என்ற தொல்காப்பிய நூற்பாப் பகுதி மொழி முதல் கடையில் வரும் எழுத்துகளின் தொகையைக் குறிப்பிடும்.

உயிர் பன்னிரண்டும் மொழி முதலாகி வரும்.

மெய் தனித்து மொழி முதலாகி வாராது. உயிரின் துணைக்கொண்டு உயிர்மெய் ஆகியே மொழிக்கு முதலில் வருமிடத்து, கதநபம என்ற ஐந்து மெய்களும் பன்னிரண்டு உயிர்களாகும்; சகரம், அ ஐ ஔ எஞ்சிய ஒன்பது உயிர்களோடும்; வகரம், உ ஊ ஒ ஓ எஞ்சிய எட்டு உயிரோடும்; ஞகரம், ஆ எ ஒ என்ற மூன்றோடும்; யகரம் அகர உயிரோடும் மொழிமுதற்கண் வரும். நுந்தை என்ற முறைப்பெயர் ஒன்றில் மட்டும் குற்றியலுகரம் மொழி முதற்கண்

வரும். எனவே, மொழி முதற்கண் வருவன உயிர் பன்னிரண்டும் உயிர்மெய்யாக வரும் க ச ஞ த ந ப ம ய வ என்ற மெய் ஒன்பதும் குற்றியலுகரமும் ஆகிய இருபத்திரண்டாம்.

மொழி ஈற்றில் வருவன உயிர் பன்னிரண்டு, ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்ற ஒற்று *11*, குற்றியலுகரம் ஆக *24* எழுத்துகளாம். ஒளகாரம் கௌ, வௌ என்ற இருசொற்களிலேயே மொழிஈறாக வரும்.

எகரம் அளபெடைக்கண்ணேயே மொழிஈறாக வரும்.
ஒகரம் நொ என்ற சொல்லிலேயே மொழிஈறாக வரும். சகர
உகரத்தால் இறும் சொற்கள் உசு, முசு என்ற இரண்டே;
நகர ஒற்றான் இறும் சொற்கள் பொருந், வெரிந் என்ற இரண்டே;
ஞகரத்தான் இறும் சொல் உரிஞ் என்ற ஒன்றே;
வகரத்தான் இறும் சொற்கள் அவ், இவ், உவ், தெவ் என்ற
நான்கே என, அருகி வரும் சு பு ந் ஞ் வ் என்ற ஈறுகளால்
அமையும் சொற்கள் பண்டே வரையறுக்கப்பட்டுள்ளன.

மெய் மயக்கம்

சொற்களின் இடையில் மெய்கள் ஒன்றோடொன்று இணைந்து வரும் மெய்ம்மயக்கம் ஒலிமுறையான் இன்ன எழுத்திற்கு இன்ன எழுத்து நட்பெழுத்து இன்ன எழுத்து பகைஎழுத்து என்று அறிதல் மாத்திரம் அன்றி, அவற்றின் ஒலித்திரிபுகளையும் அறிய உதவுவதாகும். உலகமக்களுள் பிறருக்காகவே வாழ்பவர் மிக அரியர். தமக்கே வாழ்பவர் சிலர். சமுதாய அமைப்பில் தமக்காகவும் பிறர்க்காகவும் வாழ்பவரே பலர். அம்முறையை இம்மெய்ம்மயக்கத்திலும் காணலாம் ர, ழ என்ற மெய்களோடு கார்ப்பு காழ்ப்பு என்றாற்போல பிற மெய்களே மயங்கும். கசதப என்ற மெய்களோடு அவற்றின் இனமெய்களே பக்கம், தச்சு அத்தன், கப்பம் என்றாற்போல மயங்கும். ஏனைய பன்னிரண்டு மெய்களோடு அங்ஙனம், அங்கு, மஞ்ஞை, அஞ்சி என்றாற்போல தன் மெய்களும் பிற மெய்களும் மயங்கும்.

வல்லொற்றுக்கள் இரட்டுமிடத்தும், மெல்லொற்றொடு இணைந்து வருமிடத்தும், இடையொற்றோடு இணைந்து வருமிடத்தும், மெல்லினத்துக்கும் இடையினத்துக்குமிடையே வரும் இடத்தும், தத்தம் ஒலியில் சிறிது வேறுபட்டு ஒலித்தலைப் போன்ற இடங்களில் பகர ஒலித்திரிபினைக் காணலாம். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் அம்மொழிச் சொற்களை இயல்பாக ஒலிக்குங்கால், வல்லொற்றை அடுத்தது, மெல்லொற்றை அடுத்தது, இடையொற்றை அடுத்தது, வல்லொற்று இரட்டியது என்றாற் போன்ற

காரணங்களை அறியாமலே உள்வளி முயற்சியால் பல் நா முதலியன செயற்படும்போது ஒரே எழுத்தைத் தன் முன் பின் எழுத்தை நோக்கிச் சிறிது திரித்து ஒலிப்பதனைக் காணலாம். சொற்புணர்ச்சிக்குத் தேவைப்படும் அளவிலேயே எழுத்துகளின் பிறப்பினைப் பிறப்பியலில் உரைத்த தொல்காப்பியனார், இக்கருத்தினை 'தத்தம் திரிபே சிறிய என்ப' எ-*88* என்ற நூற்பாவினைச் சிங்கநோக்காக அமைத்து உய்த்துணர வைத்துள்ளார். தமிழ் நூலார் *33* ஒலிகளையே அடிப்படையாகக் கொண்டு, அவற்றில் *957* ஒலிகளை அடக்கி உள்ள செய்திகளைப் பாலசுந்தரனார் விரித்துக் கூறியுள்ளார். ஒரு மொழி, பேச்சுவழக்காக உருப்பெற்று எழுத்துவடிவம் உற்று, தொடர்நிலை எய்தி, நூல்வடிவாக எழுதிப் பாதுகாக்கும் நிலையினை எய்தப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகலாம். வளர்ந்து பிறந்த ஒரு மொழியினின்றும் கிளைக்கும் பிறிதொரு மொழி சில நூற்றாண்டுகளிலேயே உருப்பெற்றுச் செம்மையுற இயலும்.

இலக்கணத் தோற்றம்

ஒரு மொழி, தொடர்ஆக்கம் பெற்று, வளர்ந்து எதிர்காலத்தில் நிலைத்தற்கும் நினைவுறுத்துதற்கும் ஏற்பத் தொடர்களையும் சொற்களையும் செம்மை செய்து அழகும் சுவையும்பட அமைத்துக்கொள்ளும் பாட்டு முதலிய செய்யுள்வடிவம் எய்த மேலும் பல நூற்றாண்டுகளாகும். அங்ஙனம் வளர்ந்து இலக்கியச் செம்மையுற்ற நிலையில்தான் இலக்கணம் பற்றிய நினைவு முகிழ்த்தெழும். இலக்கணம் பல்லாண்டுகள் சான்றோர் பலரால் ஆராயப்பெற்று அம்மொழி பேசுவோர் ஏற்றுப் பயிலும் நிலையில்தான் வரையறை செய்யப்படும். அவ்வரையறைகள் செம்மையுற்ற பின்னரே சூத்திரயாப்பு முறையில் இலக்கண நூல்கள் இயற்றப்பெறும். எனவே, மொழி தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்த, பிற்பட்ட காலத்தில்தான் அதன்கண் இலக்கண நூல்கள் வரையப்பெறும்.

இலக்கண நூல்கள் ஒருமொழியை வழங்கும் சான்றோர்கள் ஏற்கும் வகையில் உருபெற்ற பின்னர், அவற்றின்வழியே சான்றோர்கள் இலக்கியங்களை ஆக்க அவற்றை மக்கள் பயிலத் தொடங்கிய பின்னர்த்தான் அம்மொழி பெரிதும் சிதைவுறாமல் செழிப்புறும்.

தமிழில் தொல்காப்பியம் என்ற எழுத்து சொல் பொருள் என்ற முத்திறப் பாகுபாடுடைய நூல் தோன்றுவதன் முன்னரே, இலக்கண நூல்கள் எழுத்து, சொல், பொருள் இவை பற்றித் தனித்தனியே விரிவாக யாக்கப் பெற்றிருத்தல் கூடும். சொற்படலப் புறநடை நூற்பாவில் தொல்காப்பியனார்,

'செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்' சொ. *463*

எனத் தமக்குமுன் பல்வேறு செய்திகளைக் குறிப்பிட்ட நூல்கள் இருந்த செய்தியைச் சுட்டுகிறார். அல்லதும், வழிநூல் வாய்பாடாக என்ப-எ. *88* என்மனார்-சொல்.*1* நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே-எ. *7*. கடிநிலையின்றே ஆசிரியர்க்க - எ.*389*. நுனித்தகு புலவர் கூறிய நூலே-பொ. *666* எனத் தம் நூலில் பல இடங்களில் குறிப்பிடுவதுகொண்டும் தொல்காப்பியத்துக்கு முற்பட்ட இலக்கண நூல்கள் பல தமிழில் தோன்றி இருந்தன என்பது பெறப்படும்.

தமிழ் முதல்மொழியே

இவ்வாறு தான் வழங்கப்பட்ட நிலத்தின் நன்மக்கள் முயற்சியால் தோன்றி வளர்ந்து செம்மையுற்று மரபுநிலை திரியாது பொலிவுற்று விளங்கும் தமிழ்மொழி, மக்கள் பேசிய இயற்கை மொழியிலிருந்து செம்மை செய்யப்பட்ட மொழியாகிற வடமொழியினின்றும் கிளைத்ததன்று. பொருள் பற்றிய பால் பாகுபாடுகளும், உயர்திணை அஃறிணை என்ற பொருள் பாகுபாடுகளும் புணர்ச்சிக்கண் படும் கருவி செய்கை என்பனவும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், வெண்பா ஆசிரியம் முதலிய பாப் பாகுபாடுகளும் எனுமிவை போல்வனவும், தமிழ்மொழியின் நெடுங்கணக்கும், அதன் தனித்தன்மையை வெளிப்படுப்பன.

தமிழில் வடமொழிச்சொற்கள்

'மொழிபெயர்த்து, அதர்ப்பட யாத்தல் *(பொருள். 652)* என்ற தொல்காப்பியத் தொடர், மொழிபெயர்த்துப் பல செய்திகளைத் தமிழில் கொள்ளுதலையும் தமிழ்ச்சான்றோர் உடன்பட்ட செய்தியை விளக்குகிறது.

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்என்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே *(பொருள். 397)*

என்ற நூற்பா தமிழ்ச்செய்யுள்களில் வடசொற்களும் அருகி இடம் பெறுதற்கு வாய்ப்பு அளிக்கிறது. ஆனால், ஆரியச்சொற்களை அவற்றின் ஒலியை அப்படியே ஏற்றுக்கொண்டு வரிவடிவில் உள்ள ஆரிய எழுத்துகளைத் தமிழ் எழுத்துகள் இடையே இணைத்துச் சொல்லாக்கம் செய்து பயன்படுத்துதலைத் தமிழ்ச்சான்றோர் ஏற்றுக்கொள்ளவில்லை.

தொல்காப்பியம் சமசுகிருதத்திலிருந்து திரித்துக்கொண்ட சித்திரை முதலிய திங்கட்பெயர்களையும், அசுவினி முதலிய நாட்பெயர்களையும் நோக்குக.

ஆரியமொழியில் உள்ள சிறப்பெழுத்துகளாகிய ரு, ரூ, லு, லூ, அம், அ: என்ற ஆறு உயிர்கள் - கங, சஞ, டண, தந, பம என்ற ஐந்து வருக்கங்களிலும் இடையே உள்ள மும்மூன்று ஒற்றுகள் - ஸ, ஷ, ஸ,. ஹ, க்ஷ என்பவற்றைத் தமிழ்ஒலிக்கு ஏற்பத் திரித்து வடசொல்லுக்குப் பயன்படுத்துக எனவும், ஆரியத்துக்கும் தமிழிற்கும் பொதுவாகிய எழுத்துகளால் அமைந்த ஆரியச்சொற்களைத் தமிழ் வரிவடிவிலேயே எழுதிப் பயன்படுத்துக எனவும் தொல்காப்பியர் சுருக்கமாகக் கூற, வீரசோழியம், நன்னூல் போல்வன அச்சிறப்பெழுத்துகளைத் தமிழ்மொழி அமைப்பிற்கேற்ப எவ்வெவ்வாறு பொது எழுத்துகளாகத் திரித்துக்கொள்ளவேண்டும் என்பதனை விளக்கிக் கூறுகின்றன. வடமொழிச் சொற்றொடர்களில் காணப்படும் அச்சொற்றொடர்களுக்குப் பயன்படுத்தும் விதி வீரசோழியம், முத்துவீரியம் முதலிய நூல்களில் இடம்பெறுகிறது. இவற்றை இலக்கியம் படைத்த சான்றோர் ஏற்ற பெற்றிப் பயன்படுத்தியுள்ளனர். ஒரோவழி வடமொழிச் சந்தியை விடுத்து வடசொற்களை இணைக்குமிடத்துத் தமிழ்ச்சந்தியையும் பின்பற்றியுள்ளனர்.

சந்திர + உதயம்	-	சந்திரோதயம்	- வடமொழிச் சந்தி
		சந்திரவுதயம்	- தமிழ்ச்சந்தி
இதர + இதரம்	-	இதரேதரம்	- வடமொழிச் சந்தி
		இதரவிதரம்	- தமிழ்ச்சந்தி
நாக + ஈச்சரவன்	-	நாகேச்சரவன்	- வடமொழிச் சந்தி
		நாகவீச்சரவன்	- தமிழ்ச்சந்தி

சாளரம் தோறும் தோன்றும் சந்திர உதயம் கண்டார் - *(இராமா. 493)*

ஒருதொடர் இடைவரூஉம் இதர விதரமும் - *(இலக். விளக். பொருள். 268)*

நச்சுவார்க்கு இனியர் போலும் நாகவீச்சரவனாரே - *(தேவ. 4808)*

வடசொற்களைத் தமிழ்ச் சிறப்பெழுத்து ஐந்தாலும் திரித்துக் கொள்வதும் உண்டு.

யந்த்ரம்-எந்திரம்- 'எந்திர ஊர்தி இயற்றுமின் என்றான்' *(சிந்தா. 234)*

கோங்கணம்-கொங்கணம்- 'கொங்கணக் கூத்தரும்' *(சிலப். 26-106)*

அமிர்தம்-அமிழ்தம்- 'இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்' (புறம். *182)*

கல்பகம்-கற்பகம்- 'கற்பகச் சோலைத் திருக்கடித் தானமே' (திவ்பிர. *3511)*

ராம-இராமன்- 'இராமன் எனப்பெயர் ஈந்தனன் அன்றே' (இராமா *296)*

பத்மநாபன்-'பற்பநாபன் உயர்வற உயரும் பெருந்திறலோன்' (திவி. பிர-*2861)*

விஷ்ணு-'வல்லன் எம்பிரான் விட்டுவே' (திவ். பிர - *2854)*

கருடன்-'விண்ணுறக் கலுழன் மேல் விளங்கும் விண்டுவின்' (இராமா-*5416*

யக்ஷன்-'இயக்கர் சிந்தினர்' (இராமா - *6093)*

ராகவன்-'புனைகழல் இராகவன் பொற்புயத்தையோ' (இராமா *5137)*

லோபம்-'உளப்படும் பிணிப்புஅறா உலோபம் ஒன்றுமே' (இராமா *363)*

எனத் தமிழ்மரபு கெடாத வகையில் தமிழ்ச்சான்றோர்கள் ஆரியச்சொற்களைத் தமிழ்மரபிற்கு ஏற்ற வடசொற்களாக மாற்றிப் பயன்படுத்தியுள்ளனர்.

ஈச்வரக்ருஹம்-ஈச்சரம்
வீரஸ்தாநம்-வீரட்டானம்
தம்ஷ்ட்ரம்-தட்டம்
உபநயனம்-உவனியம்
ராக்ஷஸி-இராக்கதி

என்றாற்போலத் திரித்துக்கொள்வதனையும் காண்கிறோம்.

கோபாலனைக் கோவலன் எனவும், சத்யந்தரனைச் சச்சந்தன் எனவும், யக்ஞசத்ருவை வேள்விப்பகைவன் எனவும், மகராக்ஷனை மகரக்கண்ணன் எனவும், திரித்தும் மொழிபெயர்த்தும் தமிழில் கொள்ளப்பட்ட வடமொழிப் பெயர்கள் நூற்றுக்கணக்கில் உள. ஆனால் "எந்த நிலையிலும் நமக்கு நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் போதவில்லை ஆதலின் வடமொழி எழுத்துகளையும் சேர்த்துக்கொண்டு செய்யுள் அமைக்க வேண்டும்" என்ற எண்ணம் தமிழ்ச்சான்றோர்கள் உள்ளத்தில் *9*ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை ஏற்படவில்லை.

இரட்சணிய யாத்திரிகம் என்ற கிறித்தவர் காப்பியத்திலேயே,
"மாண்டார் உயிரளிக்கும் மாமருந்தை வேரோடு
கீண்டெறிவார் இந்தக் கெடுதோ ஷிகள் என்பார்"
"ஜீவனை இழந்தஇச் சகத்திற்கு ஈறிலா
ஜீவன்வந்து இயையவும் அடைத்த நித்திய

ஜீவவா யிலுக்கோர் திறப்புண் டாகவும்
ஜீவனின் அதிபதி ஜீவன் விட்டனன்"

என்றாற்போல வடமொழி எழுத்துகளையும் பாடல்களில் இடைமிடைந்ததனைக் காண்கிறோம். 'அருட்பெருஞ்ஜோதி' என்று வரைவதும் அது.

வரிவடிவில் குறில் நெடில்

தமிழகம் பல்லவர் ஆட்சிக்கீழ் இருந்த காலத்தில், வடமொழியின் தாக்கம் மேம்பட்டிருந்தகாலை, எல்லா மொழிக்கும் தாய் வடமொழியே என்ற எண்ணம் நன்மக்களிடையேயும் பரவத் தொடங்கியதால், எதனையும் வடமொழியோடு ஒப்பிட்டுப் பார்த்து அதன்கண் காணப்படாத எச்செய்தியும் பிறமொழிகளில் இருத்தல் இயலாது என்ற உறுதியான முடிவை நன்மக்கள் உளங்கொளத் தொடங்கினர். தமிழ்நாட்டின் சோழநாட்டுப் பகுதியிலும் பாண்டிய நாட்டுப் பகுதியிலும் இடைக்காலத்தில் ஆண்ட மன்னர்கள் பலரும் ராசகேசரி, பரகேசரி, சடாவர்மன், மாறவர்மன், முதலிய பட்டங்களையும் ஆரியமொழியில் அமைந்த பெயர்களையுமே பூண்டு வந்தனர் என்பதனை நோக்க வடமொழி இடைக்காலத்தில் பெற்ற ஆதிக்கம் புலப்படும்.

அக்காலத்தில் வடமொழியில் இல்லாத எகர ஒகரங்கள் தமிழில் இருப்பதனைக் கண்டு, அவற்றின் ஒலிவடிவினை உட்கொண்ட சொற்கள் பலவாக இருத்தலின் ஒலிவடிவில் ஏதும் திரிபு செய்ய இயலாது வரிவடிவில் மாத்திரம் ஏகார ஓகாரங்களின் வரிவடிவினையே எகர ஒகரங்களுக்கு மேற்புள்ளியோடு வழங்கிப் பயன்படுத்திய நிலை ஏற்பட்டிருக்கலாம். உயிர்மெய்யிலும் ஏகாரத்துக்குப் பயன்படுத்தும் இரட்டைக் கொம்பினை நெகிழ்த்திருக்கலாம். குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளி பெறும் என்ற கருத்தில் அமைந்த 'இகர உகரத்து இயற்கையும் அற்றே' என்ற நூற்பா, எகர ஒகரத்து இயற்கையும் அற்றே என்ற திரிபினைப் பெற்றிருக்கலாம். இவையாவும் தொல்காப்பியர் கருத்திற்கு முரண்பட்டவை.

வடமொழியில் குற்றியலிகரம் குற்றியலுகரம் என்பன இன்மையின் அவை தமிழிற்கே உரிய சிறப்பெழுத்தாய்ப் புள்ளி பெறும் என்ற செய்தி தேவையற்றது என்று நெகிழ்க்கப்பட்டிருக்கலாம்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் காலத்தில் குற்றியலுகரம் புள்ளி பெற்றிருந்ததாக அறியக் கூடவில்லை. 'குற்றியலுகரமும் அற்றென மொழிப' *(எழுத்து. 105)* என்ற நூற்பாவுரையுள் அவர் 'இம்மாட்டேறு ஒருபுடைச்சேறல் புள்ளி பெறாமையின்' என்று குறிப்பிட்டிருப்பது உளங்கொளத் தக்கது.

சோழர்கள்காலக் கல்வெட்டுகளில் கோப்பரகேசரி என்ற தொடர் கொப்பாகெசரி என்றே பொறிக்கப்பெற்றமை ஏகாரத்திற்கும் எகரத்திற்கும் ஒரே வரிவடிவைக் கொள்ளும் நிலை இடைக்காலத்து ஏற்பட்டதனை வலியுறுத்தும் சான்றாகும்.

மிக நுட்பமான எழுத்தமைப்பினை ஒலிவடிவில் அமைத்து அதற்கு வரிவடிவமும் கொடுத்ததனோடு, ஆரியமொழியை வரிவடிவில் அமைப்பதற்குக் கிரந்த எழுத்து என்ற ஒரு புது வரிவடிவினையும் படைத்துக்கொண்ட தமிழ்ச் சான்றோர்கள் அ, ஆ, இ, ஈ, உ, ஊ என்பன போல எஏ, ஒஓ, இவற்றிற்கு வரிவடிவில் வேறுபாடு காட்ட இயலாது ஏகார ஓகாரங்களில் மேல் புள்ளியிட்டு எகர ஒகரங்களைப் படைத்துக் கொண்டனர் என்ற கொள்கை மனங்கொள்ள ஏலாததாகவே உள்ளது. ஆனால் இச்செய்தி நன்னூல் முதலிய பிற்பட்ட நூல்களாலும் தொல்காப்பிய எழுத்துப்படலம் பழைய உரைகளாலும் உறுதி பெற்ற பின்னர்ச் சுவடிகளில் எகர ஏகார, ஒகர ஓகார வேறுபாடுகள் இடம் நோக்கி உணரும் வகையிலேயே வரிவடிவில் வேறுபாடின்றி வரையப்பட்டன என்றே கொள்ள வேண்டியவராக உள்ளோம். புள்ளி பெற்ற எழுத்தின் மாத்திரை செம்பாதியாகும் என்ற கருத்து, திரித்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சொல்லும் பொருளும் பேதாபேதமாகக் கொள்ளப்படுதலின் சொல்லைச் சொல்லிய அளவில் பொருள் நெஞ்சிற்குப் புலனாவதும், பொருளைக் கண்ட அளவில் அதன் பெயர், பண்பு, தொழில் என்பன நெஞ்சத்திற்குப் புலனாவதும் உடன்தோன்றி நிகழ்கின்றன. மொழி என்பது கருத்துகளை உணர்வொடு வெளிப்படுத்தும் கருவியாதலின், மெய்ப்பாட்டுணர்வுகள் அச்சொற்களின் ஒலிகளுடனே கலந்து வெளிப்படும். இம்மெய்ப்பாட்டு உணர்வு காரணமாகவே அல்வழிப்புணர்ச்சியும் வேற்றுமைப் புணர்ச்சியும் வேறுபடுகின்றன என்று கூறி அவற்றைப் பாலசுந்தரனார் எடுத்துக்காட்டுக்களால் விளக்கியிருக்கிறார்.

சொற்புணர்ச்சி

சொற்கள், நிறுத்த சொல்லும் குறித்துவருகிளவியுமாய்த் தொடர்ந்து உள்ளத்துப் பட்ட செய்திகளைத் திரிபின்றித் தெளிவாக விளக்கும் சொற்றொடர்களை ஆக்குகின்றன. சொல்லொடு சொல் புணருங்கால், பொருளமைதியும் பிறப்பும் காரணமாக இயல்பாகவும், மெய்பிறிதாதல் மிகுதல் குன்றல் என்ற மூவகைத் திரிபுகளை உற்றும் புணர்கின்றன. சொல்லும் சொல்லும் புணர்கின்றன என்று கூறினும், உண்மையில் புணர்பவை நிறுத்த சொல்லின் ஈற்றெழுத்தும் குறித்துவரு கிளவியின் முதலெழுத்துமே.

வாள் + படை = வாட்படை - ளகரத்தின் இடத்து டகரம் வந்தது மெய்பிறிதாதலாகும்.

நாய் - கால் = நாய்க்கால் - இடையே ககரஒற்று மிகுந்தது.

மரம் + வேர் = மரவேர் - நிலைமொழி ஈற்று மகரம் கெட்டது.

இங்ஙனம் மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல் என்ற திரிபுகள் புணர்மொழிக்கண் நிகழ்வது நிலைமொழி வருமொழிகளை இணைத்து ஒலித்தற்கண் இயல்பாக ஏற்படும் ஒலிவேறுபாடு கருதியேயாம். இலக்கண நூலார் குறிப்பிட்டுள்ளனர் என்று அவர்களுடைய ஆணையைப் பின்பற்றி நிகழ்த்துவது ஒன்று அன்று இது. எனவே மொழி பேச்சுவழக்கில் சான்றோர். மாட்டு வழங்குங்கால் நிகழும் ஒலிவேறுபாடுகளே இலக்கண நூலாரால் எடுத்து வரையறுக்கப்பட்டுள்ளன. இத்தகைய திரிபுகள் ஏற்படுதற்கு ஒலித்தல் எளிமையும் பொருளமைதியும் காரணமாதலை அரசஞ் சண்முகனார் தம் நுண்பொருட்கோவை என்ற கட்டுரையில் விளக்கியுள்ளார். அவருக்குப் பின்வந்த சான்றோர் பலரும் விளக்கியுள்ளனர். மெய்ப்பாட்டுணர்ச்சி காரணமாகவே அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகள் ஏற்படுமாற்றைப் பாலசுந்தரனார் விளக்கியுள்ளார்.

எனவே, வழக்கும் செய்யுளுமாகிய மரபினை அடிப்படையாகக் கொண்டே தமிழில் இலக்கணம் அமைக்கப்பட்டுள்ளது என்ற செய்தியைத் தொல்காப்பியனார் நூன்மரபில் தொடங்கி மரபியலோடு தம் நூலினை நிறைவுறுத்தியுள்ள செய்தியான் உணரலாம்.

தமிழில் காலந்தோறும் பழையன சில கழிதலும், புதியன சில புகுதலும் நிகழ்கின்றன. அவை அடிப்படையான தமிழ்மரபினை ஒட்டியே தமிழில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தொல்காப்பியனார் காலத்தில் ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி, மருட்பா, பரிபாடல் என்பனவற்றுள் பிற்காலத்தில் ஆசிரியம் வெண்பா நீங்கலான ஏனைய பாடல்கள் நெகிழ்க்கப்பட்டதும், பாவினங்கள் பலவும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், பாவினங்களால் அடிப்படையான தமிழ்மரபிற்கு ஏதம் நேராதவாற்றாலேயாம் என்று கொள்கிறோம்.

இலக்கண மரபின் இன்றியமையாமை

ஒரு மொழிக்குப் பெருமை தருவன அதன் நெடுங்கணக்கு முறையும் அதன் சொற்களஞ்சியமும், இலக்கியங்களின் சிறப்பும், இலக்கணங்களின் வழக்கொடுபட்ட செறிவுமே எனலாம். ஒரு மொழியை இலக்கணமுறையால்

செம்மை செய்வதன் நோக்கம், அம்மொழியை வழங்கும் மக்களின் சோர்வாலும் வட்டார வழக்குகளாலும் பிற மொழிகளின் தாக்கத்தாலும் அது சிதைந்துவிடாது இறந்தகாலச் சான்றோர்தம் கருத்துக்களை நிகழ்காலத்தவர் திரிபின்றி உணர்ந்துகொள்வது போலவே நிகழ்காலச் சான்றோர்தம் கருத்துகளை எதிர்கால மக்களும் திரிபின்றி உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்பதாம். முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட துளசிதாசர் அருளிய பாடல்களை இக்காலத்து இந்திமொழி பயில்வார் எளிதின் உணர்ந்து கொள்ள இயலவில்லை. அப்பாடல்களைத் திரிபின்றி விளங்கிக்கொள்ள அம்மொழியாளர் தனி இலக்கணங்களை வகுத்துள்ளனர். ஆனால், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்நூல்களையும் இன்றுள்ளார் திரிபின்றி உணர்ந்துகொள்ளும் வகையில் தமிழின் இலக்கணச்செறிவு அமைந்துள்ளது.

தனிநிலை தொடர்நிலைச் செய்யுள்

தமிழில் தனிநிலைச் செய்யுள்கள் பல, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற பண்டைய தொகுப்புநூல்களில் உள்ளன. அக்காலத் தொடர்நிலைச் செய்யுள்கள் இன்ற நமக்குக் கிட்டாமையின் அக்காலத்துத் தொடர்நிலைச் செய்யுள்கள் இயற்றப்பெறவில்லை என்று முடிவுசெய்தல் இயலாது. அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து முதலியவாகத் தொல்காப்பியம் கூறும் வனப்புகள் தொடர்நிலைச் செய்யுட்கு உரியனவே. இடைக்காலத்தவர் பாடல்களை ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்று நான்கு வகையாகப் பகுத்தனர். இவற்றுள் மொழிக்குப் பெருவளம் சேர்ப்பன வித்தார, கவிகளேயாகும். அவ்வித்தாரகவி, பல பாடல்கள் ஒருபொருள்மேல் தொடர்ந்து பாடப்பெறும் "தொடர்நிலைச் செய்யுள்" எனவும், "பல அடிகளான் ஒரே பாடலாக விரிவாகப் பாடப்படும் பத்துப்பாட்டுப் போன்ற தனிப்பா" எனவும் இருவகைப்படும். தொடர்நிலைச் செய்யுளும் பொருள் தொடர்நிலை எனவும் சொல் தொடர்நிலை எனவும் இருவகைப்படும். தொல்காப்பியனார்,

> 'முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி
> பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
> யாற்றுப்படை மருங்கின் போற்றல் வேண்டும்' - *(சொல். 962)*

என அகலக்கவியைச் சொல்முடிவு கூறுமுகத்தான் கூறுகிறார். புறத்திணைக்கண்,

தாவில் நல்லிசை *(பொருள். 91)* என்ற நூற்பாவில் அகலக்கவி

இயற்றுதற்கு உரிய கருத்துகளாகிய துயிலெடைநிலை, கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை, பெருமங்கலம்,

மண்ணுமங்கலம், குடைநிழல்மரபு, வாண்மங்கலம், கடைக்கூட்டுநிலை, இருவகை விடை, ஒம்படை என்பனவற்றை விதந்து கூறுகிறார். செய்யுளியலில்,

'அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டுஎன மொழிப பாட்டியல் வழக்கின்' - (பொருள். *522)*

என்றதனால் பொருள்தொடர்நிலையும்,

மாட்டும் எச்சமும் நாட்ட லின்றி
உடனிலை மொழியினும் தொடர்நிலை பெறுமே - (பொருள். *523)*

என்பதனால் சொல்தொடர்நிலைச் செய்யுளும் பெறப்படும்.

இலக்கிய வகைகள்

இவ் வகலக்கவிகளைப் பிரபந்தங்கள் என்று பெயரிட்டுப் பின்னவர் வரைந்த பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம். முத்துவீரியம் - ஆகியவற்றின் பாட்டியல் பகுதி, பிரபந்த தீபிகை முதலியன விளக்கியுள்ளன.

இவையே அன்றித் தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பனவற்றில் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் ஆகியவற்றின் இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

மும்மணிக்கோவை, மும்மணிமாலை, நான்மணிமாலை, இணைமணிமாலை, இரட்டைமணிமாலை முதலிய பிரபந்தங்கள் இன்ன பா இன்ன பாவினங்களால் பாடப்படவேண்டும் என்பதும், உலா ஏழ்பருவமாதரின் வருணனை முதலியன கொண்டு நேரிசைக் கலிவெண்பாவால் யாக்கப்பட வேண்டும் என்பதும், தூது உயர்திணைப்பொருளையும் அஃறிணைப் பொருளையும் தூதாக விடுத்தலைக் கலிவெண்பாவினால் புனையவேண்டும் என்பதும், ஆண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் இவை, பெண்பாற் பிள்ளைத்தமிழ்ப் பருவங்கள் இவை, பிள்ளைத்தமிழ் பாடக் கொள்ளப்பட வேண்டிய பாவினம் இவை என்பதும், கலம்பக அமைப்பு இவ்வாறு. அதில் பயிலும் பாடல்கள் இன்னவை. அஃது இன்ன இன்னார்க்கு இத்தனை இத்தனைப் பாடல்களாக அமைதல் வேண்டும். கலம்பகத்தின் உறுப்புகள் இவை -என்பதும், இவை முதலாக நூற்றுக்கு மேற்பட்ட பிரபந்தங்களின் இலக்கணங்கள் இப்பாட்டியல் நூல்களில் காணப்படுகின்றன. இவற்றில் காணப்பெறாமல் புதுப்புதுப்பெயர் புனைந்து பாடப்பட்ட பிரபந்தங்களும் சில உள்ளன.

இவற்றுள் சிலவே இன்று காணக் கிடக்கின்றன. பல பிரபந்தங்களுக்கு இலக்கியங்கள் காணப்படுமாறில்லை. அவை யாவும் நாளடைவில் மறைந்து விட்டன போலும்.

இலக்கண நூல்கள்

இங்ஙனமே இலக்கண நூல்கள் பல நாளடைவில் மறைந்துவிட்ட செய்தி யாப்பருங்கலவிருத்தி உரை முதலியவற்றால் பெறப்படும்.

தமிழுக்கு நேர்ந்த வாட்டம்

சேர பாண்டிய சோழர்களான தமிழ்மன்னர்கள் ஆண்ட காலத்தில், தமிழ்மொழி மிக உயரிய நிலையில் வைத்துப் பேணப்பட்டது. அடுத்து வந்த காலத்தில் தமிழ்மொழிக்கு அத்தகைய பேணற்பாடு இல்லை. மன்னர்களைப் பாடிய புலவர்கள் தானத்தில், இறைவனைப் பாடிய அருளாளர்கள் அவதரித்தனர். அவர்கள் பாடிய பாடல் பல்லாயிரங்கள். அவற்றுள் சிலவே சுவடிகளில் பொறிக்கப்பட்டுப் பிற்காலத்தார் பயன்கொள்ளும் நிலையில் கிட்டியுள்ளன.

இடைக்காலச் சோழ, பாண்டியர் காலத்தில் தமிழில் பெருங்காப்பியங்கள் தோன்றின. சிந்தாமணி, சூளாமணி, இராமாவதாரம், பெரியபுராணம், கந்தபுராணம், நம்பி திருவிளையாடற் புராணம் முதலியன சமயச் சார்புடைய அன்பரால் ஏட்டில் பொறித்துப் பாதுகாக்கப்பட்டன. ஆனால், அக்காலத்தில் அரசர்களைப் பற்றியும் கொடைவள்ளல்களைப் பற்றியும் பாடப்பட்ட பிரபந்தங்களில் சிலவும் தனிப்பாடல்கள் சிலவுமே இன்று கிட்டுகின்றன.

பிற்காலப் பாண்டியருள் அதிவீரராமன், வரதுங்கராமன் போல்வார் பாடிய நைடதம், காசிகாண்டம் போல்வன பேணப்பட்டன. வைணவ மடங்களால் நாலாயிரதிவ்வியப் பிரபந்த உரை பேணப்பட்டது. சைவமடங்களால் பழைய சைவசமய நூல்கள் பேணப்பட்டதோடு, புதுப்புது நூல்களும் யாக்கப்பட்டன. கிபி. *18,19*-ஆம் நுற்றாண்டில் கற்றுவல்ல சான்றோர்கள் சில நூல்கள் யாத்துத் தமிழ்மொழியை வளப்படுத்தினரேனும், வேற்றுநாட்டார் ஆட்சியில் தமிழ் பொதுவாகப் பேணற்பாட்டினை இழந்தது. மடங்களில் வாழ்ந்த துறவியரும் அவரையடுத்துப் பயின்றவர் சிலருமே நல்ல புலமை பெற்றிருந்தனர். ஏனையார் சிறிதளவு தமிழ் பயின்ற அளவிலேயே தமக்குக் கிட்டிய அறிவினைக் கொண்டு புராணப்பிரசங்கங்கள் செய்து வாழ்நாளைக் கடத்தத் தொடங்கிவிட்டனர்.

கி.பி. *18*ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, *19*ஆம் நூற்றாண்டின் முற்பகுதி இவற்றில் சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் அடியோடு மறக்கப்பட்டுவிட்டன. *19*ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து ஒவ்வொன்றாக அவை அச்சில் கொணரப்பட்டன. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை, பத்துப்பாட்டு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்பன டாக்டர். ஐயர் அவர்களால் செம்மையாகப் பதிப்பிக்கப்பட்டன. ஏனைய சூளாமணி, கலித்தொகை, தொல்காப்பிய உரைகள், இலக்கண விளக்கம், யாப்பருங்கல விருத்தி, காரிகை, தண்டியலங்காரம், போல்வன பலவும் பதிப்பிக்கப்பட்டன. நற்றிணையும் அகநானூறும் இக்காலத்தவர் எழுதிய உரையோடு வெளியிடப்பட்டன. எனினும் *19*ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை தமிழை ஆர்வத்தோடு கற்றவர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. இவ்வீழ்ச்சி இப்பொழுது ஏற்பட்டதன்று. பல நூற்றாண்டுகளாகவே தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது தமிழ்நூல்கள் பலவற்றையும் பாதுகாக்க வேண்டும் என்ற எழுச்சி ஏற்பட்டிருக்கிறது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வரிவடிவம் தமிழிற்கு ஏற்பட்டமை அறியப்படுகிறது. மோகஞ்சதாரோவில் காணப்படும் எழுத்துக்கள் தமிழோடு தொடர்புடைய எழுத்துகளே என்று அறிஞர்பலர் முடிவு செய்கின்றனர்.

ஓலைச்சுவடிகள்

தமிழிலுள்ள புலங்களையும் நிலங்களையும் பண்டைக் காலத்தில் பனையோலைகளிலேயே பொறித்திருத்தல் வேண்டும். பனைமரம் தமிழ் நாட்டோடு நெடுங்காலத் தொடர்புடையது. தென்னை ஈழநாட்டிலிருந்து தமிழகம் வந்தது என்ப. எனவே, முற்றிய பனையோலைகளைப் பதப்படுத்தி ஒழுங்குபடுத்தி, ஓட்டையிட்டுத் தொகுத்து, கம்பியை இடையே செலுத்தி, அதனொடு கயிற்றை இணைத்து மேலும் கீழும் பலகையிட்டு, கயிற்றால் இறுகப் பிணித்துக்கொண்டும் தேவைப்பட்டபோது, கயிற்றை அவிழ்த்துத் தனித்தனியே பிரித்தும் பனையோலைகளில் எழுத்தாணியால் செய்திகளைப் பொறித்த செய்தியே நம்மால் உணரப்படுகிறது.

மாணாக்கர்கள் தாம் பயிலவேண்டிய பாடங்களை ஆசிரியரிடம் கற்கும் முன்னரே ஏட்டுச்சுவடிகளில் எழுதிச் சுவடியை நன்கு கயிற்றால் பிணித்து, ஏடுகள் நெகிழாதவாறு பேணிக்கொண்டு, ஆசிரியரிடம் சென்றனர் என்பதும் ஆசிரியர் ஆணையிட்ட பின்னரே ஏடுகளை அவிழ்த்துப் பாடம் கேட்டனர் என்பதும்

"இரு என இருந்து ஏடு அவிழ் என அவிழ்த்துச்
சொல்லெனச் சொல்லிச் செல்லெனச் சென்று"

என்று மாணாக்கன் இயல்பு கூறும் பாடற்பகுதியால் புலனாகின்றன.

மாறன்அலங்காரம், மாணாக்கன் கற்ற கல்வியை மறவாமைக்கு உபாயம் கூறுமிடத்தில், அவன் மூலநூல்களை மனப்பாடம் செய்தலும், அங்ஙனம் மனப்பாடம் ஆதலுக்குப் பெரிதும் உதவும் வகையில் அவற்றைத் தானே ஏடுகளில் பொறித்தலும், செய்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

'கேட்டவை கேட்டவை நிரந்தரம் பாடம்
போற்றலின் ஏட்டில் தானே பொறித்தலும்' (மாறன். 55)

புலவர் பலரும் பாடிய பாடல்களை அவ்வப் பாடல்களுக்கு அமைந்த ஒலியோடு மனப்பாடம் செய்பவனாகியும், அந்நாற்கவிப்புலவோர் புதியனவாக இயற்றும் பாடல்களைத் தானே பட்டோலை பொறிப்பவனாகியும் மாணாக்கன் இருத்தல் வேண்டும் என்றும் மாறன்அலங்காரம் குறிப்பிடுகிறது.

'பாவினை ஒலிபெறப் படனம் செய்திடும்
நாவினன் ஆகி, நாற்கவிப் புலவோர்
புதுமொழி புணர்ப்புழிப் பொறிப்பவ னாகியும்' (மாறன். 56)

எனவே, மாணாக்கன் நிலையிலிருப்பவன் தான்பாடம் கேட்க வேண்டிய நூலைத் தானே தன் கையால் சுவடியில் பொறித்துக் கொள்ளுதல் வேண்டும் என்றும், புலவர் எவரேனும் புதிய பாடல்களை யாக்க முற்பட்டவழி அவருக்குப் பட்டோலை பொறிக்கும் பணியிலும் மாணாக்கன் முற்பட வேண்டும் என்றும் கூறுவதன் வாயிலாக, ஏட்டுச்சுவடிகளில் அழகு, அளவு, வடிவு, தெளிவு இவற்றுடன் விரைவாகப் பொறிப்பதற்கு மாணாக்கனாயிருந்த காலத்திலேயே ஒருவனுக்குப் பழக்கம் ஏற்படவேண்டும் என்று நம் முன்னோர் கருதிய செய்தி புலப்படுகிறது.

ஓலை ஆவணங்கள்

ஆவணங்களும் ஓலையிலேயே எழுதிப் பாதுகாக்கப்பட்டுவந்தன. நம்பியாரூரரை அந்தணர் வேடத்தில் வந்து ஓலை காட்டி ஆட்கொள்ளச் சிவபெருமான் தான் அவைமுன் காட்ட வைத்திருந்த அடிமைச் சீட்டான ஆளோலையை ஆரூரர் வலியப்பற்றிக் கீறியிட்டார் எனவும் கிழித்துவிட்டார் எனவும் சேக்கிழார்பெருமான் குறிப்பிடுகிறார். அறுபது ஆண்டுகளுக்குக் குறையாது முற்பட்ட காலத்தில் அடிமைச்சீட்டாகப் பொறிக்கப்பட்ட ஓலை

கிழிக்கப்பட்டது என்று கூறுவதனை நோக்க, பனைஓலையின்றி அதனினும் மெல்லிதாய்ச் சுருட்டப்படத்தக்கதாய் ஒடியாமல் கிழிக்கப்படத்தக்கதான வேறுவித ஓலையும் அக்காலத்தில் பழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்று கருதுகிறோம். கிழிக்கப்பட்டது படிஓலை என்று கூறி அவையோர் முன்னர்ச் சிவபெருமானாம் அந்தணர் காட்டிய பழைய ஓலை சுருண்டு மடிக்கப்பட்டிருக்க, அம்மடிப்பைப் பிரித்துக் கரணத்தான் ஓலையை வாசித்ததாக அறிகிறோம்.

> 'இருள்மறை மிடற்றோன் கையில் ஓலைகண்டு அவையோர் ஏவ
> அருள்பெறு கரணத்தானும் ஆவணம் தொழுது வாங்கிச்
> சுருள்பெறு மடியைநீக்கி_ சபையோர் கேட்ப வாசகம் செப்பு கின்றான்'
> (பெரிய. தடுத்தாட் -*57*)

என்ற பாடலை நோக்க, அவ்வோலை தொன்மையாய்ச் சுருட்டி மடிக்கப்பட்டதாய், மடிப்பினைப் பிரித்தகாலையும் பழுதுபடாமல் தன்னிடத்திலுள்ள செய்தியைத் திரிபின்றி வாசிப்பதற்கு உரிய வாய்ப்பினதாக இருந்த செய்தியை அறிகிறோம். பனைஓலையே யன்றி இத்தகைய ஓலைகள் சிலவும் அக்காலத்துச் செய்திகளைப் பொறிக்கப் பயன்படுத்தப்பட்ட செய்தி புலனாகிறது.

கடற்காழியில் வாழ்ந்த கணநாதர் என்ற நாயனார், சிவபெருமானுடைய திருக்கோயிலில் எல்லையில் விளக்கு எரிப்போர்- திருமுறை எழுதுவோர்- வாசிப்போர்- அனைவரையும் ஆதரித்தார் எனத் திருத்தொண்டர் புராணம் கூறுவதிலிருந்து, சிலர் சிறந்த நூல்களைப் படியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் அவர்கள் சான்றோர்களால் உண்டியும் உடையும் உறையுளும் நல்கி ஆதரிக்கப்பட்டனர் என்பதும் பெறப்படுகின்றன.

குவளைப்பூவின் காம்பினை ஓலையைக் கோத்து வைக்கும் இரும்புக் கம்பியாகக் கொண்டு, எழுதுகோலினாலே எழுதப்பட்ட வரிகளை ஏற்றிழிவு படாதபடி, குவளைப்பூவின் இதழ்களைச் சுற்றி அதில் எழுதப்பட்ட செய்தியைக் கந்துக்கடன் வாசித்து அறிந்தான் என்று சிந்தாமணி *(669)* கூறுவது கொண்டு, குவளைப்பூப் போன்ற நுட்பமான பொருள்களிலும் நுட்பமான எழுதுகோல் கொண்டு எழுதும் பழக்கம் ஓரோவழி இருந்திருக்கக்கூடும் என்று கருத வேண்டியவராக உள்ளோம்.

ஓலைக் கடிதங்கள்

சீவகன், நூல் புடைத்தாற்போன்று இனிய வித்தகம் சேர் நுண்வரிகள் பல கொண்டு தன் உள்ளக்கருத்தினை ஓலைஒன்றில் வரைந்து அதனையும் தன் மோதிரத்தையும் ஒரு தினைக்கதிரில் வைத்துக் கிளி ஒன்றன்

வாயிலாகக் குணமாலையிடத்து அனுப்ப, அவள் அந்த ஓலையைத் தெளிவாக வாசித்து அதன்கண் இருந்த செய்திகளை உணர்ந்தாள் என்றும் சிந்தாமணி கூறுகிறது. *(1032, 1044)* இந்த ஓலை எந்த மரத்தின் ஓலையோ - தினைக்கதிருக்குள் பிறர் அறியாதவாறு சுருட்டி வைக்கும் இயல்பிற்றாயும் அங்ஙனம் சுருட்டி வைத்ததனால் பழுதுபடாது விரித்துத் தடங்கலின்றி அதன்கண் பொறிக்கப்பட்ட வாசகங்களை வாசித்தறியும் வாய்ப்பினை நல்குவதாயும் அமைந்த ஓலை எம்மரத்தின் தொடர்புடையதோ என்று வியக்க வேண்டியவராயுள்ளோம். இப்பொழுதும் வடநாடுகளில் எழுத்தினைப் பொறிக்கப் பயன்படுத்தும் சீதாளம் என்ற ஓலை போலவும், பூர்சபத்திரம் என்ற மெல்லிய மரப்பட்டை போலவும், சில மெல்லிய ஓலைகளும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டனபோலும்.

இங்ஙனமே கலுழவேகன் எழுதிய ஓலை *(843)* காந்தருவதத்தை சீவகனுக்கு முத்திரையிட்டுக் கொடுத்த ஓலை *(1872)* விதையத்தார் கோமானுக்குக் கட்டியங்காரன் அனுப்பிய ஓலை *(2144)* என்பன சிந்தாமணியில் கூறப்பட்டுள்ளன. அவை பனைஓலையில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட திருமுகமா, அன்றேல் வேறோர் ஓலையில் எழுதுகோலினால் மையைத் தோய்த்து எழுதப்பட்ட திருமுகமா என்பது தெளிவாகவில்லை. சூளாமணி, சுவலனசடி என்ற மன்னன் போதனநகர மன்னனான பயாபதிக்கு எழுதியனுப்பிய ஓலை - மிக அழகியதாகவும் யானைமுகத்தில் காணப்படும் செம்புள்ளி போன்ற எழுத்துகள் செப்பிலிருந்து மையைத் தோய்த்து வரையப்பட்டதாகவும் இருந்தது என்று குறிப்பிடுகிறது. இதனை நோக்கப் பயன்படுத்தப்பட்ட ஏடு கருநிறத்ததாக இருக்க, அதன்கண் எழுதுகோலால் செந்நிற மசியைத் தோய்த்துத் திருமுகம் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருத இடம் ஏற்படுகிறது.

'நிகரிகந் தழகி தாகி நெறிவடுப் படாத வேழப்
புகர்முகப் பொறிய தாகப் புகழ்ந்தசொல் அகத்துப் போகா
மகரவாய் மணிக்கண் செப்பின் மசிகலந்து எழுதப்பட்ட
பகரும் பதங்கள் நோக்கிப் பயின்றுபின் வாசிக் கின்றான்'

(சூளாமணி - *513)*

மாதவி, முதிர்ந்த தாழையின் வெள்ளிய இதழில் அலத்தகம் ஆகிய செம்பஞ்சுக்குழம்பில் பித்திகை மொட்டினை ஆணியாகத் தோய்த்து அதனால் திருமுகம் எழுதி, வசந்தமாலை வாயிலாகக் கோவலனுக்கு அனுப்பிய செய்தி சிலப்பதிகாரத்தில் *(8:49-70)* காணப்படுகிறது. இத் திருமுகம் வெண்ணிற ஓலையில் செந்நிறமசியினால் எழுதி அனுப்பப்பட்டதுபோலும்.

மாதவி கோவலனுக்குக் கோசிகமாணி வாயிலாக அனுப்பிய முத்திரையிட்ட ஓலை, பனைஓலையா அன்றி வேறொன்றன் ஓலையா என்பது அறியக்கூடவில்லை. *(சிலம்பு. 13:75-76)*

உதயணன் வாசவதத்தையின் குறுகிய நெற்றியிலேயே பூந்தாதுகளையும் சந்தனத்தையும் கொண்டு மானனீகைக்குப் பெரியதொரு காதற்கடிதம் எழுதிய செய்தியும், அதற்கு அவளும் மறுமொழியை வாசவதத்தை நெற்றியில் அவ்வண்ணமே எழுதியனுப்பிய செய்தியும் போல்வன பெருங்கதையுள் காணப்படுகின்றன. *(IV:113:63-125)*

இலக்கியங்களில் கற்பனை கலந்து கூறப்படும் செய்திகள் பலவாக இருப்பினும், எழுதப்படும் கடிதங்களை ஓலை என்ற பெயராலேயே குறிப்பிடுதலின், எழுத்துகளைப் பொறிப்பதற்கு ஓலைகளே பயன்படுத்தப்பட்டன என்பதும் நமக்குப் பெரும்பாலும் உதவும் ஓலை பனையோலையே என்பதும் பெறப்படும்.

கிராமசபைகளில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் பெயர்களை ஓலைகளில் எழுதிக் குடத்திலிட்டுப் பின் அவற்றை எடுத்து முடிவு செய்யும் நிகழ்ச்சியாகிய 'குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுத்தல்' என்ற செய்தி கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

'கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண்டு அழிக்கும் ஆவண மாக்களின்' *(அகம். 77)*

என்று இச்செய்தி அகநானூற்றில் ஓரிடத்து உவமமாக எடுத்தாளப்பட்டுள்ளது. எனவே வரிவடிவம் தோன்றிய காலத்திலிருந்து செய்திகளைப் பெரும்பாலும் ஓலையில் பொறிப்பதே நிகழ்ந்திருக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

பலகாலம் இருக்கவேண்டிய செய்திகளைக் கல்லில் பொறிப்பதும் செப்பேட்டில் பொறிப்பதும் அறியப்படுகின்றன. அங்ஙனம் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் செப்பேடுகளும் நம் நாட்டு வரலாறு வரையப் பெரிதும் உதவுகின்றன. தேவாரப் பதிகங்கள் யாவும் ஒருகாலத்தில் செப்பேட்டில் வரையப்பட்டுத் தில்லையில் இருந்தன என்பதும், இப்பொழுது அச்செப்பேடுகளில் ஒன்றும் நமக்குக் கிட்டவில்லை என்பதும், வரலாற்று நூலார் கூறும் செய்திகளாகும். *(பெருந்தொகை01088)*

இலக்கியச் சுவடிகள்

மாணாக்கர்கள் தாம் பயிலும் நூல்களைப் படியெடுத்துக்கொள்ளவும், புதிய நூல்களைப் படியெடுக்கவும், பிறர் சொல்லத் தாம் எழுதவும், முற்றியனவும்

அகலமானவையும் ஒரேஅளவு உடையவையும் ஆகிய பனைஓலைகளைச் செப்பம் செய்து அடுக்கி, அவற்றின்மேல் பெரிய கனத்தை வைத்து அவற்றைப் படிய வைத்து, அவற்றில் ஓட்டையிட்டு, அவ்வோட்டையில் இரும்புக்கம்பியைச் செருகி, அக்கம்பியோடு இணைக்கப்பட்ட நூல்கயிற்றால் அவற்றைச் சிதைவுறாதவாறு பிணைத்துப் பயன்படுத்திவந்தனர். இப்பனையோலைகளில் செய்திகள் பொறிக்கப்பட்டபின் இவை பூச்சிகளால் அரிக்கப்படாமைக்கும் விரைவில் பழுதுபடாமைக்கும் சமையலறையின்மேல் வைத்து வெளிவிளிம்பில் புகைபடச் செய்யப்பட்ட சுவடிகளையும் காண்கிறோம். இச்சுவடிகள் வெளியே கறுப்பாகக் காணப்படினும், உள்ளே பிரித்தால், இவற்றில் உள்ள பனைஓலைகள் விளிம்பில் கருநிறம் கொண்டு நடுவே பொன்நிறத்தில் இருப்பதனையும் இவை பெரும்பாலும் பூச்சிகளால் அரிக்கப்படாமல் இருப்பதனையும் காணலாம்.

சுவடி படியெடுத்தல்

பெரும்பாலும் சுவடிகள் பயன்படுத்தப்பட்டுவந்தால் இருநூறு ஆண்டுகள்வரை பழுதுபடாமல் இருக்கும். சுவடிகளை வெறுமெனக் கட்டிய அளவில் வைத்திருந்தால், அவை விரைவில் பூச்சிகளால் அரிக்கப்படும். எவ்வளவு பேணி வைத்தாலும் ஓலைச்சுவடிகள் முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் பழுதறக் காணப்படமாட்டா. ஆகவே, பழைய சுவடிகள் பழுதுபடும் நிலைக்கு முன்னரே அவற்றை மீண்டும் படியெடுத்து வந்தனர். படிஎடுப்பவர் யாவரும் கற்றுவல்ல புலவராயிருத்தல் இயலாது. சுவடிகளில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் யாவும் அச்செழுத்துப் போலத் தெளிவாக இருக்கும் என்று எதிர்பார்க்கவும் இயலாது. எல்லா வாய்ப்புகளும் மிக்கிருக்கும் இக்காலத்தும் வழுவழுப்பான வெள்ளைக் காகிதத்தில் நுட்பமான எழுதுகோலினால் எழுதும்பொழுதுகூடச் சோம்பல், விரைவு முதலிய காரணங்களால் பிறர் நன்கு விளங்கிக்கொள்ள முடியாதவகையில் கையெழுத்துகள் பல அமைந்திருப்பதனைக் காண்கிறோம். அங்ஙனமாக எல்லாச் சுவடிகளிலுமுள்ள எல்லா எழுத்தும் தெளிவாகப் படியெடுப்போருக்குப் புலப்படும் என்று கருதுவதற்கில்லை.

சோதிடம் பற்றிய சில செய்திகள், மருத்துவம் பற்றிய சில செய்திகள், மருந்துகளைப் பயன்படுத்துதல் பற்றிய சில செய்திகள் போல்வனவே பண்டைச் சுவடிகளில் உரைநடையில் வரையப்பெற்றிருக்கும். சான்றோர் இயற்றிய நூல்கள் பல மூலமும் உரையுமாக இருக்கும். நல்ல புலமை உடையவர்கள் மூலத்தைப் பார்த்து உரைநடைப்பகுதியில் விளங்காதனவற்றை இப்படித்தான் இருத்தல் வேண்டும் என்று ஊகித்து வரைந்துவிடுவர். குறைந்த கல்வியறிவுடையவர்கள் தாட்சணியத்திற்கோ ஊதியத்திற்கோ படியெடுக்கும் நிலையில், தம் பணியை

விரைவில் செய்தல் வேண்டும் என்ற எண்ணத்தாலும், விரைந்து பணியை முடிக்காவிட்டால் தாம் அப்பணிக்குத் தகுதியற்றவர் என்று தமக்கு அப்பணியினை வழங்கியவர் கருதக்கூடும் என்ற எண்ணத்தாலும், பொருளை நோக்காது விளங்காத எழுத்துகளையும் சொற்களையும் தமக்குத் தோன்றியவாறே ஏட்டில் பொறித்துவிடுவர். பின் ஒருகாலத்தில் அந்தச் சுவடிகளை மூலச்சுவடிகளாகக் கொண்டு அவற்றைப் படியெடுக்க நேரின் பிழை பெரிதும் பல்கும்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மகாவித்துவான் பிள்ளையவர்கள். விரைவாகப் பாடிக்கொண்டே போக, அந்த விரைவுக்கு ஏற்ப அவர் பாடிய பாடல்கள் பட்டோலை செய்யப்பட்டனவாக, ஐயரவர்கள் குறிப்பிடுகிறார். அவ்வளவு விரைவில் பொறிக்கப்பட்ட எழுத்துகள் எல்லாரும் பார்த்தவுடன் விளங்கிக் கொள்ளும் வகையில் தெளிவாக இருக்கும் என்று கருதமுடியாது. விரைவாக எழுதுவதற்கு இளஓலைகள் மிகவும் உதவியாக இருக்கும். அவற்றில் அழுத்தமாக எழுத்துகளைப் பொறிக்காமல் மேம்போக்காகப் பொறித்துக்கொண்டு சென்றுவிடலாம். ஆனால், ஆண்டுகள் ஆக ஆக அந்த ஓலைகளில் பொறிக்கப்பட்ட செய்திகளைத் தடவித் தடவிப் பார்த்து அறிந்து படியெடுப்பது மிகக் கடினமான செயலாக அமையும்.

சுவடி எழுத்துமுறை

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்கூடக் காசிவாசி செந்திநாதய்யர் காகிதத்தில் வரைந்த முதல் மூன்று திருமுறைகள் ஏட்டுச்சுவடியில் எழுத்துகள் அமைக்கப்பட்டிருப்பன போலவே வரையப்பட்டிருத்தலைக் காண்கிறோம். பாடலடிகள் ஏட்டுச்சுவடிகளில் தனித்தனியே பிரித்துணரும் வகையில் பொறிக்கப்பட மாட்டா. சிக்கனம் கருதி முழுப்பாடலும் ஒரே தொடராக மடக்கிப் பொறிக்கப்பட்டுப் பாடல் முடிந்தவுடன் அப்பாடலின் எண் குறிக்கப்பட்டிருக்கும். தமிழ்மொழிக்கே சிறப்பாக உள்ள எதுகையே அப்பாடலின் அடிகளைப் பகுத்துணர உதவி செய்யும். சுவடிகளில் மெய்யெழுத்துக்கள் புள்ளியிடப் பெறமாட்டா. ரகரமும், உயிர்மெய் ஆகாரம் ஒகாரம் இவற்றைக் குறிக்க இணைக்கப்படும் கால்களும் ஒன்று போலவே இருக்கும். எகர ஒகரங்களுக்குரிய ஒற்றைக்கொம்பே ஏகார ஓகாரங்களுக்கும் வழங்கப் பட்டிருக்கும். ஏட்டுச்சுவடியில் எழுதிப் பழகியவர்கள் இந்தச் செய்திகளைத் தாமேயும் பின்பற்றியதனால் ஏனைய ஏட்டுச்சுவடிகளை வாசிப்பதிலும் படியெடுப்பதிலும் அவர்களுக்கு அதிகத் தொல்லை ஏற்படவில்லை. ஏட்டுச் சுவடிகளையே வாசித்தும் படியெடுத்தும் வந்த செந்திநாதய்யர் காகிதத்திலும் ஏட்டுச்சுவடிகளில் வரைவதுபோலவே

வரைந்துள்ளமையின், அக்காகிதங்களை வாசிப்பதன்கண், ஏட்டுச்சுவடியை வாசிப்பதன்கண் உள்ள சிரமத்தின் பெரும்பாகம் உண்டாகிறது.

சுவடி எழுத்தும் அச்சுப்பதிப்பும்

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொட்டு அறிவியலின் விரைவான வளர்ச்சியால் வியக்கத்தக்க புதிய கண்டுபிடிப்புக்கள் நாள்தோறும் பல்கி வருகின்றன. அவற்றால் முன்பு கண்டுபிடிக்கப்பட்ட இயந்திர சாதனங்களில் புதுப்புது வளர்ச்சிகள் ஏற்பட்டுவருகின்றன.

*19*ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே அச்சுஇயந்திரம் தமிழகத்தில் பயன்படுத்தப்பட்டது. சான்றோர் பலரால் பல அரிய தமிழ்நூல்கள் அச்சில் பதிக்கப்பட்டன. அன்று இருந்த குறைவான வசதியில் அழகாகவும் செப்பமாகவும் சிக்கனமாகவும், இயன்றவரை நல்ல காகிதத்திலும், *19*ஆம் நூற்றாண்டின் இறுதியில் பதிப்பிக்கப்பட்ட நூல்கள் சில இன்றும் பழுதடையாமல் பாதுகாக்கப்பட்டு வருதலைக் காண்கிறோம். சுவடிகளிலிருந்து, நூல் பற்றிய செய்திகளை முகப்புப்பக்கத்தில் அமைத்து, வேறு எந்த விளக்கமுமின்றித் தெளிவான எழுத்துகளில் பிழையின்றிச் சுவடியில் கண்டவாறே முதலில் பதிப்பித்தனர். பின்னர்ச் செய்யுள்நூல்களின் பாடல்கள் அடிகள் தனித்தனியே பகுக்கப்பட்டு அச்சிடப்பட்டன. தொடக்கத்தில் நூல்கள் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசையில்லாமல் அச்சிடப்பட்டன; பின்னர்ச் செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசையுடன் அச்சிடப்பட்டன. நாவலர்பெருமான் பதிப்பித்த நூல்கள் போன்றவை இவ்வகையின. ஐயரவர்கள் போன்றவர்களுடைய பதிப்புகளில் அப்பதிப்பின் வரலாறு பற்றிய விரிவான முகவுரை, நூலாராய்ச்சி, ஒவ்வொரு பக்கத்திலும் ஒப்புமைப்பகுதி முதலிய பற்றிய அடிக்குறிப்புகள், நூலின் இறுதியில் அருஞ்சொல் முதலியவற்றின் அகரவரிசை முதலியன இணைக்கப்பட்டன. உரையோடு கூடிய இலக்கியங்கள், பாடல்களுக்கு ஒருவகை எழுத்துகளும், விளக்கவுரைக்கு அதனினும் சிறிய எழுத்துக்களும் கொண்டு பதிப்பிக்கப்பட்டதால், பாடல்களும் உரைகளும் விளக்கங்களும் தனித்தனியே தெளிவாக அறியப்பட்டன.

இலக்கண உரைகளிலும் இலக்கிய உரைகளிலும் வரும் மேற்கோள்பாடல்கள் எடுத்தாளப்பட்ட நூல்களின் பெயர்களும் பாடல் எண்களும் அவ்வவ்விடங்களிலோ அடிக்குறிப்பிலோ சுட்டப்பட்டன. இலக்கண உரைகளில் எளிதில் விளங்கிக் கொள்ளமுடியாத பகுதிகள் அவ்வப்பக்கங்களில் அடிக்குறிப்பாகவோ, அவ்வந்நூற்பாக்களின் இறுதியிலோ விளக்கப்பட்டன. இப்பொழுது கணிப்பொறிகளின் உதவியால் ஒவ்வொரு நூலில் உள்ள

சொற்களஞ்சியத்தையும் எளிதின் தொகுக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் நாம் அறிய விரும்பும் ஒரு சொல் ஒரு குறிப்பிட்ட நூலில் எங்கெங்கு வந்துள்ளது என்பதனை உடனே கண்டறியும் வாய்ப்பு நமக்குக் கிட்டியுள்ளது.

இவையாவும் அறிவியல் இக்காலத்து நமக்கு வழங்கியுள்ள கொடைகளாம். தொடக்கத்தில் ஒலிவடிவிலேயே தன் நெடுங்கணக்கினைப் பெற்றுக் கிட்டும் நற்செய்திகளைச் செவிவாயாக நெஞ்சுகளனாகத் தேக்கி அவரவர் நினைவில் இறுத்திக்கொள்ளும் அளவில் இருந்த மொழிக்கு வரிவடிவில் நெடுங்கணக்கு அமைக்கப்பட்ட பின்னர், அரிய செய்திகள் பலவும் பிற்பட்ட காலத்தில் தோன்றுபவருக்கும் நிலையாகப் பயன்படும் வகையில் எழுத்தில் பொறித்துவைக்கப்படலாயின.

நிலையாகப் பல்லாயிரம் ஆண்டுகள் இருத்தல் வேண்டும் என்று நன்மக்களால் குறிக்கப்பட்ட செய்திகள் இயற்கைப் பாறைகளிலும் திருக்கோயில்களின் கருங்கற்சுவர்கள் முதலியவற்றிலும் பொறிக்கப்பட்டன. அவற்றின் பிரதிகள் செப்புத்தகடுகளில் பொறிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. ஏனைய இலக்கிய இலக்கணம் போன்றன யாவும் தமிழகத்தில் ஓலைச்சுவடிகளில் எழுத்தாணியால் பொறித்துப் போற்றப்பட்டன. தமிழகத்தில் பெரும்பாலும் பனையோலைகளே சுவடிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தொடக்கத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சில பனைஏடுகளை ஆசிரியர் வழங்க, அவற்றைப் பயின்று ஓரளவு மொழியறிவு பெற்ற மாணாக்கன் பின்னர்த் தானே எழுத்தாணியால் பொறித்தற்குரிய ஏடுகளை உருவாக்கிக் கொள்ளப் பழக்கப்படுவான். குறுகலான இரண்டு ஓரங்களையும் நீக்கி எழுதுவதற்குப் பக்குவமாக ஓலைப்பகுதியைச் செப்பம் செய்துகொள்ளுதல் ஆசிரியரிடம் பயிலும் மாணாக்கனின் தலையாய கடமைகளில் ஒன்று.

காகிதங்களும் எழுதுகோல்களும் செய்யும் பணியை, அச்சு இயந்திரம் முழுமையாக ஏற்றுக்கொண்ட காலம் வரும்வரை, நூல்கள் ஏட்டுச்சுவடிகளில் வரைந்தே பாதுகாக்கப்பட்டன. வழுவழுப்பான காகிதத்தில் இடையறாது மைஊறிவரும் எழுதுகோலால் இன்று நாம் எழுதுவது போன்ற எளிய செயல் அன்று, பனையோலையில் பொறித்தல். அகலக் குறைவானதும் நீண்டதும் ஆகிய பனையோலையில் வரிகோணாமல் இடக்கைப்பெருவிரலைத் துணையாகக் கொண்டு வலக்கையில் எழுத்தாணி பிடித்துப் பனையோலையின் அடுத்தப்பக்கத்தில் சுவடு தோன்றாதபடி எழுத்துகளைப் பொறிப்பதில் பெரிதும் காலத்தாழ்ப்பு ஏற்படும், பனையோலையில் எகர ஏகார ஒகர ஓகார வேறுபாடுகள் இல்லை. இரட்டைக்கொம்பு இன்று பயன்படுத்தப்படும் இடங்களிலும் ஒற்றைக்

கொம்பே பொறிக்கப்படும். கால்களுக்கும் இடையின ரகரத்திற்கும் வேறுபாடு காணப்படாது. மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடும் வழக்கம் இல்லை. பாடல்களை அடிபிரித்து எழுதும் எளியமுறை பின்பற்றப்படாது. இன்று செய்யுள்கள் எளிதின் புலனாகுமாறு அவற்றைச் சந்தி பிரித்துப் பதிப்பிப்பது போன்ற செய்திகளைச் சுவடிகளில் காண்டல் இயலாது. பாடல் இறுதியில் அப்பாடலின் எண் குறிப்பிடப்பட்டிருக்கும். சுவடிகளின் ஏடுகள் எண்ணிடப்பட்டிருக்கும். இலக்கண உரைகளிலோ இலக்கிய உரைகளிலோ ஒவ்வொரு நூற்பா, அதன் உரை, உரைவிளக்கம், எடுத்துக்காட்டு முதலியன யாவும் தொடர்ந்து வரையப்பட்டு இறுதியில் அந்நூற்பாவின் எண் குறிக்கப்படுதலும், நூல்களின் மூலம், உரை, விளக்கவுரை முதலிய யாவும் தொடர்ந்து வரையப்பட்டு இறுதியில் பாடல்எண் குறிக்கப்படுதலுமே காணப்படும். பெரும்பாலும் எடுத்துக்காட்டுக்களும் மேற்கோள்களும் இடம் சுட்டிக் குறிப்பிடப்படமாட்டா. பூச்சிஅரிப்பு முதலியவற்றால் சிறுஓட்டைகள் காணப்படுதலும் உண்டு. சுவடிகளைப் பலகாலும் பயன்படுத்துதலானும், அவற்றின் பழமையானும், ஓரங்கள் சிதைதலுறுதலான் ஏடுகளின் எண்கள் முதலியன சிதைவுறுதலும் உண்டு.

இலக்கண நூல்களோ இலக்கிய நூலோ அவ்வவ்வாசிரியராலேயே தொடக்கத்தில் சுவடிகளில் பொறிக்கப்பட்டிருக்கும். உரைக்கப்படும் செய்தியை உள்ளத்தமைத்து அதற்குச் செய்யுளில் வடிவம் கொடுக்கையில், முதலில் வரையப்பட்டது பின்னர்ச் சிற்சில மாற்றங்கள் பெறுவது இயற்கையே. ஆதலின் மூலநூல்கள் அவ்வவ்வாசிரியர் கையாலேயே வரையப்பட்டிருக்கும். விரைந்து கவிபாடவல்ல சான்றோர்கள் விரைவாகவும் தெளிவாகவும் பிழையில்லாமலும் சுவடிகளில் பொறிக்கவல்ல அறிஞர்களைக் கொண்டு முதலில் சுவடிகளில் வரையச்செய்து பின்னர் அவற்றில் வேண்டிய திருத்தங்களைச் செய்வதும் உண்டு. எனினும் சுவடிகளை எவ்வளவு பாதுகாத்து வைத்தாலும் சுமார் இருநூறு ஆண்டுகளாயின் ஏடுகள் பழுதடைந்து உடைந்துவிடக் கூடும். ஆகவே சிறந்த நூல்கள் குறைந்தது இருநூறு ஆண்டு எல்லைக்குள் மறுபிரதி செய்யப்படும். *18*-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஆசிரியர்கள் தம்கையால் எழுதிய மூலச்சுவடி ஒன்றும் இன்று கிட்டுவதற்கு வாய்ப்பு இல்லை. *18*-ஆம் நூற்றாண்டினராகிய சிவஞானமுனிவர் போன்றோர் வரைந்த சுவடிகளே பேணி நன்கு பாதுகாக்கப்பட்டுப் பின் அடுத்த நூற்றாண்டிலோ சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலோ அச்சிட உதவியுள்ளன. சுவடிகளைப் படியெடுத்தல் எளிய செயலன்று. ஆதலின், அவற்றைப் படியெடுப்பதற்கு முன்வருபவர் சிலரே. அவரும் பெரும்பாலும் சிறந்த புலமை உடையவராய், சுவடிகளில் வரையப்பட்ட செய்திகளை நன்கு மனங்கொண்டு படியெடுப்பவர் அல்லர். ஏதோ தமக்குப் பொருந்திய குறைந்த மொழியறிவைக் கொண்டு சுவடிகளை வாசித்துத் தம்

மனத்திற்குத் தோன்றியபடி ஒன்றனையும் விடாமல் படியெடுக்கக் கூடியவரே அவர்கள். அவர்கள் சில எழுத்துக்களை உள்ளவாறு உணராமல் தம் மனத்தில் தோன்றியவாறே படியெடுத்தலின் ஏடு எழுதுவோரால் பல பிழைகள் சுவடிகளில் பொருந்தியிருப்பது இயற்கையே. அச்சுவடிகளைப் பார்த்து மற்றவர் படியெடுத்த சுவடிகளே இன்று நமக்குக் கிட்டுதலின் சுவடியில் பல பிறழ்வுகள் காணப்படுவது இயல்பே. சுவடிகளில் வரைவதன்கண் ஏற்படும் பிழைகளுக்கும் பாடவேறுபாடுகளுக்கும் வேறுபாடு காணும் ஆற்றலின்றி எல்லாப் பிறழ்வுகளையும் பாடவேறுபாடுகளாகக் கருதி அச்சிடும் சான்றோரும் உளர். பாட வேறுபாடுகள் இவ்வாறு இருத்தல் வேண்டும் என்ற செய்தியை நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணி, கலித்தொகை, பத்துப்பாட்டு என்பனவற்றிற்கு வரைந்துள்ள உரைகளில் கண்டு அறியலாம்.

நச்சினார்க்கினியர் தரும் பாடவேறுபாடுகள்

ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியத்துக்குப் பதவுரையும், சிந்தாமணிக்கு நயவுரையையும் கலித்தொகைக்குப் பொழிப்புரையும் பத்துப்பாட்டுக்குப் பதவுரையும் வரைந்துதவிய அருளாளராவார். தொல்காப்பியத்துள் இன்று நச்சினார்க்கினியருடைய பாடவேறுபாடுகள் என்று தொகுக்கப்பட்டனவற்றுள் 60 விழுக்காட்டுக்கு மேல் ஏடுஎழுதினோர் கைவரிசையால் ஏற்பட்ட வேறுபாடுகளே உள்ளன. நச்சினார்க்கினியர் தாம் கொண்ட பாடவேறுபாடுகளுக்கு ஏற்பப் பதவுரை வரைந்துள்ளார்.

சேனாவரையர் பாடம்	**நச்சினார்க்கினியர் பாடம்**
உருபென மொழியினும்	உருவு எனமொழியினும்
நிகழூஉநின்ற பலர்வரைகிளவி	நிகழூஉநின்ற பால்வரைகிளவி
திரிபு வேறுபடூஉம்	பிரிபு வேறுபடூஉம்

இளம்பூரணர்பாடம்	**நச்சினார்க்கினியர் பாடம்**
மறங்கடைகூட்டிய குடிநிலை	மறம் கடைகூட்டிய துடிநிலை
கூழைதாங்கிய பெருமை	கூழைதாங்கிய எருமை
மாலை நிலையும்	பாலை நிலையும்
ஆய்பெருஞ் சிறப்பின் புதல்வன் பெயர	மாய் பெருஞ் சிறப்பின் புதல்வன் பயந்த
கிழவோன் மேன	கிழவோள் மேன
அறக்கழிவுடையன.....படினே...பழித்தது	அறக்கழிவுடையன.....படவரின் .....பழித்தன்று

இப்பாடங்களுக்கு ஏற்ற உரை வரைதலோடு ஓரோவழிப் பிறபாடங்களை மறுத்துள்ளார்.

இவர் *3000*க்கு மேற்பட்ட பாடல்களை உடைய சீவகசிந்தாமணியில் *112* பாட வேறுபாடுகளையும் கலித்தொகையில் *26* பாட வேறுபாடுகளையும் பத்துப்பாட்டில் *21* பாட வேறுபாடுகளையும் தந்துள்ளார். தேவைப்பட்ட இடங்களில் பாட வேறுபாடுகளுக்குப் பொருளும் தந்துள்ளார். சில பாட வேறுபாடுகளை நோக்குவோம்.

சிந்தாமணி

630-தின்று தேன் இசைகள் பாட	-	திசைகள் பாட என்றும் பாடம்
982-கதியமை தோளினானை	-	கதியமை தேரினானை என்றும் பாடம்
1049-அடிப்பணி செய்வதல்லால்	-	அடிச்செருப்பாவதல்லால் என்றும் பாடம்
1416-கொல்லுமரவின் மயங்கி	-	மாவின் மயங்கி என்று பாடமோதிப் புலி முதலியவற்றான் மயங்கி என்பாருமுளர்.
2949-நெஞ்ச நீர் வல்லீராகி	-	நெஞ்சின் என்ற பாடத்திற்கு நெஞ்சு போல என்க.

கலித்தொகை

31-பாய்திண்டேர் மிசையவர்	-	பரித்திண்டேர் எனவும் பாடம்
84-மோதிரம் யாவோ யாம் காண்கு	-	பன்மை ஒருமை மயக்கம் யானும். பாடம்
106-இமிழிசை மண்டை உறியொடு தூக்கி	-	பழிசை பாடமாயின் பழித்தலை உடையது என்க.
131-பார்த்துற்றன தோழி	-	பாத்துற்றன பாடமாயின் பிரிவுற்றன என்க

பத்துப்பாட்டு

I-*199*-குண்டுசுனைபூத்த வண்டுபடுகண்ணி	-	கார்க்குண்டுசுனை என்பது பாடமாயின் கரிய ஆழ்ந்த சுனை என்க.

II-*38*-உயவும் நடுவின்	-	வருந்தும் இடையினையும்; உயவின் நடுவின்பாடமாயின் வருந்துதலை உடைய என்க.
III-*364*-முப்புடைத்திரள்காய்	-	மூன்று புடைப்பினை உடைய திரண்டகாய். பழுத்தால் அடிமூன்றாகப் புடைத்தல் அதற்கு இயல்பு. மூப்புடைத் திரள்காயும் பாடம்.
IV-*198*-வாய்நட்பினையே	-	மெய்யுடனே நட்புச்செய்தலை உடையை. வாய்நடப்பினையே என்பது பாடமாயின் மெய்யை நடத்தலைச் செய்தனை என்க
V-*139*-குறுங்கண் வாயுறை அழுத்திய காது	-	சிறிய இடத்தினை உடைய தாளுருவி அழுத்தின காது. வாயுற என்பது பாடமாயின் கடுக்கனை வாயுறும்படி அழுத்தின காது என்க.

இத்தகைய வேறுபாடுகளைப் பரிமேலழகர் உரையிலும் அடியார்க்கு நல்லார் உரையிலும் பேராசிரியர் உரையிலும் வியாக்கியான சக்கரவர்த்தி என்று போற்றப்படும் பெரிய வாச்சான்பிள்ளை உரையிலும் காணலாம். இவர்கள் உரைகளைக் கூர்ந்து நோக்குதல் உண்மையான வேறுபாடுகளை நுனித்து அறியப் பெரிதும் உதவும்.

தொல்காப்பியனார் ஏட்டுச்சுவடிகளில் எழுதமுடியாத வரிவடிவங்களை எழுத்துகளுக்குக் குறிப்பிடமாட்டார். ஏனைய குறில் நெடில் வடிவங்களுக்கு வேறுபாடு காட்டிய அவர் எகர ஒகரங்களுக்கு ஏகார ஒகாரங்கள் மேல் புள்ளியிட்டுக் கொள்ளும் வடிவத்தைக் குறிப்பிட்டிருக்கமாட்டார். மகரக்குறுக்கத்துக்கும் வரிவடிவம் குறிப்பிடும் அவர் எஒ என்பனவற்றிற்குத் தனியே வரிவடிவம் இல்லை என்று கூறுவாரா? உயிர்மெய் எகர ஒகர ஏகார ஒகாரங்களுக்குத் தனி வடிவம் அமைக்காமல் இருப்பாரா?

எம் நிறுவனத்தில் உள்ள *4220* என்ற எண்ணுடைய சுவடி திருமுருகாற்றுப்படை மூலம் பற்றியது. அது *150* ஆண்டுகளுக்கு முற்பட்டிருக்கலாம். அதன்கண் மெய்எழுத்துகள் புள்ளி பெற்றிருக்கின்றன. உயிர்மெய் எகர ஏகாரங்களுக்கும் ஒகர ஓகாரங்களுக்கும் முறையே ஒற்றைக்கொம்பு இரட்டைக் கொம்பு என்பன உள்ளன. ஆனால் நூல் முழுதும் சந்தி சேர்த்தே எழுதப்பட்டுள்ளது. அடிகளைத் தனித்தனியே காட்ட ஓரடி முடிந்தவுடன் சிறு கோடுஇடும் செயல் சில இடங்களில் நெகிழ்க்கப்பட்டும்,

சில இடங்களில் அரை அடி முடிந்த அளவில் சிறு கோடு இடப்பட்டும் காட்சி வழங்குகிறது. இடையின ரகரத்தின்மேல் கோடு இடப்பட்டுள்ளது. அச்சுப்பிரதிக்கும் இச்சுவடிக்கும் உள்ள வேறுபாடுகள் பின் வருமாறு.

அடி எண்	அச்சு	சுவடி
46	சூர்முதறடிந்த	சூர்முதரடிந்த
55	விறற்களம்	விரற்களம்
65	இன்னசை	இன்னிசை
68	வரிப்புனைபந்தொடு	வரிப்புனைபைந்தொடு
69	போரறுவாயில்	போரருவாயில்
85	சென்னிப்பொற்ப	சென்னிற்பொற்ப
86	துயல்வரூஉம்	தயல்வரூஉம்
88	வான்மதி கவைஇ	வான்மதி கவைஇய
93	அமர்ந்தினிதொழுகி	அமர்ந்திதொழுகி
125	யதா அன்று	யதான்று
140	செய்வுறுதிவவின்	செய்வுறுதிவ்வின்
142	இன்னரம்பு உளர	இன்னரம்பு கிளர
143	நோயின்றியன்ற	நோயன்றியன்ற
150	பாம்பு பட	பாம்பட
176	உரியனதா அன்று	உரியதா அன்று
214	துகிலினன்	துகிலன்
270	நசையுநர்க்கு	நசையுனர்க்கு
279	உள்ளிவந்தனென்	உன்னிவந்தனன்
3006	பொன்கொழியாவாழை	பொன்கொழிவாழை

இவைகள் யாவும் பாடவேறுபாடா ஏடெழுதுவோர் செய்த பிழையா என்பதை அறிஞர்கள் முடிவு செய்வாராக.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினும் இடைப்பகுதியினும் தோன்றித் தமிழில் புலமை நிறைந்த நாவலர் பெருமான், உ.வே. சாமிநாதையர், நற்றிணை நாராயணசாமி ஐயர் போன்றவர்கள் தாமே சுவடிகளில் வரைந்து பழகியவராதலின், சுவடிகளில் உள்ள செய்திகளை விரைவில் பிழைகளை நீக்கி வாசித்துக் காகிதத்தில் படியெடுத்துப் பிழையற அச்சேற்றுவதில் வல்லவராய் இருந்தனர். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தொட்டுக் காகிதத்தின் பயன்பாடு மிகுதியுறவே, அச்சிற்குப் பயன்படும் எழுத்துக்கள் போலவே காகிதங்களில் எழுதியும் அச்சிடப்பட்ட நூல்களை வாசித்தும் பழகிய சான்றோர்களுக்கு ஏட்டுச்சுவடிகளில் உள்ளனவற்றைப் பிழைநீக்கி விரைவில்

வாசித்தல் சற்றுக்கடுமையான செயலாகவே அமைந்துவிட்டது. 19ஆம் நூற்றாண்டின் இடைக்காலப் பிற்காலச் சான்றோர் சிலர், தாம் காகிதத்தில் வரைந்தபோதும், ஏட்டுச்சுவடிகளில் வரைவது போல மெய்களுக்குப் புள்ளியிடாமலும் எகர ஏகார ஒகர ஓகாரங்களுக்கும் காலுக்கும் இடையின ரகரத்துக்கும் வேறுபாடு புலப்படுத்தாத வகையிலும் வரைந்துள்ளனர். இராமலிங்க சுவாமிகள், செந்திநாதையர் முதலியோர் வரைந்த காகிதச் சுவடிகள் இத்தகையன. இவை காகிதச் சுவடிகளாக இருப்பினும் இவற்றிலுள்ளவற்றை உள்ளவாறு புரிந்துகொண்டு வாசிப்பதும், அச்சிட்ட நூல்களிலேயே பெரும்பாலும் பழகிய நம் போன்றவர்களுக்கு அரிய செயலாகவே உள்ளது. இனி, இந்நூற்றாண்டில் அச்சிட்ட நூல்களையே வாசித்துப் பழகியவர்கள் தம் முன்னோர் தொகுத்துவைத்த ஓலைச்சுவடிகளைப் பிரித்துப் பார்த்தால், அவற்றிலுள்ள செய்திகள் அவர்கட்குத் தமிழ்எழுத்தில் எழுதப்பெற்ற வேற்றுமொழிச் செய்திகளாகவே தோன்றும். மேலும் 19ஆம் நூற்றாண்டுவரை, பெரும்பாலும் செய்யுள்நூல்களே மிகுதி. சந்திப்பிரிப்பும், அடிகளின் பிரிப்பும், நிறுத்தக்குறிகளும் இன்றிச் சுவடிகளில் வரையப்பட்ட அந்நூல்களை வாசித்துச் செய்திகளை அறிவதில் உள்ள மிகு முயற்சியை விரும்பாது, அச்சுவடிகளைப் பயன்படுத்தும் விருப்பமின்றித் தம் முன்னோர் காலத்துப் பயன்பட்ட அரிய பொக்கிஷங்களாகவும் புனிதப் பொருள்களாவும் கருதி, அவற்றை உயர்ந்த இடத்தில் வைக்க வேண்டும் என்று அவற்றைக் கட்டிப் பரணிலிட்டு, அவற்றை அடிக்கடிப் பிரித்துப் பார்த்துத் தூசிகளைத் துடைத்துப் பூச்சிகள் அவற்றைத் தாக்காதவாறு மருந்திட்டு அவற்றைப் பேணும் விருப்பின்றி வாளா விடுத்தமையின், சுவடிகள் பூச்சிகளால் ஓட்டையிடப்பட்டுப் பழுதுபட்டுவிட்டன. அவற்றைத் தூசி துடைத்துத் தூய்மையாக வைக்கலாம் என்ற எண்ணம் ஏற்படும்போது அவற்றைப் பிணித்திருக்கும் கயிறுகள் நைந்து அறுபடவே சுவடிகளின் ஏடுகள் தாறுமாறாகக் கழன்று விழ, அவற்றின் ஏடுகளை வரிசையறிந்து நிரல்பட வேறொரு வழுவழுப்பான புதிய கயிற்றில் கோப்பதன்கண் உற்சாகம் இன்மையின், அவற்றைத் தாம் விரும்பிய வகையில் அடுக்கி மேலே ஒரு கயிறிட்டு அவற்றைப் பிணித்து வைத்தாரும் உண்டு. அவை வீட்டின் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கும் புனிதப்பொருள் என்று கருதி, அவற்றின் மேல் கால்பட்டால் பாவம் என்று கருதி, அவற்றைப் புனிதமான இடங்களில் அடக்கம் செய்யும் நோக்குடன், அவற்றை ஆடிமாத வெள்ளத்திலிட்டாரும், தீயிலிட்டுப் புனிதப்படுத்தினாரும் உண்டு. இவர்களுக்கு எல்லாம் தப்பிப் பிழைத்து இன்னும் குற்றுயிரோடு இருக்கும் சுவடிகள் உள.

சிறந்த அறிஞர்களும் ஒரோவழிச் சுவடிகளில் உள்ள எழுத்துக்களைச் சரியாக உணராமல் பிழைபட அச்சிடுதலும் உண்டு.

யாரினுமினியன பொன்பினனெ - என்ற குறுந்தொகை *85* - ஆம் பாடல் முதலடியை யாரினும் இனியன் பேரன் பினனே - என்று வாசித்து உணராமல், 'யாரினும் இனியன் போன பின்னே' என்று வாசித்துத் தம் கருத்திற்கு ஏற்ப உரைவரைந்து அச்சிட்டாரும் உளர். 'கொதை கொளவாமன' என்ற தொடரைக் கோதை கேரளவர்மன் என்று உணராமல் கோதை கொள்வர்மன் என்று மனங்கொண்டு அச்சிட்டாரும் உளர்.

ஒடு என்பதே தொல்காப்பியனார் குறிப்பிடும் மூன்றன் உருபு. நிலைமொழி ஈற்றில் ஒடு என்ற உருபு இணைய வருமொழி முதலில் உயிரெழுத்து அமைந்தால் ஒடு என்பது ஒடு என்று நீளும். ஒரு - ஓர் என்றாதலுக்கு விதி கூறிய தொல்காப்பியனார் ஒடு - ஒடு என்று ஆவதனை உடம்பொடு புணர்த்துப் பல இடங்களிலும் உணர்த்தியுள்ளார். இந்நுணுக்கத்தை நன்கு அறிந்த நாவலர்பெருமான் தம் முதற்சூத்திரவிருத்திப் பதிப்பில்,

உருஉருவாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோ டுருவுதிரிந்து உயிர்த்தலும்' - எ-*17*

எனச் செப்பமாகப் பதிப்பித்தார். சொல்லதிகாரத்திலும்

அதனோ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனோ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனோ டியைந்த ஒப்பல் ஒப்புரை - சொல் வேற் - *13*

என முறை தெரிந்து அச்சிடப்பட்ட பதிப்புக்களும் உள்ளன.

இந்நுணுக்கம் அறியாது வருமொழி உயிரில் தொடங்கும்வழியும் நிலைமொழி ஈற்றில் வரும் ஒடு உருபை அங்ஙனமே அச்சிட்ட பதிப்புக்களும் உள்ளன.

தொல்காப்பியத்தில் ஒடு ஒடு

இவ்வேறுபாட்டை நுட்பமாக உணர்ந்த நம் பதிப்பாசிரியர்கள், நிலைமொழி இறுதிக்கண் ஒடு உருபுவர, வருமொழி முதற்கண் உயிர் வந்தால், நிலைமொழி இறுதியில் உள்ள ஒடு ஒடு ஆகும் என்ற நுட்பத்தைப் பெரும்பாலும் தம் பதிப்புகளில் பின்பற்றியுள்ளனர். அவர்கள் தம்மையும் அறியாமல் இவ்வரையறையை நெகிழ்த்த இடங்களும் உண்டு.

உருஉரு ஆகி அகரமோடு உயிர்த்தலும்	தொ. எ.	*17*
ஆவோடு அல்லது யகரம் முதலாது	"	*65*
தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியோடு	"	*224*
அன்றி அனைத்தும்	"	*224*

பூல்வேல் என்றா ஆல் என் கிளவியோடு		
ஆம்முப் பெயர்க்கும்	"	375
அதனோடு இயைந்த ஒருவினைக் கிளவி		
அதனோடு இயைந்த வேறுவினைக் கிளவி		
அதனோடு இயைந்த ஒப்புஅல் ஒப்பு உரை	தொ.வே.	75.ந
வினையோடு அல்லது பால்தெரிபு இலவே	"	174.ந
அந்நாற் கிளவியோடு ஆயெண் கிளவியும்	"	204.ந
எண்ணே பெயரோடு அவ் அறு கிளவியும்	தொ.சொ.	260
எண்ணின் பெயரோடு அவ் அறு கிளவியும்	"	417
ஆவயின் மூன்றோடு அப்பதி னைந்தும்	"	164, 169
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரோடு		
அன்றி அனைத்தும்	"	167
இரத்தலும் தெளித்தலும் எனஇரு வகையோடு		
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன	தொ.பொ.	41
இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு		
இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே	"	71
அனைநிலை வகையோடு ஆங்கு எழு வகையின்	"	75
கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைஇ	"	90
உரைத்துழிக் கூட்டமோடு எஞ்சாது கிளந்த	"	114
பதின்மூன்று கிளவியோடு அன்னவை பிறவும்	"	115
அல்லல் தீர ஆர்வமோடு அளைஇ	"	146
அலமரல் உள்ளமோடு அளவிய இடத்தும்	"	146
உடன் சேறல் செய்கையோடு அன்னவை பிறவும்	"	146
ஒருசிறை நெஞ்சமோடு உசாவுங் காலை	"	204
மடனே வருத்தம் மருட்கை மிகுதியோடு		
அவைநாற் பொருட்கண் நிகழும் என்ப	"	236
உடைபெயர்த்து உடுத்தலோடு ஊழி நான்கே	"	262
இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை	"	274
சிறப்பே நலனே காதல் வலியோடு		
அவைநாற் பண்பும் நிலைக்களம் என்ப	"	279
கிழக்கிடு பொருளோடு ஐந்தும் ஆகும்	"	280
மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு		
யாப்புற வந்த இளிவரல் நான்கே	"	254
இருவகை உகரமோடு இயைந்துஅவை வரினே		316
ஒன்பதும் குழவியோடு இளமைப் பெயரே		556

முவரி அணிலோடு ஆங்கவை நான்கும் *556*
ஆனோடு ஐந்தும் கன்றுஎனற்கு உரிய *561*
ஒட்டகம் அவற்றோடு ஒருவழி நிலையும் *573*

இவற்றுள் எழுத்து *375*. சொல் *204*. பொருள் *146, 236* ஆகும் நூற்பாக்களில் ஒடு உருபே பதிப்பிக்கப்பட்டிருப்பினும் அவற்றுள் ஓடு என்பதே இருத்தல் வேண்டும்.

ஒடு உருபினோடு உம்மை சேர்ந்துவரின் ஒடு - ஓடு எனத் திரிவதில்லை.

தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்து தொ. பெ. *50*
தன்னொடும் அவளொடும் முதல்மூன்று அளைஇ " *114*

முதலியன நோக்கத்தக்கன.

சுவடியில் ஒகர ஓகார வேறுபாடு உணர்த்தப்படாமையின் வந்த நெகிழ்ச்சி இது.

தொல்காப்பியத்தில் காணப்படும் இப்புணர்நிலை நீட்டம் சங்க இலக்கியத்துள்ளும் காணப்படுகிறது.

இலங்குதாழ் அருவியோடு அணிகொண்ட நின்மலை - கலி.*46-25*

நின்னோடு உண்டலும் புரைவது-குறிஞ்சிப்பாட்டு - *207*

நின்னோடு உடன்உறைவு ஆக்குக-புறம்-*236:11, 12*.

முதலியன நோக்குக.

அன்போடு இயைந்த வழக்கு என்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. குறள்-*73*
உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் " *-140*
மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ஓடா தவர். "*-576*
வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு. "*-632*
மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை. "*-636*
குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை
உறுப்புஓ ரனையரால் வேறு "*-704*

வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்
நூல்அவை அஞ்சு பவர்க்கு "-726
அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றியதூண். "-983

726, 983 என்ற எண்களை உடைய குறட்பாக்களில் முறையே வாளோடு, நூலோடு, வாய்மையோடு என்றே இருந்திருத்தல் வேண்டும். மூன்றன் உருபாகிய ஒடு என்பதற்குக் கொள்ளப்பட்ட நீட்டம், எண்ணுப் பொருளில் வரும் ஒடுவுக்குத் தவறாமல் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. குறள் *632*இல் எண் ஒடு நீண்டது என்றார் பரிமேலழகர்.

இதுகாறும் குறிப்பிடப்பட்ட செய்திகளைக் கொண்டு ஒடு என்ற மூன்றன் உருபே வருமொழி உயிர்முதல் மொழியாக வருமிடத்து ஓடு என்று நீட்டப்படுகிறது என்ற செய்தி போதருகிறது. ஒடு என்பதன் திரிபே ஓடு என்பதனால் தொல்காப்பியனார் இயல்பான சொல்லாகிய ஒடு என்பதனையே கொண்டார்.

தெளிதமிழ்

சுவடிகளும் அவற்றைப் பதப்படுத்துதலும் போற்றுதலும் பற்றிப் புலவர் ப.வெ. நாகராஜன் கூறுவன.

முற்காலத்தில் எழுதுவதற்குப் பயன்பட்ட பொருள்களுள் பனையோலை முதன்மையானதாகும். மிகச் சமீப காலம் வரையில் அது எழுதுபொருளாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்நாளிலும் சில இடங்களில் சித்திரா பௌர்ணமி, கிரகண நாள்கள் ஆகிய தினங்களில் சமயச் சடங்குகளுக்குப் பனையோலை உபயோகப்படுத்தப்படுகிறது.

இதுவரையில் நமக்குக் கிடத்துள்ள பனையோலைச் சுவடிகளுள் மிக மிகத் தொன்மையானது கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு உரியதாகும். வடமொழி நாடகம் ஒன்றின் சில பகுதிகளைக் கொண்ட இந்த சுவடி மத்திய ஆசியாவில் கிடைத்தது. குளிர்ச்சியும் வறட்சியும் கொண்ட வட இந்தியப் பகுதிகளிலும் அதற்கு அப்பால் உள்ள நாடுகளிலும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து எழுந்த சுவடிகள் சற்றேறக் குறையத் தொடர்ச்சியாகக் கிடைத்துள்ளன. ஆனால் வெப்பமும் ஈரப்பதமும் கொண்ட தென்னாட்டு வெப்ப தட்ப நிலையில் ஓலைச்சுவடிகள் பல நூற்றாண்டுகள் அழியாமல் இருப்பதில்லை. இப்போது தென்னிந்தியாவில் கிடைக்கும் ஓலைச்சுவடிகள் பெரும்பாலும் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் எழுதப்பெற்றவையே ஆகும்.

1. தஞ்சாவூர்த் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொகுக்கப்பெற்றுள்ள சுவடிகளுள் மிகப் பழமையானது கிபி. *1657* - இல் எழுதப்பட்ட கம்ப ராமாயணச் சுவடி ஆகும் *(சுவடி எண்:614).*

சுவடிகள் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஓலைகள் இருவகைப்படும். சாதாரணப் பனைமரத்தின் ஓலைகள் ஒன்று. தாளிப்பனை அல்லது கூந்தற்பனை என்பது மற்றொன்று. தாளிப்பனையேடுகள் *10* செமீ. வரை அகலம், *90* செமீ. வரை நீளம் உடையனவாக இருக்கும். அவை சாதாரணப் பனையோலையை விட மிக மெல்லியவாக இருக்கும். சாதாரணப் பனையோலைகள் பொதுவாக *60* செமீ. நீளமும் *6* செமீ. அகலமும் உடையவாக இருக்கும்.

சுவடிகள் தயாரிப்பதற்கு முதலில் பனையோலைகளைத் தேவையான அளவில் கத்தரித்துக் கொள்வர். இவ்வாறு அளவுசெய்து கொள்ளப்பட்ட ஏடுகள் மிக நன்றாக உலர்த்தப்படும். சற்றும் ஈரமின்றி நன்றாகக் காய்ந்த பிறகு இவ்வோலைகள் தண்ணீரில் இட்டு வேக வைக்கப்படும். இவ்வாறு இவை கொதிக்க வைக்கப்படுவதால் ஏடுகளில் ஒரு துவள்வு ஏற்படுகிறது. பிறகு ஓலைகள் மறுபடியும் நன்கு காய வைக்கப்படும். காய்ந்த பிறகு கனமான சங்கு, அல்லது மழுமழுப்பான கல்கொண்டு ஓலைகளை நன்றாகத் தேய்ப்பார்கள். இப்படிச் செய்வதால் ஏட்டிற்கு ஒரு பளபளப்பு ஏற்படும். மேலும் நேராகத் தகடுபோல ஆகிவிடும். இப்போது ஏடு எழுதுவதற்கு ஏற்ற நிலையை அடைந்துவிட்டது. இம்முறைக்கு ஏட்டைப் பாடம் செய்தல் அல்லது பதப்படுத்துதல் என்று பெயர்.

இவ்வாறு பதப்படுத்தப்பட்ட ஏடுகளில் வலப்புறம் ஒன்றும் இடப்புறம் ஒன்றுமாக இரு தொளைகள் கயிறு நுழையுமளவிற்குப் போடப்படும். இத்தொளைகள் தனியேடுகளைச் சேர்த்துக் கயிற்றாற் பிணைத்துச் சுவடியாக்க உதவுகின்றன. இவ்வாறு சுவடிகளைத் தயாரித்துக் கொடுப்பதையே முற்காலத்தில் சிலர் தமது பகுதிநேரப் பணியாகக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது.

வடநாட்டில் பூர்ஜபத்ரம் என்னும் ஒருவகை மரப்பட்டை எழுதுவதற்கு உபயோகப்படுத்தப்பட்டது. பூர்ஜம் என்னும் மரம் இமயமலைக் காடுகளில் ஏராளமாக வளருகிறது. சுமார் *90* செமீ. நீளமும் *20* செமீ. அகலமும் உள்ள பட்டைகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்வர். அப்பட்டைகளின் மீது எண்ணெய் பூசிப் பதஞ்செய்து, தேய்த்து வழுவழுப்பாக்குவர். அவற்றின் மீது ஒரு வகை மையால் கொறுக்கைத்தட்டை எழுதுகோலைக் கொண்டு எழுதுவார்கள்.

தற்போது கிடைத்துள்ள இத்தகைய பூர்ஜபத்திரச் சுவடிகளுள் மிகத் தொன்மையானது கிபி. 2 அல்லது மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த கரோஷ்டி எழுத்துக்களில் எழுதப்பட்டு மத்திய ஆசியாவில் கோட்டான் பிரதேசத்தில் இருந்து கிடைத்த "தம்மபதம்" என்னும் புத்தமதநூல் ஆகும்.

வடநாட்டில் பூர்ஜபத்ரம் உபயோகிக்கப்பட்டபோதிலும் அங்கேயும் அதற்கு முன்பு பனையோலையே பெருவழக்கிலிருந்திருக்கும் என்று கொள்வது தவறாகாது. ஏனெனில் அக்காலத்திலேயே பூர்ஜபட்டையையும் பனையோலையின் வடிவத்திலேதான் கத்திரித்தனர். கி.பி. முதலாம் நூற்றாண்டில் எழுந்ததும் தக்ஷசீலத்தில் கிடைத்துள்ளதும் ஆகிய ஒரு செப்பேடுகூட பனையோலையின் வடிவத்திலேதான் அமைந்துள்ளது. இக்கருத்தை திரு. டிஸி. சர்கார் அவர்கள் தம் இண்டியன் எபிக்ராபி என்னும் நூலில் வெளியிட்டுள்ளார் *(பதிப்பு 1965-ம் வருடம் பக்.63).*

இந்தியாவின் வடபகுதிகளைப் போல மசியால் எழுதும் வழக்கம் தென்னாட்டில் இருக்கவில்லை. இரும்பினாற் செய்து கூராக்கப்பட்ட எழுத்தாணியையே இங்கு எழுதுகோலாகப் பயன்படுத்தினார்கள். ஏட்டினை இடக்கையில் பிடித்துக்கொண்டு வலக்கை விரல்களுக்கிடையே எழுத்தாணியைப் பிடித்துக்கொண்டு எழுதுவர். எழுத்தாணியைக் கொண்டு எழுதும்பொழுது, வலக்கை ஒரே இடத்தில் எழுதிக் கொண்டிருக்க இடக்கையில் உள்ள ஏடு இடமிருந்து வலமாக நகர்த்தப்படும். நன்கு அழுத்தி எழுதப்படுவதால் ஓலையில் எழுத்துக்களின் வரிவடிவம் தெளிவாகப் பதிவாகும். ஒரு நூல் முழுவதும் இவ்வாறு எழுதி முடிந்தபிறகு மஞ்சள், வசம்பு, வேப்பங் கொட்டைத்தூள், அடுப்புக்கரி இவைகளைக் கொண்டு வேப்பெண்ணெயால் தயாரித்த ஒருவகை மையை எழுத்துக்களின் மேல் பூசுவார்கள். மையின் கரிய நிறத்தால் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிவதோடு, இந்த மையின் கசப்புச் சுவையால் புழுபூச்சிகள் அண்டாமலும் சுவடி பாதுகாக்கப்படுகிறது.

எழுதப்பட்ட சுவடிகளை நீண்டகாலம் பராமரிப்பதற்கும் சில வழிமுறைகள் கையாளப்பட்டு வந்தன. வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை காலை நேர இளவெயிலில் மூன்று மணி நேரத்திற்கு மேற்படாமல் சுவடிகள் தனித்தனி ஏடுகளாகப் பிரிக்கப்பட்டு உலர்த்தப்படும். பெரும்பாலும் அமாவாசை நாள்களில் இவ்வாறு செய்வது மரபு எனச் சொல்லப்படுகிறது.

கறையான், அந்துப்பூச்சி, இராமபாணம் எனப்படும் ஓர் உயிரினம் எலி ஆகியவை ஓலைச்சுவடிகளின் பெரும்பகையாகிய உயிரினங்கள். வெள்ளம், தீ, போன்றவைகளாலும் சுவடிகள் பகுதியாகவோ முழுமையாகவே அழிந்துபடும்.

இவைகளேயன்றிக் காலத்தால் இயற்கையாக ஓலைகள் மக்கிப் போவதும் உண்டு. சாதாரண ஓலையாகிய ஏடுகள் பழைமை யடையும்பொழுது பளபளப்புக் குன்றிப் பழுப்புநிறம் அடையும்; தாளிப்பனையேடுகள் கரியநிறம் பெறும்.

இவ்வாறு மூப்பினால் ஏற்படும் சிதைவைத் தடுக்கப் பழைய காலத்தில் அவ்வப்போது வேப்பெண்ணெயைத் தடவிவந்தனர். தற்போது இன்றைய அறிவியல் முறைப்படி பென்ஜயின் ஆவியால் பூச்சிகள் அழிக்கப்பட்டு, லெமன் க்ராஸ் (Lemon Grass) அல்லது ஜாவா சிட்ரோ நெல்லா (Java Citronella) எண்ணெய் பூசப்படுகிறது. தமிழகஅரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினர் அண்மையில் பழஞ்சுவடிகளைப் புதுப்பிக்க ஒரு புதிய நடைமுறையைக் கண்டுபிடித்துள்ளனர். அது வருமாறு:-

முதலில் ஓலைச்சுவடியை *30* நிமிடங்கள் சுத்தமான தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். பிறகு நன்றாக உலர்த்தி அஸிடோன்கொண்டு தூய்மையாக்க வேண்டும். அதன் பிறகு ஹைட்ரஜன் ஆக்ஸைட் பூசி சோப் ஆயில் கரைசலில் *50* நிமிடங்கள் ஊறவைக்க வேண்டும். பிறகு மறுபடியும் தூய தண்ணீரால் கழுவி ஏடுகள் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனித்தனியே பிரிந்திருக்குமாறு உலர்த்திப் பத்திரப்படுத்த வேண்டும். சுவடி மிக அதிகமாகச் சிதிலமடையவில்லை என்றால், சோப்ஆயில் கரைசலில் *10* நிமிடம் ஊற வைத்துப் பிறகு நிறையத் தண்ணீர் விட்டு நன்றாகக் கழுவி உலர்த்த வேண்டும். இச்செயல்முறைகள் *25-7-1982* அன்று தஞ்சையில் நடைபெற்ற தொல்பொருள் ஆய்வுத்துறைக் கருத்தரங்கு ஒன்றில் அத்துறைப் பரிசோதனைக் கூடத்தின் இரசாயன ஆய்வாளர் திரு. தாமோதரன் அவர்கள் படித்த கட்டுரையில் விளக்கப்பட்டன. ஓலைச்சுவடிகளை எந்த நிலையிலும் தண்ணீரால் கழுவக்கூடாது என்று கூறப்பட்டு வரும் பழைய நடைமுறைக்கு இது வேறுபட்டதாக இருக்கிறது.

சுவடிகளைப் படிப்பதற்கும், பொறுமையும் தனிப்பயிற்சியும் திறமையும் இன்றியமையாது வேண்டப்படும். எம்மொழியில் சுவடி உள்ளதோ அம்மொழியின் இலக்கண இலக்கிய மரபு தெரியாதவர்கள் அதைப் படித்தறிய மிக இடர்ப்படுவர். பொதுவான இவ்வுண்மை தமிழ்ச்சுவடிகளுக்கு மிகச் சிறப்பாகவே பொருந்தும்.

தமிழ்ச்சுவடிகளின் எழுத்துமுறைக்கும் இன்றைய நடைமுறை எழுத்திற்கும் பல வேறுபாடுகள் உண்டு. ஓலைச்சுவடிகளில் சொற்கள், செய்யுட்சீர்கள், அடிகள் இவற்றிற்கிடையே இடம் விடாமல் தொடர்ந்து சங்கிலித் தொடர்போல் எழுதப்பெற்றிருக்கும்; முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி போன்ற நிறுத்தற்குறிகள் இரா; செய்யுள்களும் அடிநோக்கி எழுதப்படாமல் ஒரே

தொடர்ச்சியாக எழுதப்பெற்றிருக்கும்; பாடல் முடிந்த பிறகு ஏதாவது குறியிடப்பட்டுப் பாட்டெண் கொடுக்கப்பட்டிருக்கும். சுவடியைப் பிரதி செய்பவருக்கு யாப்புவிதிகள் பற்றிய அறிவு இருந்தால்தான் செய்யுள் நூல்களைச் செப்பமாகப் படிக்க இயலும். சுவடிகள் பெரும்பாலானவை செய்யுள் நூல்களே என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

தமிழ்ச் சுவடிகளில் மெய்யெழுத்தைச் சுட்ட அதன்மேல் புள்ளியிடுவதில்லை. அவ்வெழுத்தின் இடங்கொண்டே அதனை உயிர்மெய்யா அல்லது மெய்யா எனத் தீர்மானிக்க வேணடும். குறிலுக்கும் நெடிலுக்கும் ஒற்றைக் கொம்பு ஒன்றே எழுதப்படும். ஓலையில் செவி என்ற பெயர்ச்சொல்லும் சேவி என்ற கட்டளைவினையும் ஒரே மாதிரி ''செவி'' என்றே பொறிக்கப்பட்டிருக்கும். இடம் நோக்கிச் சொல்லை அறிய வேண்டியதுதான். மேலும் உயிர்மெய்யின் நெட்டெழுத்தைக் காட்டும் காலிற்கும் (ா) ரகரத்திற்கும் வேறுபாடு இருக்காது. "சாம" என்று சுவடியில் காணப்பட்டால், அதனைச் சரம, சாம, சாம், சர்ம, சரம் என ஐந்து விதமாகப் படிக்கலாம். எது பொருள் தொடர்பிற்கும் யாப்பிற்கும் பொருந்துகிறதோ அதனையே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். இதைப் பற்றிய டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களின் கீழ்க்கண்ட வரிகள் மிகச் சுவையானவை.

"இது கொம்பு இது சுழி என்று வேறுபிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே இராது. ரகரத்திற்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சாபம் சரபமாகத் தோற்றும்; சரபம் சாபமாக தோற்றும். ஓரிடத்தில் சரடு என வந்திருந்த வார்த்தையை நான் சாடு என்றே பலகாலம் எண்ணி வந்தேன். தரன் என்பதைத் தான் என்று நினைத்தேன் இடையின ரகரத்திற்கும் வல்லின றகரத்திற்கும் பேதம் தெரியாமல் மயங்கின இடங்கள் பல" (என் சரித்திரம். பக்கம் *353).*

சுவடி எழுத்துமரபால் விளைந்த வேறுபாடுகள் ஆகிய இவை போதாவென்று 'எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்' என்ற பழமொழிக்கு இணங்கச் சுவடி எழுதியவர்கள் செய்யும் தவறுகள் ஏராளமாக உண்டு. ண,ந,ன ஆகிய மூன்று எழுத்துக்களும் பொருளுணர்ச்சியே இல்லாமல் மனம் போனபடி தாறுமாறாகத் தம்முள் மாறியிருக்கும். இதேபோல ல,ழ,ள ஆகிய மூன்றும் வகையற்று மயங்கியிருக்கும். பெரும்பாலும் ரகர றகரங்கள் தவறாகவே இருக்கும். இகரச் சுட்டும் எகர வினாவும் சுவடியில் யகரமாகவும் "கி" எனத் திரித்தும் எழுதப்பட்டிருக்கும். இத்தகைய பிழைகளை நீக்கிச் செப்பமான வடிவம் காணும் பொறுப்பு, சுவடியைப் படிஎடுப்பவரையும் பதிப்பாசிரியரையுமே சேர்கிறது.

கற்றோர்களாலேயே பயன்படுத்தப்படும் ஏட்டுச்சுவடிகளில் இத்தகைய பிழைகள் ஏன் இடம் பெறுகின்றன என்பது நியாயமானதொரு வினா. முற்காலத்தில் மாணவர்கள் நூல்களை மனப்பாடம் செய்ததோடு தாம் பயிலும் நூல்களை ஏட்டில் பிரதிசெய்தும் வந்தனர். மாணவர்ஒருவர் ஓர் ஏட்டைப் பார்த்துப் படிக்க, ஒரே சமயத்தில் இரண்டு மூன்றுபேர் கேட்டு எழுதுவர். இந்நிலையில் உள்ள மாணவர்கள் முற்றக் கற்றவர்கள் அல்லர். மேலும் தம் செவிப்புலனுக்கேற்பவே எழுதினர். இவர்களால் எழுதப்பட்ட சுவடிகளில் பிழைகள் இருப்பது இயல்பே. இதுவன்றியும் நூல்களை இயற்றும் ஆசிரியர் தம் படைப்பைத் தாமே பொதுவாகச் சுவடியில் எழுதமாட்டார். அவர் வாயால் சொல்லச் சொல்ல, மாணவர்கள் எழுதுவர். அவ்வாறு எழுதுபவர்களுக்குக் கற்றுச் சொல்லிகள் என்று பெயர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் நூல்களை அவர் சொல்லச் சொல்ல திரு. தியாகராச செட்டியார் அவர்களும் பிற்காலத்தில் டாக்டர் ஐயரவர்களும் எழுதி வந்தனர் என்று தெரிகிறது. (அண்மையில் வாழ்ந்திருந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அவர்கள் *(1839-1898)* தம் நூல்களைத் தாமே கைப்படச் சுவடியில் எழுதினார். இதனால்தான் போலும் சுமார் *49,000* பாடல்கள் கொண்ட அவருடைய *40* சுவடிகளில் இன்று வரை ஓர் எழுத்துப்பிழையும் கண்டுபிடிக்கப்படவில்லை.

சிற்றரசர்கள், பெருநிலக்கிழார்கள் போன்ற செல்வர்கள் தங்கள் குடும்பத்தின் பொதுச்சொத்தாகிய ஏட்டுச்சுவடிகளைக் குடும்பம் பெருகப் பெருகப் பலரைக்கொண்டு பிரதிசெய்வித்துச் சுவடிகளைப் பெருக்கினர். இவ்வாறு சுவடிகளைப் படிஎடுத்தவர்கள் ஊதியம் நோக்கி உழைத்தவர்கள்; மிகக் குறுகிய காலத்திலேயே மிக அதிகமாக எழுதிப் பிழைக்க வேண்டியவர்கள்; புலமை இல்லாதவர்கள். இவ்வாறான காரணங்களால்தான் வல்லினம், இடையினம், ஒற்று, புணர்ச்சிவிதிகள், யாப்பு போன்றவைகளைக் கவனிக்காமல் பிழைபட எழுதப்பட்டுவிட்டன. இவ்வகையான பிழைகள் சில சுவடிகளுள் பிறகு வேறொரு புலவரால் திருத்தப்படுவதும் உண்டு. இவ்வாறு திருத்தப்பட்டால் அதைக் குறிப்பிடுவதும் உண்டு.

இவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளைப் படிப்பதற்கும் இன்றைய அறிவியல் சில வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது. நான்கு கம்பிக் கால்களின் மீது பூதக் கண்ணாடியை வைத்து அதன் கீழ் சுவடிகளை வைத்துக்கொண்டு சுலபமாகப் படிப்பதற்கேற்ற ஒரு சாதனத்தை ஜெர்மனியில் செய்துள்ளனர்.

மேலும் ஏட்டை அப்படியே நிலைமின்படி எடுத்து இருவர் அல்லது மூவர் ஒப்பிட்டுப் படிக்கலாம் ஜெராக்ஸ் படியை உருப்பெருக்கும் திரையில்

காண்பித்து ஓர் அறையில் உள்ளவர் அனைவரும் படிக்கலாம். சுவடிகளை நுண்படம் எடுத்துத் திரையில்போட்டுப் பார்க்கலாம். இவ்வாறு நுண்படம் (Micro film) எடுப்பதால் சுவடிகளைச் சேமிக்கத் தேவையான இடம் மிக மிகக் குறைந்து விடுகிறது. எழுத்தைக் கண்களால் பார்த்துப் படிக்க அறிவியல் சுலபமான வழிகள் பலவற்றைக் கொடுத்தாலும், பொருளை அறியவும் பிழைகளைத் திருத்தவும் மொழிப்புலமை கட்டாயம் வேண்டும். இவற்றை எந்த இயந்திரங்களாலும் அளிக்க முடியாது!

பண்டைய பதிப்பாசிரியர்

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, தொல்காப்பியம், தேவாரம் முதலிய சைவத்திருமுறைகள், வைணவ நூல்கள், பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், பல இலக்கண நூல்கள், சிறுபிரபந்தங்கள் என்பன சென்ற நூற்றாண்டின் தொடக்கத்துக்கு முன்னரே சான்றோர் பலராலும் சுவடிகளிலிருந்து பெயர்த்து அச்சில் கொண்டு வரப்பட்டுள்ளன. அங்ஙனம் பதிப்பித்த சான்றோர் எல்லோரும் சுவடிகளில் தாமே எழுதிய பழக்கமுடையவர்கள். சுவடிகளில் எவ்வெவ்வெழுத்து எவ்வெவ்வாறு எழுதப்பெறும் என்பதனைத் தாமே எழுதிப் பழக்கப்பட்ட அப்பெருமக்களே ஏனைய சுவடிகளிலிருந்த நூல்களை எடுத்துப் பதிப்பித்தற்கண் தாம் பட்ட தொல்லைகளை விரிவாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கே இந்த ஏட்டுச்சுவடிகளை வாசித்தல் அவ்வளவு தொல்லை தருமானால், எழுத்தாணி எடுத்தறியாத நம்மனோர் அச்சுப்புத்தகங்களைப் பயில்வதிலேயே காலங்கழித்த நிலையில் ஏட்டுச்சுவடிகளை எழுத்துப்பிழை யற வாசிப்பதும் அச்சுவடிகளில் உள்ள செய்திகளைக் கசடற விளங்கிக்கொண்டு காகிதத்தில் படியெடுப்பதும் எளிய செயல்கள் அல்ல. அவற்றைச் செய்வதற்குத் தமிழினிடத்துக் கொண்டுள்ள ஆர்வமும் பொறுமையுமே நம் புலமையோடு இணைந்து துணைபுரிதல் வேண்டும்.

பழஞ்சுவடிகளின் இன்றைய நிலை

நம்முடைய முன்னோர்கள் புதுச்சுவடிகளை மீண்டும் மீண்டும் படியெடுப்பதில் காலம் கழிக்கமாட்டார்கள். பழுதுபட்டுவிடுமோ என்ற நிலையில் உள்ள சுவடிகளையே படியெடுப்பார்கள். சுவடிகளின் ஓரங்கள் பூச்சிகள், கறையான் இவற்றிற்கு விரைவில் இரையாகிவிடும். நம் முன்னோர்கள் சுவடிகளில் இறுதிவரை எழுதும் பழக்கமுடையவர்கள். ஆகவே சுவடிகளின் ஓர் ஓரத்தில் சில ஏடுகள் பழுதுபட்டாலும் பாடல்அடிகள் சிதைவுறும். சுவடிகளின் இடப்புற ஓரம் பழுதுபட்டால் சுவடிகளிலுள்ள ஏடுகளுக்கு

வரையப்பட்ட எண்ணிக்கை மறைந்துவிடும். "சுவடிகள் நம் முன்னோர்கள் அரிதில் பாதுகாத்த செல்வம். அவற்றை நாமும் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்" என்ற எண்ணம் மாத்திரம் உடையவர் சிலர். சிலர் பிரித்துப் பார்த்தால்கூடச் சுவடிகளின் புனிதம் கெட்டுவிடும் என்ற எண்ணத்தில் ஆண்டிற்கு ஒருநாள் சரசுவதி பூசையன்று சுவடிகளுக்குப் பூ இடுவதனோடு தம் கடமை முடிந்துவிட்டதாகக் கருதினர். அத்தகைய சிலர், மனம் விரிவடைந்து தமக்கு எதுவும் புலனாகாத இச்சுவடிகள் நன்மக்களால் பயன்படுத்தப்பட்டுப் பொதுமக்களுக்கும் உதவட்டும் என்ற நல்லெண்ணத்தோடு அச்சுவடிகளை நல்கிய காலத்தில், சுவடிகளில் பெரும்பாலன பழுதுபட்டுப் பயன்படாமலே போன அவலநிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது.

புறநானூற்றுச் சுவடிகள் பல கிட்டியும் சில பாடலடிகள் கிட்டவில்லை என்பதனையும், *266* பாடல்களுக்குமேல் புறநானூற்றின் பழைய உரை கிட்டவில்லை என்பதனையும், சிலப்பதிகாரத்து அடியார்க்கு நல்லார் உரை கானல்வரிக்கும் வழக்குரைகாதை தொட்டுப்பின் பகுதிகளுக்கும் கிட்டவில்லை என்பதனையும், பெருங்கதையின் முன்பகுதியும் பின் சில பகுதிகளும் கிட்டவில்லை என்பதனையும், குண்டலகேசி வளையாபதி என்ற பிரசித்தமான காப்பியங்களும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருளதிகாரத்து மெய்ப்பாட்டியல் உவமவியல் மரபியல்களுக்கு வரைந்த உரையும் குறுந்தொகை *20* பாடல்களுக்கு வரைந்த உரையும் பேராசிரியர் குறுந்தொகை *380* பாடல்களுக்கு வரைந்த உரையும் போல்வன இன்று புலப்படுமாறில்லை என்பதனையும் நோக்க, ஏட்டுச் சுவடிகளைத் தக்காங்கு பேணிப் பாதுகாப்பதற்குத் தொடர்ந்து பல தலைமுறைகள் தமிழில் வல்ல சான்றோர்களாய் இருந்தாலொழிய ஏட்டுச்சுவடிகளைத் தொடர்ந்து பாதுகாத்துத் தேவையாயின் புதிய படிகள் எடுத்துப் பேணும் வாய்ப்பு எந்தக் குடும்பத்துக்கும் கிட்டாது ஆதலின், புலமைநலம் மிகும் நல்லூழ் பெறாத பிற்றோன்றல்களின் பேணற்பாடிழந்து சுவடிகள் தேவையற்ற பொருள்கள் என்று புறக்கணிக்கப்பட்டதால் பல நூற்செல்வங்களைத் தமிழ்த்தாய் இழந்து நிற்கும் அவலநிலையை இன்று காண்கிறோம்.

சரியாக விளங்கிக் கொள்ள இயலவில்லை என்று ஐயர் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள பரிபாடல் முதற்பாட்டாகிய 'ஆயிரம் விரித்த' என்ற திருமால் வாழ்த்தின் அராகப் பகுதி

இணைபிரி அணி துணி பணி எரி புரைய
விடர் இடு சுடர் படர் பொலம் புனை வினைமலர்
நெரி கிடர் எரி புரை தன மிகு தன முரண் மிகு

கடறரு மணியொடும் முத்து யாத்த நேரணி
நெறி செறி வெறி உறு முரல் விறல் வணங்கு அணங்கு வில்
தார் அணி துணி மணி வெயில் உறழ் எழில் புகழ் அலர் மார்பின்
எரி வயிர நுதி எறி படை எருத்து மலை இவர் நவையினிற்
றுணி படல் இல மணி வெயில் உறழ் எழில் நக்கு
இமை இருள் அகல முறு கிறுகு புரி ஒரு புரி நாள்மலர்
மலர் இலகின வளர் பரிதியின் ஒளி மணி மார்பு அணி
மணம் மிக நாறு உருவின விரை வளி மிகு கடு விசை
உடுவுறு தலை நிரை இதழ் அணி வயிறிரிய அமரரைப்
பொரெழுந்து உடன்று இரைத்து உரைஇய தானவர்
சிரம் உமிழ் புனல் பொழிபு இழிந்து உரம்
உதிர்பு அதிர்பு அலம் தொடா அமர் வென்ற கணை.

வேற்று ஏட்டுச்சுவடிகளின் துணைக்கொண்டு இன்றுவரை பட்டாங்கு வெளிப்படுத்தும் வாய்ப்பினைப் பெறாததாகவே உள்ளது. வீரசோழிய உரையிலுள்ள எட்டாரைச்சக்கரத்தின் நிலையும்

* மாலவனமுதலியவிமைய*(வாதிபவானவ)* *(பதிபகவானபுமி)* *(பதிபவானபுமி)* ரெவணமிககாலனெழி*(னலல)* *(லவ)* *(லல)* னகாரியலங்கிதன வெசெடனின னுருவாநதெவாகாஙகதுவா *(ண)* *(ன)* *(ன)* நகமிகாலசிலரெனறபொனறிவுளனெதிரிபவனமகாமுரணவா சொனனமனகா *(லனும்)* *(லுனு)* *(லனு)*னறுவெதவாலென *(னான)* *(றான)* கழுகுநாடனமிலகனறுனனியவெனறுகநது சொரி *(யிரெயிலெய)* *(யயிரெயிலெய)* தாயயொ வினொஙகூரநதமரொஙகூழவாமமா [வு] ணடாரநதவிரைககொலப பூணமாலை [ச] சார *(பி)* *(பி)* *(ம)* னமகிமடி *(ததொ)* *(ககொ)* *(ததொ)* னறியசசடையெதபூணடினியுயிர மெறபொறபொடெண ணியலாரநனனெடு *(மாலையிடததி)* *(யிடககினு)* *(யிடககினு)* னுய ததமாலகொளாய விணணினினலலார *(மணந)* *(மனன)* *(மனன)* லலாரவிழததனரசிற [ர] பபூககூறா [விச] [விசி]பணணொகரொ *(ப)* *(ம)* *(ப)* பெணணாரநது *(நிததலு)* *(நிககலு)* *(நிககலு)* வாயத தாரங்கொளகையினொயதிரததாரவி *(லி)* *(வி)* *(வி)* லொயயென வெத *(து)* *(த)* *(து)* து *(நி)* *(னி)* னை [யா] வெலகெனறுவளவன பாரமிகுசிரெ. அதுவே.

பெருங்கதையில் காணப்படும் 'அட நரடு நடூஉ டடங்கண்டபுத்த' போன்ற பல அடிகள் புதிய சுவடிகள் வாயிலாகச் செப்பம் பெறுமாறு நிகழ்ந்தில; பதிற்றுப்பத்தின் முதற்பத்தும் இறுதிப்பத்தும் இன்றும் கிட்டாதனவாகவே உள்ளன. இவற்றிற்கெல்லாம் காரணம் தனியார்வசம் இருந்த ஏட்டுச்சுவடிகள்

பேணப்படாமல் வீணாக்கப்பட்டமையேயாம். பேணற்படாமைக்குக் காரணம், அச்சுவடிகளின் உட்பொருள்களை அறியும் ஆற்றல் இன்மையேயாம். ஆனால் எல்லோரும் ஏட்டுச்சுவடிகளைப் புனித பொருளாகக் கருதி ஏட்டின் தூள்கூடக் காலில் படக்கூடாது என்ற எண்ணங்கொண்டு, பதினெட்டாம் பெருக்கில் காவிரிவெள்ளத்தில் ஏட்டுச்சுவடிகளைக் கட்டிவிட, அத்தகைய செயலால் இழக்கப்பட்ட சுவடிகள் எத்தனையோ? பிள்ளையார்ச்சதுர்த்தியன்று வழிபாட்டிற்காக வாங்கப்பெறும் மண்பிள்ளையார் பின்னப்படக் கூடாது, அதன் துகள்கூடக் கீழே விழுந்து நம் காலால் மிதிக்கப்படக்கூடாது என்ற உயர் எண்ணத்தால் அதனைக் குளத்திலோ ஆற்றிலோ கடல் அருகிலிருந்தால் கடலிலோ தூக்கி எறிந்துவிடுவது போலச் சென்ற இந்த நூற்றாண்டின் இடைப்பகுதி வரை வாழ்ந்த சான்றோர் சிலர் ஏட்டுச்சுவடிகளைப் புனிதப்பொருளாகக் கருதி அவற்றுக்குத் தம்மால் குறைபாடு ஏதும் வாராதவகையில் அவற்றை ஆற்று வெள்ளத்திலிட்டு மனநிறைவு பெற்றனர்.

பாடவேறுபாடுகள்

முன்னைய சான்றோர்கள் பலர் நூல்களை மனப்பாடமாக வைத்திருந்தனர். அவர்கள் தம் நினைவிலிருந்து சொல்ல ஏட்டில் பொறிக்கப்பட்ட நூல்கள் பல. அவர்கள் தம் புலமையால் ஒரோவழி நினைவிலிருந்து விலகிய சீர்களையும் அடிகளையும் பொருள் பொருத்தமுறத் தம் புலமையால் நிரப்பிக் கூறவே நூல்களில் பாடபேதம் என்ற பெயரால் சில வேறுபாடுகள் தோன்றிவிட்டன. மேலும் புலமைமிக்கவர் தாமே ஏடுகளில் பாடல்களைப் பொறிக்கும்போது மூலஏடுகளின் ஒவ்வொரு சொல்லையும் பார்த்துப் படியெடுக்காமல் ஒரோர் அடியினை முழுமையாக நோக்கி மனத்தில் இருத்தி ஏட்டில் பொறிக்கத் தொடங்கியிருக்கலாம். அங்ஙனம் நோக்கிய அடிகளில் ஒரு சிறுபகுதி நினைவை அகன்றிருக்கலாம். அப்பகுதியை மீண்டும் மூலஏட்டை நோக்கி உணர்ந்து வரையாமல், தமக்குப் பொருள் விளங்கிய வாய்ப்பினை உட்கொண்டு சோம்பலால் அப்பகுதி இப்படித்தான் இருத்தல் வேண்டும் என்று ஊகித்தும் எழுதலாம். இதுவும் பாடவேறு ஏற்படுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டது. குறையறிவுடையவர்கள் மூல ஏட்டைப் படியெடுத்த காலத்துச் சில எழுத்துகளை உள்ளவாறு விளங்கிக்கொள்ள இயலாமல் தம் மனம் போன போக்கில் எழுதிவிடுவதும் உண்டு. அங்ஙனம் எழுதப்படுவனவற்றைப் பாடபேதமாகக் கொள்ளாமல் பிழை என்று களைந்துவிடல் வேண்டும்.

பாடவேறுபாடு யாது? பிழை யாது? என்று பகுத்துணர்தலும் சான்றோரிடையேயும் இயலாததொரு செய்தியாக உள்ளது. பெருங்கதையைப்

பதிப்பித்த ஐயரவர்கள் தாம் பதிப்பித்த பெருங்கதை நூலில் காணப்படாமல் ஏனைய நூல்உரைகளில் காணப்பட்ட பகுதிகளை எல்லாம் அந்நூல் முகவுரையில் தொகுத்துக் கூறியுள்ளார். அங்ஙனம் தொகுத்துக் கூறியுள்ள பெருங்கதைப்பகுதிகளில் வீரசோழியத்தில் காணப்படும் பகுதிகளும் இடம் பெறுகின்றன. வீரசோழியப் பதிப்பில் காணப்படும் அப்பகுதிகள் பிழை மலிந்து பொருள் புலப்பாடு அற்று இருக்கவும், வீரசோழியத்தினுள்ளனவாக ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ள அடிகள் தெளிவான பொருட்புலப்பாடு உடையனவாக இருத்தலைக் காண்கிறோம்.

வீரசோழியப் பதிப்பில் காணப்படும் பாடத்தையும் வீரசோழியச்சுவடியைப் பார்த்து ஐயரவர்கள் குறிப்பிடும் பாடத்தையும் நோக்கின், நிறைந்த புலமையுடன் சுவடியைப் பார்த்துப் படியெடுப்பவர் பாடத்தின் திருந்திய வடிவம் புலப்படும். பெருங்கதையடிகள் வீரசோழியத்தில் எடுத்துக்காட்டாக வந்துள்ள இரண்டு இடங்களை நோக்குவோம்.

வீரசோழியப் பாடம்	**ஐயர் கொண்ட பாடம்**
'கொங்கை இனைஎழில்	'கொங்கை இணை எழில்
கோங்கரும் பாக....	கோங்கரும் பாக....
ஐயவிச் சீறடி தளிர்க் களாக	சீறடி தளிர்க ளாகச் சிறியேம்
சிறியேம் ஆகம் காய்ந்த இம்மங்கை	ஆகம் கரந்தஇம் மங்கை தன்னைக்
தன்னைக் காத்துமென் றனக்கிரக்க	கரத்து மென்றெனக் கிரக்க மின்றி...
மின்றி...வாட்டிறத் தடக்கை	வாட்டிறற் றடக்கை வத்தவர் கோவே.'
வத்தவர் கோவே.'	
'இவ்வயின் கேட்டதோர்	'இவ்வயின் கெட்டதோர்
பசுங்கதிர்த் திங்கள் நாடிய செல்வன்	பசுங்கதிர்த் திங்கள் நாடிய செல்வன்
என்றி எனக்குரை இன்றி இரங்கென'	என்றி என்குறை இன்றி இரங்கென'
என இதனுள் வத்தவனை வணங்குற்றார்	என இதனுள் வத்தவனைக் காணலுற்றார்
மன் மதிக்குலத்தனாதலின்	அவன் மதிக்குல மன்னனாதலின்.

மூலமே கிட்டாமல் நச்சினார்க்கினியர் உரையைக் கொண்டே பத்துப்பாட்டு மூலத்தை அமைத்துக் கொடுத்த புலமை சான்ற ஐயரவர்கள் பாடல்அடிகளைச் செப்பமாக அமைத்தும், ரகரத்துக்கும் காலுக்கும் வேறுபாடு கண்டும், பொருளுணர்வோடு பிழைகளைக் களைந்தும் நமக்குத் தந்துள்ள திருத்தமான பாடத்தைக் காணலாம்.

வீரசோழியப் பாடல்கள்பல அறிஞர் மு. இராகவ அய்யங்கார் தொகுத்துள்ள பெருந்தொகையில் இடம்பெறுகின்றன. வீரசோழியப் பதிப்பில் காணப்படும் பிழைகள் பலவும் பெருந்தொகைப் பதிப்பில் பிழைகளைந்து குறிப்பிட்டுள்ளன. இவற்றை நோக்க, கற்றுவல்லாரிடையேயும் பிழைகளைக் களைந்து பாடவேறுபாடுகளை மாத்திரம் கொள்ளும் செயல் எளிமையில் நிகழக் கூடியதொன்றன்று என்பதனை உணர்கிறோம்.

மு. இராகவ ஐயங்கார் தொகுத்த பெருந்தொகையுள் வீரசோழிய எடுத்துக்காட்டுப் பாடல்கள். பல இடம் பெற்றுள்ளன. அவற்றை நோக்கிப் பல திருத்தமான பாடங்களை அறியலாம்.

'நன்றே நினைந்தான் குணமொழிந் தான்த னக்கென்
றொன்றானு முள்ளான் பிறர்க்கே யுறுதி சூழ்ந்தான்'

என்ற வீரசோழிய அடிகள், பெருந்தொகையில்

'நன்றே நினைந்தான் குணமேமொழிந் தான்த னக்கென்
றொன்றானு முள்ளான் பிறர்க்கேயுறு திக்கு ழந்தான்'

என மூன்றாம் சீர் கனிச்சீராய் வரும் யாப்பு முறைக்கேற்பக் குறிப்பிடப்பட்டுள்ளன.

கோடாத சீல விதமேவி	கோடாத சீல வதமேவி (வதம்-விரதம்)
மழையருவி போதி	மழை மருவு போதி
வெறி கழல் கொள் மேனி	வெறி தழல் கொள் மேனி
சித்திரம் குயிற்றி னாளி	சித்திரம் குயிற்றி நாளும்
பிரா னடிக்கள் போற்றின்	பிரானடிக்கண் போற்றின்
முகிழ்ந்திலங்க போதியின்	முகிழ்ந்திலங்க சோதியான்
குற்றமான வைந்தொடங்கொர்மூன்றறுத்த	குற்றமான ஐந்தடங்க மூன்றறுத்த
தொண்டிமான்	தொண்டைமான்
புறக்குடை	புறக்கொடை
துற்றுற் றன்றி	தற்றற் றன்று
தன்மை கொண்டோடி	தன்மெய் கொண்டோடிய
வெற்றுச் செம்பியன்	வெற்றிச் செம்பியன்
சங்கு வெண்சாய்மரை குந்துப்பந்தர்முன்	சங்க வெண்சாமரை முத்துப்பந்தர்முன்
திருமகட்குக் கொடிகள் தேய்த்த	திருமகுட கோடிகள் தேய்த்த
வனையாய் புனனாடன் மானவே னின்று	வளைபாய் புனனாடன் மானவேள் என்றும்

என்பன போன்ற பெருந்தொகையின் திருத்தமான பாடங்களை நோக்குக. சுவடிகளில் காணப்படும் பாடங்களை நிறைந்த புலமையோடு பிழைநீக்கிக் காணும் நுண்ணுணர்வு இன்மையால் சுவடிச்செய்திகள் பிழைபடப் படியெடுக்கப் படுகின்றன. அவை அச்சேறி இடர்கள் விளைக்கின்றன.

சுவடிகளில் எழுதிப் பழகியவர்கள் பதிப்பித்த நூல்களிலேயே பல சிக்கல்கள் இருக்குமாயின், சுவடிகளை வாசிப்பதற்குக் கற்றுக்கொண்டு அவற்றைக் காகிதங்களில் படியெடுத்துப் பதிப்பிக்கத் தொடங்கும் இக்காலத்தாருக்குச் சுவடிகளிலுள்ள பிழைகள் எவை, பாடவேறுபாடுகள் எவை, என்பனவற்றைப் பகுத்து உணர்தலும் சிக்கலான செய்தியேயாகும். பல பதிப்புக்களில் ஏடெழுதுவோர் நிகழ்த்தும் பிழைகளும் பாடவேறுபாடுகளாகக் காணப்படுகின்றன. பொருட்பொருத்தம் சிறிதும் இல்லாதனவற்றைப் பாட வேறுபாடுகளாகக் காட்டுவதால் பயன் ஏதும் விளையாது. உரைநடைப் பகுதிகளில் பொருட்சிறப்புடைய பாடங்களையும் செய்யுட்பகுதிகளில் பொருட்பொலிவோடு அந்தச் செய்யுளின் யாப்புஅமைதிக்கு மிகவும் ஒத்திருக்கும் பாடங்களையும் மேற்கொண்டு, தாம் மேற்கொண்ட பாடங்களோடு ஒப்பிடச் சிறிதளவு தகுதி குறைந்த பாடங்களைப் பாடவேறுபாடுகளாகத் தொகுத்துக் காட்டுதல் வேண்டும்.

தேவாரத்தில் சிறந்த பாடம் கோடல்

எதுகைமோனைத் தொடைநயம் - யாப்பமைதி - சந்தி இலக்கணம்- பிழைச்சொல் நீக்குதல் பொருட்சிறப்பு - இயைபான செய்திகள் - முதலியவற்றை உட்கொண்டு, லவ இரண்டனையும் சுவடிகளில் வரைதற்கண் மிகுதியான வேறுபாடு புலப்படாமையையும் கருதி, தேவாரப்பதிப்பில் பிரஞ்சு இந்தியக்கலை நிறுவனத்தார் மேற்கொண்ட சில பாடங்களை நோக்குவோம். இவற்றை மேற்கொண்டதன் காரணங்கள் அவர்கள் வெளியிட்ட தேவாரப்பதிப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

1. யாதும்-ஆதும்-*424-1*

அத்த மண்தோய் துவரார் அமண்குண்டர் யாதும் அல்லா உரையே உரைத்து 'அத்த' என்பதற்கு ஆதும் என்பதே மோனைக்கு உகந்தது. யாதும் ஆதும் ஒரே பொருளன.

2. ஆதிநாலும்-ஆதினாலும்-*2783-3*

ஆதிநாலும் அவலம் இலாத அடிகள்மறை

ஓதி நாளும்

எந்தப் பொருளாலும் துன்புறுத்த முடியாத பெருமான் என்ற பொருளுக்கு ஆதினாலும் என்பதே ஏற்றது.

3. போர்வையாரும்-போர்வையவரும்-*3546-1*

மற்ற சீர்களின் அமைதியை நோக்கப் போர்வையவரும் என்ற பாடமே ஏற்றது.

4. எதிரும் பலி உணலாகவும்-எதிரும் பலி உணவாகவும்-*100-2*

உம்மை பொருட்பெயர்களை இணைப்பதால் உணவாகவும் என்ற பாடமே ஏற்றது.

5. எறி சுறவங் கழிகானல்-கழிக்கானல்-*646-1*

புணர்ச்சி விதிக்கு ஏற்பக் கழிக்கானல் என வல்லொற்று மிகுதலே ஏற்றது.

6. முன்றினில் வைகும்-முன்றிலில் வைகும்-*1111-2*

முன்றில் என்பதே உரியசொல் ஆதலின் முன்றிலில் என்பதே ஏற்றது.

7. வரபுரமென்றுணர் சிரபுரத்து-வரபுரமொன்றுணர்-*1382-31*

எழுகூற்றிருக்கையில் ஒன்று என்ற எண் வரவேண்டிய இடத்தில் இத்தொடர் இருப்பதால் வரபுர மொன்றுணர் என்பதே ஏற்றது.

8. உத்திரநாள்-உத்தரநாள்-*1977-3*

உத்தரம் என்பதே ஏற்றசொல் ஆதலின் அதுவே கொள்ளப்பட்டது.

9. பரிதி இயங்கும் பாரில்-பருதி இயங்கும் பாரில்-*2106-1*

பருதி என்ற சொல் பண்டை இலக்கியங்களிலும் பயின்றுவருவதாலும் இப்பாடலில் எதுகைக்கு அதுவே ஏற்றதாய் இருப்பதாலும், பருதி என்ற பாடமே கொள்ளப்பட்டது.

10. மாவாய்ப் பிளந்துகந்தமாலும்-மாவாய் பிளந்துகந்தமாலும்-*7072-1*

வாயைப் பிளத்தலே ஈண்டுக் குறிப்பிடப்பட்ட செயலாகலின் அதற்கு ஏற்ப ஒற்றை மிகுக்காது மாவாய் பிளந்து என்ற பாடமே கொள்ளப்பட்டது. துரங்கன் வாய் பிளந்தானும் *(8123-2)* என்பதும் அது.

11. சுடரங்கிதேவனை ஓர் கைக்கொண்டானை-ஓர் கைகொண்டானை-*6517-3*

கைக்கொள்ளுதல்-தன்வசப்படுத்துதல். கை கொள்ளுதல்-கையை நீக்குதல், ஈண்டுக் கூறப்பட்ட செய்தி கையை நீக்குதல் ஆதலின் கைகொண்டானை என்ற பாடமே ஏற்றது.

12. அங்கழகச் சுதைமாடம்-அங்களகச்சுதைமாடம்

களகம் என்பதே சுண்ணாம்புச் சாந்தைக் குறிப்பதால் அப்பாடமே கொள்ளப்பட்டது.

13. மந்திமேல்நோக்கிநின்று இறங்கும் பொழில்-மந்தி இரங்கும் பொழில்-*91-4*

மந்தி தான் மரம் ஏற இயலாமைக்கு வருந்துதலே ஈண்டுக் கூறப்பட்டமையின் இரங்கும் என்பதே பாடம்.

14. கீழ் உடையும் கொண்ட உருவம்-கீள்உடையும்-*239-3*

கீள் என்பது துணியால் தைக்கப்பட்ட அரைஞாணோடு கூடிய கோவணம்.

அடியார்கள் கீள்உடை அணிந்த செய்தி திருத்தொண்டர்புராணத்தில் இடம் பெறுகிறது. கீழ்உடை என்பது அனைவரும் அணிவது. எனவே கீள்உடை என்பதே ஏற்றது.

15. தாரகன்தான் உடல் வெட்டிட்டே தொடர்ந்த மங்கை-தாருகன் உடல்-*1363-1*

காளியால் வதம் செய்யப்பட்டவன் தாருகனே ஆதலின் இப்பாடம் கொள்ளப்பட்டது. தாரகனை வதம் செய்தவவன் முருகன் என்று அறிக.

16. அரக்கன் தன்னை-அருக்கன் தன்னை-*1455-4*

அரக்கன் செய்தி இப்பாடலின் முதல் ஈரடிகளில் கூறப்பட்டமையின் அருக்கனாகிய சூரியனைப் பற்றிய செய்தியே இந்நான்காம் அடியில் இருத்தல் வேண்டும் என்ற கருத்தில் இப்பாடம் கொள்ளப்பட்டது.

17. கடலகம் ஏழினோடு புவனமும்-பவனமும் *4635-1*

அடுத்த அடியில் 'உடலகத்து உயிரும் பாரும்' எனப் புவனம் குறிக்கப்படுவதால் காற்று என்று பொருள்படும் பவனம் கொள்ளப்பட்டது.

18. கொய்புனல் ஏனலோடு-கொய் புன ஏனலோடு-*7987-1*

கொய்புனலேனல் என்பது பொருளொடு புணராச் சொற்றொடராய் அமைதலின் புன ஏனல் என்ற பாடமே கொள்ளப்பட்டது.

19. கண்விழியால் காமனையும் காய்ந்தார் தாமே-கண்விழியாத்_தாமே-*7036-2*

நெற்றக்கண்ணை விழித்து நோக்கிக் காமனைக் காய்ந்ததனால் கண் விழியாக் காய்ந்தார் என்பதே ஏற்றது.

20. இல்லையே னுகர்போகம்-இல்லையே நுகர்போகம்-*6524-2*

இல்லையேல் என்ற வினையெச்சம் கொள்ளின் அதனைப் பாடலில் முடிக்கும் சொல் இல்லை. ஆதலின் நுகர்போகம் இல்லையே என்று முற்றுச் சொல்லாகக்கோடலே ஏற்றது.

21. உலகமெல்லாம் பெற்றானைப்பின் இரக்கம் செய்வான்தன்னை

உலகமெல்லாம் பெற்றானைப்பின் இறக்கம் செய்வான்தன்னை-*6886-3*

படைத்த பொருளைத் தன்னுள் ஒடுங்கச் செய்பவன் என்பதே பொருள். அதற்கு இறக்கம் என்பதே ஏற்ற பாடம்.

22. சுழநீர்ப் பொன்னி-சுழல்நீர்ப் பொன்னி-*8189-4*

சுழ என்ற பகுதியே இல்லை. ஆதலின் சுழல்நீர் என்ற பாடம் கொள்ளப்பட்டது.

23. கண்ணியி னான்தன் மொய்கழலே-கண்ணியினான்தன மொய்கழலே.

கட்டளைக்கலித்துறையாப்பிற்குத் தன மொய்கழலே என்ற பாடமே ஏற்றது.

24. மானன்ன நோக்கியை தேவிதன்னை-நோக்கி வைதேவிதன்னை-*2902-1*

சீதையின்பெயர் வைதேவி ஆதலின் அப்பாடமே ஏற்றது.

25. நலந்தரு புனற்புகலி ஞானசம் பந்தன்

நலந்தரு புனற்புகலி ஞானசம பந்தன்-*1807-1*

ஏனைய மூன்றடிகளிலும் மூன்றாம்சீர் மேயகட, பத்துமிவை, வாடவெளி என்று வருதற்கேற்ப, முதலடியிலும் மூன்றாம் சீர் ஞானசம என்று வருதலே ஏற்றது. ஞானசம பந்தன் என்ற பாடம் *3689, 3700* என்ற பாடல்களிலும் வந்துள்ளது.

இவை போன்ற பாடவேறுபாடுகள் பலப்பல.

ஏடு எழுதுவோரால் நிகழ்த்தப்படும் பிழைகளைப் பாடவேறுபாடாக கொள்ளாது தக்கவற்றையே பாடவேறுபாடாகக் கொண்டு, பாடவேறுபாடுகளுள் தக்கனவற்றையே தாம் கொள்ளும் பாடமாக அமைத்துப் பதிப்பித்தல் பதிப்பாசிரியரின் கடமையாகும். தாம் கொள்ளும் பாடங்களின் சிறப்பு ஒவ்வொன்றற்கும் காரணம் காட்டுதல் இயலாததாகும். படிப்பவர்கள் இப்பாடங்களின் சிறப்பை ஓர்ந்து உணர்தல் வேண்டும்.

ஐயரவர்கள் சுவடிப்பதிப்பின் தெளிவினை, வையாபுரிப்பிள்ளையவர்கள் பதிப்பித்த களவியற்காரிகையில் காணப்படும் பாடல்களோடு ஐயரவர்கள் பதிப்பித்த தமிழ்நெறிவிளக்கத்தில் வந்திருக்கும் களவியற் காரிகையின் பாடல்களின் திருந்திய பாடங்களின் சிறப்பை ஒப்பிட்டு நோக்கி அறியலாம். சில எடுத்துக்காட்டுகள் பின் வருமாறு.

களவியற்காரிகை	**தமிழ்நெறிவிளக்கம்**
1. வரிவளைபணைதோள் மடந்தையை உள்ளி அரிதி னசைஇய நெஞ்சம் பெரிது மெவ்வம் பெறற்பா லோயே.	வரிவளைப் பணைத்தோள் மடந்தை உள்ளி அரியது நசைஇய நெஞ்சம் பெரிது மெவ்வம் பெறற்பா லோயே.
2. வணர்சுரி ஐம்பால் வாணுத லரிவை அவடிற மறிதல் யாவது புணர்துயின்மறந்தன புள்ளினம் பெயர்ந்தே.	வணர்சுரி ஐம்பால் வாணுத லரிவை அணைதிற மறியலென் யாவதும் புணர்துயில்மறந்தன புள்ளினம் பெரிதே.
3. வெள்ளிதழ் கைதை மணிக்காய் ததும்ப	வள்ளிதழ்ப் புன்னை மணிக்காய் வீழும்
4. வரைதல் வேட்டனி ராதலின் பதிவாயி னெதிர்கோட் செவ்விய ரெமதே வவியின்	வரைதல் வேட்டனி ராயிற் பதிவயின் எதிர்கொள் செவ்விய ரெமரே இவ்வயின்
5. ஞாயிற் றனையன் யானே	ஞாயி றனையேன் யானே
6. கைபுனைகோல மெ(ன)ய் பெற்றன்றே	கைபுனைகோலம் மெய்பெற் றன்றே
7. பெய்பூங்கோதை பெருங்கவின் கொளலே	பெய்பூங்கோதை பெருங்கவின் கொளவே
8. வழுத்தூர் மதிதா நுண்ணிய தமிழின் நுழைபொரு(ள்) துனித்த	வழுத்தூர் மதிதரன் நுண்ணியற் பனுவ னுழைபொரு ணுனித்த

முதலியன காணலாம்.

நுண் மாண் நுழை புலமுடையராய்ப் பல்லாண்டுக்காலம் சுவடிகளில் உழன்றவர்களும் ஓரோவழித் திரிபுணர்வால் மயங்கும் நிலையும் ஏற்படுகிறது.

மரந்தையும் மாந்தையும்

மாந்தை என்ற சேரநாட்டு ஊர்ப்பெயர் நற்றிணையில் ஓரிடத்திலும் குறுந்தொகையில் ஈரிடங்களிலும் பதிற்றுப்பத்தில் ஓரிடத்திலும், அகநானூற்றுள் ஈரிடங்களிலும் முத்தொள்ளாயிரத்தில் ஈரிடங்களிலும் காணப்படுகிறது. முத்தொள்ளாயிரம் தவிர ஏனைய பாடல்கள் ஆசிரியப்பாக்களே. ஊரின்பெயர் மாந்தையாக இருப்பினும் மரந்தையாக இருப்பினும் பாடலுக்கு ஏதும் இழுக்கின்று. நற்றிணை மாந்தை என்றே குறிப்பிடுகிறது. அகநானூற்றில் மணிமிடைபவளத்தில் மாந்தை என்றும், நித்திலக் கோவையில் மரந்தை என்றும் காணப்படுகிறது. ஐயரவர்கள் குறுந்தொகையிலும் பதிற்றுப்பத்திலும் மரந்தை என்றே குறிப்பிட்டுள்ளார். ஆனால் வெண்பாயாப்பில் அமைந்த முத்தொள்ளாயிரத்தில்

> 'மல்லனீர் மாந்தையார் மாக்கடுங் கோதைக்குச்
> சொல்லவே வேண்டுமால் நம்குறை'

என்று ஓரிடத்துவருவதால் ஊரின்பெயர் மாந்தை என்பதே உறுதியாகிறது. மரந்தையாயின் வெண்டளை சிதையும்.

முத்தொள்ளாயிரப்பாடல் எண்ணையும் தம் குறுந்தொகை *34* ஆம் பாடல் அடிக்குறிப்பில் தெரிவித்துள்ள ஐயரவர்கள், தம் எண்பதாம் பிராயத்தில் பிறர் உதவியையும் நம்பி வெளியிட்ட குறுந்தொகைப் பதிப்பிலும் *86*ஆம் வயதில் வெளியிட்ட பதிற்றுப்பத்துப் பதிப்பிலும் ஊர்ப்பெயர் மரந்தையாயினமை அவருடைய மூப்பினால் ஏற்பட்ட நெகிழ்ச்சியாகும்.

மரந்தையை நோக்க, ஏட்டுச் சுவடிகளில் உள்ள யாப்பு (செய்யுள்) தமிழ்வல்லார் எல்லோரையும் பல வகைகளில் மயங்கச் செய்கிறது என்பது தெளிவாகிறது.

சுவடிப்பதிப்பில் சிக்கல்கள்

படித்தவன் பாட்டைக் கெடுத்தல்:

பழைய எழுத்துமுறைகள் - கூட்டெழுத்து, மெய் புள்ளி பெறாமை- காலும் ரகரமும் ஒன்றாய் இருத்தல் - கையெழுத்துத் தெளிவின்மை - போன்ற சுவடிஎழுத்தின் சிக்கல்களால், இடத்திற்கு ஏற்பப் படியெடுக்க அறியாத சான்றோர் சொற்களைத் தவறாகப் படித்துப் படியெடுத்துப் பதிப்பிக்கும் நூல்கள் வீணான பொருட்செலவிற்கே வழிவகுக்கும், சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

மடடா ா மகிழமலா சூடி இடடமாம
தெனனாலு ரஙகாள தெவி யிருபததை
கருததிடும மூததா ாசாவும் கனசுரம சிறசில நொவாம
பாகுமொழிமாதெகௌர் சபய முணடாம
சொனா டெஙகுஞ சொறறு மலை கணடருளி
புலி யானை கணடருளி

இவற்றில் பாட்டைக் கெடுத்த பிழைபாட்டையும் இவற்றின் உண்மை வடிவத்தையும் நோக்குவோம்.

பாட்டைக் கெடுத்தமை	உண்மை வடிவம்
மட்டார் மகிழ்மலர் சூடி இட்டமாம்	மட்டார் மகிழ மலர்சூடி இட்டமாம்
தென்னா லூரங்காள் தேவி இருபதத்தை	தென்னாலூர் அங்காள தேவி இருபதத்தை
கருத்திடும் மூத்த ராசாவும்	கருத்திடும் மூத்தார் சாவும்
மாதே கேளார் சபய முண்டாம்	மாதே கேள் ராசபய முண்டாம்
சேரனாடெங்கும் சோற்றுமலை	சோணா டெங்கும் சோற்றுமலை
புலி யானை கண்டருளி	புலி யானை கண்டருளி

இத்தகைய 'பாட்டைக் கெடுத்த கேட்டை' எத்தலைப்பின் அடக்கலாம்?

எழுதினவன் ஏட்டைக் கெடுத்தமை:

ஏட்டைக் கெடுத்தமை	உண்மைவடிவம்
கடந்த வேத கண்ணுதலோன்	கடந்த வேதக் கண்ணுதலோன்
கறைமா மிடத்தோ னருழ்போத்தி	கறைமா மிடற்றோ னருள் போற்றித்
தடந்த வேதத் தவசியர்கழ்	தடந்த வேதத் தவசியர்கள்
சாத்தும்ங் கதையை யழகுபெற	சாற்றுங் கதையை அழகுபெற
மடந்தை யனையாழ் மயலழகாய்	மடந்தை யனையாள் மயலழகார்
மன்ன ரய்பேர் சுருபம்ந்தன்னை	மன்ன ரைவர் சுருபந்தனைப்
படந்தான்னெழுதும்ங் கதைபாட	படந்தா னெழுதுங் கதைபாடப்
பண்ப்பாய் முருவன் காற்ப்பாமே	பண்பாய் முருகன் காப்பாமே

சுவடியில் உள்ளதை மாற்றாமல் அப்படியே பதிப்பிக்கலாமா? எழுதினவன் ஏட்டைக் கெடுத்ததை எத்தலைப்பில் அடக்கலாம்? சான்றோர் முடிவு செய்க.

பதிப்பாசிரியர் தகுதி

பொதுவாகச் சுவடிகளிலிருந்து நூல்களைப் பதிப்பிக்கக் கருதுவோருக்கு, அச்சுவடி எந்தத் துறை பற்றியதோ, அந்தத் துறை பற்றிய பல நூல்களையும் பயின்ற நிறைஅறிவு இன்றியமையாதது. அத்துறை பற்றிய முன்னறிவு ஏதும் இன்றி ஒருதுறை பற்றிய சுவடியைப் பதிப்பித்தல் அதனைப் பயில முற்படுவோருக்கு எதிர்பார்த்த பயனைத் தாராதுபோவதுடன் திரிபுணர்ச்சியையும் நல்கக்கூடும். சுவடிகளைப் பதிப்பிக்கும்போது இக்கால மக்களுக்கு உதவும் வகையில் சுவடிகளில் உள்ள செய்திகளைப் பதிப்பிப்பதோடு அமையாமல், விளக்கமான குறிப்புகளையும் இணைத்துப் பதிப்பித்தலே காலத்துக்கு ஏற்ற கடமையாகும்.

5. சுவடிப் பயிற்சியும் பதிப்பு நுட்பங்களும்

மு.கோ. இராமன்

தமிழ் ஓலைச்சுவடிகள் பற்றிய அக்கறை மிகுந்து வரும் இந்நாளில், அவற்றில் அமைந்துள்ள மொழி அமைப்புகளைச் சரியான முறையில் தெரிந்து கொண்டு அவற்றைச் செம்மையாகப் பதிப்பித்து வெளியிடுவது இன்றியமையாததாகின்றது. சுவடிகளில் அமைந்துள்ள எழுத்து முறைகளையும், பாடல்களிலுள்ள யாப்பு முறைகளையும் சரியாகப் புரிந்து கொண்டாலே செம்மையான நூற் பதிப்புகளை வெளியிட முடியும்.

தமிழ்மொழியின் தோற்றம்

தமிழ்மொழி உலகிலுள்ள பழமையான மொழிகளில் ஒன்று. அதன் தோற்றம், அதன் ஆதி வடிவம் போன்றவற்றை அறுதியிட்டுக் கூற முடியவில்லை. பிராமி எழுத்தே தமிழுக்கு உரிய எழுத்தாக இருந்தது எனவும், தமிழ்-பிராமி எனத் தனியே எழுத்துமுறை இருந்தது எனவும் ஆராய்ச்சியாளர்கள் வாதிடுகின்றனர். இவை யாவும் கி.மு.2ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட மொழி அமைப்பினைப் பற்றியதாகும்.

கி.மு.2ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ் எழுத்துகள் காலந்தோறும் எப்படி மாறித் தற்போதைய உருவம் பெற்றன என்பதைச் சா.கணேசன், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிட்டுள்ள கையேட்டில் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். கல்வெட்டுகளில் காணப்பெறும் எழுத்துகளையே இவர் இவ்வாறு ஆராய்ந்துள்ளார். பின்பு, செப்புப் பட்டயங்கள் போன்றவற்றிலமைந்துள்ள மொழி வடிவமும் அறிஞர்களால் ஆராயப் பெற்றது. ஆனால் ஓலைச் சுவடிகளிலமைந்து வந்துள்ள வடிவத்தினை ஆராய்ந்து யாரும் வெளிப்படுத்திலர்.

ஓலைகளில் எழுதும் முறை வந்த வரலாறு

ஓலைச் சுவடிகளில் எழுதிப் படிக்கும் பழக்கம் ஆதிகாலத்திலிருந்து வந்தது என்பதைச் சங்கங்களில் நடந்துவந்த நூல் அரங்கேற்றம், சங்கப் பலகை, புனலில் எதிர்செல்லுதல் போன்ற செய்திகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. ஆயினும், சங்க இலக்கியங்களிலிருந்து தெரியவரும் செய்தியான மடலேறுதல் என்பதிலிருந்து, தாழை, பனை ஓலைகளில் எழுத்தாணிகொண்டு சித்திரம் எழுதும் பழக்கம் இருந்தது என அறிய முடிகின்றது. இதனால், சித்திர வரிவடிவங்கள் கடினமான பொருள்களான, கல், களிமண், மண்பானைகள் போன்றவற்றில் பொறிக்கப்பட்டதற்கு இணையாகவே ஓலைகளிலும், மடல்களிலும் பொறிக்கப்பட்டன என அறியலாம். ஓலைகள்

400 ஆண்டுகளுக்குமேல் அழிந்துபடுமாதலால், ஆதியில் அவற்றிலமைந்து வந்த எழுத்து முறைகளை நம்மால் அறிந்து கொள்ள இயலாததாகி விடுகின்றன. தொல்காப்பியம் கூறும் சில எழுத்து முறைகளையே ஆதி எழுத்துமுறையாகக் கொள்ள வேண்டியுள்ளது.

ஓலைச்சுவடிகளின் வரலாறு

பண்டு தொட்டே தமிழைப் பயில்வோர் பனை ஓலைகளில் பிரதிசெய்து படிக்கும் பழக்கம் மேற்கொண்டிருந்தனர். ஏடுகளில் எண்ணங்கள் பதிக்கப் பெற்றதால் 'ஏட்டுச் சுவடி' என்று பெயர் ஏற்பட்டது. பல சுவடிகளின் தொகுப்பு தொங்கவிட்டுள்ளமையால் 'சுவடித் தூக்கு' என்று பெயர் வழங்கலாயிற்று. ஓலைகளில் எழுதிவைத்துப் பாதுகாக்கப்பெற்றமையால் 'முடங்கல்' என்றும் பெயர் பெற்றது. ஆயினும், தூக்கு, முடங்கல் என்ற சொல்லாட்சிகள் பழந்தமிழிலக்கியங்களில் வந்தாலும் நேரிடையாக ஓலைச் சுவடிகளைக் குறிப்பன அல்ல.

சங்ககாலப் புலவர் எனக் கருதப் பெறும் இடைக்காடர் பாடியதாக மூன்று ஊசிமுறிப் பாடல்கள் கிடைத்துள்ளன (பெருந்தொகை: பக். *327*). மு. இராகவையங்கார் பதிப்பு, இப்பாடல்களின் பெயரைக் கொண்டே இவை ஊசி (எழுத்தாளர்) யால் வரைய முடியாத ஒலிக்குறிப்புக்களைக் கொண்ட பாடல்கள் என்பது விளங்கும். இதனால் ஊசியால் எழுதக் கூடிய பிற பாடல்கள் இருந்தமை வெளிப்படை. திருஞானசம்பந்தர், யாழில் இசைக்க முடியாத யாழ்முறிப் பாடலைப் பாடினார் என்பது போல ஊசி முறிப் பாடல்களும் இருந்துள்ளமை தெரிகிறது.

ஏட்டில் பிரதி செய்து படிக்கும் பழக்கம் மிகுந்திருந்ததால் அவர்கள் எழுதும் வரிவடிவத்திலும் பல மாற்றங்கள் இருந்தன. கல்வெட்டுகள், செப்புத் தகடுகள் போல அழிவற்றனவாயில்லாத ஏடுகள் பிரதி செய்யப்படுவதினாலேயே காலந்தோறும் பல வடிவங்களைப் பெற்றன. கி.பி.*15*ஆம் நூற்றாண்டு ஏட்டு எழுத்து வடிவமே நமக்கு ஆதி ஏட்டு எழுத்து வடிவமாகத் தெரியவருகின்றது. அதன் பின் கி.பி.*1611*இல் எழுதப் பெற்றுக் கிடைக்கும் ஓர் ஏடுதான் மிகப் பழமையான சுவடிஎழுத்து முறையினைக் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது. இது முதல் தற்போது வரை சொற்ப மாற்றங்களே சுவடி எழுத்து முறையில் ஏற்பட்டுள்ளன. வீரமாமுனிவர் *18*ஆம் நூற்றாண்டில் செய்த சீர்திருத்தம் தவிர வேறு குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இல்லை என்றே தெரிகின்றது.

பிரதி செய்தலின்போது ஏற்படும் பிழைகள்

ஏடுகளின் குறைவான ஆயுளினால், அவற்றைப் பிரதி செய்தல் தேவையாயிற்று. அவ்வக்காலத்து வரிவடிவத்திற்கேற்பச் சுவடிகளிலும் பிரதி செய்தலின்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றம் பெறாது சங்ககாலத்து வரிவடிவம் நமக்கு இன்று கிடைக்குமாயின் அதனை எளிதில் படிக்கவியலாது.

ஏட்டில் எழுதுவது என்பது தனிக்கலை. ஏடுகளின் இருபுறத்திலும் எழுதப் பெறுவதால் ஒற்றுக்கும் புள்ளி இடுவது இல்லை. எழுத்துகள் செங்குத்தாக எழுதப் பெறாது சற்றுச் சாய்த்தே எழுதப் பெற்றன. ஏடுகள் முறிவதிலிருந்து காக்கவே இவற்றைத் தமிழர்கள் மேற்கொண்டனர். எகர, ஏகாரங்கள் கால்வாங்காமலும், ஒகர-ஓகாரங்கள் சுழிக்கப்பெறாமலும், இடையின வல்லின ரகர, றகரங்கள் வேறுபடுத்தப் பெறாமலும், இடையின ரகரமும், துணை எழுத்தும் ஒரே மாதிரியும், கொம்புகளுக்குள் வேறுபாடு இன்றி ஒற்றைக் கொம்பாலும் எழுதப் பெற்று வந்தன. சொற்சுருக்கத்திற்காகக் கூட்டெழுத்துகள் கையாளப் பெற்றன. எழுத்தால் எழுத வேண்டியவிடத்து எண்கள், எண்களாலேயே குறிக்கப் பெற்றன. இவற்றைத் தவிரச் சில குறியீடுகள் கடைப்பிடிக்கப் பெற்றன.

ஆயினும் பிரதி செய்வோரில் கூலிக்குப் பிரதி செய்வோரும், பயிற்சி இல்லாதோரும் பிறரும் இருந்ததால், பிரதிகளில் பிழைகள் மலியலாயின. மேலும் ஒருவர் படிக்க அவ்வொலியைக் கேட்டுப் பிரதி செய்வதாலும் தவறு ஏற்பட்டு விடும். தென்பாண்டி நாட்டினர் ழகர-ளகர, றகர-ரகர, நகர-னகர வேறுபாடின்றிப் பேசுவதால், அவ்வாறு ஒலிக்களைக் கேட்டு எழுதும்போது இவ்வெழுத்துகளை மாற்றி எழுதி விடுவதுண்டு. இதனால் பிரதி பேதங்களுக்கும் பாட பேதங்களுக்கும் இடமளித்து விடுகின்றனர்.

சுவடிகளின் நலிவு

தமிழகத்தில் களப்பிரர் ஆட்சி நடந்ததாகச் சொல்லப்பெறும் கால கட்டங்களில் இலக்கியம் வளம் குன்றிப் போயிருந்தது. பல்லவர்க்குப் பின் சோழப் பேரரசு பிற்காலத்தில் நிலையான ஆட்சியினை வழங்கலாயிற்று. சோழப் பேரரசு பிற்காலத்தில் நிலையான ஆட்சியினை வழங்கவியலாதபோது மொழிவளம் மீண்டும் குன்றலாயிற்று. மீண்டும் பாண்டிய மன்னர்களும், பல குறுநில மன்னர்களும் தோன்றித் தம்முள் சண்டையிட்டு, இலங்கையினராலும், விசயநகரத்து நாயக்க மன்னர்களாலும், முஸ்லீம் படையெடுப்புகளாலும் தமிழகமும் தமிழும் குன்றிப்போயின. ஐரோப்பியர் வருகை முற்றிலும் தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை இட்டு ஆங்கில வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தது. இதனால் தமிழ்க் கல்வி நசிந்து தமிழ் நூல்கள் ஏட்டோடே இருந்து மறையலாயின. நாட்டில் அச்சுச் சாதனங்களின் அறிமுகத்திற்குப் பின் ஆங்கில நூல்களும் கிறித்தவ நூல்களும் அச்சானமையின் தமிழ்நூல்கள் அச்சிடும் நிலை ஏற்பட்டது.

பக்தி இலக்கியங்கள், பக்தி காரணமாக ஓரளவு பாதுகாக்கப்பெற்று, ஓதப்பெற்றுப் பிரதி செய்யப்பெற்றும் வந்துள்ளன. அவற்றின் புனிதம் கருதியே ஏட்டிலிருந்தவாறு பிழையோடேயே ஓதப்பட்டு வந்தன. பிரதி செய்தவர்களால் ஏற்பட்ட இப்பிழைகள், நாயன்மார்களும் ஆழ்வார்களும் மற்றும் அருளாளர்களும் செய்து விட்ட பிழைகளாகக் கொள்ளக்கூடாது. சுவடிகள் நலிவினாலும், பாதுகாக்கப் பெறாததினாலேயுமே இந்நிலை ஏற்பட்டது. நசிந்து

விடாமல் கிடைத்தனவெல்லாம் 19ஆம் நூற்றாண்டு மத்தியிலிருந்து பதிப்பிற்குள்ளாயின.

சுவடிப் பதிப்பின் முன்னோடிகள்

இலக்கணம், இலக்கியம், காவியம், புராணம், நிகண்டு, சிற்றிலக்கியம், மருத்துவம், சோதிடம், இசை போன்ற பல வகைகளிலடங்கும் நூல்கள் அச்சிட்டு வெளிவந்தன. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ்ச் சுவடிகளைப் பதிப்பிக்கும் முயற்சியில் இராமாநுசக் கவிராயர், ஆறுமுக நாவலர், விசாகப் பெருமாளையர், ட்ரூதுரை, பவர்துரை, தாமோதரம் பிள்ளை, கோமளேசுவரன் பேட்டை இராசகோபால் பிள்ளை, எழும்பூர் வேங்கடாசல முதலியார், சபாபதி முதலியார், உ.வே. சாமிநாதையர் ஆகியோர் ஈடுபட்டுத் தமிழ் நூல்களைத் தக்க ஆய்வுக் குறிப்புகள் சேர்த்து அச்சிட்டு வெளியிட்டனர். முதலில், மூலம் மட்டுமே பதிப்பித்த நிலை மாறி, முன்னுரை, பதவுரை, பொழிப்புரை, சொல் அகராதி என்பவற்றையும் சேர்த்து வெளியிட்டவர்களில் முன்னோடியானவர் டாக்டர் ஐயர் அவர்களே.

சுவடிப் பதிப்பின்போது பெரும்பாலும் இலக்கணம், பழந்தமிழ் இலக்கியம், காவியம், சிற்றிலக்கியங்களே வெளிவந்தன. தமிழின் தேவையை இவை ஓரளவு நிரப்பின. பழந்தமிழ் நூல்கள் இருந்தும் இறந்துபட்டன பல. இறந்து படுதலினின்று அவ்வற்றைத் தேடிக் கண்டுபிடித்து அரிதின் முயன்று வெளியிட்ட பெருமை டாக்டர் ஐயர் அவர்களுக்கே பெரிதும் உரியது. சுமார் 3000க்கும் மேலான சுவடிகளைத் தேடிப் பெற்று, தமது 60 ஆண்டுகாலப் பதிப்பு வாழ்வில் 74 நூல்கள் வெளியிட்டு அசுர சாதனை புரிந்த மகான் ஐயர் எனில் மிகையாகாது.

ஆனால், இம்முன்னோடிப் பதிப்பாளர்களின் கவனத்துக்கு வராது ஏட்டோடேயே இருந்துபட்ட பாமரர் இலக்கியங்களைப் பெரிய எழுத்துப் பதிப்புகளாகச் சில பதிப்பாளர்கள் வெளியிட்டதன் காரணமாக இன்று நாட்டுப்புறவியல் ஆய்வில் சுவடிப் பதிப்பும் படிப்பும் ஒரு முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. இன்னும் பதிப்பிக்கப் பெறாத செந்தமிழ் இலக்கியங்களும், மருத்துவ-சோதிட நூல்களும், பக்தி நூல்களும், நாட்டுப்புற இலக்கியங்களும் பின்னால் அட்டவணைப்படுத்திக் காட்டப் பெற்றுள்ளன.

சுவடிப் பதிப்பு : அன்றும் இன்றும்

தொடக்க காலப் பதிப்பாளர்கள், ஏட்டிலிருந்தவாறே சீர் பிரிக்காமல் தொடர்ச்சியாகப் பதிப்பித்தனர். யாப்பின் முக்கியத்துவம் உணரப்பட்ட பின்னரே செம்மையான பதிப்புகள் வெளிவரலாயின. பழைய சுவடிப் பதிப்பில் ஈடுபடுவோர், சுவடிப் பயிற்சி பெற்றதோடு, மொழி வரலாறு, எழுத்து வரலாறு, யாப்பு, பாட்டியல் போன்றவற்றிலும் நல்ல பயிற்சி உடையவர்களாயிருத்தல் வேண்டும். அச்சு நூல்களில் வந்த எழுத்துகளே அவர்களுக்குப் பழக்கமாகி விட்டபடியால் ஏட்டிலுள்ள எழுத்துகள் மயக்கம் தரலாம். இவ்வாறு மயக்கம் ஏற்படுத்திய சில இடங்கள் கீழே தரப்படுகின்றன.

மையார் ஒண்கண்ணார் மாடநெடுவீதி
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லை

என்ற பகுதியில் 'கழி சூழ் தில்லை' என்றால் கடற்கழி சூழும் தில்லை என்றாகி விடும். இது தென்பாண்டி நாட்டார் ஒருவரால் பிரதி செய்யப் பெற்றதால் 'களி' (ஆடல்) என்பதைக் 'கழி' என்று பிரதி செய்ததால் ஏற்பட்ட பொருள் மயக்கம் என அறியலாம்.

'வளவ ராயினும் அளவறிந் தழித்துண்'

என வரும் ஔவையாரின் கொன்றைவேந்தனடி ஒன்றில், நீதியினைக் கூறும் போது அறிவைக் கூற வேண்டிய தேவை இல்லை, இதனை 'அழித்து' எனக் கொள்ளாது 'அளித்து' எனக் கொள்ளின் பொருள் சிறக்கும்.

சிந்த நனைந்தாடித் தேவர் சிறைமீட்டு
அந்த அமரா வதிகாத்து - வந்து நிலை

என்று பிரித்துச் சேயூர் முருகன் உலாவில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. சிறைமீட்டு அந்த என்பது குற்றியலுகர விதிப்படி தளைகெட்டு விடுகின்றது. இரண்டாவதடியில் மோனை இல்லை. எனவே இச்சொற்றொடரைப் பிரிக்காமல்,

சிந்த நனைந்தாடித் தேவர் சிறைமீட்டு
வந்த அமரா வதிகாத்து

என இருப்பின் பொருள் மயக்கம் ஏற்படாது.

சுவாமிநாதம் என்ற நூலினை அண்மையில் செ.வை. சண்முகம் *(1975)* பதிப்பித்துள்ளார்.

மெய்தவிரும் கழற்குடம்போல் முறையின்றிப் பிறழ்தல்
மிகும்மடத் தெங்காய் முயன்றோர்க் கன்றிச்
செய்பருத்திக் குண்டிகைபோல் **கோளல் கொடைமுட்டுறுதல்**
செறியுமடற் பனையெனத்தா னேகொடுத்தால் அன்றி
எய்து அடுத்தோர்க்கு ஈயாமை உடைத்தாகி யெவைக்கும்
இச்சித்தல் அழுக்காறு மனைவஞ்சங் கொடுமை
யையுறல் வீண் படிபோதன்ற குருவுக் குளதாமக் குணங்கள்
இன்மையுமே உள்ளவன் துற்குருவே

இது சுவாமிநாதத்தில் ஐந்தாம் பாடலாகும்.

இப்பாடல் மூன்று காய்ச்சீரும் ஒரு மாச்சீரும் ஆக *4* சீர் மட்டும் மோனையுடன் மடங்கி எண்சீராக வந்த விருத்தமாகும். இதில் முதலடி சரியாகப் பிரதி செய்யப் பெற்றுள்ளது. இரண்டாமடி, விருத்தப்பா இலக்கணப்படி அளவொத்து வரவில்லை. *3* காய்ச்சீர் ஒரு மாச்சீராக இல்லாமல், கனிச்சீராகவும் காய்ச்சீராகவும் பிரதி செய்யப் பெற்றுள்ளது. 'கொளல்'

என்றிருக்க வேண்டியதைக் 'கொம்பு' வேறுபாட்டால் 'கோளல்' எனக்கொண்டதால் நேர்ந்த பிழை இது.

இதைக் 'கொளல்' எனக் கொண்டு, 'கொளல் கொடை' (விளச்சீர்) 'முட்டுறுதல்' என்பதில் உள்ள 'முட்' சேர்ந்து காய்ச்சீர்களாகும். 'டுறுதல்' என்பது புளிமாவாகி விடும். இவை குறில்-நெடில் மயக்கத்தால் வந்த பிழையாகும்.

மூன்றாமடி அளவொத்துள்ளது. ஆனால் நான்காமடியில் சீர்கள் சரிவரப் பிரிக்காமல் அமைக்கப்பட்டுள்ளன. அது,

ஐயுறல்வீண் படிப்போத னற்குரவுக் குளதாம்
அக்குணங்கள் இன்மையுமே உள்ளவன் துற்குருவே

என அமைய வேண்டும்.

மங்கையர்க்கரசி வெண்பா என்ற நூலினைச் சாமி ஐயா என்பவர் பதிப்பித்துள்ளார். அந்நூலில் ஒரு பாடலில்,

வில்லா வளையாமல் வில்வளைக்கும் மேருவுக்கு
வில்லார்ந்த வாகுவலையம் மேவி யிட்டான்

என்று வருவதில், வெண்பா இலக்கணம் பொருந்தியுள்ளதா என்று பார்க்க வேண்டும் 'வில்லார்ந்த வாகுவலையம்' என்ற இரண்டாமடி தளை கெட்டுள்ளது. வெண்பாவில் 4அசைச்சீர் கொண்ட கனிச்சீர் வராது. வாகுவலையாம் என்பது 4அசைச்சீர் ஆகும். இதனை நீக்க, வில்லார்ந்த என்பதிலுள்ள 'ஆர்ந்த' என்ற மிகை எழுத்துகளை நீக்கி 'வில்லா குவலையம்' எனப் பதிப்பிக்க வேண்டும்

மற்றொருவிடத்தில்,
தனைநயந்து நின்றான் தாதையும் தன்பாவை
தனைநயந்து முன்னீந்தான் சார்ந்து

என்று முடிகின்ற வெண்பாவில், 'தனை நயந்து நின்றான் தாதையும்' என்பது பிழை. மாமுன் நிரையும் காய்முன் நேரும் வருவதே விதி. இங்கு, 'நின்றான் தாதையும்' என்பதில் மாமுன் நேர்வந்து தளை பிறழ்ந்துள்ளது. 'தளைநயந்து முன்னீந்தான்' என்பதற்கேற்ப முந்திய அடியில் 'தனை நயந்து முன் நின்றான்' என்றிருப்பின் தளை கெடாது. இது பிரதி செய்தவர் 'முன்' என்பதை விட்டு விட்டதால் ஏற்பட்ட மயக்கமாகும்.

சுவடிப் பதிப்பின்போது முன்பு சொல்லப் பெற்ற பயிற்சிகள் நன்கு அமையப் பெற்றாலேயே சிறந்த பதிப்பினைக் கொண்டு வர முடியும் என வலியுறுத்தவே இத்தகைய சான்றுகள் காட்டப்பெற்றன.

தற்காலத்தில் சுவடிகளின் நிலை

நம் நாட்டில் அண்மையில் சுவடிப் பதிப்பு உயிர் பெற்று எழுதலுக்கான வாய்ப்பு தோன்றியுள்ளது. உள் நாட்டிலும் அயல் நாடுகளிலும் இன்றைய தினம் பல நிறுவனங்கள் தமிழ்ச் சுவடிகளைக் கொண்டுள்ளன. நிறுவனங்களில் உள்ள சுவடிகளில் தெரியவந்துள்ள எண்ணிக்கை சுமார் *20,000*க்கும் மேல். இவையன்றித் தனியார்களிடமும் மிகுந்த சுவடிகள் இருப்பது தற்போது தெரிய வந்துள்ளது. சுமார் *25,000* சுவடிகள் வரை கிடைக்கலாம் என்று கணக்கிடப்படுகிறது.

அயல் நாடுகளில் சுவடிகள் சென்றமை நமது புறக்கணிப்பினாலேயே ஆகும். தமிழகம் புறக்கணித்த சுவடிகளை மேலைநாட்டாரும் கீழை நாட்டாரும் கொண்டு சென்றுள்ளனர். அயல்நாடுகளில் சுவடிகளிருப்பதை அண்மையில், சேவியர் தனிநாயக அடிகளார், அ. தாமோதரன், கிருஷ்ணமூர்த்தி, வி.ஐ. சுப்பிரமணியம், கி.வேங்கட சுப்பிரமணியன், கிரிகோரி, திருவான்மியூர் ஜேம்ஸ் போன்றோர் தம் அறிக்கைகளில் வெளியிட்டிருக்கின்றனர்.

அயல் நாட்டார் சமயம், வர்த்தகம், பண்பாடு மற்றும் அரசியல் உறவு கொண்டதாலேயே தமிழ்நாட்டில் புறக்கணிக்கப்பட்ட சுவடிகளைக் கொண்டு சென்று பாதுகாத்து வருகின்றனர். இங்கே அழியும் நிலையிலிருந்தவை தற்போது பாதுகாக்கப் பெற்றாலும் அவை பற்றிய விளக்கமோ மற்றும் ஆய்வோ செய்யப் பெறாமல் உள்ளன என்பது வருந்தத் தக்கதாகும். அயல் நாடுகளிலுள்ள சுவடிகள் ஐயாயிரத்திற்கும் மேலாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

பதிப்பிக்காத சுவடிகள்

உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் சுமார் *30,000* சுவடிகளை நிறுவனங்கள் கொண்டுள்ளன என அண்மையில் நடந்த ஆய்வு கூறுகின்றது. இவற்றில்,

மருத்துவம்	*50%*
சோதிடம்	*10%*
சமயம்	*10%*
கலை, இலக்கியம்	*10%*
வரலாறு	*5%*
இலக்கணம்	*5%*
நாட்டுப்புற இலக்கியம்	*10%*

என்னும் விகிதத்தில் சுவடிகள் அமைந்துள்ளன. இக்கணக்கின்படி வெறும், *25%* சுவடிகள்தாம் இதுவரையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

மருத்துவம்	*5%*
சோதிடம்	*2%*

சமயம், இலக்கியம்	10%
இலக்கணம்	4%
நாட்டுப்புற இலக்கியம்	4%

	25%

சுவடி இயலில் இனிச் செய்யவேண்டியவை

ஐயரவர்கள் தம் 60 ஆண்டுக்காலப் பதிப்புப் பணியில் 74 சுவடிகளே பதிப்பித்துள்ளார் என்பதை அறிகையில், இனியும் அச்சில் வராத இன்னமும் உலகம் அறியாத சுமார் 20,000 க்கும் மேற்பட்ட சுவடிகளைப் பதிப்பிக்க எத்தனை அறிஞர்கள் எவ்வளவு காலம் செலவிடவேண்டும் என்பதை நினைக்கும் போது மலைப்பாக உள்ளது. சுவடிகளின் ஆயுள் சுமார் 400 ஆண்டுகள் என்பதும் இப்போதுள்ள சுவடிகள் பெரும்பாலும் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பதைக் கருதும் போதும் அவற்றை அழிவினின்றும் பாதுகாப்பது அவசியமான கடமை ஆகிறது. இப்போதுள்ள அறிவியல் வளர்ச்சியின் உதவியால் சுவடிகளைக் கணினியிற் பதிவு செய்து குறுந்தகடுகளாக்கி இணையத்தின் வழி ஆய்வாளர்களுக்குப் பயன்படுமாறு செய்தல் அவசியமாகின்றது.

அண்ணா அறிவியல் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் இப்பணியைச் செய்ய முன்வந்துள்ளது. இப்பணி விரைவில் நிறைவேறவேண்டும்.

அச்சில் வந்துள்ள 25 சதவீதச் சுவடிகளையும் இவ்வாறு கணினியிற் பதிக்க வேண்டியது அவசியமில்லை எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். அச்சில் வந்த நூல்கள் எல்லாம் இச்சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு வெளிவரவில்லை. ஏதோ சில சுவடிகளை ஆதாரமாகக் கொண்டு ஒரு நூல் வெளிவந்தபின் அந்நூலைத் தொடர்ந்து, அச்சிட்டவர்கள் சுவடிகளைச் சோதிக்காமல் முதலில் வந்த அச்சுப் பிரதியைப் பார்த்தே பதிப்பித்தனர். அதனால் முதலில் அச்சில் வந்த நூலில் உள்ள குறைகள் அப்படியே உள்ளன. சுவடிகளை ஒத்துப்பார்த்திருப்பின் குறைகள் நீங்க வாய்ப்புண்டு. அதற்கு உதாரணமாக ஒரிரு செய்திகள் கீழே குறிக்கப்பெற்றுள்ளன.

1. வீரசோழியம் என்ற தமிழ் இலக்கண நூலை நூறாண்டுகளுக்கு முன் ஸ்ரீ சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் முதன்முதல் ஓலைச்சுவடியினின்றும் அச்சில் பதிப்பித்தார். அதற்குப்பின் வீரசோழியம் பல பதிப்பாளர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. அந்தப் பதிப்பாளர்கள் அனைவரும் சி.வை. தா. பதிப்பித்ததையே மீட்டும் மீட்டும் பதித்துள்ளனர். சி.வை.தா. பதிப்பில் **உபகாரகப்படலம்** என்ற ஒரு தலைப்பு உள்ளது. பிற பதிப்பாளர்களும் உபகாரகப் படலம் என்றே பதிப்பித்துள்ளனர்.

காரகப்படலம் என்ற படலம் இன்றித் தனியே உபகாரகப்படலம் வருதல் இயலாதே என்ற ஐயம் எழுந்தது. பல வீரசோழியச் சுவடிகளை ஒப்பிட்ட போது ஒரு சுவடியில் இரண்டாவது **காரகப்படலம்** எனத் தெளிவாகக் குறிக்கப் பெற்றிருந்தது. சுவடிகளில் இரண்டு என்பதை எண்ணால் எழுத 'உ' என்று குறிப்பிடுவர். உ என எழுதி முற்றுப் புள்ளிவைக்க *0* என்று வட்ட வடிவில் குறிப்பார்கள். எனவே *0* என்பது முழுவடிவம் பெறாமல் *0* என்றிருந்ததால் அதை உ *0* என்பதை 'உப' என்று தவறாகக் கொண்டு உபகாரகப் படலம் எனப் பதிப்பித்துவிட்டனர்.

2. பதினோராந்திருமுறை என்ற சைவத்திருமுறைக்குப் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. பல சிவ பத்தர்கள் பாடிய பாடல்கள் இடம் பெற்றுள்ள இந்த நூலில் சேரமான் பெருமாள் பாடிய திருக்கயிலாய ஞானவுலா இடம் பெற்றுள்ளது. உலா இலக்கியத்துக்கு முன்னோடி நூலாகும். இவ்வுலாவுக்குப் பின்னர் எழுந்த பல உலா நூற்களும் 'உலா' என்றே முடிந்துள்ள போதிலும் ஆதி உலாப் பதிப்புகளில் செஞ்சடையான் போந்த தெரு என முடிக்கபெற்று அதன்கீழ்,

பெண்ணீர்மை காமின் . . . .
. . . . . . ஊரேறு போந்த துலா

என ஒரு வெண்பா உள்ளது.

ஐயரவர்கள் சுவடித்தொகுப்பில் உள்ள ஆதி உலாச் சுவடியில்

செஞ்சடையான் போந்த தெருவதனிற் – றுஞ்சாமல்

என்ற பகுதி இறுதி வெண்பாவுடன் இணைந்து நூல் உலா என மரபுப்படி முடிக்கப்பெற்றுள்ளமை அறியமுடிகின்றது.

3. தாயுமானவர் பாடல் நூல்களில் மௌனகுரு பதிகம் **மூலன் மரபில் வருமௌனகுருவே** என்று முடிகின்றது.

இதற்குத் திருமந்திரம் அருளிய திருமூலநாயனார் மரபில் வந்த மௌனகுரு எனப் பொருள்கொண்டு மௌனஸ்வாமிகள் மடம் மிகப் பழமையானது என்று கருதுகின்றனர். அப்படியாயின் அந்த மடம் – முனிஸ்வாமி மடம் என்று அழைக்கப் பெறல் வேண்டும். தாயுமானசுவாமிகள் பாடற்றொகுப்பில் திருமூலரைப் பற்றிய பாடல்கள் பதிப்பில் இல்லை. ஐயரவர்கள் சுவடித் தொகுப்பில் உள்ள 'தாயுமானவர் பாடல்' சுவடியில் மூல குரு என ஒரு பதிகம் உள்ளது. இந்த மூலகுருவின் சீடர் மௌனகுரு பிரசித்தமானதால் தாயுமானவர் மூலன்மரபில் வருமௌனகுருவே எனப் பாடியுள்ளார் என்பது தெரியவருகின்றது.

4. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள திருக்குறள் சுவடி ஒன்றின் இறுதியில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால், வீட்டு நெறிப்பால் ஆக *4* பால்களுக்கு *165* அதிகாரத்துக்கு *1650* திருக்குறள் முற்றும் என்று வரையப்பெற்றுள்ளது. திருக்குறள் முப்பால் என்றே வழங்கப்

பெறும்போது இச் சுவடி நாற்பால்களைக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் சுவடியில் *129* அதிகாரங்கட்கு மேலுள்ள பகுதி காணப் பெறவில்லை. எனவே வேறு எங்கும் வீட்டு நெறிப்பால் இருக்குமோ எனத்தேடுகையில் பாரிசு தேசிய நூலக அட்டவணையில் வீட்டு நெறிப்பால் என்ற சுவடி இருப்பதாகத் தெரியவருகின்றது. ஆசியவியல் சுவடி ஒன்றில் (நீலன்கதை) திருவள்ளுவர் பிள்ளைகள் பற்றிய செய்தி காணப்பெறுகின்றது.

சங்க இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் தோன்றிய காலத்து மலையாளம், கர்நாடகம், ஆந்திரம் முதலிய இடங்களில் தமிழே வழங்கி வந்தது. இம்மொழிகள் தனியே பிரிந்தபோதும் இன்றும் இப்பிரதேசங்களில் சில அரிய தமிழ் சொற்கள் வழக்கில் உள்ளன. ஆனால் அவை தற்போது தமிழில் வழக் கொழிந்துவிட்டன. எனவே சங்க, பக்தி இலக்கியங்களில் வந்துள்ள சில சொற்களுக்குப் பிரிந்து சென்ற மொழிகளில் வழங்கும் தமிழ்ச் சொற்கள் பொருளை உணர்வதற்கு உதவுகின்றன. எடுத்துக்காட்டாக ஓரிரு உதாரணங்கள் கீழே குறிக்கப்பெற்றுள்ளன.

நல்ல என்ற ஒரு சொல் தெலுங்கில் கருமையைக் குறிக்கின்றது. திருமாலை நல்லநிவாடு என்கின்றனர். தெலுங்கில் நல்ல-கருமை என்ற வழக்கு இருக்கையில் தமிழிலும் இருக்க வேண்டுமே என்று எண்ணி ஆய்கையில் பல சொற்கள் அவ்வாறு வழங்கியமை தெரியவருகின்றது. தமிழில் அவ்வழக்கு பிற்காலத்தொழிந்து விட்டதால் உண்மைப் பொருள் காண்பதில் மயக்கம் ஏற்பட்டுள்ளது.

1. நல்ல பாம்பு – கருநாகம்
2. நல்ல துளசி – கருந்துளசி
3. நல்லெண்ணெய் –
4. நல்லபெருமாள்
5. நல்லதங்கை, நல்லதம்பி, நல்லண்ணன்

போன்றவற்றில், நல்ல என்பது கருமையைக் குறிப்பதாக அமைந்துள்ளது. தேவாரம் பாடல் பெற்ற பதியாம் திருவேட்களத்து இறைவி நல்லநாயகி சமஸ்கிருதத்தில் 'சியாமளா' என்ற பெயரே தமிழில் நல்ல நாயகியாகியது. இஃதறியாமல் நல்ல என்பதை நல் என்ற பண்பின் அடிப்படையாகக் கொண்டு சமஸ்கிருதத்தில் சற்குண நாயகி என்று கூறப்பெறுகின்றது.

அப்பர் சுவாமிகள் தேவாரம் நமச்சிவாயப் பதிகத்தில் நல்லக விளக்கது நமசிவாயவே என்ற பகுதிக்குக் கருமையான (அஞ்ஞான) உள்ளத்துக்கு நமசிவாய ஒளியூட்டும் விளக்கு என்ற சிறந்த பொருளைத் தருகின்றது. தெலுங்கில் உள்ள தமிழ் வழக்கால் இஃதுணரப்பெற்றது.

அப்பர் தேவாரத்தில்,

வட்டனை மதிசூடியை வானவர்
இட்டனைத்திரு அண்ணாமலை மேவிய

என்ற பகுதிக்குப் பொருள் காண்கையில் வட்டமான சந்திரனைச் சூடியவன் என்றும், வட்டு - கோவணம், கோவணம் தரித்தவன் என்றும் பொருள் கண்டுள்ளனர். இறைவன் வட்டமதி சூடவில்லை. பிறைமதியே சூடியுள்ளனர். எனவே முதலில் உரியபொருள் பொருந்தவில்லை. அவனைக் கோவணதாரி என்பதும் இவ்விடத்துச் சிறப்பாக இல்லை. இன்றும் மலையாளத்தில் பித்து, பைத்தியம் என்பது **வட்டு** என்றே வழக்கில் உள்ளது. எனவே வட்டனை - பித்தனை, மதிசூடியை என்று பொருள்கொள்வது சிறப்பாக அமைகின்றது. ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளும், பித்தா பிறைசூடி என்றே பாடியுள்ளார்.

அப்பர் சுவாமிகள் திருக்கருகாவூர் திருத்தண்டகத்தில் உள்ளத்தின் உள்ளே நின்ற கத்தாம், கருகாவூர் எந்தை தானே என்று பாடியுள்ளார். இதில் **கத்து** என்பதின் பொருள் விளங்கவில்லை. மலையாளத்தில் விளக்கு ஒளியளிப்பதை இன்றும் விளக்கு கத்துகிறது என்கின்றனர். எனவே கத்து என்பது ஒளி எனப் பெறுகின்றது. உள்ளத்தின் உள்ளே நின்ற **ஒளியாம்** (கத்தாம்) எனத் தெளிவுபெற்றது. இவை மலையாள வழக்கால் உணரப்பெற்றன.

மாட்டேன் என்ற ஒரு சொல் எதிர்மறையாகத் தமிழில் வழக்கில் உள்ளது. அதன் உடன்பாட்டுச்சொல் எது என்பது விளங்கவில்லை. உடன்பாட்டுச்சொல் இன்றி எதிர்மறைச் சொல் இராதே என்று நினைத்தபோது கன்னடத்தில் **மாடு** என்ற சொல் செய்தல் பொருளில் வழக்கில் உள்ளமை தெரியவந்தது. அப்படியாயின் தமிழிலும் மாடு செயல் என்ற பொருளில் இருக்கவேண்டுமே என ஆய்கையில்,

ஸ்ரீஅப்பர் சுவாமிகள் எம்மாடு, சும்மாடு என எம்செயல், வெறும் செயல் எனப்பாடியுள்ளமையும், ஸ்ரீ சுந்தரர் மாடுவன், மாடுவன் (செய்வேன், சேய்வேன்) என்பதும் உணரலாயிற்று. மேலும் சுடலை மாடன் என்பது திரிமூர்த்திகளில் அழித்தற் கடவுள் (சுடலை - சுடுதலை - அழித்தலை, மாடன் செய்பவன் என்று தெளியலாயிற்று. எனவே தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிகளுக்குத் தனித்தனிச் சொல்லகராதி தயாரித்து ஆய்வுக்குப் பயன்தரச் செய்ய வேண்டும்.

தமிழில் நாட்டுப்புறக் கதைப்பாடல் சுவடிகள் மிகுதியாக உள்ளன. நாட்டுப்புறக் கதைப்பாடற் கவிஞர்கள் பெரும்பான்மை எழுத்தறிவில்லாத மக்கள் உணரவே தங்கள் கவிதைகளை யாத்தனர். இவர்கள் கல்வியறிவுமிக்க இலக்கியக் கவிஞர்களுக்குச் சிறிதும் தாழ்ந்தவர்கள் இல்லை. இவர்கள் பாடலால் பல உண்மைகள் உணர வந்துள்ளன.

தமிழில் அந்தை என்ற சொல், தந்தை என்பதின் முதல் மெய் போனதாகக் காணப்பெறுகின்றது. இலக்கணங்களில் சாத்தந்தை, பொன்னந்தை என்பவை-சாத்தன் தந்தை - சாத்தந்தை எனவும், பொன்னன் தந்தை பொன்னந்தை எனவும் மரூஉச் சொல்லாகக் கூறப்பெற்றுள்ளன. ஆனால் ஒரு நாட்டுப்புறக் கதைப்பாடலில் ஒரு குழந்தையைச் சீராட்டுகையில்

சாத்தந்தை பேரா என விளிக்கப்பெற்றுள்ளது. சாத்தந்தை சாத்தன் தந்தையின் மரூஉ எனக் கொண்டு சாத்தன் தந்தையின் பேரனே எனப்பொருள் கொள்ளப் பெறுவது பொருத்தமாக இல்லை. சாத்தையன், சாத்தப்பன் என இப்போது முழுமையாக வழங்கும் பெயரே அன்று சாத்தந்தை என வழங்கப்பெற்றமை தெளியலாயிற்று.

சங்க இலக்கியத்திலும், ஆழ்வார் பாசுரங்களிலும் ஸ்ரீகிருஷ்ணன் மனைவி பின்னை, நப்பின்னை என்ற குறிப்புகள் உள்ளன. ஆனால் சமஸ்கிருத பாகவதங்களில் பின்னை பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. தமிழிலும் நப்பின்னை பிறப்புப் பற்றிய செய்திகள் இல்லை. திவ்வியப் பிரபந்த வியாக்யானத்தில், 'நந்தகோபன் மருமகளே துயில் எழாய்' என்ற பகுதிக்குக் கும்பன் மகளே என்னாது நந்தகோபன் மருமகளே என்றது புகுந்த வீட்டுச் சிறப்பை உணர்த்தியது எனப் பெரிய வாச்சான் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்தக்கும்பன் யார் என்பது தெளிவுபடுத்தப் பெறவில்லை. திருவனந்தபுரம் ஓலைச்சுவடி நிறுவனத்திலுள்ள நாட்டுப்புறக் கதைப்பாடற் சுவடியில் கும்பன் யசோதையின் உடன் பிறந்தான் என்பதும், அவள் மகள் பின்னையை ஏறுதழுவிக் கண்ணன் மணந்தான் என்பதும் தெளிவாகக் கூறப் பெற்றுள்ளன. இந்தச் செய்தியினால் நப்பின்னை கண்ணனின் மாமன் மகள் என்பது உணரப்பெற்றுத் திருப்பாவையில் வரும் மாமன் மகளே மணிக்கதவம் தாள்திறவாய் என்ற பகுதியில் மாமன் மகள் நப்பின்னை என்பது தெளியலாயிற்று.

எனவே பழஞ்சுவடிகளைப் பாதுகாத்துப் பயின்றால் மொழியின் வரலாறும் சிறப்பும் மேலும் தெளிவுபெறும்.

மருத்துவச் சுவடிகளைப் பெரும்பான்மையாக, அறியப் பெறாமல் இருப்பதைக் கருத்திற்கொண்டு, மருத்துவத் துறைவல்லுனர்களும், இலக்கிய வல்லுனர்களும் இணைந்து தமிழ் மருத்துவத்தை உலகிற்குணர்த்தி மனித இனத்துக்குத் தொண்டு புரிதல் இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் தமிழ் முதுகலை வகுப்பில் சுவடி இயலைக் கட்டாயப் பாடமாக்குவதுடன் முதுகலைப் பட்ட மேற்படிப்பில் சுவடி இயலுக்கு ஒரு பிரிவு ஏற்படுத்தி (Post - Graduate Diploma in Manuscriptology) பட்டயம் வழங்கவேண்டும். இதற்கு உதவியாகத் தற்போது கல்லூரிகளில் உள்ள தமிழ் ஆசிரியர்களுக்குச் சுவடி இயலைக் குறுகியகாலப் பயிற்சியாக அளிக்க அரசு வகைசெய்ய வேண்டும்.

எதுவும் செய்தீங் கெவ்வகையானும்
இப்பெரும்பணி நாட்டிடல் வேணும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
அண்மை வெளியீடுகள்

AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM	200.00
பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2	80.00
தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு	75.00
ஜப்பானியக் காதல் பாடல்கள்	75.00
குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு	80.00
பயிலரங்கக் கவிதைகள்	18.00
தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும்	30.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து	125.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4	110.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-3	110.00
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-2	110.00
நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும்	30.00
சுவடிப் பதிப்புத் திறன் தொகுதி-2	45.00
திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு	100.00
தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள்	40.00
ON TRANSLATING TIRUKKURAL	50.00
ஐங்குறுநூறு மூலமும் உரையும்	85.00
தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள்	40.00
சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி	200.00
THIRUVACHAGAM	175.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள்	75.00
நானும் என் எழுத்தும்	50.00
தமிழர் கட்டிடக்கலை	30.00
THE NARRINAI FOUR HUNDRED	175.00
சர்வக்ஞர் உரைப்பா	40.00
தமிழில் ஆவணங்கள்	75.00
தமிழ் மேடை நாடக வரலாறு	55.00
பரதநாட்டிய சாஸ்திரம்	150.00
இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள்	55.00
மேலை நோக்கில் தமிழ்க்கவிதை	100.00
SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE	35.00
அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள்	125.00
TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY	200.00
சதகத்திரட்டு தொகுதி-1	80.00
தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள்	70.00
எழுத்திலக்கணக் கோட்பாடு	70.00
சதகத்திரட்டு தொகுதி-2	55.00
தமிழ்ப் பண்பாடு	25.00
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4	70.00
சுவடிச்சுடர்	120.00
தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர்	45.00
தமிழக மகளிரியல்	80.00

Pub.No. 426 **சுவடிப் பதிப்புத் திறன்** தொகுதி-2 **45.00**